
அபயாம்பிகை சதகம்

(மூலமும் உரையும்)



உரை ஆசிரியர்

அபிராமிதாஸன் மீனாட்சிசுந்தரம் மோகன்

அபயாம்பிகை சதகம்

(மூலமும், உரையும்)

மூலம்

அபயாம்பிகை பட்டர்

(நல்லத்துக்குடி கிருஷ்ணை அய்யர்)

உரை

அபிராமிதாஸன் மீனாட்சிசுந்தரம் மோகன்

முதற் பதிப்பு : அக்டோபர், 2009

Rs. 100/-

பிரதிகள் கிடைக்கும் இடம் :

மீனாட்சிசுந்தரம் மோகன்

18, 11வது தெரு, நந்தனம் விரிவு,

சென்னை-600 035.

போன்: (044) 2435 0162

செல்: 98843 42565

அச்சிட்டோர் :

எம்கேஎம் பிரிண்டர்ஸ்

291, வாஞ்சிநாதன் தெரு,

செந்தில்நகர், திருமுல்லைவாயல்,

சென்னை-600 062.

போன்: (044) 2638 5062



திருவாவடுதுறை ஆதீனம் 23வது குரு மகாசன்னிதானம்

சீர் வளர் சீர் சிவப்பிரகாச தேசிக

பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
23-வது குரு மகாசன்னிதானம்
ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச தேசிக
பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்
திருவாவடுதுறை-609 803, நாகை மாவட்டம்
தொலைபேசி எண் : 04364 - 232021 நாள் : 29-10-09

"அருள் வாழ்த்துரை"

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சின் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க

மயிலாடுதுறை எனும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு விளங்கிவரும் அருள்தரு அபயாம்பிகை அன்னை மீது நல்லத்துக்குடி கிருஷ்ணசாமி என்கின்ற அபயாம்பிகை பட்டர் அருளிய அபயாம்பிகை சதகம், சதக நூல் வரிசையில் சிறப்பித்துக் கூறப்படும் நூல்களுள் ஒன்றாக விளங்கி வருகின்றது.


நூறு பாடல்களில் அன்னையின் கருணைப்பொலியும் வடிவழகையும், அருட்பெருக்கையும், அடியவர்களை ஆட்கொள்ளும் அருந்திறத்தையும் மதுரத் தமிழால் அபயாம்பிகை பட்டர் மனமுருகிப் பாடிப் பரவியுள்ளார்.

அருள்நலம் கனியும் அருட்பதிகமாகிய இச்சதக நூலினை யாவரும் கற்றுணர்ந்து, பொருட்சுவையை நுகரும் வகையில் அபிராமிதாசனாகிய மீனாட்சிசுந்தரம் மோகன்

அவர்கள் தமது ஆழ்ந்த தமிழ்ப்புலமைச் சிறப்பினால் உரை கண்டு இருப்பது சிறப்பிற்குரியது. பதப்பொருளோடு நின்றுவிடாமல் விளக்கவுரையாக விரித்துரைத்து பொருள் விளக்கம் செய்தும், மேற்கோளாக ஆங்காங்கே அருளாளர்களின் அருட்பாடல்களை விரித்துரைத்தும், சித்தாந்த நுண்பொருள் கருத்துக்களைத் தொட்டுக் காட்டியும் எடுத்துரைக்கும் பாங்கு பாராட்டுதலுக் குரியது.

இந்நூலினைக் கற்று அபயாம்பிகை அன்னையின் பேரருளுக்குப் பாத்திரமாகி, வாழ்வில் எல்லா நலன்களும் பெற்று சிறக்கவும், உரையாசிரியர் இதுபோன்று பன்நூலுக்கு உரைகண்டு, தமிழுலகிற்கும், சமயவுலகிற்கும் தொண்டாற்ற வேண்டியும் நமது வழிபடு கடவுளாகிய அருள்மிகு ஞானப் பெருங்கூத்தன் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

பெறுநர் : அபிராமிதாசன் மீனாட்சிசுந்தரம் மோகன்,
சென்னை.



பரமஹம்ஸ

ஸ்ரீமத் பரத்வாஜ் ஸ்வாமிகள் அவர்கள்

ஸ்ரீ யோகமாயா புவனேஸ்வரி பீடம்,

அம்பத்தூர், சென்னை-53.

பரமஹம்ஸ **ஸ்ரீமத் பரத்வாஜ் ஸ்வாமிகள்**

அவர்களின்

அருளாசிகள்

ஸ்ரீயோகமாயா புவனேஸ்வரி பீடம், அம்பத்தூர், சென்னை-53.

ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம் மோகன் என்கிற அபிராமிதாஸன். நெக்குருக வைப்பதில் இவர் எழுத்துக்கள் சான்றாக உள்ளன. அம்பாள் அருளைப் பெற்றிருக்கிறார் என்பதற்கு இவர் எழுதிய "அபயாம்பிகை சதகம்" புத்தகமே சாட்சி! அத்தாட்சி!

ஆழமான விரிவுரை! அற்புதமான கருத்துக் கோர்வை! அம்பாள் பக்தியின் வெளிப்பாடு அபிராமிதாஸரின் எண்ணத்தில் தோன்றிய பக்தி வண்ணங்கள். இவரது பக்தியை மலராக்கி தந்துள்ளார்கள்.

அபயாம்பிகையின் பிள்ளை இவர். இதைப் படித்தால் ஆனந்தக் கொள்ளை. அம்பிகையை நேரில் பார்த்தது போன்று சில அடையாள எழுத்துக்கள் மிளிர்கின்றன.

இவ்வுலகம் அபிராமிதாஸரை அடையாளம் காட்டியிருக் கிறது. இவர் தந்த இந்த புத்தகம் மூலமாக கண்ணில் ஒற்றிக் கொள்ளுங்கள்! அம்பிகையின் திருவடியைப் பக்தியால் பற்றிக் கொள்ளுங்கள்.

இவர் ஓர் பக்தி எழுத்துப் புதையல். இவரும், இப்புத்தகத்தைப் படிப்போரும் நீங்காத செல்வம் நிறைந்து வாழ, ஸ்ரீ புவனேஸ்வரி ஸ்வாமிகளின் திருவடிகளைச் சிந்திக்கிறேன்.

31-8-2009 **ஸ்வாமி பரத்வாஜ்**

அருள்தரு அபயாம்பிகை உடனாய அருள்மிகு மாயூரநாதர் திருக்கோயில், மயிலாடுதுறை

அன்னை பூமாதேவியின் திருமுகம் போல் விளங்குகிறது பண்டைய சோழநாடு. அத்திருமுகத்தின் திலகமாய் திகழ்வது மாயூரம். "ஆயிரமானாலும் மாயூரம் ஆகாது" என்பது ஆன்றோர் வாக்கு. அதாவது "ஆயிரம் பறவைகள் இருப்பினும் மயூரத்துக்கு (மயிலுக்கு) இணை ஆகாது" என்பதே இதன் விளக்கம். மூர்த்தி, தலம், தீர்த்தம் இவை மூன்றாலும் சிறப்புடையது இத்தலம்.

அன்னை இங்கு மயில் உருக்கொண்டு வெகுகாலம் கடுமையான விரதமிருந்து சிவபெருமானை நோக்கித் தவம் செய்தாள். இதனால் மகிழ்ச்சியடைந்த ஈசன், ஒரு ஆண் மயில் உருக் கொண்டு அன்னையுடன் சேர்ந்து நடனமாடினார். இவ்வாறு இருவரும் சேர்ந்து மயில் உருவத்தில் ஆடியதால், மாயூரம் என்ற பெயர் "மயிலாடுதுறை" ஆயிற்று. இருவரும் சேர்ந்து ஆடியதற்கு 'மாயூர தாண்டவம்' என்று பெயர். "கௌரீ தாண்டவம்" என்றும் கூறுவர்.

பொன்னி நதி (காவிரி) பாயும் பொன் விளையும் பூமி என்ற சிறப்பு மயிலாடுதுறைக்குரியது. கரையின் இருமருங்கிலும் வானளாவிய சோலைகளும் அதனைச் சுற்றி ரீங்காரம் இடும் பறவைகளும், வயல்களில் நெற்பயிர்கள், கதிர் முற்றி சூல் கொண்ட அழகிய பெண்கள் போல் கண்ணிற்கினிய காட்சியைத் தருகின்றன. கங்கை போன்ற புண்ணிய நதிகள் தங்களைப் புனிதப்படுத்திக் கொள்ள துலா (ஐப்பசி) மாதத்தில் இங்கு வந்து சங்கமம் ஆகின்றன என்று புராணம் கூறுகிறது. இந்த மாதம் பூராவும் காவிரியில் ஸ்நானம் செய்வது மிக்க புண்ணியம் தருவதாகும். இதையடுத்து கார்த்திகை மாத முதல் நாளன்று காவிரியில் நீராடுவது, "முடவன் முழுக்கு" என்று அழைக்கப்படுகிறது. கருணாமூர்த்தியான சிவபெருமான் ஒரு முடவன் மீது இரக்கங்காட்டி,. கார்த்திகை மாத முதல் நாள் காவிரியில் நீராடுவதையும் மிக்க விசேஷமாக்கினார். வீதிகள் தோறும் வேத கோஷமும், இயல், இசை, நாடக நிகழ்ச்சியும் எந்நேரமும் ஒலிக்கும் தெய்வமணம் மிகுந்த பூமி இது!

இவ்வாறு பல்வகை வளங்களுடன் திகழும் மயிலாடுதுறையில் தான் அண்டினவருக்கு அபயம் தரும் அபயாம்பிகையாகவும், வணங்கியவருக்கு

வரையிலா வரங்கள் தரும் வள்ளலாய் மாயூரநாதனாகவும், சக்தியும், சிவனும் திருக்கோயில் கொண்டு அருட்பாலித்து வருகின்றனர். காசியிலுள்ள டுண்டி விநாயகர், காசி விஸ்வநாதர்-விசாலாட்சியும் இங்கு திருக்கோயில் கொண்டுள்ளனர். இங்கு உறையும் மாயூரநாதருக்கு வள்ளலார், பிரம்மலிங்கம், மயிலாடுதுறையோன், மயிலாடுதுறை அரன், மயிலாடுதுறை நாதர் என்ற பெயர்களும் உண்டு. அன்னையின் மற்றைய திருநாமங்கள் அஞ்சல் நாயகி, அபயபிரதாம்பிகை, அஞ்சலை, மயிலம்மை ஆகும். இத்திருக்கோயிலின் மற்றொரு சிறப்பு, சதா சர்வகாலமும் ஈசனையே எண்ணித் தவமிருந்து அவருடன் ஐக்கியமான நாத சர்மா, அவரது மனைவியார் அனவித்யை என்ற இருவரும் சிவலிங்க திருமேனியாய் காட்சி தருகின்றனர். அனவித்யை ஐக்கியமான சிவலிங்க திருமேனிக்கு தினமும் புடவைதான் சாத்தப்படும். (இது வேறெங்கும் காணக் கிடைக்காத காட்சியாகும்).

அன்னை அபயாம்பிகை இங்கு ப்ருத்வியே ஆதாரமாகக் கொண்டு நின்ற கோலத்தில் நான்கு திருக்கரங்களுடன் காட்சி தருகிறாள். மேற் கரங்களில் அக்ஷமாலையும், அமுதகெண்டியும், வலது கீழ்க்கரத்தில் அபயமுத்திரையுடன் வருவோர்க்கு அபயம் தரும் அன்னையாக விளங்குகிறாள். இடது கீழ்கரம் தொடைமீது சற்றே வளைந்து தொங்குகின்றது. இதை "ஊருஹஸ்தம்" என்பர்.

தீர்த்தங்கள் - 1. பிரம்மதீர்த்தம் - ஆலயத்தின் உள்ளே அக்கினி மூலையில் அமைந்த திருக்குளம். பிரம்மன் இங்கு நீராடி, தவம் செய்து, படைப்புத் தொழிலை கைவரப் பெற்றமையால் இப்பெயர். அன்னை மயிலம்மையாக நீராடியதும் இங்குதான்.

2. இடப தீர்த்தம் - துலாக் கட்டம் என வழங்கும் காவிரித் துறையின் ஆற்றின் நடுவிலே மேற்கு நோக்கி இடபப் பெருமான் எழுந்து அருளியிருக்கிறார். இடபத்தின் ஆணவம் அடங்கப் பரமன் அருள் செய்தமையால் ஏற்பட்ட பெயர். இதில் துலா மாதம் முழுவதும், கார்த்திகை முதல் நாளும் நீராடுவது சிறப்பு. ஐப்பசி அமாவாசை கங்கையைக் காவிரி புனிதமாக்கிய நாளாகும். மற்றும் அனவித்யா சரஸ், அகத்திய தீர்த்தம் என்று இரண்டு தீர்த்தங்கள் உள்ளன.

தல விருட்சம் - மாமரம். "சூதவனம்" என்று வடமொழியில் வழங்கப்படுகிறது.

துலா மாதம் முழுவதும் இக்கோயிலில் திருவிழாதான். இம் மாதத்தின் ஏழாம் நாளன்று அப்பனும், அம்மையும் திருக்கல்யாணம் செய்து கொள்ளும்

திருவிழாவைக் காணக் கண் கோடி வேண்டும்! அன்று இரவு மயிலம்மை மாயூரநாதருடன் ஆடும், "மாயூர தாண்டவம்" பக்தர்களுக்குக் களிப்பூட்டும் கண் கொள்ளாக் காட்சியாய்த் திகழ்கின்றது. இத்திருக்கோயில் திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமானது.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் இத்தலம் பற்றித் தேவாரம் அருளியுள்ளார்கள்., திரு. அருணகிரிநாதரும் இத்தலம் பற்றி திருப்புகழ் பாடியுள்ளார். ஸ்ரீ நல்லத்துக்குடி கிருஷ்ண அய்யர் (அபயாம்பிகை பட்டர்) "அபயாம்பிகை சதகம்" என்ற நூலை இயற்றியுள்ளார். ஸ்ரீ முத்துஸ்வாமி தீட்சிதர், அபயாம்பிகை நவாவர்ணம் அமைத்துள்ளார். திரிசிரபுரம் மகாவித்வான் திரு. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் 64 படலங்கள் கொண்ட (1895 செய்யுட்கள்) மாயூரப் புராணம் பாடியுள்ளார்.

தென் காவிரிக் கரையில் நீர்வளம், நிலவளம், கார்வளம், கழனிவளம், ஸத்யவளம் இவற்றால் சிறந்து விளங்கும் தன்னிகரில்லாத தலம் மயிலாடுதுறை. வரம் தரும் வள்ளலாம் மாயூரநாதரையும், அனைவருக்கும் அபயம் தரும் அன்னையாம் அபயாம்பிகைத் தாயாரையும் தரிசித்து இத்தரணியில் திரும்பவும் பிறவாது முக்தி பெறுவோமாக!

அபயாம்பிகை பட்டர்

"அபயாம்பிகை சதகம்" என்ற இந்நூலின் ஆசிரியர் அபயாம்பிகை பட்டர் ஆவர். இவரது இயற்பெயர் கிருஷ்ண அய்யர். மயிலாடுதுறை அருகிலுள்ள நல்லத்துக்குடி என்ற கிராமத்தில் சுமார் 250 ஆண்டுகளுக்கு முன்னால் பிறந்தவர்.

அறியாப் பருவத்தில் தாய் தந்தையரை இழந்த இவருக்கு அன்னை அபயாம்பிகை ஒரு அந்தண மாதாகத் தோன்றி, அருளமுதம் தந்து, தன் திருக்கோயில் சன்னிதியில் விட்டு விட்டு மறைந்தனர். அன்னையின் அருட்புதல்வனான கிருஷ்ண அய்யர் அல்லும், பகலும் அனவரதமும் அன்னையை தியானித்து அன்னையின் நினைப்பிலேயே வாழ்ந்த மாபெரும் அனுபூதிமான். இவர் ஒரு சிறந்த ஸ்ரீவித்யா உபாசகர். சரியை, கிரியை, யோகம், ஞானம் எல்லாவற்றிலும் சிறந்து காணப்படுகிறார். ஆன்மீக பக்தர்கள் இவர்மீது அன்பும், மதிப்பும், மரியாதையும் கொண்டு இவரை "அபயாம்பிகை பட்டர்" என்று அழைத்தனர்.

அபயாம்பிகை பட்டர் தினமும் அர்த்தயாம பூஜை முடிந்தவுடன் நல்லத்துக்குடியிலுள்ள தன் வீட்டிற்கு திரும்புவது வழக்கம். ஒரு இரவு இருட்டில் கால் தவறி கீழே விழுந்தபோது அபயாம்பிகை பட்டர் அன்னையிடம், "தாயே! அகிலாண்டத்திற்கும் ஒளிதரும் பரஞ்ஜோதியே! எனக்கும் கொஞ்சம் ஒளிகாட்டக் கூடாதா" என்று வேண்ட, அன்றிரவு முதல் அபயாம்பிகை பட்டர் வீடு திரும்பும்வரை ஒரு கைவிளக்கு ஆளின்றி தானாகவே அவருக்கு முன் செல்லுமாம்! என்னே அன்னையின் கருணை!

அன்னையின் கருணையால் மனம் குளிர்ந்த அபயாம்பிகை பட்டர், அன்னையின் அருளாற்றலை எப்படிப் போற்றிப் புகழ்வேன் என்ற நினைக்க அன்னை அசரீரி வாக்காக, "செந்தமிழ் பாக்களால் எனக்கு பாமாலை சூடுவாயாக" என்று சொல்ல, அபயாம்பிகை பட்டர், "அம்மா கவி பாடுமளவுக்கு எனக்குத் திறமை இல்லையே? எங்ஙனம் அடியேன் உன்மீது பாமாலை சூட்டுவேன்? அதற்கும் நீயே வழிகாட்டுவாய்" என்று மனதில் நினைத்த கணமே, அன்னை அவர் நாவில் நின்று உணர்த்த, எழுந்தது இந்த தெய்வீக மணம் கமழும் "அபயாம்பிகை சதகம்".

திருக்கடவூரில் அபிராமி பட்டர் வாயிலாக "அபிராமி அந்தாதியும்" மயிலாடுதுறையில் அபயாம்பிகை பட்டர் மூலமாக "அபயாம்பிகை சதகமும்" கிடைக்கப் பெற்றது இந்தத் தமிழ் மண் செய்த பெருந்தவப் பயன் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. தமிழர்களுக்கும், தமிழ்மொழிக்கும் கிடைத்த அருட்பிரசாதம் இது.

சதகம் - சதகம் என்பது நூறு பாடல்களைக் கொண்ட ஒரு சிறு நூல். ஒவ்வொரு பாடலின் இறுதிப் பகுதி ஒரே தொடராயிருத்தல் வேண்டும். இதனை "மகுடம்" என்று சொல்வர். சதகத்தின் குறிக்கோள் - எளிய இனிய செந்தமிழ் நடைவாயிலாகத் தெய்வ சிந்தனையும், ஒழுக்க நெறியும் உண்டாக்குவதே.

அபயாம்பிகை சதகம் - "மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத் தாயே" என்று ஒவ்வொரு பாடலும் பூர்ணம் பெறுகிறது. சாக்த சமயத்தின் மாபெரும் தத்துவத்தை வெகு எளிமையாகவும், அருமையாகவும், சிறப்பாகவும் சொல்லியுள்ளார் அபயாம்பிகை பட்டர். அதாவது சிவனின் உயிர்நாடி சக்தியே. சக்தி இல்லையேல் சிவன் அசைவதற்குக் கூட திறமை உடையவராக ஆவதில்லையன்றோ!

ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் (373) அன்னையை *"காமேஸ்வர ப்ராண நாடீ"* என்று போற்றுகிறது. ஆதிசங்கரர் இதே கருத்தினை சௌந்தர்ய லஹரியில் முதல் ஸ்லோகத்திலும், இருபத்தெட்டாவது ஸ்லோகத்திலும் கவிநயத்துடன சொல்லுகிறார். ஸ்ரீருத்ரமும்

"யாதே ருத்ர சிவா தனூ: சிவா விச்வாஹ பேஷஜீ I

சிவா ருத்ரஸ்ய பேஷஜீ தயா நோ ம்ருட ஜீவஸே II

இதன் கருத்து - விடத்தை உண்டும், சிவபெருமான் பிழைத்து இருப்பது அன்னையின் அருளினால்தான்.

தேவீ பாகவதமும், "குண்டலினி சக்தியினின்று பிரிந்தால் சிவனும் சவம் போல் ஆகிறான்" என்று கூறுகிறது.

ஸ்காந்தம் : *"சக்தியை பிரிந்தால் சிவன் பயனற்றவனாவான்"*

திருமூலர் : *"அவளன்றி ஐவரால் ஆவதொன்றில்லை"* (திருமந்திரம் - 1053)

சாமான்யருக்கு எளிய தோத்திர நூலாகவும், ஆத்ம விசாரம் செய்பவர்களுக்கு ஆழ்ந்த தத்துவ நூலாகவும், கவிஞர்களுக்கு காவ்ய ரசனை ஊட்டும் நூலாகவும், இசைக் கலைஞர்களுக்கு இனிய சந்தத்துடன் கூடிய நூலாகவும் விளங்குகிறது "அபயாம்பிகை சதகம்".

அவளின்றி அணுவும் அசையாது!

எல்லாம் அவள் செயல்!

எல்லாம் அவள் அருள்!

ஸ்ரீமுத்துசுவாமி தீட்சிதர்

அபயாம்பிகையின் (அஞ்சல் நாயகி) கருணை வெள்ளத்தில் திளைத்த தீட்சிதர், அன்னை மீது எட்டு விபக்தி கீர்த்தனைகள் இயற்றியுள்ளார். முன்னால் தியானத்துக்காவும், கடைசியில் மங்களமாகவும் மொத்தம் பத்து பாடல்கள். ஒவ்வொரு பாடலும் அம்பிகையை நம் கண்முன் நிறுத்தும் நன் முத்துக்கள்!

தியான கீர்த்தனை - சாமர ராகம் - *"ஸதாஸ்ரயே அபயாம்பிகே"*

நல்லவற்றுக்கெல்லாம் இருப்பிடமாக இருக்கும் அபயாம்பிகே! என் முன் தோன்றி மங்களங்களை அருள்வாயாக! (பல்லவி)

சித் என்னும் அறிவின் இருப்பிடமே! சிதம்பரத்தில் சந்திரிகை போல் பிரகாசிப்பவளே! நீ வருவாயாக! சித்தத்தில் இருப்பவள் நீ!

சிவனாகிற கட்டிலின் மேல் இருப்பவள். வாராஹியால் வணங்கப்படுபவள். ஆனந்தத்துக்கு இருப்பிடமானவள். புக்தி, முக்தி அடையும் வழியை நீ உரைத்தருள்வாயாக. சந்தோஷத்துடன் நான் உன்னை அண்டுகிறேன். மாயையில் சிக்கிய என்னைக் காப்பாற்று. (அனுபல்லவி)

எங்கள் அன்னை எப்படிப்பட்டவள்?

"மாயூரநாதனை மோகமடையும்படி செய்பவள். விஷ்ணு, பிரமன், இந்திராதிகளால் நன்கு துதிக்கப்பட்ட பராசக்தி. சிறந்த பெண்களால் (ஸுவாசினீ) பூஜிக்கப்பட்ட நாதபிந்துவுடன் கூடியவள். பேரீ, மத்தளம், வீணை முதலிய வாத்திய இசையில் பிரியம் கொண்டவள். தேவர்களால் உபாசிக்கப்பட்ட சரண கமலங்களைக் கொண்டவள். தரித்திரத் தன்மை, துக்கம் ஆகியவற்றை போக்கடிக்கும் சங்கரனுடன் கூடியவள்" - சரணம்.

இதைத் தொடர்ந்து எட்டு விபக்தி கீர்த்தனைகள் - கல்யாணி, பைரவி, சங்கராபரணம், யதுகுல காம்போதி, கேதாரகௌளம், கேதாரம், ஸஹானா, தோடி.

"ஸ்ரீஅபயாம்ப நின்னு சிந்திஞ்சின வாரிகி

சிந்தைக் கவலை எல்லாம் தீரும்மம்ம" என்று ஸ்ரீராகத்தில் மங்களம்.

அதாவது - "மங்களம் பொருந்திய அபயாம்பிகே! உன்னை தியானிப்பவர்களுக்கு எல்லாவித கவலைகளும் தீருமம்மா!".

இது மணிப்பிரவாள கீர்த்தனை - சமஸ்கிருதம், தெலுங்கு, தமிழ் ஆகிய மூன்று மொழிகளும் கலந்திருக்கும். (இதைப் போன்று வேறு 2 கீர்த்தனைகள். - இரண்டும் கர்நாடக காபி ராகத்தில் அமைந்தவை. 1. புலிவலம் - ஸ்ரீவெங்கடாசலபதி. மற்றொன்று, பலவிதமான சக்திகளுடன்

புறப்பட்டு, யுத்த பூமியில் சண்டையிடும் அரக்கர்களைக் கொன்று விளங்கும் ஸ்ரீ மஹாராக்ஞீயின் துதிப்பாடல்)

கல்யாணி : கோடி சூரியனுக்கு நிகரான பிரகாசத்தை உடையவள்.

பைரவி : குருமார்கள் சீடர்களுக்கு அனுக்கிரகம் செய்வதற்கு மூல காரணமான சக்தியைக் கொடுக்கும் அபார கருணை உடையவள்.

சங்கராபரணம் : பூஜைக்கு உகந்த பொருள்களை சேமிப்பதற்கான மனோநிலைக்கும், மனுஷ்ய தர்மங்களை அனுஷ்டிப்பதற்கும், அகங்கார மமகாரங்களை போக்குவதற்கும், தர்மானுஷ்டானங்கள் செய்யும் பக்தர்களுக்கு தர்மம், பொருள் இவற்றில் சமநிலையளிப்பதற்கு உரிய சாம்ராஜ்யத்தைக் கொடுப்பதற்கும் ஏற்ற சிவந்த திருவடிகளை உடையவளாக அன்னை அபயாம்பிகையை அர்ச்சிக்கிறார் தீட்சிதர்.

யதுகுல காம்போதி : கர்வம் கொண்ட பண்டாசுரனை கண்டித்தவள் என்று அன்னையின் மகிமையை பாராட்டுகிறார்.

கேதார கௌளம் : "அஞ்ஞானத்தை விலக்கி ஞானத்தை அளிப்பதற்கு அன்னை அபயாம்பிகையைத் தவிர வேறு தெய்வத்தை நான் அறியேன்" என்று ஆணித்தரமாகச் சொல்லும் அபார பாடல்.

கேதாரம் : "*அம்பிகாயா அபயாம்பிகாயா*" - குண்டலினி சக்தியை எழுப்பும் தத்துவங்கள் நிறைந்த காவ்யரசனையுடன் கூடிய கருத்து மிக்க பாடல். இயமம், நியமம், பிராணாயாமம், ப்ரத்யாஹாரா, தியான, தாரண, சமாதி, நிஷ்டை என்று எட்டுவித அங்கங்களோடு கூடிய யோகத்தில் மனத்தை அடக்கி மூலாதாரம், மணிபூரகம் முதலிய மலர்கள் விரிய, குண்டலினீ ஆயிரம் தளத்தோடு கூடிய பிரம்மரந்தரத்தில் இருக்கும் தாமரையின் உள்ளே வசித்து வரும் சிவனுடன் ஒன்றுவது... விசேஷ மகிமையுள்ள குருகுகன் முதலியவர்களின் உற்பத்தி ஸ்தானமாகவும், பஞ்ச பூதங்களுக்கும் மூல காரணமாயிருப்பவளுமான அபயாம்பிகை என்ற நாமம் உள்ள உனக்கு நான் தாசன் என்கிறார் அன்னையின் மைந்தன் முத்துசுவாமி தீட்சிதர்.

சஹானா : சபேசனால் கொண்டாடப்பட்ட நடனத்தையுடையவளைப் பற்றியது.

தோடி : ஸ்ரீவித்யா தீட்சையில் சந்தோஷம் அடைந்து தீனர்களைக் காக்கும் தாமரைக் கரங்களை உடையவளாகப் போற்றும் பாடல்.

(சௌந்தர்யலஹரீ ஸ்லோகம் - 70 காண்க).

உ

ஸ்ரீ

ஸ்ரீமாதா அபிராமி

ஆசிரியர் உரை

"குருவருள் இன்றி திருவருள் இல்லை"

"ஸ்ரீகுரு: ஸர்வகாரண பூதா-சக்தி:" *(பாவனோபநிஷத்)*

ஸ்ரீ குருவே அனைத்திற்கும் காரணமாக விளங்கும் சக்தி. குருவாக நம் முன் நிற்பது அன்னை ஆதிபராசக்தியே!

கடந்த இரண்டு ஆண்டுகளில், அன்னை அபிராமியின் அருளால் அடியேன், "அபிராமியும் லலிதாவும்" என்ற தலைப்பில் அபிராமி அந்தாதிக்கு ஒரு விரிவுரை நூலும், "அபிராமி பட்டரின் பதிகங்கள்" என்ற மற்றொரு நூலும் எழுதி, வெளியிட்டு நல்ல வரவேற்பும் கிடைக்கப் பெற்றேன்.

சில மாதங்களுக்கு முன்னால் போபாலிலிருந்து ஸ்ரீ T.S. பத்மநாபன் என்ற சாக்த பக்தர் 'அபயாம்பிகை சதகத்திற்கு' ஒரு விரிவுரை அடியேன் எழுத வேண்டுமென்று அன்பு கட்டளை இட்டார். அடியேன் குருநாதர் ஸ்ரீ-ஸ்ரீ-ஸ்ரீ கிருஷ்ணன் ஸார் அவர்களின் ஆசியுடனும், அன்னை அபிராமியின் அருளுடனும் "அபயாம்பிகை சதகத்திற்கு" விரிவுரை எழுதியுள்ளேன். ஆன்மீக அன்பர்களின் ஆதரவு எப்போதும் போல் இந்நூலுக்கு கிடைக்க அன்னை அபிராமி அருள் புரிவாளாக!

"காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல் மீக்கூறும் மன்னன் நிலம்" என்ற வள்ளுவர் வாக்கிற்கேற்ப, துறவரசராய் விளங்கும் திருவாவடுதுறை ஆதீனம் 23வது குரு மகாசன்னிதானம் சீர்-வளர்-சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திவ்ய சமூகம் எளிமையும், இன்சொல்லும் கொண்டு தம்மை நாடி வரும் அன்பர்களுக்கு அருளாசி வழங்கும் கருணை வள்ளல். தமிழ் சித்தாந்த ஆன்மீக நூல்களில் சிறந்த புலமை பெற்று தனக்கு யாரும் நிகரில்லாதவராகத் திகழ்கிறார். அவர்கள் திவ்ய சமூகம் மனமுவந்து மிகச் சிறப்பாக இந்நூலுக்கு 'அருள் வாழ்த்துரை' வழங்கி, அருளி, இந்நூலை மணக்கச் செய்தது அடியேன் வாழ்க்கையில் பெற்ற மாபெரும் பேறாகும். இப்பேறு பெறுவதற்கு அடியேன் முற்பிறவியில் ஏதாவது புண்ணியம் செய்திருப்பேனோ? அறிகிலேன். அவர்கள் திவ்ய சமூகத்திற்கு என் நன்றி எஞ்ஞான்றும் உரித்ததாகுக. அவர்களின் பாதகமலங்களைப் போற்றி சிரம் பணிகின்றேன்.

பரமஹம்ஸ ஸ்ரீமத் புவனேஸ்வரி ஸ்வாமிகளின் அருந்தவப் புதல்வரும், சீடருமான பரமஹம்ஸ ஸ்ரீமத் பரத்வாஜ் ஸ்வாமிகளை அடியேன் சந்தித்தது அந்தப் பரதேவதையின் செயலாகும். இவர் மிகவும் எளிமையானவர். எல்லோருடனும் பிரியமாகப் பேசிப் பழகுபவர். அன்னை அபயாம்பிகை அண்டினவருக்கு அபயம் அளிப்பது போல் தன்னிடம் வருபவர்களின் இன்னலைப் போக்கி இன்பம் தரும் மகான். மிகுந்த உற்சாகத்துடன் அடியேனுக்கு அருளாசிகள் வழங்கி, இந்நூலுக்கு ஒரு சிறப்பான முன்னுரையை இவர் அளித்தது அடியேன் பெற்ற மாபெரும் பாக்கியம். என் நன்றி என்றென்றும் அவருக்கு உரித்ததாகுக. அவர் திருவடிகளை சிரம் தாழ்ந்து வணங்குகிறேன்.

மயிலாடுதுறையில் அன்னை அபயாம்பிகை செல்வி எம்.எஸ். நாகலெட்சுமி என்னும் தாயை அடியேனுக்குக் காட்டியருளினாள். இவர் ஒரு சகலகலாவல்லி. பல மொழிகளைக் கற்றவர். கர்நாடக இசையில் வல்லுனர். இறைப்பணி செய்வதில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். ஸ்ரீ முத்துசுவாமி தீட்சிதரின் அபயாம்பாள் நவாவர்ண கல்வெட்டை அம்மன் திருக்கோயிலில் அமைத்துள்ளார். அன்னை அபயாம்பிகைக்கு 61 பவுனில் "ஸ்வர்ணமாலா ஆரமும்", பெருமானுக்கு உருத்திராட்சக் கிரீடமும் செய்து அளித்தவர். இவருக்கு "சிவப்பணிச் சீலர்" என்ற பட்டத்தை திருவாவடுதுறை ஆதீனம் சீர்-வளர்-சீர் குரு மகாசன்னிதானம் அளித்துக் கௌரவித்துள்ளார். அபயாம்பிகை சதகத்தின் ஸூக்ஷ்மமானக் கருத்தினை அடியேனுக்கு விளக்கி, எழுத வைத்த இத்தாய்க்கு எப்படி நன்றி சொல்வேன்? அத்தாயின் திருவடிகளுக்கு சிரம் பணிகின்றேன்.

சாமான்யமான அடியேனையும் ஒரு ஆளாக்கி ஆன்மீக நெறியில் உலவச் செய்த அடியேன் குருநாதர் ஸ்ரீ-ஸ்ரீ-ஸ்ரீ கிருஷ்ணன் ஸார் அவர்களின் திருவடியில் இந்நூலைச் சமர்ப்பிக்கின்றேன்.

இந்நூலைக் குறித்த நேரத்தில் ஒளிஅச்சு வடிவமைப்பு செய்து, அச்சிட்டு வழங்கிய "எம்கேஎம் பிரிண்டர்ஸ்"க்கு அடியேன்து மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலை இயற்றும்படி என் சித்தத்தில் தூண்டிய சித்ரூபிணியான அபயாம்பிகைத்தாய்க்கு எப்படி நன்றி சொல்வேன்? எல்லாம் அவள் செயல்! குற்றம் குறை இருப்பின் சான்றோர்கள் அடியேனை மன்னித்தருள வேண்டும்.

அபிராமிதாஸன்

மீனாட்சிசுந்தரம் மோகன்

காப்பு

அபயாம்பிகை சதகம் அன்பாய் உரைக்க
உபய சரணம் உதவும் - சபை நடுவுள்
ஆடுகின்ற ஐயன் முதல் அன்பாகப் பெற்றஒரு
கோடு முகத்தானை குறித்து.

அன்னை அபயாம்பிகை மீது அன்புடன் சதகம் சொல்லுதற்குப் பொற்சபையில் ஆனந்தக் கூத்தாடும் நடராசப் பெருமான், முதன் முதலாக அன்புடன் தோற்றுவித்த ஒற்றைக் கொம்புடைய யானை முகத்தோன், தனது இரு திருவடிகளையும் துணையாகத் தந்து அருள் புரிய வேண்டும்.

காப்புச் செய்யுளே பக்தர்களின் மனதைக் கவரும் வகையில் மிகுந்த சொல் நயமும், பொருள் செறிவுடனும் அமைந்திருப்பது அபயாம்பிகை பட்டர் அன்னையின் அருட்புதல்வர் என்பதைத் தெள்ளத் தெளிவாக உணர்த்துகிறது. "முதல் அன்பாகப் பெற்ற" -- சிவபெருமானுக்கும், அம்மைக்கும் முதல் பிள்ளையானவர் விநாயகர். இம்மண்ணுலகிலும் திருமணம் செய்து கொண்ட தம்பதியினர் தங்களுக்குப் பிறக்கும் முதல் குழந்தையின் மீது அதிக அன்பு வைப்பது இயற்கைதானே! இதற்குத் தெய்வத் தம்பதியினரும் விலக்கல்ல என்று சொல்வது ஆசிரியரின் கவிநயத்தைக் காட்டுகிறது.

சபை நடுவுள் ஆடுகிற ஐயன்: முழுமுதற் கடவுளான கணபதியை அறிமுகப் படுத்தும் பாணியே அருமையாய் அமைந்துள்ளது. அபயாம்பிகை பட்டர் மயிலாடுதுறையில் வாழ்ந்தவர். இருந்தாலும் உலகோர்க்கு புரியும் வகையில் தில்லை (சிதம்பரம்) ஈசனை (தந்தையை) ஸூக்ஷ்மமாய் இங்கு சொல்லியிருப்பது சிந்திக்கத் தக்கது.

சபை என்பது கனகசபை, பொன்னம்பலம், தில்லை, சிதாகாசம், சிற்றம்பலம், சிதம்பரம் என்று பலவிதமான பொருளுடைத்து. அச்சபையில் கூத்தாடுபவன் சிவபெருமான். அவ்வாறு ஆடுதற்குச் சக்தியைத் தருபவள் - அவனுடலில் பாதியாகவும் உயிர்நாடியாய் விளங்கும் அபயாம்பிகைத் தாயே!

அபயாம்பிகை பட்டர் ஒரு தலை சிறந்த ஸ்ரீவித்யா உபாசகர். அல்லும் பகலும் "காமகாமேச்வரி" சொரூபத்தைத் தன் சிதாகாசத்தில் (சபை நடுவுள் - புருவ நடுவில் - ஆக்ஞையில்) வணங்கி வந்தவர் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்குகிறது. அபிராமி பட்டரின் அபிராமி அந்தாதி காப்புச் செய்யுளும் இவ்வாறே தில்லை ஈசனின் பெருமையைச் சொல்லி ஆரம்பிப்பது நோக்குக. அன்னையின் அன்பர்கள் கருத்து ஒருமித்தவர்களாக இருந்துதானே ஆகவேண்டும்! ஏனெனில் அவர்கள் சித்தத்தில் உறைபவள் உகாரப் பிரணவமான உமா தேவியன்றோ!

உபய சரணம் உதவும் : ஔவைப் பாட்டியும், விநாயகர் அகவலில், "குரு வடிவாகிக் குவலயந் தன்னில் திருவடி வைத்துத் திறம் இது பொருள் என" என்று விநாயகரின் திருவடிப் பெருமையைச் சொல்லுகிறார்.

1. அன்னையின் பாதாதி கேச வர்ணனை

பாதாம் புயத்திற் சிறுசதங்கைப் பணியுஞ் சிலம்புங் கிண்கிணியும்
படர்பாடகமுந் தண்டையுடன் படியுங் கொலுசுந் தழைத்தருளும்
பீதாம்பரமுந் துவள் இடையும் பிரியா தரைஞாண் மாலைகளும்
பெருகுந் தரள நவமணியும் புனையுங் குயமும் இருபுயமும்
போதாரமுத வசனமொழி புகலும் வாயும் கயல்விழியும்
புண்டரீகத் திருநுதலும் பொன்போற் சடையும் மதிமுகமும்
வாதாடிய பேரின்பரச வதனக் கொடியே உனைஅடுத்தேன்
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

அன்னையின் அருளாளர்கள் அனைவரும் அன்னையின் திருமேனி அழகில் தங்களை மறந்து ஆனந்தக் களிப்பில் மூழ்கியவர்கள். அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லியாகவும், திரிபுரசுந்தரியாகவும் விளங்குகிறாள் -- அன்னை அபயாம்பிகை.

இப்பாடலில் அபயாம்பிகை பட்டர் வைஷ்ணவ சம்பிரதாயம் போல் அன்னையைத் திருவடியிலிருந்து திருமுடி வரை கவிதாவிலாசம் பொங்கப் போற்றிப் புகழ்கிறார். (அன்னை - பத்மநாப சகோதரி அன்றோ!) மேலும் அன்னையின் திருவடிகள்தானே அனைவருக்கும் அபயம் தருவது. அபயாம்பிகைத் தாய்க்கு இது மிகவும் பொருத்தமாய் உள்ளது.

அன்னை அபயாம்பிகையின் தாமரைத் திருவடிகளில் சதங்கையும், சிலம்பும், கிண்கிணியும், பாடகமும், தண்டையுடன் கொலுசுகளும் சேர்ந்து ஒலிக்கின்றன. மெல்லிய இடையில் அழகான அரைஞாண். அதன்மேல் பொன்னாலான பட்டாடையும் பொலிவுடன் திகழ்கின்றன.

பரஞானம், அபரஞானமாய் விளங்கும் தனங்களின் மீது முத்துக்களுடன் நவமணிகளும் சேர்ந்த மாலைகள் பிரகாசிக் கின்றன. அமுதம் போன்ற வசனமொழிகளை உதிர்க்கும் திருவாயும், மீன்களைப் போன்ற விழிகளையும் உடையவள்.

தாமரைப் போன்ற திருநெற்றியும், பொன்னிறமான சடையும், சந்திரன் போன்ற திருமுகமும், காற்றிலே அசைந்தாடும் அழகிய கொடிபோல் பேரின்ப ரசமாய் விளங்கும் அன்னையே, உன்னையே சரணடைந்தேன். மயிலாடுதுறையில் வந்திப்பவர்களுக்கு வரம் தரும் வள்ளலாய் விளங்கும் அருள்மிகு மாயூரநாதரின் உயிர்நாடியாய்த் திகழ்பவளே! அண்டினவருக்கு அபயம் தந்து அருள்புரியும் அம்பிகையே! அனைவருக்கும் தாயே!

அபிராமிபட்டர், *"அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி"* என்றார். அபயாம்பிகை பட்டர் அதற்கும் மேலே ஒரு படி போய் *"ஈசன் வாழ்வே"*

என்கிறார். இருவரும் அன்னையைத் தாயாகப் பாவித்து சேயாக வாழ்ந்த ஞானக்குழந்தைகள் அன்றோ! முதல் பாடலிலேயே *"உன்னையே சரணடைந்தேன்"* (உனை அடுத்தேன்) என்று சொல்லுவது ஆசிரியர் அன்னையிடம் கொண்டிருந்த அனன்ய பக்தியைக் காட்டுகிறது. இருவருமே சக்தியைத் தனியாக வழிபடாமல், சிவனுடன் ஒன்றிய சக்தியைத்தான் வழிபட்டனர் என்பதே நாம் அறியவேண்டிய தத்துவம். இந்தக் கருத்தினை வாக்தேவதைகள் மனதிற்கொண்டு, அன்னையை ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்தில், *"சிவசக்த்யைக்ய ரூபிணி"* என்று போற்றி புகழ்கிறார்கள்.

2. அனைத்தும் அன்னை அபயாம்பிகையே!

அஞ்சு முகத்தி நவமுகத்தி ஆறு முகத்தி சதுர்முகத்தி
அலையில் துயிலும் மால்முகத்தி அருண முகத்தி அம்பரத்தி
பஞ்சாக்ஷரத்தி பரிபுரத்தி பாசாங்குசத்தி நடுவனத்தி
பதுமாசனத்தி சிவபுரத்தி பாரத்தனத்தி திரிகுணத்தி
கஞ்ச முகத்தி கற்பகத்தி கருணாகரத்தி தவகுணத்தி
கயிலாசனத்தி நவகுணத்தி காந்தள் மலர்போல் சதுர்கரத்தி
மஞ்சு நிறத்தி பரம்பரத்தி மதுரச் சிவத்தி மங்களத்தி
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

அன்னை அபயாம்பிகையைப் பலவிதமான வடிவங்களில் வர்ணிக்கிறார் அபயாம்பிகை பட்டர். பாரதியாரும் *"யாதுமாகி நின்றாள் காளி"* என்பார். அதாவது, அன்னைதான் அனைத்துக் கடவுள்களின் ஆதிமூலம் அல்லது ஸமஷ்டி வடிவம்.

அஞ்சுமுகத்தி : ஐந்து முகங்களை உடையவள். ஆறு ஆதாரங்களில் மூலாதாரம் ப்ருத்வி தத்துவத்தின் ஸ்தானம். எனவே, ஆகாயம் முதல் பிருத்வி (பூமி) வரை உள்ள பஞ்ச பூதங்களையும் குறிக்க, ஐந்து முகங்களை உடையவளாக இந்த சக்ரத்தில் அன்னை அமர்ந்திருக்கிறாள். ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் (515) "பஞ்சவக்த்ரா" என்று கூறுகிறது. திருமூலரும்

"சத்திதான் நிற்கின்ற ஐம்முகம் சாற்றிடில்
உத்தமம் வாமம் உரைத்திடும் சக்தி
பச்சிமம் பூருவம் தற்புருடன் உரை
தெற்கில் அகோரம் வடகிழக்கு ஈசனே" - என்பார். - (திருமந்திரம்-1741)

பொருள் : அருளைப் பொழியும் அன்னை சக்தியின் ஐந்து முகங்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால் அன்னையின் வடதிசை நோக்கிய முகம் வாமதேவம். போற்றப்படும் (உரைத்திடும்) சத்தியோசாதம் மேற்கு நோக்கிய முகம். தற்புருடம் கிழக்குப் (பூருவம்) பார்த்ததாகும். புகழப்படும் (உரை) தெற்கு பார்த்த திருமுகம் - அகோரம். வடகிழக்கு திசை நோக்கிய முகம் ஈசானமாகும்.(பச்சிமம் - மேற்கு).

நவமுகத்தி : வாமை, ஜேஷ்டை, ரௌத்ரி, காளி, கலவிகரணி, பலவிகரணி, பலபிரதமனி, சர்வபூததமனி, மனோன்மணி ஆகிய ஒன்பது சக்திகளாயிருக்கும்போது ஒன்பது திருமுகத்தையுடையவள்.

"திரிபுரை சுந்தரி அந்தரி சிந்துரப்
பரிபுரை நாரணியாம் பல வன்னத்தி
இருபுரை ஈசி மனோன்மணி என்ன
உருபலவாய் நிற்கு மாமாது தானே" - திருமந்திரம் (1046)

சூரியன், சந்திரன், அக்கினி என மூன்று கூறுகளாக உள்ள திரிபுரை, சுந்தரி (அழகானவள்), ஆகாய வடிவினள் (அந்தரி), உலகத்து உயிர்களைப் பரிவுடன் காக்கும் சிவந்த நிறம் கொண்ட 'பரிபுரை', 'துர்க்கை' (நாரணி), பலவான நிறமுடையவள் (அம்பல வன்னத்தி), கரிய நிறமுடைய மகேசனுக்குச் சக்தியாக விளங்கும் 'ஈசுவரி', நினைப்பவர் மனத்துள் நின்றருளும் சதாசிவ சக்தியான 'மனோன்மணி' என்று நவசக்தியாக விளங்கும் 'பராசக்தி' (மாமாது) ஆவாள்.

சிவனும், சக்தியும் ஒன்றேதான். சிவனுக்கு சிலாகித்துச் சொல்லும் அனைத்தும் அன்னைக்குப் பொருந்தும்.

"எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் நிற்பாள் அவளும்"

ஸ்ரீவித்யா உபாசனையில், ஸ்ரீ சக்கர நவாவர்ண பூஜை ஒரு முக்கிய அங்கம். ஒவ்வொரு ஆவரணத்திற்கும் ஒரு ஈஸ்வரி உண்டு. இந்த ஒன்பது ஈஸ்வரிகளையும் கிரமமாகப் பூஜிக்க வேண்டும். அவர்கள் முறையே, த்ரிபுரா, த்ருபுரேஸி, த்ரிபுரசுந்தரி, த்ரிபுரவாசினீ, த்ரிபுராஸ்ரீ, த்ரிபுரமாலினீ, த்ரிபுராஸித்தா, த்ரிபுராம்பிகா, மஹாத்ரிபுரஸுந்தரி ஆவர். இவர்களைத் தன் மனதிற் கொண்டு அன்னையை *"நவமுகத்தி"* என்று ஸூக்ஷ்மமாகச் சொல்கிறார் அபயாம்பிகைப் பட்டர். (ஸ்ரீவித்யா உபாசனை வெகு ரகசியமானது. வெளிப்படையாகச் சொல்லக் கூடாது. குருமூலமாகவே அறிய வேண்டும்).

ஆறுமுகத்தி : கௌமாரி நிலையில் (ஷண்முகக் கோலத்தில்) அன்னை ஆறு திருமுகங்களுடன் காட்சி தருகிறாள். சிவனுக்கு ஐந்து திருமுகங்கள். அன்னையின் திருமுகம் சேர்ந்தால் ஆறுமுகமாகிறது. அதாவது சிவனும், சக்தியும் ஒன்றிய ஞான வடிவம்தான் ஆறுமுகக் கடவுள். தந்தைக்கே உபதேசம் செய்து, 'தகப்பன் சாமி' , 'ஸ்வாமிநாதன்' என்ற திருநாமங்களைப் பெற்றவன் கலியுகக் கடவுள் கந்தன்.

அன்னையின் ஆறுமுகங்கள் முறையே - ஒளிமுகம், அருள்முகம், கருணைமுகம், ஞானமுகம், வீரமுகம், மகிழ்முகம் ஆகும்.(அருள் -- வேண்டிப் பெறுவது; கருணை - இறைவி தானே இரங்கிக் கொடுப்பது).

சதுர்முகத்தி : படைக்கும் தொழிலைச் செய்யும் பிரம்மாவின் ரூபமாக நான்கு முகங்களைத் தாங்குபவள்.

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்தில் (264-265) *ஸ்ருஷ்டிகர்த்ரீ - ப்ரஹ்மரூபா* என்று வரும். படைக்கும் தொழிலைச் செய்யும் ப்ரஹ்மா பரம்பொருளின் வடிவான தேவியின் மாயையினால் வேறுபடுத்திக் காட்டப்பட்ட உருவம். (ரஜோகுண ப்ரதானமான வடிவின் செயல்).

அலையில் துயிலும் மால்முகத்தி : காக்கும் தொழிலைச் செய்யும் திருமாலின் வடிவமாய் இருப்பவள். (புருஷோத்தம விஷ்ணு) அபிராமி பட்டரும், *'தரங்கக் கடலுள் வெங்கட் பணியணை மேல் துயில் கூரும் விழுப்பொருளே'* என்பார். (அபிராமி அந்தாதி - 35)

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் - 266-267 : *கோப்த்ரீ-கோவிந்தரூபிணீ* காத்தல் தொழிலைச் செய்யும் ஸத்வகுண மூர்த்தியான, பாற்கடலில் பாம்பணை மீது பள்ளி கொண்டிருக்கும் விஷ்ணுரூபமாய் காட்சி தருவது அன்னையேதான்.

அருணமுகத்தி : அருண என்பது சிவந்த நிறத்தைக் குறிக்கும். அருணன் என்பது சூரிய பகவானின் பெயர்களில் ஒன்று. சூரிய நமஸ்காரம் நம்மிடையே இருக்கும் பழக்க வழக்கங்களில் மிகவும் தொன்மை வாய்ந்தது. சூரிய பகவானின் ஸ்தோத்திரமும் 'அருணாய நம: என்று ஆரம்பிக்கிறது. ருத்ரனாக விளங்கும்போது சிவன் சிவந்த மேனியன். அபிராமிபட்டர் சிவபெருமானை சிவந்த நிறமுடையவனாக அபிராமி அந்தாதியில் வர்ணிக்கிறார். ('செய்யக்கணவரும்', 'எரிபுரை மேனி இறைவர்') சிவன் ருத்ரனாக உலகை ஸம்ஹாரம் செய்கிறார்.

அன்னையே ருத்ர வடிவாகவும் இருக்கிறாள். ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் - (268-269) - *ருத்ரரூபா-ஸம்ஹாரிணீ.* பரம் பொருளான அன்னையின் 'தமோகுணம்' மிகுந்த வடிவமே ருத்ரன். இக்கோலத்தில் ஸம்ஹாரம் அல்லது அழித்தல் தொழிலைச் செய்கிறாள்.

திருமூலர் தனது திருமந்திரத்தில் பல இடங்களில் அன்னையின் திருமேனியைச் சிவந்த வர்ணமாகச் சிலாகித்துக் கூறுகிறார். (செம்பவளத் திருமேனிச் சிறுமியை, கலைஞானி சொல்லிய கிஞ்சுக நிறமன்னு சேயிழைக் கல்லியல் ஒப்பது காணுந் திருமேனி, செய்யத்திருமேனி).

அபிராமி பட்டரின் அபிராமி அந்தாதியின் முதற் பாடலே அன்னையின் சிவந்த திருமேனியை ஆறுவிதமாக வர்ணிக்கிறது. வடமொழி நூல்களான ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம், தேவீ மாஹாத்மியம், ஸௌந்தர்யலஹரி, தேவி பாகவதம், உபநிஷத்துக்கள் எல்லாமே அன்னையின் திருமேனியைச் சிவப்பாக, சிறப்பாகச் சொல்கிறது. இதன் முக்கிய காரணம் யாதெனில் "கருணையின் நிறம் சிவப்பு" - அன்னை கருணை என்னும் கடல் அன்றோ! *(கருணாரஸ ஸாகரா)* (பாவனோபநிஷத்து: *லௌஹித்ய - மேதஸ்ய ஸர்வஸ்ய விமர்ச:* - 29)

அம்பரத்தி : அம்பரம் - ஆகாயம். அன்னை ஆகாயமே வடிவானவள். ஆகாயத்திற்கு எல்லை காண முடியாது. அது ஸூக்ஷ்மமானது. ஸ்ரீ லலிதா

ஸஹஸ்ரநாமம் : 782. *பராகாயா*- சிறந்ததான ஆகாசமாக இருப்பவள். அன்னை ஆதியும் அந்தமும் அற்றவள். (சிவபெருமானின் அடியும் முடியும் காணாமல் தவித்தனர் மாலும், அயனும்).

பஞ்சாக்ஷரத்தி : 'நமசிவாய' என்பது பஞ்சாக்ஷரம் ஆகும். நமசிவாய என்று சொன்னால் நமனும் நகர்ந்து விடுவான். அத்தகைய சிறப்புடையது இந்நாமம். அந்த அழகிய "நமசிவாய" என்னும் இனிய சொல்லின் பொருளானவள் -- அன்னை அபயாம்பிகை. மாணிக்கவாசகர் அருளிய சிவபுராணம் "நமசிவாய வாழ்க" என்று ஆரம்பிப்பதையும் நோக்குக. திருமூலர் அன்னையை, "அஞ்சொல் மொழியாள்" என்று கூறுகிறார். (திருமந்திரம் - 1109). "அஞ்சல் மொழியாள்" என்பதே காலப் போக்கில் திரிந்து "அஞ்சல் நாயகி" என்று ஆயிற்று என்பார்கள் சிலர்.

பரிபுரத்தி : சிலம்புகளைத் தனது கால்களில் அணிந்தவள். அபிராமி பட்டரும் *'வேதப் பரிபுரையே'* என்பார். அதாவது அன்னை வேதங்களைத் தனது சிலம்புகளாக அணிந்திருக்கிறாளாம். அவள் வேதமாதாவாயிற்றே! ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமம் - 46. *ஸிஞ்ஜானமணி மஞ்ஜீர மண்டித ஸ்ரீபதாம்புஜாயை* - ஒலிக்கும் இரத்தினப் பரல்கள் கொண்ட சிலம்புகளால் விளக்கமுறும் அழகிய திருப்பாதங்களையுடையவள்.

பாசாங்குசத்தி : பாசம், அங்குசம் ஆகியவற்றைத் தன் திருக்கரங்களில் ஏந்தியவள்.

நடுவனத்தி : பூமியில் நடுவில் இருக்கும் விந்திய மலையில் வசிப்பவள். *விந்த்யாசல நிவாஸினீ* (336) என்று ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் கூறுகிறது. தேவீ மாஹாத்மியத்தில் தேவியே கூறும் ஸ்லோகம் :

"நந்தகோப-க்ருஹே ஜாதா யசோதா-கர்ப்ப-ஸம்பவா |

ததஸ்தௌ நாசயிஷ்யாமி விந்த்யாசல-நிவாஸினீ || (11.42)

பொருள் : யசோதையின் கருவில் தோன்றி, நந்தகோபர் வீட்டில் பிறந்து, விந்தியாசலத்தில் வசிக்கப் போகும் நான் அப்போது அவர்களை நாசம் செய்யப் போகிறேன். (அவர்களை என்று குறிப்பிட்டது சும்பன், நிசும்பன்).

பதுமாசனத்தி : தாமரையை ஆசனமாகக் கொண்டவள் அன்னை. ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் (278) - *பத்மாஸனா* - பிந்துவிற்கும் பத்மம் என்று பெயர். அதில் வீற்றிருப்பவள் என்றும் கூறலாம். இங்கு தாமரை என்றது ஸஹஸ்ராரத்தில் உள்ள ஆயிரம் இதழ்கள் கொண்ட பொற்றாமரையைக் குறிக்கும்.

சிவபுரத்தி : கைலாஸத்திற்கும் அப்பால் சிவபெருமான் இருப்பிடமான மஹாகைலாஸத்தில் வாழ்பவள். ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் (578) *மஹா கைலாஸ நிலயா* என்று கூறுகிறது.

பாரத்தனத்தி : பெருமை வாய்ந்த கருணையும், அருளும் நிறைந்த பெரிய தனங்களையுடையவள். ஆதிசங்கரர் ஸௌந்தர்யலஹரியில் (73) *"அமுதே வக்ஷோஜா-வம்ருதரஸ-மாணிக்ய-குதுபௌ"* என்று அன்னையின் நகில்களைப் புகழ்கிறார். அதாவது, அன்னையின் நகில்கள் அமிருதரஸம் நிறைந்த ரத்ன கலசங்களாம். அபிராமி பட்டர் அபிராமி அந்தாதியில், *"பேரருள் கூர் திருத்தன பாரமும்", "சின்னஞ்சிறிய மருங்கினில் சாத்திய செய்யப்பட்டும் பென்னம் பெரிய முலையும்" "கொங்கை மலை கொண்டு", "தருணாம் புயமுலைத் தையல் நல்லாள்"* என்றும், அபிராமி பதிகத்தில், *"ஸம்ப்ரம பயோதரி"* என்றும் கூறுகிறார். அன்னை அகிலாண்டத்திற்கும் தாய். ஆகையால் அன்னையின் தனங்கள் பெரிதாகவும், எந்நேரத்திலும் பால் சுரக்கும் தன்மையுடைத்து.

திரிகுணத்தி : முக்குணங்களுடன் கூடியவள். ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் (984). *த்ரிகுணா* - ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களுக்கும் உற்பத்தி ஸ்தானமாகிய மூலப்ரக்ருதி. இந்த மூன்று குணங்களுடன் எல்லா சரீரங்களிலும் அன்னை இருக்கிறாள்.

கஞ்சமுகத்தி : கஞ்சம் என்றால் தாமரை. அன்னையின் திருமுகம் தாமரை போல் காணப்படுகிறது. அபிராமி பட்டர், அந்தாதியில் அன்னையை, *"அரவிந்தம் எல்லாம் துதிசய ஆனன சுந்தரவல்லி"* என்று போற்றிப் புகழ்கிறார். அதாவது, "தாமரைகளெல்லாம் துதிக்கும் வெற்றியுடன் கூடிய திருமுகத்தை யுடைய அழகிய கொடி போன்றவள்" எங்கள் அன்னை.

கற்பகத்தி : கற்பக வ்ருக்ஷத்தின் அடியில் அமர்ந்துள்ளவள். வேண்டியதை அவ்விருக்ஷம் அளிக்கும். அதுபோல் அன்னை தன் பக்தர்களுக்கு அவர்கள் வேண்டியதற்கும் மேலாகவே அளிப்பவள். ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் (353). *பக்திமத் கல்பலதிகா* - பக்தர்களுக்குக் கற்பகக் கொடி போன்று உதவுகிறவள். (ஸ்தீரியைக் குறிக்கும்போது கொடி என்று கூறுவது ஸம்ப்ரதாயம்).

கருணாகரத்தி : அன்னை கருணையே வடிவானவள். பக்தர்களுக்காகக் கருணை முழுவதையும் ஒன்றாகத் திரட்டி தன் திருக்கைகளினால் அபய, வரத ஹஸ்தங்களாகக் காண்பிக்கிறாள். *"கருணாரஸ ஸாகரா", "கருணாம்ருத ஸாகரா", "கடாக்ஷஸ்யந்தி கருணா", "காருண்ய விக்ரஹா"* என்று அன்னையின் கருணையைச் சொல்லும் சில திருநாமங்கள்.

தவகுணத்தி : சேய்களைப் பராமரித்து வளர்ப்பதில் தாய்க்குப் பெரும் பங்கு உண்டு. ஒரு தாய் தன் குழந்தைகளுக்கு எடுத்துக்காட்டாய் விளங்கவேண்டும். "நூலைப் போல சேலை, தாயைப் போல பிள்ளை' என்பது பழமொழி. அன்னைப் பெருந்தவம் செய்துகாட்டி, தனக்கு யாரும் நிகரில்லாதவளாகத் திகழ்கிறாள்.

இமயமலையில் பார்வதியாகவும், கன்னியாகுமரியில் குமரி அன்னையாகவும், காஞ்சியில் காமாக்ஷியாகவும், மயிலையில் மயில் வடிவாகியும், திருவாவடுதுறையில் பசுவின் வடிவாகியும், சங்கரன் கோயிலில் 'ஆடித்த பசு' என்னும் கடுந்தவமும் செய்தவள். இறைவனின் உடலில் பாதியாக இருக்க விரும்பி, திருக்கேதாரத்தில் மாபெரும் தவமியற்றினாள்.

மயிலாடுதுறையில் அன்னை பெண் மயிலாக, நீண்ட காலம் லிங்கவடிவில் இருந்த சிவபெருமானைக் குறித்து கடுந்தவம் செய்ய, ஈசனும் அன்னையின் பக்தியை மெச்சி, தானும் ஒரு ஆண் மயில் உருவெடுத்து, அன்னையுடன் சேர்ந்து நடனமாடியதால் இந்த ஸ்தலம் "மயிலாடுதுறை" எனப் பெயர் பெற்றதாகப் புராணம் கூறுகிறது. இதற்குச் சான்றாக ஸ்ரீ ஆதிமாயூரநாதர் கோயிலில் சிலா ரூபத்தில் இருக்கும் மாயூரநாதனை பூஜை செய்யும் மயில் உருவம் உள்ளது. (இருவரும் சேர்ந்து ஆடிய நடனம்' - மயூரதாண்டவம்).

இவற்றையெல்லாம் மனதில் கொண்டு அபயாம்பிகை பட்டர் அன்னையை "தவகுணத்தி" என்று பொருட்செறிவுடன் கூறுவது மிக்கச் சிறப்புடைத்து. அபிராமிபட்டர், அன்னையை *"மாத்தவளே"* என்பார். திருலரும், *"அருந்தவ மெய்தினள் ஆதியினாளே", "அருந்தவப் பெண்பிள்ளை", "தவத்தின் தலைவி", "அவளன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை"* என்று பலவாறாகப் புகழ்கிறார்.

தவம் செய்வதுதான் சிறந்த வழி என்பதை உலகோர்க்கு உணர்த்த, தானே தவம் செய்து முன்னோடியாக நிற்கிறாள் அன்னை அபயாம்பிகை. அவள் "ஸ்ரீமாதா" அல்லவா!

கயிலாசனத்தி : ஸதாசிவப் பலகையை ஆசனமாகக் கொண்டவள். ஆதிசங்கரர் ஸௌந்தர்யலஹரியில், 8வது ஸ்லோகத்திலும் *(ஸுதா ஸிந்த்தோர்)*, 92ம் ஸ்லோகத்திலும் *(கதாஸ்தே மஞ்சத்வம்)* மிகுந்த காவ்ய ரசனையுடன் இதே கருத்தினைச் சொல்கிறார். ஸ்ரீசக்ரத்தின் நடுவில் ஸர்வானந்த மயம் என்னும் பிந்து பீடத்தில் பஞ்ச பிரம்மாஸனத்தில் ஸதாசிவனுடைய மடியில் மஹாதிரிபுரஸுந்தரியாக எழுந்தருளி உள்ளாள். பஞ்ச பிரம்மாஸனமாவது பிரம்மா, விஷ்ணு, ருத்ரன், ஈசானன் ஆகியவர்களைக் கால்களாகவும், ஸதாசிவனுடைய மடியையே மேல் பலகையாகவும் கொண்ட கட்டில். இதுவே "அ-உ-ம அர்த்த, மாத்திரை, பிந்து" வடிவான ஓங்கார மஞ்சம். ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமத்திலும் வாக்தேவதைகள்(58) *"பஞ்ச ப்ரஹ்மாஸனஸ்த்திதா"* என்று அன்னையைத் துதிக்கிறார்கள்.

தத்துவம் : ஆஸனத்தின் மேல் பலகையாக இருக்கும் ஸதாசிவன், எல்லா தத்துவங்களுக்கும் மேற்பட்ட 25ஆவது தத்துவமாகும். அவருடன் சக்தி

சேருவது 26ஆவதான ஸாதாக்ய தத்துவம். இது சக்தி, சதாசிவன் இருவருடைய ஸாமரஸ்ய ரூபம். பரம்பொருள் ஒன்றுதான் என்ற அபேத நிலை. இதுதான் *"ஏகம் ஸத் விப்ரா பஹுதா வதந்தி"*.

நவகுணத்தி : நவ - ஒன்பது. குணத்தி - குணங்களைக் கொண்டவள். இன்பம், நகை, கருணை, கோபம், வீரம், பயம், அருவருப்பு, அற்புதம், சாந்தம் என்ற ஒன்பது குணங்களின் இருப்பிடமாய் விளங்குபவள். நவரஸ மஹா தாண்டவ சாக்ஷிணியாயும் இருப்பவள்.

காந்தள் மலர்போல் சதுர்கரத்தி: காந்தள் மலர் என்பது மிகவும் மிருதுவாகவும், தனித்தனியாக நான்கு இதழ்கள் கொண்டதாகவும் (கைவிரல்கள் போன்று) இருக்கும். இதன் நிறம் வெளீரன ஊதா. பெண்களின் கை விரல்களுக்கு உவமையாகச் சொல்வது கவிமரபு.

அன்னையின் நான்கு கரங்களும், அங்கு அமைந்துள்ள விரல்களும், காந்தள் மலர் போன்று மென்மையாக உள்ளது என்பதை அபயாம்பிகை பட்டர் கவி நயத்துடன் உரைக்கிறார்.

அன்னை மிருதுவான, அழகிய, மென்மையான சரீரத்தை உடையவள். ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம்(437) *கோமலாகாரா*, (721) *கோமளாங்கீ*, (460) *நளினீ* என்ற திருநாமங்களும் இதே பொருளில் அமைந்துள்ளது.

மஞ்சுநிறத்தி: மஞ்சு என்பது மேகம். அன்னை மேக நிறத்தையுடையவளாய் அபயாம்பிகை பட்டர் காண்கிறார். ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம், அன்னையை, *"ஸர்வ வர்ணோபசோபிதா* (529) என்று கூறுகிறது.அன்னை எல்லாவித நிறங்களிலும் பிரகாசிப்பவள். ஒவ்வொரு மூர்த்தத்திலும் ஒவ்வொரு வர்ணமாயிருப்பவள். மஞ்சு என்றால் பனியையும் குறிக்கும். பனிமலைக் கடவுள் மஞ்சுநாதன். மஞ்சுநாதன் உடனுறை மஞ்சுநிறத்தி. இமவான் புத்ரியல்லவா! இமயமலை பனியின் நிறத்தி!

பரம்பரத்தி: பரம்பரன் என்றால் முழுமுதற் கடவுள் என்று பொருள்படும். பரம்பரத்தி என்பது எல்லாவற்றையும் விட மேலான தெய்வத்தைக் குறிக்கிறது.

இந்தப் பாடலில் அன்னையைப் பலவித ரூபங்களில் வர்ணித்து, இறுதியில் இவள்தான் எல்லாவற்றிற்கும், எல்லோருக்கும் இறைவியாய் இருப்பவள் என்பதை அபயாம்பிகை பட்டர் உலகோர்க்கு உணர்த்தும் பாணி உன்னதமாய் உள்ளது. அபிராமி பட்டர் *"இவளே கடவுளர் யாவர்க்கும் மேலே இறைவியும் ஆம் துவளேன் இனியொரு தெய்வமுண்டாக மெய்த்தொண்டு செய்தே"* என்று அழுத்தந் திருத்தமாக அபிராமி அந்தாதியில் சொல்வது காண்க! ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் (975) *பூர்வஜா* - எல்லாவற்றிற்கும்

முன்னால் உண்டானவள். (397) *மூலப்ரக்ருதி* - எல்லாவற்றிற்கும் ஆதி காரணமான ப்ரக்ருதி ரூபமாக இருப்பவள்.

மதுரச்சிவத்தி: மதுரம் - இனிமை. சிவத்தி - சிவனைப் பிரியாத சக்தி. அதாவது, சிவனுடன் ஐக்கியமான சக்தி. பதியை விட்டு ஒரு கணமும் பிரியாதவளைத்தானே ஸுவாசினீ என்று சொல்கிறோம். ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் (999) அன்னையை, *"சிவசக்தியைக்ய ரூபிணீ"* என்று சொல்கிறது. (முன்னும் பார்த்தோம்).

மங்களத்தி: மங்களாம்பிகா. மங்களமே வடிவானவள்.(933. மங்கலாக்ருதி) 'சிவா' என்ற பெயரும் மங்களத்தைக் குறிக்கும். மங்களத்தைத் தருபவள். ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம், ஸ்ரீ லலிதா த்ரிசதீ - இவை இரண்டிலும் "கல்யாணீ" என்ற திருநாமம் உள்ளது. கல்யாணீ என்றால், மங்கள் வடிவானவள் என்று பொருள். சகல மங்களங்களும் தரும் அன்னையும் அவள்தான். தேவீ மாஹாத்மியத்திலும் (11-10)

"ஸர்வ மங்கள மாங்கல்யே சிவே ஸர்வார்த்த ஸாதிகே ।

சரண்யே த்ரயம்பகே கௌரி நாராயணி நமோऽஸ்துதே ॥

என்று கூறப்படுகிறது. அதாவது, "எல்லாப் பொருள்களிலும் மங்களப் பொருளாய் விளங்குபவளே! எல்லா நன்மைகளையும் அளிப்பவளே! எல்லா ஆசைகளையும் பூர்த்தி செய்விப்பவளே! சரணடைதற்குரியவளே! மூன்று கண்களையுடையவளே! நாராயணி தேவியே, உனக்கு நமஸ்காரம்! என்று பொருள்.

அபயாம்பிகை பட்டர் இப்பாடலை பூர்த்தி செய்யுங்கால், "மங்களத்தி" என்று அன்னையை வர்ணிப்பது மிக அழகு. அன்னையைச் சரணடைந்தோர்க்கு ஸர்வ மங்களங்களும் உண்டாகும் என்ற நம்பிக்கையை அன்பர்களுக்கு அளிக்கிறது.

அபிராமி பட்டரும் அபிராமி அந்தாதியில் (63) *"குறிக்கும் சமயம் ஆறும் தலைவி இவளாய் இருப்பது அறிந்திருந்தும் வேறும் சமயம் உண்டென்று கொண்டாடிய வீணருக்கே"* என்று கூறி, அன்னைதான் எல்லோருக்கும் தலைவியான ஈஸ்வரி என்பதை உணர்த்துகிறார்.

ஆறு சமயங்கள்: ஆதிசங்கரர் வேதத்தைப் பிரமாணமாகக் கொண்ட சௌரம் (சூரியன்), காணாபத்யம் (கணபதி), கௌமாரம் (முருகன்), வைஷ்ணவம் (விஷ்ணு), சைவம் (சிவன்), சாக்தம் (சக்தி) என்று ஆறு சமயங்களை வரையறைப் படுத்தி அமைத்தார்.

இப்பாடலில் அபயாம்பிகை பட்டர் 'அன்னையே எல்லா தெய்வ வடிவானவள், அவளே எல்லாத் தெய்வங்களுக்கும் ஈஸ்வரியானவள்' என்பதை உலகோர்க்கு உணர்த்துகிறார்.

3. அன்னையை கிளியாக வர்ணித்தல்

உச்சிக் கிளியே அருட்கிளியே உணர்வுக் குணர்வாய் உயிர்க்குயிராய்
உதித்த கிளியே பரவெளியில் ஒளிவான்பழத்தை உன்னிவரும்
நற்சொற் கிளியே கதம்பவன நகரில் வாழும் பரைக்கிளியே
ஞானக் கிளியே மறைவனத்தில் நடனக் கிளியே சிவக்கிளியே
பச்சைக் கிளியே அன்பர்மதி படரும் ஆவி ஓடையினில்
பரவுங் கிளியே நிதிக்கிளியே பவழக் கிளியே பதிக்கிளியே
வச்ரக் கிளியே நவபீட வாசற் கிளியே அருள்அமையும்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே அபயாம் பிகைத்தாயே.

அன்னை அபயாம்பிகையை கிளியாக வர்ணிக்கிறார் ஆசிரியர். அன்னையின் அருளாளர்கள் அனைவரும் அன்னையைக் கிளியாக ஒப்பிட்டு கவிபாடுவதில் ஒருமித்த கருத்துடையவர்கள். இதன் உட்பொருள் யாது? கிளியின் உடலின் நிறம் பச்சை. அதன் மூக்கு சிவந்த நிறம். அதாவது சக்தியும், சிவனும் சமஷ்டி வடிவாய் விளங்குவது கிளி.

அபிராமிபட்டர்: *"பண்ணளிக்கும் சொல் பரிமள யாமளைப் பைங்கிளியே"* - பண்கள் (இராகங்கள்) போன்று இனிய திருவாய்மொழியும், திவ்ய மணத்தையும் கொண்ட சியாமளா தேவியாகிய பச்சைக் கிளியானவளே. (அபிராமி அந்தாதி -15)

திருமூலர்: *"பூங்கிளி தங்கும் புரிகுழலாள்"* (1244 - திருமந்திரம்) "அழகிய கிளியைக் கையில் தாங்கும் சுருண்ட கூந்தலை உடையவள்"

மணிவாசகர்: "கிளி வந்த மென்மொழியாள் கேழ்கிளரும் பாதியனை" (திருவம்மானை-18)

கம்பர்: *"மயிலே! மடப்பிடியே! கொடியே! இளமான் பிணையே!*
குயிலே! பசுங்கிளியே! அன்னமே!" - சரஸ்வதி அந்தாதி

குமரகுருபரர்: "எழுதாச் சொல் மழலை ததும்பு பசுங்குதலைச் சோலைக் கிளியே"

பாரதியார்: "சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா" என்ற பாடலில் அன்னையைக் குழந்தையாகக் கொஞ்சும் பாவத்தை காண்கிறோம்.

ஸ்ரீ லலிதா த்ரிசதீ: *"ஹ்ரீம்கார பஞ்ஜரசுகி"* - ஹ்ரீம்காரமென்னும் மந்திரக்கூட்டில் வாழும் கிளி, "ஹ்ரீம்" என்பது அன்னையின் பீஜம். அன்னை தன் கருங்கூந்தலில் அணியும் தேன்சிந்தும் மலர்களைச் சுற்றி எப்போதும் வண்டுகள் ரீங்காரமிட்ட வண்ணம் இருக்கிறதல்லவா!

ஆதிசங்கரர்: *"ஓங்கார பஞ்ஜரசுகி"* - ஓங்கார கூட்டில் வாழும் கிளி. (சியாமளா நவரத்தினமாலா)

கிளி வானில் தன்னிச்சைப்படி பறந்து, திரிந்து வாழும் ஒரு பறவை. வீட்டிலும் மனிதர்களுடன் நட்புடன் வாழ்கிறது. அதைக் கூட்டில் அடைத்தாலும் சினம் கொள்ளாது.

இதன் சிறப்பாம்சம் : அனைத்திற்கும் அப்பாற்பட்ட பரம்பொருளான அன்னை அன்பர்களின் இதயக் கூட்டிலும் தானாகவே வலிய வந்து வாழ்கிறாள். அபிராமி பட்டர், *"வருந்தாவகை என் மனத்தாமரையினில் வந்து புகுந்து இருந்தாள் பழைய இருப்பிடமாக"* என்று அபிராமி அந்தாதியில் (90) குழந்தைபோல் குதூகலத்துடன் கூறுவது காண்க.

இனி அபயாம்பிகை பட்டரின் பாடலைப் பார்க்கலாமா! ஸ்ரீவித்யா உபாசனையில் ஸ்ரீசக்ர பூஜை விசேஷமானது. அந்த ஸ்ரீசக்கரத்தின் உச்சியில் விளங்கும் கிளி போன்றவளே! அளவிலா அருளைப் பொழியும் கிளியே! உணர்வுகளுக்கு உறைவிடமாய், உயிர்களுக்கெல்லாம் உயிராய் விளங்கும் கிளியே! எல்லாவற்றிற்கும் மேலான பராகாயத்தில் பரம்பொருளாய் திகழும் பரசிவம் என்ற சோதி வடிவாய் இருக்கும் நாதனை (கனியை) மிக்க உவப்புடன் விரும்பி அடையும் இனிய சொல்லையுடைய கிளியே! கதம்பவனத்தில் வாழும் மேலான கிளியே! ஞானமே வடிவான கிளியே! வேதாரண்யத்தில் நாதனுடன் நடனமாடும் கிளியே! சிவத்தினின்றும் வேறுபடாத கிளியே!

பச்சைநிறக் கிளியே! (ச்யாமளா தேவி) அன்பர்களின் ஞான முதிர்ச்சியின் ரூபமாய் தோற்றமளிக்கும் உயிராகிய ஓடையிலே உலாவித் திரியும் கிளியே! நிதிகள் நிறைந்த கிளியே! பவழத் திருமேனியுடைய கிளியே! கிளியின் மூக்கு சிவந்த நிறமாய் இருக்கும். அதை மனதிற் கொண்டு ஆசிரியர் சொல்லும் பாங்கு அருமையாய் உள்ளது. இதைத் தொடர்ந்து 'பதிக்கிளியே' என்று சொல்வது மிக அழகு. அதாவது பதியை (கணவனை) விட்டு எப்போதும் அகலாத கிளியே! இங்கு சிவபெருமானை, சக்தியுடன் ஒன்றிய ஒரே பரம்பொருளாக ஆசிரியர் காண்பது நமக்குப் பேரானந்தத்தைத் தருகிறதல்லவா!

வச்சிராயுதம் என்பது எல்லாவற்றையும் தகர்த்து எறியக் கூடிய கூர்மையான, திடமான, வலிமைமிகு ஆயுதம் (இந்திரன் கையிலிருப்பது). அதைப் போன்று, தனக்கு நிகரில்லாத வலிமை படைத்தவள் அன்னை என்பதை *'வச்ரக்கிளியே'* என்ற பொருளில் திறம்பட உரைக்கிறார் ஆசிரியர். *"நவபீட வாசற் கிளியே"* என்பது அன்னை - ஸ்ரீ சக்கரத்தின் நவகோணங் களாய பீடத்தின் வாயில் இருக்கும் கிளி என்று பொருள்படும்.

'உச்சிக்கிளியே' என்று தொடங்கி 'வாசற்கிளியே' என்று பாடலைப் பூர்த்தி செய்வது பிரமாதம்! பரவெளிக்கும் மேலே யாவர் புலனுக்கும் புரியாத

இடத்தில் உறையும் அன்னை, தன் அன்பர்களுக்காகக் கீழே இறங்கிவந்து வாயிலில் வரவேற்கக் காத்திருக்கிறாளாம். குழந்தையைத் தேடி வருவது தானே தாயின் இயல்பு.

அபயாம்பிகை பட்டரும் அன்னையினால் அமுதம் ஊட்டப் பெற்ற சேய் அல்லவா!

அன்னையின்அருளினால் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்திற்கு பாஷ்யம் எழுதிய ஸ்ரீ பாஸ்கரராயரின் வாழ்க்கையில் நடந்த ஒரு இறையனுபவம் இங்கு மிகவும் பொருத்தமாய் உள்ளது.

ஸ்ரீ பாஸ்கரராயரிடம் வாதம் செய்ய வந்த சில பண்டிதர்கள் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்தில் வரும் *"மஹா சதுஷ்ஷஷ்டி கோடி யோகினீ பரிஸேவிதா"* (237) என்ற திருநாமத்தில் கூறப்பட்ட அறுபத்து நான்கு கோடி யோகினீ தேவதைகளின் பெயர்கள், உத்பத்தி, சரித்ரம், அவற்றைக் கூற முடியுமா என்று கேட்டனர். உடனே ஸ்ரீ பாஸ்கரராயர் சிறிதும் தயக்கமில்லாமல், "நான் அவற்றைக் கூறுகிறேன். நீங்கள் எழுதிக் கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டு, அன்னையை மனதில் தியானித்துக் கொண்டு, மடை திறந்த வெள்ளம்போல் அறுபத்துநான்கு கோடி யோகினிகளைப் பற்றிக் கூறத் தொடங்கினார். அந்தப் பண்டிதர்கள் எழுத முடியாமல் கை சளைத்தனர். அப்போது அங்கிருந்த ஸ்ரீ பரமஹம்ஸ குருநாதர், அந்தப் பண்டிதர்களிடம், "இந்த மகானைச் சாமான்ய மனிதரென்று நினைக்காதீர்கள். இவர் அன்னையின் அனுக்கிரஹத்தைப் பெற்ற மாபெரும் உபாஸகர். அம்பாளே அவரது தோளில் கிளியாக அமர்ந்து உங்கள் கேள்விகளுக்கெல்லாம் பதில் கூறி வருகிறாள். எனவே இவரை உங்களால் வெல்ல முடியாது" என்று கூறி, அபிஷேகத் தீர்த்தத்தை அவர்கள் கண்களில் தெளித்துப் பார்க்கச் சொன்னார்.அவர்களும் அம்பாளின் திவ்ய தரிசனம் பெற்று, மட்டிலா மகிழ்ச்சியடைந்து, ஸ்ரீ பாஸ்கரராயரை வணங்கி மன்னிப்பு கேட்டுக் கொண்டனர்.

மதுரை மீனாட்சி அம்மனும், தன் திருக்கரத்தில் கிளியைத் தாங்குவது காண்க. அபிராமி பட்டரும், அபிராமி அம்மை பதிகத்தில் *"அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி"* என்கிறார். 'சுக' என்பது கிளியைக் குறிக்கும். கிளி என்பது சீவர்களையும் குறிக்கும் என்பது ஒரு தத்துவம். அன்னை, கருணை உள்ளம் கொண்டு, சீவர்களின் மனம் வேறு எங்கும் சென்று அலையாமல் இருக்க, அவர்களைக் கிளி வடிவத்தில் கொண்டு தன்னிடமே தக்க வைத்துக் கொண்டு இருக்கிறாளாம். இதுதானே தாயின் உச்சநிலை! "ஸ்ரீமாதா" என்று ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் தொடங்குவது காண்க! அன்னையைத் தவிர "சிறப்பு மிக்க அன்னையும்" உண்டோ?

4. அன்னை அருட்பழமானவள்!

பண்டு மறையின் முடிவினுள்ளே பழுத்த பழமே அருட்பழமே
பரிபா கத்துப் பத்தர்நெஞ்சில் படர்ந்த பழமே நவமுடிமேல்
என்றுங் கனிந்த திருப்பழமே இமையோர் தேடித் தேடியுமே
எட்டாப் பழமே காசினியில் எவர்தாம் தனையே உணர்ந்தோர்கள்
கண்டு புசிக்கும் பதிப்பழமே கருணைப் பழமே சிவப்பழமே
கயிலா யத்தில் அரன்முடிமேல் கனிந்த பழமே கதிப்பழமே
மன்றுள் மணக்கும் அடியவர்க்கும் மாயோகியர்க்கும் உதவிநிற்கும்
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

அபயாம்பிகை பட்டரும் அபிராமி பட்டரைப் போல் பக்தியில் முதிர்ந்த பழமானவர். அல்லும் பகலும் அயராது அன்னையின் திருவடி நினைப்பிலேயே வாழ்ந்தவர்.

பழம் என்பது முதிர்ச்சியின் எல்லையைக் குறிக்கும். அரும்பு மலர்ந்து பூவாகி, பூ பின்னர் காயாகி, அது நன்றாகக் கனிந்து பழமாகிறது.

அன்னைக்கு, இங்கு பழமையான, எழுதா மறையின் - வேதங்களின் அந்தமான உபநிடத்துகளாலான பழுத்த பழமாக ஒரு வடிவத்தை அமைக்கிறார் ஆசிரியர். அவள் சாதாரணப் பழம் அல்லவே! அருளே பழமானவள் அன்றோ!

மனிதர்களிலும் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியவற்றைக் கடந்து பக்குவமடைந்த பக்தர்களின் நெஞ்சில் படர்ந்த பழமாக விளங்குகிறாள். ஆசிரியர் ஒரு தலை சிறந்த ஸ்ரீ வித்யா உபாசகர் (அபிராமி பட்டரைப் போல). இங்கு *"நவமுடி மேல் என்றுங் கனிந்த திருப்பழமே"* என்று குறிப்பிடப் படுவது ஸ்ரீசக்கரத்தில் உள்ள நான்கு (மேல் நோக்கியது) சிவகோணங்கள், ஐந்து (கீழ்நோக்கியது) சக்தி கோணங்கள். இவற்றின் உச்சியில் கனிந்து காணும் பழம் என்று பொருள் படும். அன்னை என்றுமே கனிந்த பழமாக உள்ளாள்.

இப்பழத்தின் பெருமை : கண்ணால் காணும் காட்சிக்கும், நாவினால் உணரும் சுவைக்கும், என்றுமே தெவிட்டாத கருணையே உருவான பழமாக இருப்பது. சித்தர் ஒருவர் கூறும் பாடல்:

"எட்டாப் பழமடியோ எட்டி எட்டிப் பார்ப்பவருக்கு
தட்டினாலும் போகாதடி கிளியே!"

தேவர்கள் அன்னையை விடாமல் தேடியும் காணமுடியவில்லை. ஆனால் இம்மண்ணுலகில் அல்லும் பகலும் தொழும் அடியார்களுக்கு

விருந்தான ஞானப்பழமாக அன்னை அருள் புரிகிறாள். என்னே அன்னையின் கருணை!

அபிராமி பட்டர், அபிராமி அந்தாதியில் (14) *"பாரில் உன்னை சந்திப்பவர்க்கு எளிதாம் எம்பிராட்டி நின் தண்ணளியே"* என்று அருமையாகச் சொல்கிறார்.

கயிலாயத்தில் அன்னை தன் பதியாகிய சிவனின் முடிமேல் கொடியாய் படர்ந்து, கனிந்த, சிவந்த, சிவப்பழமாகி, அடியார்களுக்கு நல்ல கதியைத் தரும் "கதிப்பழமாக" திகழ்கிறாள் . அபிராமி அந்தாதி (48) *"சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றில் ஒன்றிப் படரும் பரிமளப் பச்சைக் கொடி..."* என்று கூறும். ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் (201) *ஸத்கதிப்ரதா* - நல்ல கதியை வழங்குபவள். ஸத் என்றால் நித்யமாயிருக்கும் பரம்பொருள். அதை அடையும் ஞான மார்க்கத்தைத் தருபவள். (727)*சிவஞானப்ரதாயினீ :* சிவஞானத்தைத் தருபவள். அதாவது அன்னையின் மூலமாகத்தான் நிர்மலமான, சாந்தமான சிவனை அறிய முடியும். "சிவப்பழமே" என்று ஆசிரியர் சொல்லுவது மிகப் பொருத்தமாகவும், பொருள் செறிவுடனும் அமைந்துள்ளது.

"அவள் அருளால் அவன்தாள் வணங்கி" என்று சொல்லாமல் சொல்லுகிறார், அன்னையின் அருள் மைந்தன் அபயாம்பிகை பட்டர்.

"மன்றுள் மணக்கும் அடியவர்க்கும் மா யோகியர்க்கும் உதவி நிற்கும்" _ மன்றுள் - சிதாகாசம்-சிற்றம்பலம்-சிதம்பரம் - நம் உடலில் புருவ நடுவாகிய ஆஞ்ஞையில் அன்னையை வைத்து தியானிக்கும் அடியார்கட்கு சிவனைக் காட்டும் சிறந்த தாயாக உதவி புரிபவள் அன்னை அபயாம்பிகை. இதனையே திருமூலரும், *திருமந்திரம்*-2770ல்

"நெற்றிக்கு நேரே புருவத்து இடைவெளி
உற்றுஉற்றுப் பார்க்க ஒளிவிடும் மந்திரம்
பற்றுக்குப் பற்றாய் பரமன் இருந்திடம்
சிற்றம்பலம் என்று சேர்ந்து கொண்டேனே"

என்கிறார்.

அபயாம்பிகை பட்டர் அன்னை அபயாம்பிகையை தன் ஆஞ்ஞையில் (புருவத்து இடைவெளியில்) வழிபட்டவர் என்று இப்பாடல் மூலம் அறிகிறோம். சாக்த சம்பிரதாயத்தில் குங்குமம் வைத்துக் கொள்வதும் புருவங்களின் நடுவில்தானே!

5. அன்னையைத் தேனாக வர்ணித்தல்

தேனே பாலே சருக்கரையே தெவிட்டா அமுதே கற்கண்டே
சீனி யுடன்முப் பழச்சாற்றில் சிறந்த ரசமே செம்பொன்மலை
மானே மடலே மடக்கொடியே வளர்ந்த வனமே திருவதன
மயிலே குயிலே அன்பரெலாம் வாரிச் சொரியும் மணிநிதியே
ஊனே என்றன் உயிர்க்குயிரே உள்ளும் புறம்பும் உறுமொழியே
ஒளிசேர் கனகக் கற்பகமே உதித்த சுடரே திருப்பரமே
வானே ஊனின் வளிக்கனலே வனமே பூவே வரைமகளே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

ஆசிரியர் சிறு குழந்தைபோல் அன்னையைப் பற்பல இனிப்புப் பொருள்களாகச் சொல்லி மனமகிழ்கிறார். அதே நேரத்தில் ஒரு அரிய தத்துவத்தையும் அதனுள் அடக்கியுள்ளார்.

தெரிந்துள்ள பொருள்களை உபமானமாகக் கொண்டு, தெரியாத பேரின்பமாகியப் பரம்பொருளை கற்பனையில் எட்டிப் பிடிக்கிறார் அபயாம்பிகை பட்டர்.

தேன் இதயத்திற்கும், பால் உடலிற்கும், சர்க்கரை நாவிற்கும் சுவை தருவது. (அதாவது மனம், காயம், வாக்கு). அழிவில்லாத பேரின்பமான முக்தி ஆனந்தத்தை அடையவேண்டுமானால் அன்னையின் திருவடிகளை மனதால் நினைத்து, அவளை வாக்குகளினால் போற்றி, அவள் திருவடிகளில் வீழ்ந்து உடலினால் வணங்க வேண்டும்.அன்னையின் ரூபமோ தேனிலும், பாலிலும் இனியது.

"மஹத்யைவா ஏதத்தேவதாயை ரூபம் யன்மது" என்று மிக அழகாகச் சொல்கிறது ஸ்ருதி. அதாவது அன்னை தேன் போன்ற வடிவமானவள். தேவிக்குச் செய்யும் அறுபத்திநான்கு உபசாரங்களில் *'அம்ருதாஸவசஷகம்'* என்பது ஒன்று. இதன் பொருள் : "அம்ருதமாகிய தேன் நிறைந்த கிண்ணம்". ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் (510) *மதுப்ரீதா* - தேனில் பிரியம் உள்ளவள். (தேன் ஹோமம் தேவிக்கு மிகப் பிரியமானது).

இங்கு ஆசிரியர் அன்னையை தேனாக, பாலாக, சர்க்கரையாக, தெவிட்டாத அமுதாக, கற்கண்டாக, சீனியுடன் கலந்த பழங்களின் (மாம்பழம், பலாப்பழம், வாழைப்பழம்) ரசமாக எண்ணி, படிப்பவர்களின் மனதை ஒரு இனிப்புக் கடலாக மாற்றிவிடுகிறார். மாணிக்கவாசகரும், *"கறந்த பால் கன்னலொடு நெய் கலந்தாற் போலச் சிறந்து அடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்று"* என்று சிவபுராணத்தில் (திருவாசகம்)

சொல்லுகிறார். தேன் ஒரு ஒப்புயர்வற்ற உணவு வகை. பரஞானம் என்பது "மது வித்யா" என்று கூறப்படுகிறது.

அடுத்து, அன்னை இமயமலை அரசனுக்கு மகளாய்த் தோன்றியதை எண்ணிப் பார்க்கிறார் ஆசிரியர். அழகால் மயிலைப் போன்றவள். இனிய குரலால் குயிலாக ஒலிக்கிறாள். வனத்தில் வாழும் கொடி போன்றவள். அண்டியவருக்கு அளவில்லாது செல்வங்களை அள்ளித் தருபவளும் அவளே! (ஐஸ்வர்யரூபிணி, ஐஸ்வர்யதாயினி)

தட்சனின் மகளாய் பிறந்து வருந்திய அன்னை, மலையரசனுக்கு மகழ்ச்சியுடன் மகளாய்த் தோன்றினாள்.

ஒளியைப் பரவும் பொன்மயமான கற்பகம் அவளே! அறியாமை என்னும் அக இருளைப் போக்குபவளும் அவளே! புற இருளைப் போக்கி, சூரியனாகவும், சந்திரனாகவும் உலகிற்கு பகலிலும், இரவிலும் ஒளி கொடுப்பவளும் அவளே! அபிராமி அந்தாதி (47), *"இரவு பகல் சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே"* என்று சொல்வதும் காண்க.

அன்னையே உடலாகவும், உயிருமாகி நிற்பவள். திருமூலர் *"உள்ளம் பெருங்கோயில், ஊனுடம்பு ஆலயம்"* என்பார். அவள் பராகாச வெளியிலும் திகழ்பவள். பஞ்ச பூதங்களான ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், நிலம் என்பதும் அவளே. ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் (949) *பஞ்சபூதேசி* - பஞ்ச பூதங்களின் ஸத்தா ரூபமாக அன்னை இருப்பதால் அவைகளுக்கு ஈஸ்வரியாகச் சொல்லப்படுகிறது.

இப்பாடலின் கருத்து யாதெனில், பிறவிகளில் அரிதான மானிடப் பிறவி எடுத்துள்ள நாம், அன்னையை மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் எப்போதும் தியானித்து, அவளுடைய திருவடிகளில் ஒன்றி விட வேண்டும் என்பதே.

அபயாம்பிகைத் தாயை எண்ணி எண்ணி உருகும் அபயாம்பிகை பட்டர், பார்க்கும் பொருளாகிய அன்னையையும், பார்க்கும் தானும், பார்வையும் ஒன்றிப் போகும் நிலை அடைந்து, தன்னையே மறக்கிற இந்நிலைதான் - *"திரிபுடிரகிதம்"*.

6. அடியார் மனத்துள் உறையும் அன்னை

பஞ்சா பரணி நவபூர்ணி பரணா பரணி தவசரணி
பரமேஸ் வரியே ஈஸ்வரியே பஞ்சா க்ஷரத்தி பங்கயத்தி
எண்சாண் உடம்பில் தொண்ணுற்றா றிசைந்த தத்வா திகமுகமே
இறையோ னிடத்தில் நடனமிடும் இமையோர்க் கரசே ஏகவெளிக்
கஞ்சா சனத்தின் நிலையாளே கருணா லயத்துள் உறைபவளே
கன்னற் சிலையும் ஐங்கணையும் கரத்தில் சிறந்த பரைத்திருவே
அஞ்சா ணவங்கள் அகன்றடியார் மனத்துள் உறையும்அருட்கடலே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

அபயாம்பிகைத் தாயாருக்கு அஞ்சல்நாயகி, அஞ்சலை, அபய பிரதாம்பிகை என்ற திருநாமங்களும் உண்டு. அன்னையின் திருவடி களையே சிந்தையில் நிறுத்தி தவம் செய்வோர்க்கு அடைய முடியாதது யாதும் இல்லை. இதையே அபிராமி பட்டரும் அபிராமி அந்தாதியில் (68), *"தலைவி சிவகாமி சுந்தரி சீரடிக்கே சாரும் தவமுடையார் படையாத தனமில்லையே"* என்று கூறுகிறார். மேலும், அதிலேயே பாடல் பதிமூன்றில், *"மாத்தவளே! உன்னை அன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே"* என்பார்.

இதையெல்லாம் கருத்தில் கொண்டு அபயாம்பிகை பட்டர், அன்னையை *"தவசரணி"* என்று வெகு அருமையாகக் கூறுவது மிக அழகு! அதாவது அன்னையின் திருவடிகள்தான் தவத்திற்குரிய மூலமானதொரு பொருளாகும். திருவள்ளுவரும் திருக்குறள் முதல் அதிகாரத்திலேயே இறைவனின் திருவடிப் பிரார்த்தனையின் பெருமையைக் கூறுகிறார். அதில் பத்தாவது குறளில்

"பிறவிப் பெருங்கடல் நீந்துவார்; நீந்தார்
இறைவன் அடி சேராதார்" என்று கூறுவது மிகச் சிறப்பு. *பொருள் :* இறைவனுடைய திருவடிகளை எப்போதும் நினைப்பவர், பிறவியாகிய பெருங்கடலைக் கடந்து கரை சேர்வர்; மற்றையோர் பிறந்தும், இறந்தும் துன்புறுவர்.

ஆதிசங்கரரும் சௌந்தர்யலஹரியில் (ஸ்லோகம் 4)

"பயாத் த்ராதும் தாதும் பலமபி ச வாஞ்சாஸமதிகம் ।
சரண்யே லோகானாம் தவ ஹி சரணாவேவ நிபுணௌ ॥

என்று அன்னையின் திருவடிகளைப் பற்றிப் புகழ்ந்து சொல்கிறார். *பொருள் :* பயத்திலிருந்து காப்பாற்றவும், வேண்டியதற்கு அதிகமாகவே பலனை அளிப்பதற்குங் கூட உன்னுடைய திருவடிகளே திறமை உடையவைகள் அன்றோ?

அவர் தம் சீடர்களுக்கு அளித்த உபதேசம்: *"ஆபதி கிம் கரணீயம் ? ஸ்மரணீயம் சரணயுகளமம்பாயா"*. அதாவது, ஆபத்தில் என்ன செய்யவேண்டும் ? அன்னையின் திருவடிகளையே மனதில் தியானிக்க வேண்டும்.

அன்னை ஐந்து வகையான ஆபரணங்களை அணிந்திருக்கிறாள். சென்ற பாடலில் அன்னையை, வாக்தேவதைகள் *"பஞ்சபூதேசி"* என்று சொல்வதைப் பார்த்தோம். இந்த திருநாமாவிற்கு மற்றுமொரு விதமாகவும் பொருள் கொள்ளலாம். முத்து, மாணிக்கம், மரகதம், இந்த்ர நீலம், வைரம் இவைகளால் ஆன மாலையானதும், இவைகள் பூமி முதலியவைகளிலிருந்து உண்டானவையாதலாலும் இப்படிச் சொல்லப் படுகிறது. ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்தில் (51). *"ஸர்வாபரணபூஷிதா"* என்றும் அழைக்கிறார்கள். எல்லா ஆபரணங்களாலும் அலங்கரிக்கப் பெற்றவள்.

நவபூர்ணி: அன்னை பழமைக்கும் பழமையானவள். புதுமைக்கும் புதுமையானவள். (நவ -- புதுமை) அன்னை பூர்ணமாயிருப்பவள். எல்லாம் நிறைந்தவள். இருந்தும் புதுமைகளுக்கும் இடம் கொடுப்பவள். மாணிக்க வாசகர், திருவெம்பாவையில் சொல்வது :

"முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே

பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியளே"

பரணாபரணி: பெற்ற தாய் குழந்தையின் குரல் கேட்டவுடன் ஓடிவந்து அக்குழந்தையை அரவணைத்து அமுது அளிப்பதுபோல் தன் அன்பர்களுக்கு அபயம் அளிப்பவள் அன்னை அபயாம்பிகை.அவளே உலகிலுள்ள அனைத்து ஜீவராசிகளுக்கும் தாயானவள். பரம்பொருளின் சக்தியாக விளங்கும் பரமேஸ்வரியும் அவளே. ஈரேழு புவனங்களுக்கும் அவளே ஈஸ்வரி. அதனாலன்றோ அவளை புவனேஸ்வரி என்று அழைக்கிறோம். விஷ்ணு ஸஹஸ்ரநாமத்திலும் (377) *"பரமேஸ்வர:"* என்று வரும். "மிகவும் சிறந்த ஐஸ்வர்யத்தை, ஆட்சித்திறமை உடையவர் என்பதால் பரமேஸ்வர" என்று ஆதிசங்கரர் விளக்கம் கூறுகிறார். எனவே பரமேஸ்வரீ என்பது (பரம்+ஈஸ்வரீ) எல்லாவற்றிற்கும் மேற்பட்ட சிறப்புமிக்க ஈஸ்வரி என்று தெரிகிறது. அன்னையே பஞ்சாட்சரத்தின் பொருளாய் விளங்குகிறாள். தாமரைப் பூவை தன் ஆசனமாகக் கொண்டவள் (முன்னும் பார்த்தோம்).

அன்னையின் விபூதிகளை (பெருமைகளை) வர்ணித்த அபயாம்பிகை பட்டர், அடுத்து அருமையான தத்துவத்தைச் சொல்கிறார்.

"எண்சாண் உடம்பில் தொண்ணூற்றாறிசைந்த தத்வாதிக முகமே :

மண்ணில் பிறந்த மனிதர்களுக்கு அவர்களின் உடம்பு உயரம் அவரவர் கையளவில் எட்டு சாண் அளவே இருக்கும். அவ்வுடம்பில் 96 தத்துவங்கள் அடங்கியுள்ளன. அன்னையே நம் உடம்பில் இவ்வாறு இருக்கிறாள். அவளே அதை இயக்கும் அரசியும் ஆவாள். பாவனோபநிஷத்து, "மனிதன் தன்னையே பரம்பொருளாக உணர்ந்து, பேதங்களையெல்லாம் கடந்து,

எப்போதும் ஆனந்த பரிபூரணமாக இருக்கின்ற தனது ஆத்ம ஸ்வரூபமே பரதேவதையாகும் என்ற நிலையை அடைய வேண்டும்" என்று சொல்லுகிறது.

அதாவது நாம் நம்மையே தெய்வமாகக் கருதுதல் வேண்டும். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரும், *"அமீ யந்த்ர! தும் யந்த்ரீ!"* என்பார். அதாவது, 'நான் யந்திரம். நீ யஜமானி' மனித தேகத்தையே ஸ்ரீ சக்கரமாகப் பாவித்து உபாசனை செய்வது (மானசீகமாக) - ஞானிகளின் சித்தாந்தம். ஸ்ரீவித்யா உபாசனையில் "ஸ்ரீ சக்கரமே அம்பாள்" என்று சொல்வர்.

96 தத்துவங்கள் :

"முப்பதும் முப்பதும் முப்பத்து அறுவரும்
செப்ப மதிள் உடைக்கோயில் உள் வாழ்பவர்
செப்ப மதிள் உடைக்கோயில் சிதைந்த பின்
ஒப்ப அனைவரும் ஓட்டெடுத்தார்களே." (திருமந்திரம் - 154)

தத்துவங்கள் 30+30+36=96 ஆகும். அவை ஆன்ம தத்துவம்-24, நாடி-10, அவத்தை-5, மலம்-3, குணம்-3, மண்டலம்-3, பிணி-3, விகாரம்-8, ஆதாரம்-6, தாது-7, மரபு-10, கோசம்-5, வாயில்-9. இந்த 96 தத்துவங்களும் செம்மையாக அமைந்த பாதுகாப்பு மதிலுடைய கோவிலுக்குள் வாழ்பவர், சிறப்பாகச் செய்யப்பட்ட பாதுகாப்பு மதிலுடைய கோவில் பழுதடைந்து, கெட்ட பிறகு அந்தக் கோவிலுள் இருந்தவர்கள் அனைவரும் ஒருசேர ஓடிவிட்டார்கள்". இதன் கருத்து : உயிர் போய் உடல் அழிய தத்துவங்கள் தானே நீங்கும். (மதிள் - மதில், ஒப்ப - ஒன்றாக).

மேற்கூறிய 96 தத்துவங்கள் மனித உடலிலுள்ள கருவிகளையும், தொழில்களையும் குறிக்கும். பார்த்தல், பேசுதல், கேட்டல், புசித்தல், ஜீரணம் செய்தல் முதலிய பல தொழில்களும் உடம்புக்குள் நடந்து கொண்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் இயக்குபவள் அன்னை.

சென்ற பாட்டில், *"ஊனே என்றன் உயிர்க்குயிரே"* என்று சொன்ன அபயாம்பிகை பட்டர், அதற்கு விளக்கம் தருவது போல் அமைந்துள்ளது இப்பாடல். என்னே அவரது மேதாவிலாசம்! அன்னை, அத்தனை (அப்பனை - சிவபெருமானை) விட்டு அகலாது அவனது இடப்பாகத்தில் வசிப்பவள்.அவனுடன் சேர்ந்து நடனம் செய்யும் நர்த்தகி அன்றோ!

இவளே தேவர்களுக்கெல்லாம் அரசி. ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் (607) அன்னையை *"தேவேஸீ"*- தேவர்களுக்கு ஈஸ்வரி என்று போற்றுகிறது. அன்னை தாமரையைத் தான் உறையும் கோயிலாகக் கொண்டவள். அபிராமி பட்டரும் அபிராமி அந்தாதியில் (96) *"கோமளவல்லியை அல்லியந்தாமரைக் கோயில் வைகும் யாமளவல்லியை ..."* என்று கூறுவார்.

அபயாம்பிகை பட்டர் அன்னையின் கருணையைப் பரிபூர்ணமாகப் பெற்ற தலை சிறந்த பக்தர். தாயின் மேல் தன் பாசத்தையே பொழிகிறார். அன்னை உறையும் கோயிலையே "கருணாலயம்" என்று சொல்வது தெய்வீகத் தன்மையுடைத்து.

அடுத்து அன்னையை காஞ்சீ காமாட்சியாக தன் திருக்கரங்களில் மலர் அம்பும், கரும்பு வில்லும் தாங்கியுள்ளவளாக வர்ணிக்கிறார் ஆசிரியர். ஐங்கணை என்பது சப்த-ஸ்பர்ஸ-ரூப- ரஸ-கந்தம் என்ற ஐந்து குணங்களைக் குறிக்கும். கரும்பு வில் மனிதன் மனத்தைக் குறிக்கும்.

அன்னையின் திருக்கரங்களில் மேற்கூறிய வில்லும், அம்பும் இருக்கும்போது காமத்தை உடைக்கும். (மன்மதன் கைகளில் உள்ளபோது காமத்தை உண்டுபண்ணும்).

அன்னை தன் குழந்தைகளான பக்தர்களின் மீது கருணை கொண்டு, அவர்களை காம விகாரங்கள் அணுகாது தடுத்து விடுகிறாள். என்னே, அன்னையின் கருணை!

இவ்வாறு ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதயி என்னும் ஐந்து மலங்களும் நீங்கப் பெற்ற அடியார்களின் மனத்துள் என்றும் உறையும் அருட்கடலாய் விளங்குகிறாள் அன்னை அபயாம்பிகை. இவளே மயிலாடு துறையில் வந்திப்பவர்க்கு வரம் தரும் வள்ளலாய் விளங்கும் மாயூரநாதரின் உயிர்நாடியாம்.

7. அன்னையை மணியாக வர்ணித்தல்

எங்கும் நிறைந்த அருள்மணியே ஏக மணியே ஒளிர்மணியே
இறையோனிடத்தில் நடனமிடும் இமைய மணியே நவமணியே
கங்குல் பகலும் கண்டவெளிக் கலைநான் குடைய திருமணியே
கண்ணின் மணியே பொன் மணியே கமலாசனத்தில் வளர்மணியே
தங்கும் அடியார் இதயமதில் தழைத்த மணியே தவமணியே
தரணிக் கொளியாய் இரவுபகல் தானே வளர்ந்த தளிர்மணியே
மங்கும் கருத்தை நிலைநிறுத்தி வதன வெளியில் படர்மணியே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே அபயாம் பிகைத்தாயே.

ஒருவர் ஒரு துறையில் சிறந்து தனக்கு யாரும் நிகரில்லாதவராக விளங்கும்போது அவரை, அத்துறையின் "மணி" என்று சொல்லுகிறோம்.

அன்னை அபயாம்பிகை அனைத்திலும் சிறந்து விளங்கும் ஆரணங்கு என்று சொல்லவும் வேண்டுமோ? அபயாம்பிகை பட்டர் தாயைப் பார்த்து ஆனந்தக் களிப்பில் தன்னையே மறந்து அன்னையுடன் கொஞ்சிக் குலாவும் காட்சியாக அமைகிறது இப்பாடல். அன்னையை, மணிமணியாய் அலங்கரிக்கும் அற்புதப் பாடலிது. அன்னையின் உறைவிடம் - சிந்தாமணி கிருகம் என்று சொல்லப்படுகிறது. (சிந்தாமணி க்ருஹாந்தஸ்தா).

அபிராமி பட்டரும், அபிராமி அந்தாதியில் (24) *"மணியே! மணியின் ஒளியே! ஒளிரும் மணி புனைந்த அணியே"* என்று அன்னையைப் போற்றிப் புகழ்கிறார். திருப்பாவையிலும், *"மாலே மணிவண்ணா"*, *"மணிக்கதவம் தாள் திறவாய்"* என்றும் வருவது காண்க.

எங்கும் நிறைந்த அருள் மணியே: அன்னை எங்கும் நிறைந்து காணப்படுவதை உள்ளத்தில் உணர்ந்தவர் அபயாம்பிகை பட்டர். *"தூணிலும் இருப்பாள், துரும்பிலும் இருப்பாள்".* அபிராமி பட்டரும் "பார்க்கும் திசைதோறும்" அன்னையைக் கண்டவர். பாரதியாரும் *"பார்க்கும் இடங்களெல்லாம் நந்தலாலா"* என்று பாடுகிறார். இதே கருத்தில் அன்னையை *"வ்யாபினீ"* (400), *"ஸர்வகா"* (702) என்று வாக்தேவதைகள் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்தில் சொல்வதையும் காண்க! ஸ்ரீதேவீ மஹாத்மியத்தில், *"ஸர்வ-ஸ்வரூபே ஸர்வேசே ஸர்வசக்தி ஸமன்விதே"* (11.24) என்று கூறப்படுகிறது.

ஏகமணியே: அன்னைக்கு ஒப்புவமை எப்படி இருக்க முடியும்? எனவே, அவளை *"ஏகமணியே"* என்று ஆசிரியர் கூறுகிறார்.

ஒளிர்மணியே: ஈரேழு புவனங்களிலும் ப்ரகாசிக்கும் மணியும் அவள்தான். சூரியனுக்கும், சந்திரனுக்கும் ஒளியைத் தருபவளும் அவளே! அபிராமி பட்டர் அபிராமி அந்தாதியில் (47), *"இரவு பகல் சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே"* என்கிறார்.

அன்னை, இமவான் செய்த தவத்தினால் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டு அவனுக்குப் பெண்ணாகத் தோன்றினாள். ஈஸ்வரனை மணந்து அவனது இடப்பாகத்திலிருப்பவள். அவனுடன் நடனமாடுவதில் ஆனந்தம் கொள்பவள்.

நவமணியே: மணிகள் - மாணிக்கம், முத்து, வைரம், கோமேதகம், வைடூரியம், மரகதம், பவளம், நீலம், புஷ்பராகம் என்று ஒன்பதாகும். அன்னை இந்த ஒன்பது மணிகளும் சேர்ந்து விளங்கும் நவமணியாய் திகழ்கிறாள்.

இரவையும், பகலையும் கடந்த பராகாயத்தில் தோன்றிய கலைகள் நான்குடைய, மணிகளுக்கெல்லாம் மணியான திருமணி ஆவாள். கலை என்றால் ஞானம். அவை - சிவனடியைச் சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம், பவமதனையற மாற்றும் பாங்கினிலோங்கிய ஞானம், உவமையிலாக் கலைஞானம், உணர்வரிய மெய்ஞானம்.

கண்ணின் மணியாகவும், பொன்னின் மணியாகவும், தாமரை மலரில் வளரும் மணியாகவும் விளங்குகிறாள் அன்னை. அடியார்களின் இதயத்தில் என்றும் வளரும் தவமணியும் அவளே. அடியார்களின் உள்ளத்தை என்றும் தவத்திலே நிலை நிறுத்துபவளும் அவளே என்பதை சூட்சுமமாகச் சொல்கிறார் அபயாம்பிகை பட்டர். *"அவளின்றி ஓர் அணுவும் அசையாது".* அவள் ஆகாயத்தை முகமாகக் கொண்டு பிரகாசிக்கும் பரஞ்ஜோதி.

அறிவு என்பது விஞ்ஞான அறிவு, மெய்ஞான அறிவு என இருவகைப் படும். நிலையில்லாது தேய்ந்து போகும் விஞ்ஞானறிவை நிலைநிறுத்தி மெய்ஞான அறிவைப் பொங்கச் செய்பவள் அன்னை அஞ்சல்நாயகி.

அவளே மயிலாடுதுறையில் வரம் தரும் வள்ளலாய் விளங்கும் பெருமை மிகு மாயூரநாதனின் உயிர்நாடியாய் திகழும் அபயாம்பிகை என்னும் அகிலலோக மாதா.

8. அம்மா நீ என் மனத்தாமரையில் அமர்வாயாக!

அழியாச் சலன அலைமுழுதும் அலையும் மனத்தை நிலைநிறுத்தி
ஆறாதார அடிநடுவுள் அருணாசலத்தின் வேரினுள்ளே
சுழியைத் திறந்து வாயுவதாற் சூழ் ரேசக பூரகத்தாலுந்
தோன்றுங் கும்ப காதியுடன் சோதி படரும் ஞானவெளி
விழியுந் திறக்கும் மதிக்குழம்பு மிகுந்து சுரக்கும் நவக்கிரக
வெளியா மேலே வெளிபடர்ந்து விம்மித் தனையாய்ந் திருக்கஅருள்
வழியைப் பொருத நாயடியேன் மனத்தாமரையுள் நீவருவாய்
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

ஆசிரியர் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு நிலைகளையும் கடந்த ஜீவன்முக்தர். இருந்தும் இப்பாடலில் உலகத்தினர் உணர்வதற்காக யோக முக்தியைப் பற்றிப் பேசுகிறார். யோக நெறியைச் சகமார்க்கம் என்பர். அஃதாவது, தோழமை நெறி. இம்மார்க்கத்தால் பெறும் பயன் - சாரூப முத்தி - அதாவது இறை ரூபம் பெறுதல்.

ஆறு ஆதாரங்கள் : மனித உடலில் சூட்சுமமாக ஆறு ஆதாரங்கள் உள்ளன. மேருதண்டம் என்று சொல்லப்படும் முதுகு நடு எலும்பினுள் சுழுமுனைஎன்ற நாடி உள்ளது. அதன் அடியிலிருந்து மூலாதாரம் (குதம், குய்யம், இரண்டின் நடுவில் உள்ளது), ஸ்வாதிஷ்டானம் (லிங்கத்தின் மூலப்ரதேசம்), மணிபூரகம் (நாபி), அனாஹதம் (இருதயம்), விசுத்தி (கழுத்து), ஆக்ஞை (புருவங்களின் நடு) என்று ஆறு நிலைகள் அல்லது ஆதாரங்கள் உள்ளன. (சக்கரங்கள் என்றும் கூறுவர்). இவ்வாறுக்கும் மேல் ஸஹஸ்ரார சக்கரம் உள்ளது. (இங்கு ஆயிர இதழ் தாமரை உள்ளது).

மேற்கூறிய ஆதாரங்களை மூன்றாகப் பிரித்து, அக்னி கண்டம் (மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம்), ஸூர்ய கண்டம் (மணிபூரகம், அநாஹதம்), சந்திர கண்டம் (விசுத்தி, ஆக்ஞை) என்று கூறுவர். ஒரோர் கண்டத்தின் முடிவிலும்"க்ரந்தி" என்ற முடிச்சு இருக்கிறது. இந்த முடிச்சுகள் சுழுமுனையில் இடகலை, பிங்கலை இரண்டும் சேருவதால் உண்டாகின்றன. இவற்றிற்கு பிரம்ம க்ரந்தி, விஷ்ணு க்ரந்தி, ருத்ர க்ரந்தி என்று பெயர்.

ஆறு ஆதாரங்கள், மூன்று க்ரந்திகள், மூன்று கண்டங்கள் சேர்ந்து மொத்தம் பன்னிரண்டாகிறது. இதற்கு மேல் இருப்பது ஸஹஸ்ராரம். பன்னிரண்டிற்கு மேல் உள்ளதால், இதற்கு "த்வாதஸாந்தம்" என்றும் பெயர். இவ்வாறு அமைந்த அமைப்பைத்தான் சந்த்ர கலாமண்டபம் என்று சொல்வர்.

குண்டலினி: அண்டத்தில் உள்ளது பிண்டத்திலும் உள்ளது. எங்கும் வியாபித்திருக்கும் பரம்பொருள் நம் சரீரத்திலும் உள்ளது. இதில் சிவ அம்சம் ஸஹஸ்ராரத்தில் உள்ளது என்றும், சக்தி அம்சம் ஒரு ஸர்ப்பம் (குண்டலினி) போல் மூன்றரை சுற்றாக வளையமாக மூலாதாரத்திலுள்ள கர்ணிகையில் தன்

தலையை வைத்துக் கொண்டு உறங்குவதாக தந்த்ர சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. இந்த குண்டலினியை எழுப்பி ஸஹஸ்ராரத்திலுள்ள சிவனுடன் சேர்ப்பித்து அப்பொழுது பெருகும் அம்ருதத்தினால் எல்லா நாடிகளும் நனைக்கப்பட்டு ப்ரம்மானந்தத்தை அனுபவிக்கலாம் என்பதே இந்த சாஸ்த்ரங்களின் கொள்கை. இதுதான் யோக முறைகளிலும் கூறப்படுகிறது. **மூச்சுக் காற்றுப் பயிற்சி** (பிராணாயாமம்): பிராணாயாமம் = ப்ராணன்+ஆயாமம். ப்ராணன் -- உயிர்மூச்சு, ஆயாமம் -- அடக்குதல். பிராணனைக் கட்டுப்படுத்துதல் என்று பொருள்படும். பிராணன் வசப் படவே, மனமும் வசப்படும். (இதைத்தான் அசிரியர் குறிக்கிறார்). இந்தக் கருத்தினை திருமூலர் திருமந்திரத்தில் (620)

"மன்மனம் எங்குண்டு வாயுவும் அங்குண்டு
மன்மனம் எங்கில்லை வாயுவும் அங்கில்லை" என்று சொல்வர்.

மேலும் மூச்சுப் பயிற்சியில் மூன்று நிலைகளைச் (பாடல் 568)சொல்கிறார்:

"ஏறுதல் பூரகம் ஈரெட்டு வாமத்தால்
ஆறுதல் கும்பகம் அறுபத்து நாலதில்
ஊறுதல் முப்பத்திரண்டதில் ரேசகம்
மாறுதல் ஒன்றின்கண் வஞ்சகம் ஆமே"

இப்பாடலின் பொருள்: வாமம்-இடகலை. ஈரெட்டு-பதினாறு. பூரகம்-மூச்சுக்காற்றை உள்ளுக்கு இழுத்தல். இடது பக்க மூக்குத் துவாரத்தின் வழியாக மூச்சுக் காற்றை உள்ளே இழுப்பது பூரகம் எனப்ப்டும். இது பதினாறு மாத்திரை அளவாம். இழுத்த மூச்சை அறுபத்து நான்கு மாத்திரை அளவு நிறுத்தி வைத்தல் கும்பகமாகும். இடப்பக்க வழியாக உள்ளே இழுத்து நிறுத்தி வைத்த மூச்சை வலப்பக்க மூக்குத்துளை வழியாக முப்பத்திரண்டு மாத்திரைப் பொழுதில் வெளியே விடுதல் இரேசகமாகும். முன்னே சொன்ன இடது மூக்குத்துளை வழியாக உள்ளே இழுத்துப் பின் வலப்பக்கமாக விடுவதை மாற்றிப் பிறகு வலப்பக்கமாக இழுத்து இடப்பக்கமாக விடுதல் வேண்டும். (இதைத்தான் வஞ்சகம் என்கிறார்). (இடகலை -- இடப்பக்க மூச்சு, பிங்கலை -- வலப்பக்க மூச்சு. இதனை சந்திர நாடி, சூரிய நாடி என்பர்).

விநாயகர் அகவலில், ஔவைபிராட்டியார் எளிய முறையில் சொல்வளத்துடனும், பொருள் செறிவுடனும் முழுக்க, முழுக்க "குண்டலினி யோகம்" பற்றி உரைக்கிறார். விநாயகர் அகவல், கைலாசத்திற்குச் செல்லு முன் பாடிய தோத்திரப் பாடலாகும். அது நமக்குக் கிடைத்தது ஒரு பெரும் பாக்கியமாகும். விநாயகர் அகவல் தமிழ் மொழிக்குக் கிடைத்த பொக்கிஷம் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. இனி பாடலைப் பார்ப்போம்.

பிறவிக் கடலைக் கடக்க வேண்டுமானால், ஒன்று விட்டு ஒன்றைப் பற்றித் திரியும் மனதை அன்னையின் திருவடியில் நிலைநிறுத்த வேண்டும்.

ஆறு ஆதாரங்களின் மூலமாய் விளங்கும் மூலாதாரத்தின் மேலே உள்ள அக்னியை அடியிலிருந்து எழுப்பி, நடுவில் உள்ள ஆதாரங்களின் வழியே

கொண்டு வந்து, அருணாசலம் என்ற செஞ்சோதியாய் காட்சி அளிக்கும் புருவ மத்தியிலுள்ள சுழுமுனை நாடி வழியைத் திறந்து, வாயுவை வெளியிட்டு நிறைத்து சந்திர மண்டலத்தை அந்த அக்னி தாக்கச் செய்தால், அப்போது அங்கிருந்து அமுதம் உண்டாகும்.

விநாயகர் அகவலிலும்

"மூலாதாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறிவித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி"

என்று வருவது காண்க.

மேற்கூறியபடி கிடைத்த அமுதத்தை உண்டால் ஒன்பது துவாரங்கள் உடைய இந்த உடலை விட்டு "துவாதசாந்தப் பெருவெளியில்" உலாவலாம். இப்பாக்கியத்தை எனக்கு அளித்து உன்னையே எப்போதும் சிந்தித்திருக்க நீ அருள் புரிய வேண்டும்.

நான் நாயினும் கீழான அடியேன். இருந்தாலும், அடியேன் ஞானப் பெருநிலை அடைய நீ வந்து என் மனத்தாமரையுள் வீற்றிருந்து அருள்பாலித்தால்தான் அது கிடைக்கும் என்று நெக்குருகி மிகத்தாழ்மையுடன் அன்னையிடம் வேண்டுகிறார், அபயாம்பிகை பட்டர்.

9. அன்னையே! ஆருயிர் அமுதே !

கண்ணாரமுதே உனைஎனது கண்தான் களிக்க மொழிகுழறக்
கதிக்க உயிரும் உடல்புளகங் காணும் பருவம் பெறுவேனோ
விண்ணாரமுதே சிவபுரத்தில் விளைந்த கனியே தேன்கடலே
வீசிப் படர்ந்த கமலமதில் வீற்றே யிருக்கும் விழிச்சுடரே
பெண்ணா னதுவே ஆண்வடிவே பேணும் அலியே பிறங்கொலியே
பேதை நாயேன் இதயமதிற் பிரியா திருக்குந் தவக்கொழுந்தே
மண்ணாடியவன் இடப்பாகம் வளருங் கொடியே மடமயிலே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே

சென்ற பாட்டில் அபயாம்பிகை பட்டர் அன்னையிடம் அமுதம் தந்தருளுமாறு வேண்டினார். அந்த அமுதம் எத்தகைத்து என்று இப்பாடலில் தனது ஆனந்த அனுபவத்தைக் கூறுகிறார்.

கண்ணிற்கு இனிய விருந்தாய், அமுதமாய் இருப்பவள். உன்னைக் கண்களால் காண்பதே பேரானந்தம்! அவ்வாறு கண்களால் கண்டு அளவிலா மகிழ்ச்சியினால் நாக்கு தடுமாறி, மொழி குழற, உடல் புல்லரித்து, புளகாங்கிதம் அடைந்து உயிரும் பரமானந்தத்தில் தழைக்க, தாயே! நீ எப்போதும் கருணை கூர்ந்து அருள் புரிய வேண்டும்.

விண்ணுலகில் வசிக்கும் தேவர்களுக்கு அன்று நீ அமுதத்தைத் தந்தாய். என்னைப் போன்ற எளியவர்களுக்கும் உன் கருணையினால் அமுதத்தைத் தந்தாய். உன்னை அடியேன் எவ்வாறு போற்றித் துதிப்பேன்!

சிவபுரம் -- சிவபெருமானின் சாம்ராஜ்யம். அதன் சக்கரவர்த்தியான சிவபெருமான் தவத்தினால் விளைந்த கனியல்லவா நீ! எங்களுக்குப் பரந்த கடல் முழுவதும் தேனாய் விளங்குகிறாய்!

நீ வீற்றிருப்பதோ தாமரை மலர் மீது! உனது அழகிய திருமுகமோ தாமரையை வென்றது. அத்திருமுகத்தில் ஒரு சுடர் ஒளி வீசுகிறது. உற்றுப் பார்த்தால் அந்தச் சுடரில் கருணைக்குப் பிறப்பிடமாய் விளங்கும் உன் திருக்கண்கள் தெரிகின்றன. இதெல்லாம் என்ன! உன் மாயாஜாலமோ!

எல்லாவற்றிற்கும் மேலான பரம்பொருள் தன்னை ஆணாகவும், பெண்ணாகவும், இவ்விரண்டும் அற்ற அலியாகவும், பல வடிவங்களாகவும் காட்சி அளிக்கும் தோற்றம் எல்லாம் மண்ணுலகில் வாழும் மனிதர்களின் வழிபாட்டிற்கு ஒரு கருவியாக உதவுவதற்கே என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும். இதைத்தான் ஆசிரியர் வெகு அழகாக, *"பெண்ணானதுவே ஆண் வடிவே பேணும் அலியே பிறங்கொலியே"* என்று சித்தரிக்கிறார். மாணிக்கவாசகரும் (திருப்பொன்னூசல் - திருவாசகம்)

"ஆணோ அலியோ, அரிவையோ . . . ." என்பார்.

மேலும் போற்றித் திருவகவலில், *"அருவமும், உருவமும் ஆனாய் போற்றி"* என்றும் கூறுவர்.

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம்-137: நிராகாரா - உருவம் இல்லாதவள், 174: நிர்பவா-உத்பத்தி இல்லாதவள், 866: அஜா-பிறக்காதவள். எப்பொழுதும் யாண்டும் சாஸ்வதமாக இருப்பதால் (நித்யா-136) அவளுக்குப் பிறப்பு இல்லை. ச்ருதியிலும், *"நஜாதோ நஜனிஷ்யதே"* என்று சொல்லப்படுகிறது. அதாவது, "பிறக்கவில்லை, பிறக்கப் போவதில்லை" என்று பொருள்படும்.

தான் பிறக்காதவள். தன்னை அணுகும் அடியார்களுக்கு அன்னை பவநாசினியாகவும் உள்ளாள். அதாவது அவர்களும் இனி பிறக்க மாட்டார்கள்.

அன்னையே! உன்னைப் 'பெண்ணானவள்',' ஆணானவள்', 'அலியானவள்', 'ஒலி வடிவமானவள்' என்று பேசும் பேதையாகிற நாயினும் கீழான என் இதயத் தாமரையிலும் கருணை கொண்டு வீற்றிருக்கும் தவக்கொழுந்தே என்று போற்றுகிறார் அபயாம்பிகை பட்டர்.

மண்ணாடியவன்: இது இம்மண்ணுலகத்தில் ஆனந்த நடனமாடும் கூத்தனாகியச் சிவபெருமானைக் குறிக்கும். அப்பெருமான் ஆடிய இடங்கள்

1. திருவாலங்காடு (இரத்தினசபை) 2. தில்லை (பொற்சபை) 3. மதுரை (வெள்ளி சபை) 4. திருநெல்வேலி (தாமிர சபை) 5. திருக்குற்றாலம் (சித்திர சபை). ஆனந்த நடனமிடும் கூத்தனின் இடப்பாகத்தில் வளரும் கொடியாய் இருப்பவளே! மயிலே! என்று பாடலை ஆனந்தமாகப் பூர்ணம் செய்கிறார் அபயாம்பிகை பட்டர்.

இப்பாடலில் மெய்யன்பர்களின் மெய்ப்பாடுகளை உணர்கிறோம். மெய்ப்பாடு என்பது உடம்பிலே தோன்றும் அறிகுறிகள் அல்லது அடையாளங்கள் என்று சொல்லலாம். நாரத பக்தி சூத்ரம் ஒன்று இதை அருமையாகச் சொல்கிறது.

"யஜ்ஞாத்வா மத்தோ பவதி, ஸதப்தோ பவதி, ஆத்மாராமோ பவதி", அதாவது பக்தியைப் பெறுபவன் பித்தன் ஆகிறான், ஆத்மானந்தன் ஆகிறான். மாணிக்கவாசகர் (திருவாசகம்) போற்றித் திருவகலில்

"உரைதடுமாறி உரோமம் சிலிர்ப்பக்
கரம் மலர் மொட்டித்து இருதயம் மலரக்
கண்களிகூர நுண்துளி அரும்ப" - என்பார்.

பக்தியின் மேலீட்டால் சொல் தடைபடுகிறது. மயிர்கூச்சு உண்டாகிறது. கை குவிகிறது. உள்ளத்தில் உணர்ச்சி பேருவகையடைகிறது. ஆனந்தக் கண்ணீர் துளியாக அரும்புகிறது.

அபிராமி பட்டரும், அபிராமி அந்தாதியில் (94)

"விரும்பித் தொழும் அடியார் விழிநீர் மல்கி மெய்புளகம்
அரும்பித் ததும்பிய ஆனந்தமாகி அறிவு இழந்து
சுரும்பிற் களித்து மொழிதடுமாறிமுன் சொன்ன எல்லாம்
தரும் பித்தர் ஆவர் என்றால் அபிராமி சமயம் நன்றே" என்கிறார்.

அன்னையிடம் அன்பு செய்து விரும்பி வழிபடும் அடியவர்கள் கண்களில் நீர் மல்க, உடம்பெல்லாம் மயிர்கூச்செறிய, பொங்கிவரும் ஆனந்தமயமாக நின்று, தன் சுய அறிவை இழந்து, தேனை உண்ட வண்டு போல் மயங்கி, பின் வார்த்தைகள் குழறி, முன் சொன்னவை யாவும் பொருள் உடையவனாகத் தருவதற்குக் காரணமான பித்தர் ஆவர் என்றாலும் அவர்கள் வழிபாட்டு நெறியாகிய "அபிராமி சமயம்" நன்றேயாகும்.

அறிபவன், அறிவு, அறியப்படும் பொருள் என்ற மூன்றும் நழுவிய நிலையைத் 'திரிபுடிரகிதம்' என்பார்கள். அதுதான் எல்லாம் மறந்த ஆனந்த நிலை. அதாவது *"அந்தக்கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு வெளியாய் விடின்"* என்று அபிராமி பட்டர் மிக அழகாகக் கூறுகிறார். (அபிராமி அந்தாதி-82). இந்த நிலையில்தான் அபயாம்பிகை பட்டரும் நிற்கிறார்.

10. அபயாம்பிகை என்னும் அருமருந்தே !

தீரா மயக்கப் பிணிநோயைத் தீர்க்கும் மருந்தே அருமருந்தே
தேவாதிகளும் அறியாத கிருஷ்ணன் ஆதி சகோதரியே
ஆராதிப்பார் பூசிப்பார் அமைந்துன் நாமமதை நினைப்பார்
அடுத்தோர் இன்ப சுகமனைத்தும் அடையும் எனவே மறைவிளம்ப
நேரா யிருந்து களிப்பவளே நித்யா னந்த சுகப்பொருளே
நெறியே குறியே எனைஆளும் நிமலி அமலை சுகத்தாளே
வாரா கினியே துட்டரிடர் மனத்தை அழிக்குஞ் சினத்தாளே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே

அன்னையின் அருளாளர்கள் அனைவரும் அன்னையை நன்றாக உணர்ந்து அவளுடன் ஐக்கியமானவர்கள். அன்னைதான் குழந்தைகளின் பிணியைத் தீர்க்கும் சிறந்த மருத்துவச்சி என்பதை அனுபவத்தில் கண்டவர்கள். *(ஸர்வ ரோக ஹரசக்ர ஸ்வாமினீ).*

தீரா மயக்கப் பிணி நோயை : இம்மண்ணுலகில் மீண்டும் மீண்டும் பிறந்து, இறந்து கொண்டிருக்கிறோம். பிறக்காவிட்டால் இறப்பு இல்லை. பிறப்பதைத் தடுக்க வேண்டும். மறுபடியும் பிறவாநிலை வேண்டும். இதைத் தடுக்க வேண்டுமானால் இது எதனால் வருகிறது என்று நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது பிணியின் காரணத்தை அறிந்தால் அதற்குரிய மருந்தைச் சாப்பிட்டு அதைத் தீர்க்கலாம். இந்தப் பிணிக்குக் காரணம் அறியாமை என்கிற ஆணவத்தால் வரும் நோயாகும். ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்றும் மானிடரை வாட்டுகிறது. இவைகளை மும்மலம் என்று சொல்வார்கள். இந்த மலங்கள் நீங்கினால்தான் முக்தி அடையலாம். அதற்கு என்ன வழி? அதற்கு ஒரே வழிதான் உண்டு. அதுதான் அன்னையின் திருவடிகளில் சரணம் அடைதல். ஏனென்றால் அவளேதான் அறியாமையை அகற்றும் அருமருந்து!

அபிராமிபட்டர் அபிராமி அந்தாதியில் (25) *"உலகுக்கு அபிராமி என்னும் அருமருந்தே!"* என்பார். மாணிக்கவாசகரும், *"மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி"* என்று சிவபுராணத்தில் (திருவாசகம்) உரைப்பார். இந்தக் கருத்தினை மனதிற் கொண்டு அபயாம்பிகை பட்டரும், *"அன்னையை அருமருந்தே"* என்று சொல்வது அன்னையிடம் அவர் கொண்ட பக்தியின் உச்ச நிலையை உணர்த்துகிறது.

அன்னை தேவர்களுக்கு அமுதம் வழங்கியிருந்த போதும் அவர்களால் அன்னையை அறிந்து கொள்ள முடியவில்லை. ஏனென்றால் அவர்கள் போகத்தில் திளைப்பவர்கள். (இந்திரியங்களை அடக்காதவர்கள்).

அன்னை திருமாலின் சகோதரி என்பதை அபயாம்பிகை பட்டரும் இந்த சதகத்தில் அடிக்கடி சொல்லுகிறார். ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் (280).

பத்மநாப ஸஹோதரீ-பத்மநாபனான விஷ்ணுவின் உடன் பிறந்தவள். பத்மம்-தாமரை, நாப-நாபி, தொப்புள். பத்மநாபன். தாமரையை நாபியில் தோற்றுவித்ததினால் விஷ்ணுவுக்கு பத்மநாபன்என்று பெயர். அன்னையே விஷ்ணு. கிருஷ்ணனாக அவதாரம் செய்தபோது அவருக்கு 'ஸுபத்ரை' என்னும் பெயரில் சகோதரியாகத் தோன்றினாள் என்று ப்ரஹ்ம புராணம் கூறுகிறது. அபிராமிபட்டரும் அன்னையை, *"என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே", "செங்கண் மால் திருத் தங்கச்சியே"* என்று அபிராமி அந்தாதியில் அழைப்பார்.

தாயே நீயேதான் "வேதமாதா", "வேதஜனனி". வேதங்கள் நினது தாமரைத் திருவடிகளில் மிளிர்கின்றன. உன்னை ஆராதிப்பவர்களுக்கும், பூசிப்பவர்களுக்கும், உன் திருநாமங்களை உவந்து உள்ளத்தில் கொண்டு தியானிப்பவர்களுக்கும், சகல சௌபாக்கியங்களையும் நீ தந்தருள்வாய் என்று வேதங்கள் சொல்லியபடி, நீ அவர்களுக்கு எல்லாம் தந்து அதை நேரிடையாக அவர்கள் அனுபவிக்கும்பொழுது அகமகிழும் அரிய அன்னை அல்லவா! என்னே! உன் கருணையுள்ளம்!

நீ நிலைத்த ஆனந்தமான சுகப் பொருளாக இருப்பதோடு, ஆன்ம நேயத்தின் மையமாகவும், குறியும், கோலமும் கொண்டவள். மலங்கள் அற்ற நிமலியாகவும், அமலையாகவும் சுகமான வாழ்வின் பொருளாகவும் விளங்குகிறாய். ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம்-133. நிரஞ்ஜனா-அழுக்கற்றவள். 135-நிர்மலா-மலங்கள் இல்லாதவள். 148-நித்ய சுத்தா-என்றும் பரிசுத்தமானவள், 153-நிஷ்களங்கா-களங்கமில்லாதவள்.

அடுத்து அன்னையை"வாராகினியே" என்று அழைக்கிறார். இது அன்னை வாராகியாகத் தோன்றியதைக் குறிக்கும்.விஷ்ணு சக்தி வகையில் ஒன்றாக நிற்பவள். பராசக்தி வராகனந்த நாதர் என்பவருக்கு வராகத் திருமுகத்துடன் தரிசனம் தந்தமையின் வராகி என்னும் பெயர் பெற்றாள். சப்த மாதாக்களில் வராகத் திருமுகத்துடன் உள்ள வராகி என்னும் சக்தியும் உண்டு. துர்கா தேவியைத் துதிப்போர்கள் முதலில் வராகி சக்தியைத் தொழுது, பின்னர் துர்கா தேவியைத் தொழ வேண்டும் என்பது சம்பிரதாயம். வராகியை முப்பத்திரண்டு செய்யுட்களால் துதிக்கும் "வராகி மாலை" என்னும் நூல் ஒன்று தமிழில் உண்டு. வாராஹீ தேவிக்கு 'பஞ்சமீ' என்ற பெயரும் உண்டு. (தக்ஷிணாமூர்த்தி ஸம்ஹிதை)

பண்டாஸுரப் போரில், பண்டனின் சேனைத் தலைவனான விசுக்ரனை அழித்தவள். (ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம்-76). *விசுக்ரப்ராணஹரண -வாராஹீ-வீர்ய-நந்திதா.* 608-*தண்டநீதிஸ்தா*-குற்றம் செய்பவர்களைத் தண்டித்து அவர்களை நல்வழியில் திருப்பி ஆளுகிறவள். ஸ்ரீமத் பகவத் கீதையிலும் (10.38) 'தண்டோ-தமயதா-மஸ்மி' என்று இந்தக் கருத்துச் சொல்லப்படுகிறது.

அன்னை அபயாம்பிகை வாராகினியாக துஷ்டர்களின் தீய குணங்களை அழித்து மறக் கருணையால் அவர்களையும் ஆட்கொள்கிறாள்.

அதாவது, அன்னை, நல்லவர், தீயவர் என்று பேதம் செய்யாமல் எல்லொருக்கும் அபயம் தருபவள். அடியார்களுக்கு அருள் புரிவது அறக்கருணை. தீயவர்களைத் திருத்தி ஆட்கொள்ளவது மறக்கருணை. ஏனென்றால், அவள் எல்லோருக்கும் தாய் அன்றோ!

சூரபத்மனை மறக்கருணையால் ஆட்கொண்ட முருகப்பெருமான், அவனைக் கோழியாக கொடியிலும், மயிலாக வாகனத்திலும் ஏற்றுக் கொண்டது கந்தன் கருணை.

சிவபெருமானும், திரிபுர தகனம் செய்த பின்னர் வித்யுன்மாலி, கமலாட்சன், தாரகாட்சன் என்ற மூன்று அசுரர்களையும் தனக்குப் பணி செய்யும் தொண்டர்களாக ஏற்றுக் கொண்டார். அவர் கருணாமூர்த்தி அன்றோ!

பல்வளம் பெற்ற மயிலாடுதுறையில் வந்திப்பவருக்கு வரங்களை வாரி, வாரித் தரும் வள்ளலாய் விளங்கும் பெருமைமிகு மாயூரநாதனின் உயிர்நாடியாய்த் திகழும் அபயாம்பிகைத் தாயே அண்டினவர்க்கு அபயம் தரும் அஞ்சல் நாயகியாய்த் திகழ்பவள்.

11. அன்னையே! அருள்மலையே!

மெய்யிற் படர்ந்த அருட்கடலே விளையும் ஞான முளரியினில்
விரிவாய்ப் பொருந்தும் பரநிதியே வினையை அகற்றும்
பதம்உடையாய்
உய்யுந் தவத்தோர் மேலோர்கள் உறுதியுடனே மகிழ்பதியே
ஒன்றாம் யோக முடிவதனில் ஒளியாய் வெளியாய் உதித்தவளே
செய்ய கமலத் தயன்மனைவி தினமும் பணியுந் திருவருளே
தேகா தேகக் கோடியெலாஞ் சிறந்து நிறைந்த சின்மயமே
வையத் தடங்கா அருள்மலையே வருண அருண ஒளிமணியே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே

இம்மண்ணுலக வாழ்க்கை நிலையற்றது. இந்த உடலும் அவ்வாறே அழியக்கூடியது, பொய்யானது. இது மாயையின் வேலை. இம்மாயையி லிருந்து விடுபட்டு, ஆன்மாதான் மெய்யானது என்பதை உணர வேண்டும். இந்த உணர்வையும், ஞானத்தையும் அன்னை அபயாம்பிகை தன் அளவற்ற கருணையால் அன்பர்களுக்கு அளித்து அருள்புரிவாள் என்று சொல்லுகிறார் அபயாம்பிகை பட்டர்.

ஆன்மா என்னும் மெய்ப்பொருளில் படர்ந்து அருட்கடலாய் விளங்குகிறாள் அன்னை. அவள் வீற்றிருப்பது ஞானத்தாமரையில். அவளே எல்லாவற்றிற்கும் மேலான நிதி ஆவாள். அவள் விதியையும் மாற்றுபவள். இக்கருத்தினை திருமூலர்

"அதுவிது வென்று அவமே கழியாதே
மதுவிரி பூங்குழல் மங்கை நல்லாளைப்
பதிஅது மேவிப் பணிய வல்லார்க்கு
விதி வழி தன்னையும் வென்றிடலாமே" - என்பார். (திருமந்திரம்-1231)

இதன்பொருள்: அந்த வழிச் செல்வதா ? இந்த வழிச் செல்வதா ? எந்த வழிச் செல்வது என்று தெரியாமல் காலத்தை வீணே கழிக்காதீர். தேன் சிந்தும் மலர் சூடிய கருங் கூந்தலுடைய அன்னை சக்தியைச் சந்திர மண்டலத்தில் பொருத்தி வழிபட வல்லார்க்கு விதியையும் வெல்லும் வல்லமை உண்டாகும்.

அதாவது, அன்னையே எல்லாவற்றிற்கும் மேலான சக்தி. அவளால் மட்டும் தான் விதியை மாற்ற முடியும். திருக்கடவூரில் காலனை எட்டி உதைத்து, மார்க்கண்டேயனுக்கு விதித்த விதியை மாற்றினவள் அன்றோ!

உன் திருவடியையே பற்றாகப் பற்றிக் கொண்டு தவம் செய்பவர்கள் மகிழ்ச்சியில் திகழ்வார்கள். மற்றும் தெய்வத்தைத் தொழுது, நல்வினைகள் செய்து அதன் பயனாக விண்ணுலகம் அடைந்து, வானுலக இன்பத்தை அனுபவிப்பவர்களும் அன்னையின் கருணையை எண்ணி மகிழ்வார்களாம்.

அதாவது அன்னை போகத்தையும், மோட்சத்தையும் தரக்கூடியவள். ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் (764)-*ஸ்வர்காபவர்கதா* - ஸ்வர்க்கத்தையும், மோக்ஷத்தையும் தருபவள். ஸ்வர்க்க சுகம் அழியக்கூடியது. அபவர்கம் என்பது நிரந்தரமான மோக்ஷம் என்ற சுகம்.

அஞ்சல்நாயகியான அன்னை யோகவழியில் தன்னை வழிபடுபவர் களுக்குப் புருவ மத்தியில் (ஆக்ஞையில்) தோன்றிக் காட்சியளிப்பவள். அதற்கு மேலான துவாதசாந்தப் பெருவெளியிலும் காட்சி தருவாள். அபயாம்பிகை பட்டர் யோகத்திலும் தலைசிறந்து விளங்குவதை உணர்கிறோம்.

தாமரையில் வீற்றிருக்கும் அன்னையை, தாமரையில் வீற்றிருக்கும் பிரம்மன் துணைவியான கலைமகள் (சரஸ்வதி தேவி) தினமும் துதித்து வழிபடுகிறாளாம். ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் 614. *ஸசாமர-ரமாவாணீ-ஸவ்ய தக்ஷிண-ஸேவிதா* என்று சொல்கிறது. அதாவது அன்னையின் இடதுபுறம் லக்ஷ்மியும், வலதுபுறம் ஸரஸ்வதியும் சாமரங்கொண்டு அன்னையை சேவிக்கிறார்கள். திருமகளும், கலைமகளும் அன்னையின் கடைக்கண் பார்வைக்காக ஏங்குகிறார்களாம்.

எல்லோருக்கும் அருள்புரியும் அபயாம்பிகைத் தாயானவள் உயிர் உள்ளவை, அல்லாதவை என்று பாகுபாடு இல்லாமல் அனைத்து ஜீவராசிகளையும் தனது கருணையால் அணைத்துக் கொள்ளும் ஞானசொரூபியானவள் என்று அபயாம்பிகை பட்டர் பெருமையுடன் பறை சாற்றுகிறார். என்னே அவரது பக்தி! ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் (251)

அன்னையை "சின்மயீ" என்கிறது. அன்னை 'சித்'வடிவமேயானவள். சித் என்றால் ஞானம். சிறந்த ஞானமே வடிவானவள். அறிபவன், அறியப்படும் பொருள், அறிவு என்ற திரிபுடி இல்லாத சுத்த ஞான வடிவு.

அன்னையின் அருள் அளவிட முடியாதது. ஒருவேளை மலையளவு என்று சொன்னாலும் அது பொருந்தாது என்று கருதிய அபயாம்பிகை பட்டர், *"வையத்தடங்கா அருள்மலையே"* என்று மிக நயம்பட உரைக்கிறார். என்னே அவரது சொல்வளம்!

பன்னிறங்களோடு கூடியனவும், சிவந்தவையுமாகிய நவமணிகள் வடிவாய்த் திகழும் அபயாம்பிகைத் தாயே! மயிலாடுதுறையில் வந்திருப்பவர் களுக்கு வரையறையின்றி வரங்கள் தரும் பெருமை மிக்க மாயூரநாதனின் பிராண நாடியே!

12. மூவருக்கும் முதல்வி

வன்னம் ஒன்றாய் இரண்டாகி வளர்ந்தோரைந்தாய் எட்டாகி
வானாய் வானின் வளிக்கனலாய் வனமாய்ப் பாராய் வகைஐந்தாய்ப்
பன்னும் மறையோர் நான்காகிப் பரந்த சாத்ரமுடன் ஆறாய்ப்
பதினெண் புராண ஆகமங்கள் பரிந்தோரிருபத் தெட்டாகி
உன்னி நெடுமால் அயனாலும் உலகை வகுக்கக் காப்பாற்ற
உடனே சங்காரித்திடவும் உமையாளொடு தன் கேள்வனுமாய்
மன்னி நிதமும் ஆட்டிவைத்த மதலாய் இம்வானுடை மகளாய்
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

அன்னையே படைத்தும், காத்தும், அழித்தும், மறைத்தும், அருளுதல் என்ற ஐந்தொழிலையும் செய்யும் சக்தி என்பது சாக்த சமயத்தாரின் கொள்கை. 'அவளின்றி ஓர் அணுவும் அசையாது'.

"ஓங்காரி என்பாள் அவளொரு பெண்பிள்ளை
நீங்காத பச்சை நிறத்தையுடையவள்
ஆங்காரி ஆகியே ஐவரைப் பெற்றிட்டு
ரீங்காரத் துள்ளே இனிது இருந்தாளே" - திருமந்திரம்-1073

இதன் சாராம்சம்: அன்னை பிரம்மா, விஷ்ணு, ருத்ரன், மகேஸ்வரன், சதாசிவன் என்ற ஐவரையும் உண்டாக்கி, ஐந்தொழில்களையும் நடத்தும் நாயகியாவாள்.

அபயாம்பிகை பட்டர் சாக்தத்திலேயே ஊறினவர் ஆயிற்றே! அல்லும், பகலும் அயராது அன்னையின் புகழைப் பாடும் அனுபூதிமான்!

எழுத்தின் மூலம் ஒன்றே. அதுதான் ஓம் என்னும் பிரணவம். அதுவே அகாரம், உகாரமாகவும் இரண்டாய் உள்ளது. மேலும் பஞ்சாக்ஷரமாகவும், அஷ்டாக்ஷரமாகவும் ஆயிற்று. இந்த 'ஓம்' என்னும் பிரணவஸ்வரூபியாக இருப்பவள் அன்னை அபயாம்பிகை. இவ்வாறு மந்திர ஸ்வரூபமாக உள்ள அன்னையே ஆகாயமாய், காற்றாய், கனலாய், நீராய், நிலமாய், அதாவது

பஞ்ச பூதங்களாய் திகழ்கிறாள். (முன்னும் பார்த்தோம்). திருவள்ளுவர், திருக்குறளில் முதற் குறளாக,

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு" என்று அமைத்துள்ளார்.

அந்தணர்கள் வேதங்களின் மூலமாக அன்னையை சேவித்து, அதன் ஒலியில் மகிழ்வர். அதனால்தான் "கோஷிக்கின்ற வேதங்கள்" என்ற பெயர் ஆயிற்று. இவ்வேதங்கள் முறையே ருக், யஜுர், சாம, அதர்வண என நான்காகும்.

அபிராமி பட்டர் அபிராமி அந்தாதியின் இரண்டாவது பாடலிலேயே *"சுருதிகளின் பணையும், கொழுந்தும், பதிகொண்ட வேரும்"* ஆகி இருப்பவள் அன்னை அபிராமி என்று பக்தி பூர்வமாகச் சொல்லுகிறார். ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் *"ஸ்ரீ மாதா"* என்று ஆரம்பிக்கிறது. "ஸ்ரீ" என்பதற்குப் பல அர்த்தங்கள் உண்டு. அதில் ஒன்று "வேதம்".ஸ்ரீ மாதா என்றால் வேதமாதா என்று ஆகிறதல்லவா!

335. *வேத வேத்யா:* வேதங்களால் அறியத் தகுந்தவள். தேவியின் இருப்பிடமான ஸ்ரீநகரத்தின் நான்கு வாயில்களாக இந்த நான்கு வேதங்களும் அமைந்துள்ளன. இந்த வாயில்கள் வழியே சென்றால்தான் தேவியை அடையமுடியும். ஆகையால் வேத வேத்யா. 338. *வேத ஜனனீ:* வேதங்களை உண்டு பண்ணினவள். தேவீ குண்டலினீ ரூபமாக இருப்பதாலும், குண்டலினியிலிருந்தே உயிரெழுத்துக்களும் உண்டாவதாலும், எல்லா மந்திரங்களும் வேதங்களும் இவைகளின் ஒலிகளால் ஏற்படுவதாலும் வேத ஜனனீ எனப்படுகிறாள்.

மேற்கூறிய நான்கு வேதங்களுக்கும், ஆறு அங்கங்கள் (சாத்திரங்கள்) உண்டு. அவையாவன: 1. ஸ்ரீக்ஷா - அக்ஷரங்களை உச்சரிப்பது பற்றிய அறிவு. 2. வ்யாகரணம் - சொல் இலக்கணம் 3. சந்தஸ் - செய்யுட்கள் (ஸ்லோகங்கள்) இவைகளின் இலக்கணம் 4. நிருக்தம் - பொருள் (சொல்லின் அர்த்தம்) இலக்கணம் 5. ஜ்யோதிஷம் - காலத்தின் இலக்கணம் 6. கல்பம் - செயல் முறையின் இலக்கணம் 386. *ஷடங்க தேவதா யுக்தா* என்ற நாமம் இதை நன்கு விளக்குகிறது.

அன்னையே பதினெண் புராணங்களாக இருக்கிறாள். சிவபுராணங்கள் (10) - 1. சைவ புராணம் 2. இலிங்க புராணம் 3. கந்த புராணம் 4. கூர்ம புராணம் 5. வாமன புராணம் 6. வராக புராணம் 7. பௌஷக புராணம் 8. மச்ச புராணம் 9. மார்க்கண்டேய புராணம் 10. பிரம்மாண்ட புராணம்.

விஷ்ணு புராணங்கள் (4) - 1. நாரதீய புராணம் 2. பாகவத புராணம் 3. காருட புராணம் 4. வைணவ புராணம்

பிரம புராணங்கள் (2) -- 1. பிரம புராணம் 2. பதும புராணம்
சூரிய புராணம் (1) -- பிரமகைவர்த்த புராணம்
அக்கினி புராணம் (1) -- ஆக்கினேய புராணம்

அத்துடன் அந்தப் புராணங்களின் ஆகமங்கள் இருபத்தியெட்டாகவும் உள்ளாள் அன்னை.

அவையாவன: 1. காமிகம் 2. யோகஜம் 3. சிந்த்யம் 4. காரணம் 5. அஜிதம் 6. தீப்தம் 7. சூக்ஷ்மம் 8. ஸஹஸ்ரம் 9. அம்சுமான் 10. சுப்ரபேதம் 11. விஜயம் 12. நிச்வாசம் 13. ஸ்வாயம்புவம் 14. அனலம் 15. வீரம் 16. ரௌரவம் 17. மகுடம் 18. விமலம் 19. சந்ரக்ஞானம் 20. முகபிம்பம் 21. பிரோத்கீதம் 22. லலிதம் 23. சித்தம் 24. ஸந்தானம் 25. சர்வோக்தம் 26. பாரமேச்வரம் 27. கிரணம் 28. வாதுளம்.

எல்லாமாக உள்ள அன்னை அபயாம்பிகை தெளிவுடன் சிந்தித்து, இவ்வுலகைப் படைக்கும் தொழிலை பிரம்மனுக்கும், அவ்வாறு படைக்கப்பட்ட உலகத்துயிர்கள் அனைத்தையும் காக்கும் பொறுப்பை தன் சகோதரன் திருமாலுக்கும், உரிய காலத்தில் சங்காரம் செய்யும் பொறுப்பை தனது துணைவன் சிவபெருமானிடத்தும் ஒப்படைத்துள்ளார்.

இவர்களுக்கெல்லாம் பொறுப்புக்களைக் கொடுத்து விட்டு அன்னை சும்மா இருக்கவில்லை. அந்தச் செயல்களைச் செய்யும் சக்தியாகவும் உள்ளாள்.

அபயாம்பிகை பட்டர் இப்பாடலை கவிநயம் பொருந்த நகைச் சுவையுடன் பூர்ணம் செய்கிறார். அன்னையை இமவானுக்குப் பிறந்த மகளாய் *'ஆட்டி வைத்த மதலாய்'* என்கிறார். அதாவது மும்மூர்த்திகளுக்கும் சரியாக வேலைகளைப் பகிர்ந்து தந்துவிட்டு, அவர்கள் சரியாகச் செய்கிறார்களா என்று மேற்பார்வை செய்து அவர்களை ஆட்டிவைக்கும் சிறுபிள்ளை (மதலாய்) என்கிறார். என்னே அவரது கவிதா விலாசம்! அனைத்தும் அன்னையே! என்று வாழ்ந்த அனுபூதிமான் அன்றோ!

13. அன்னையே! நான் உன் அடிமை !

தந்தை தாயார் சுற்றத்தார் சகல வாழ்வும் உனதருளே
தமியேன் செய்யும் வினைஉனது சடலம் உனது உயிர் உனது
சிந்தைக் கிசைந்த அடிமை என்று செகத்தில் எவர்க்குந் தெரியாதா
சிந்தா மணியே எனக்குவருஞ் செயலே உனது செயல்அலவோ
சொந்த அடிமை கிடந்தலையச் சும்மா இருந்தால் உனைவிடுமோ
சோதி வதன மணிவிளக்கே துவாத சாந்தப் பெருவெளியே
மைந்தன் எனவந் தாண்டருள்வாய் வனச வதனி நவசரணி
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம் பிகைத்தாயே.

அபயாம்பிகை பட்டர் அன்னையிடம் ஆத்ம ஸமர்ப்பணம் செய்யும் அருமையான பாடலிது.

நாம் உடல், பொருள், ஆவி என்ற மூன்றையும் நம் உடைமைப் பொருள்களாகக் கருதி, அவற்றின் மீது தீராப் பற்று கொண்டிருப்பதால் இவ்வுலகில் இன்ப துன்பங்களைத் தொடர்ந்து அனுபவித்துக் கொண்டிருக்

கிறோம். இவற்றை அன்னையிடம் சமர்ப்பித்து நாம் அவளின் கைக்குழந்தை யாகிவிட்டால், கவலையெல்லாம் அகன்று, என்றும் இன்பமே காணலாம். தரையிலே நடக்கிற குழந்தைதான் மேடு, பள்ளம் பார்த்து நடக்க வேண்டும். கல், முள் குத்துமே என்ற கவலையும் உண்டாகும். தாயின் இடுப்பில் இருக்கும் குழந்தைக்கு ஏது அந்தக் கவலை ?

மேலே கூறியதின் கருத்து யாதெனில், அன்னையிடம் நாம் குழந்தை களாக மாறி பக்தியில் உருகினால் பிறவிக் கடலைக் கடந்து விடலாம். இந்த தாய்-சேய் பாவத்திற்கு எடுத்துக் காட்டாய் விளங்குபவர்கள் அபிராமி பட்டரும், அபயாம்பிகை பட்டரும் ஆவார்கள். அபிராமி அந்தாதியில் (95)

"நன்றே வருகினும் தீதே விளைகினும் நான் அறிவது
ஒன்றேயும் இல்லை; உனக்கே பரம் எனக்கு உள்ள எல்லாம்
அன்றே உனது என்று அளித்துவிட்டேன் அழியாத குணக்
குன்றே, அருட்கடலே இமவான் பெற்ற கோமளமே"

என்று அபிராமி பட்டர் எல்லாவற்றையும் அன்னைக்கு அர்ப்பணம் செய்துவிட்டார். 'ஸர்வ பரித்யாகம்' என்று இதற்குப் பெயர். அதனால் அவர் அன்னையிடம் 'இனி எனக்கு யாதொரும் கவலையில்லை, எல்லாம் உன் பொறுப்பு, உனக்கே பாரம்' என்று ஒரு குழந்தைபோல் சொல்வது மிகச் சிறப்பு.

அபயாம்பிகை பட்டர் அன்னையிடம் எனது என்று ஒன்றும் இல்லை, எல்லாம் உனதே என்று ஒவ்வொன்றாகக் குழந்தைபோல் சொல்வது நம்மைப் பக்திப் பரவசத்தில் ஆழ்த்துகிறது.

தந்தை, தாயார், சுற்றத்தார் என்னும் பாச, பந்த வாழ்க்கையும் உனது அருளால் ஏற்பட்டதே. அடியேன் செய்யும் செயலும் உனது. உடல் உனது. உயிர் உனது. எனது என்று ஒன்றும் இல்லையே அம்மா! நான் உனது அடிமை என்று உலகில் உள்ளோர் யாவருக்கும் தெரிந்ததுதானே!

ஸ்ரீநகரத்தில் சிந்தாமணி கிருகத்திலிருப்பவளே! என்னுடைய செயல்களின் விளைவுகளுக்கு நீதானே பொறுப்பு ஏற்க வேண்டும். உன் அடிமை நான். அடிமைக்கு ஏதும் இல்லையே! எனவே நீயே பொறுப்பு ஏற்று என்னைக் கடைத்தேற்ற வேண்டும் என்று நெக்குக்கு நெக்குருகி அன்னையிடம் தன்னையே அர்ப்பணிக்கிறார் அபயாம்பிகை பட்டர்.

இதன் கருத்து : எல்லாம் துறந்த பின் அன்னையிடம் சரணமடைகிறான் பக்தன். இதுதான் சரணாகதி தத்துவம்.

ஒளியினைப் பெருக்கும் மணிவிளக்குப் போன்ற அழகிய வதனம் உடையவளே! பரந்த ஆகாசமாய் திகழ்பவளே! "மகனே" என்று என்னை நோக்கி வந்து என்னை ஆட்கொண்டு அருள்புரிவாய்! "தாயே" என்று சொல்லும்போது, யார்தான் உருக மாட்டார்கள் ?

வனசவதனி நவசரணி: தாமரைப் போன்ற திருமுகமுடையவள். அவளுடைய திருவடியும் தாமரை மலர் போன்றது. தாமரை மலரோ வாடுவது.

ஆனால் அன்னையின் திருவடிகளோ என்றும் பொலிவுடன் இருப்பது. அப்பொழுது அலர்ந்த புதிய மலரைப் போலவே எப்போதும் விளங்குவது. மலருக்குரிய தன்மையும், மென்மையும், விரிவும் அந்தத் திருவடிக்கு உண்டு. அதோடு ஆனந்தத் தேனும், ஞான மணமும் பில்குவது. 'நவ' என்றால் புதியது என்று பொருள்படும். அபிராமிபட்டரும், அபிராமி அந்தாதியில் (28), *'சொல்லும் பொருளும் என நடம் ஆடும் துணைவருடன் புல்லும் பரிமளப் பூங்கொடியே! நின் புது மலர்த்தாள் ...'* என்று அன்னையின் திருவடியைப் போற்றிப் புகழ்ந்து துதிக்கிறார்.

ஆதிசங்கரர் ஸௌந்தர்யலஹரீயில்(87) (ஹிமானீஹந்தவ்யம்) "தாயே! தாமரையோ பனியில் கருகிப் போவது. உனது திருவடித் தாமரைகளோ பனிமலையில் இருப்பதில் தேர்ச்சி பெற்றவை; தாமரை இரவில் இதழ்களை மூடிக் கொண்டு உறங்குவது. உனது திருவடிகளோ இரவிலும், இரவு முடிந்த போதும் எப்போதும் பிரசன்னமாய் இருப்பவை; தாமரை தன்னிடம் லட்சுமி வசிக்கும்படி இருப்பது. உன் திருவடித் தாமரைகளோ வழிபடுபவர்களுக்கு லட்சுமியை அளிப்பவை. ஆகையால் தாமரையை உனது பாதகமலங்கள் ஜெயிக்கின்றன. இதில் அதிசயம் என்ன இருக்கிறது" என்று அன்னையின் திருவடிப் பெருமையையும், மகிமையையும் கவிநயத்துடன் கூறுகிறார்.

14. அன்னையே அனைத்தினிற்கும் ஆதாரம்

பேயேன் ஊமை விழிக்குருடு பேணுஞ் செவிடு கால்முடமாய்ப்
பிள்ளை எனவே ஈன்றவர்க்குப் பிரிய விடவும் மனமாமோ
நாயேன் செய்யும் வினைமுழுதும் நலமாய்ப் பஞ்சுப் பொறியெனவே
நகர்த்திச் சிவத்துள் எனதுளத்தை ஞானப் பதியுள் சேர்த்தருள்வாய்
ஆயே அமலை அருட்கடலே அகிலா தார முடிவிளக்கே
அணங்கே இணங்கும் அடியவர்கட்(கு) அமுத ஞானம் அருள்அரசே
மாயே செக மோகனமான வடிவே முடிவே மலைமகளே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

இம்மண்ணுலகில் தாய்மார்கள் தங்கள் குழந்தைகள் குறையுடன் பிறந்தாலும் அவர்களைப் புறக்கணிக்காமல் அன்புடன் பேணிக் காத்து வளர்ப்பதைக் கண்கூடாகக் காண்கிறோம்.

அன்னை அபயாம்பிகையோ அகிலத்தையும் ஈன்ற தாய் ஆயிற்றே! அவளை ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம்(285) *ஆப்ரஹ்ம கீட ஜனனீ* என்று சொல்கிறது. ப்ரஹ்மா முதல் புழு, பூச்சி வரை உள்ள எல்லா ஜீவன்களையும் ஈன்றவள். தேவிக்கு எல்லா உயிர்களிடத்தும் ஒரே மாதிரியான அன்புதான். இதனையே அபிராமி பட்டர், *'பிரமன் முதலாய தேவரைப் பெற்ற அம்மே'* என்கிறார்.

அபயாம்பிகை பட்டர் இதையெல்லாம் மனதிற் கொண்டு அன்னையைப் பார்த்து உரிமையுடன், "தாயே, உனது குழந்தை புத்தி சுவாதீனம் அற்றும், ஊமையாகவும், குருடாயும் அல்லது கால் முடமாகப் பிறந்து விட்டது என்பதற்காக அதைப் புறக்கணித்துவிடாமல் அதன்மேல் அதிக அன்பு காட்டி பேணி வளர்ப்பாயல்லவா! அதுபோல் நாயினும் கடையனான என்னை, என் வினைகள் அனைத்தையும் தீ, பஞ்சுப் பொதியை எரிப்பதுபோல் அழித்து, சிவனிடத்து சேருவதற்கான ஞானத்தை என் உள்ளத்தில் அருள்வாய்!" என்று கேட்கிறார்.

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமமும்(727) அன்னையை, *"சிவஜ்ஞான ப்ரதாயினி"* என்று சொல்லுகிறது. அதாவது சிவ சம்பந்தமான ஞானத்தைத் தன் பக்தர்களுக்குத் தருபவள். சிவ=மங்களம் - அந்த ஞானத்தை, அதாவது ப்ரஹ்ம ஞானத்தைத் தருபவள். சிவஞானத்தை அன்னை மூலமாகத் தான் அறியமுடியும் என்று வாஸிஷ்ட ராமாயணம் கூறுகிறது. அசைவினால் காற்றை அறிவது போல், உஷ்ணத்தினால் நெருப்பை அறிவது போல, அன்னை மூலமாகவே சின்மாத்ரமான, நிர்மலமான, சாந்தமான சிவனை அறியமுடியும் என்பதே இதன் கருத்தாகும். சுருங்கச் சொன்னால் "அவள் அருளாலே அவன்தாள் வணங்கி" என்று கூறலாம்.

தாயே(ஆயே) நீ மலமற்றவள். அதனால் "அமலை". கருணைக் கடலும் நீயே! உலகங்கள் அனைத்துக்கும் ஆதாரமாய் இருப்பவளும் நீயே! ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம்(935). ஜகதாத்ரீ - உலகத்தைத் தாங்குபவள். உலகத்திற்கு ஆதாரமாய் இருப்பவள். புவனங்களின் முழுமைக்கும் முடிவிளக்காய் ஒளி தருபவளும் நீயே!

உன்னை உவந்து தேடி வரும் அன்பர்களுக்கு அமுதமான மெய்ஞானத்தை வழங்கும் அருள் அரசியாயும் திகழ்கிறாய்! அதே சமயம் மாயையாகவும் விளங்குகிறாய். உலகம் அனைத்தையுமே மயங்கச் செய்யும் மோகனமான வடிவம் படைத்தவள் நீ! அதனால்தான் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமம்(215) உன்னை, *"மஹா மாயா"* என்று கூறுகிறதோ!

ப்ரஹ்மாதிகளுக்கும் மோஹத்தை உண்டு பண்ணுவதால், மஹா மாயா ரூபிணியாக இருப்பவள். தேவீ மாஹாத்மியம் (1.55):-

"ஜ்ஞானினாமபி சேதாம்ஸி தேவீ பகவதீ ஹி ஸா ।
பலாதாக்ருஷ்ய மோஹாய மஹாமாயா ப்ரயச்சதி ॥

இதன் பொருள்: ஞானிகளுடைய சித்தங்களையும், அந்த மஹாமாயா தேவியான பகவதி வலுவில் கவர்ந்து மோஹத்தில் செலுத்துகிறாள்.

மாயா சொரூபிணியானாலும் அவளே முடிவில் எல்லோரையும் கரையேற்றுபவள். (முடிவே) எல்லாவற்றிற்கும் அந்தமானவள். அபிராமி பட்டர் அபிராமி அந்தாதியில்(36)

"பொருளே பொருள்முடிக்கும் போகமே அரும்போகம் செய்யும்
மருளே மருளில் வரும் தெருளே என்மனத்து வஞ்சத்து

இருளேதும் இன்றி ஒளி வெளியாகி இருக்கும் உன்றன்
அருளேது அறிகின்றிலேன் அம்புயாதனத்து அம்பிகையே"

என்று மனமுருகி அன்னையின் அருளைப் போற்றிப் புகழ்கிறார்.

இதன் கருத்து: அன்னையே பொருளைக் கொடுத்து, அதனால் போகத்தைத் தந்து, அந்தப் போகத்தினால் மயக்கத்தை உண்டாக்கி, அதிலிருந்து தெளிவான ஞானத்தையும் கொடுப்பவள்.

ஸ்ரீ முத்துசுவாமி தீக்ஷிதரும் *"கமலாம்பாம்பஜரே, கல்பித மாயாகாராயும் த்யஜரே"* என்று அழகான கீர்த்தனையை உருவாக்கினவர். *இதன் பொருள்:* மனமே! கமலாம்பாளை பஜனை செய். மாயா காரியமான புறத்தோற்றத்தைப் புறக்கணித்துவிடு. பகவத் கீதையிலும் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா அர்ஜுனனுக்கு மாயைப் பற்றிச் சொல்வது

"ஈஸ்வர: ஸர்வ பூதாநாம் ஹ்ருத்தேஸே அர்ஜுந திஷ்டதி
ப்ரா மயந் ஸர்வ பூதாநி யந்த்ராரூடாநி மாயயா (18.61)

இதன் பொருள்: இறைவன் பொம்மலாட்டக்காரனைப் போல் எல்லா ஜீவ ராசிகளின் இதயங்களில் அமர்ந்து மாயையினால் பிரமிக்கச் செய்கிறான்.

மாயை நீங்கி, மனிதன் பிறவிக் கடலைத் தாண்ட அன்னை அபயாம்பிகை அமுதமான (என்றும் அழியாத) மெய்ஞானம் தந்தருள வேண்டும் என்று அன்னையிடம் மெய்யுருகி விண்ணப்பிக்கிறார் அபயாம்பிகை பட்டர்.

15. அன்னையே! நற்கதி அருள்வாய்!

எண்ண அடங்கா தெனதுசென்மம் ஏட்டில் எழுதி முடியாது
இடிப்பார் நீண்ட மரம்போலும் எமனார் பதியில் அடைந்துடைந்து
பெண்ணின் மயக்கம் வினைமயக்கம் பிறவி மயக்கம் தொலையாது
பித்தர் சாலப் புலையருடன் பேய்கொண் டடிமை அலைவேனோ
வண்ணக் கலையே கதிமுதலே வனசப் பதியே அதிமதுர
வனமே கனமே யோகியர்கள் மனமேய் குடியே வாரிதியே
மண்ணிற் ககன முடிநடுவுள் வாதா டியபே ரொளிவிளக்கே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

பெரியோர்களின் இயல்பு தாம் செய்யாத குற்றங்களையும் தாம் செய்ததாகக் கூறி இரங்குவார்கள். இதை நைச்சியானு சந்தானம் என்பார், அபயாம்பிகை பட்டர் (அபிராமி பட்டரைப் போல) உலகப் பற்று அற்றவர். முற்றும் துறந்த முனிவராகவும், மகா யோகியாகவும் சதா சர்வ காலமும் அன்னையின் திருவடி நினைவிலிருப்பவர். இவர்கள் உலக க்ஷேமத்திற் காகவே நம்மிடம் ஜீவன் முக்தர்களாக வாழ்பவர்கள். இந்தக் கருத்தினை பிரதிபலிக்கும் பாடலிது.

"மஹாந்தஸ்தே ஸமசித்தா: ப்ரசாந்தா:" என்னும் ஸ்ரீ பாகவத வசனப்படி தன்னலம் கருதாது வேற்று மனப்பான்மையின்றி மக்களுக்கு

நன்மையை போதிப்பவர்களே ஸாதுக்கள், மஹான்கள், ஆசார்யர்கள் எனப்படுகிறார்கள்.

தாயே! அடியேன் எடுத்த பிறவிகள் எண்ணிலடங்கா. ஏட்டிலும் எழுதி மாளாது. இடிந்து விழும் கரையில் இருக்கும் நீண்ட மரம் போன்றது இவ்வுலக வாழ்வு. (அந்த மரம் எந்நேரமும் கீழே விழலாம்). எப்போது யமன் வருவான் என்று கூற இயலாது?

இவ்வாறு இந்த மண்ணுலக வாழ்வு நிலையற்றது என்று தெரிந்தும் பெண்ணாசை, பொன்னாசை என்று பித்து பிடித்து அலைவேனோ? (அவ்வாறு அலையவிடாமல் என்னைக் காப்பாற்றுவாய் என்பது குறிப்பு).

சிறந்த கலைஞானம் உள்ள தாயே! கலை வடிவாக இருப்பவளே! கலைகளுக்கெல்லாம் தலைவியே! நீயே எனக்கு நற்கதி தந்தருள்வாய். அடியார்களின் உள்ளத் தாமரையில் வீற்றிருப்பவளே! கண்ணுக்கும் கருத்துக்கும் இனிய சோலை போன்றவளே! அடியார்களுக்குக் கருணை பொழிவதில் மேகம் போன்றவளே! யோகியர் மனத்தில் கோயில் கொண்டவளே! ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் (747) அன்னையை *"பக்த-சித்த-கேகி-கனா-கனா"* என்று அருமையாகப் போற்றுகிறது. -- பக்தர்களின் மனமாகிய மயிலுக்கு மேகம் போன்றவள். 611. *கலாத்மிகா* -- கலை வடிவாக இருப்பவள். 612. *கலாநாதா* -- கலைகளுக்குத் தலைவி.

அவளே மண்ணிலும், வானிலும், ஆகாயத்திலும் (பரவெளி) முதலாகவும், நடுவாகவும், முடிவாகவும் திகழ்பவள். காற்றிலே அசைந்தாடும் அழகிய கொடிபோல் இருப்பவள். அவளே அகில உலகங்களுக்கும் ஒளிதரும் பேரின்ப சோதியாய் விளங்குகிறாள்.

அளவிலா சிறப்புடைய அன்னையே, அபயாம்பிகைத் தாயே! எனக்கு நற்கதி தந்து அருள்வாய்! அன்னையை ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்தில்(201) *"ஸத்கதிப்ரதா"* என்று அன்புடன் அழைக்கிறார்கள் வாக்தேவதைகள். அதாவது அன்னை அனைவருக்கும் (குற்றங் குறை காணாது) பாரபட்சமின்றி நற்கதியை அருளுபவள். என்னே! அன்னையின் கருணை!

16. அபயாம்பிகையே! நீயே என்றன் தாய்!

பறந்த பறவை நாற்காலாய்ப் படரும் விலங்கும் ஊர்வனவும்
பாணீ தனில்வாழ் சீவர்களும் பாரில் நிலையாத் தாபரமும்
பிறந்த மனிதர் தேவரொடு பிசகா தெடுத்த செனனமதில்
பெற்ற தாயார் எத்தனையோ பிறவி மனையாள் புதல்வர்களும்
நிறைந்த கோடா கோடி இதில் நிலையானதுவும் ஒன்றறியேன்
நீயே தாயென் றநுதினமும் நெறியே அருளிப் பிறவியினி
மறந்து விடவும் உனதுபய வனச மலர்த்தாள் ஈந்தருள்வாய்
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

தாயே! நான் மீண்டும், மீண்டும் பிறந்து இறந்து கொண்டிருக் கிறேன். ஒரு பிறவியில் பறவையாகவும், மற்றொரு பிறவியில் நான்கு கால்களையுடைய விலங்காகவும், பின் ஊர்ந்து செல்லும் ஜந்துவாகவும், இன்னுமொரு பிறவியில் நீரில் வாழும் ஜீவராசிகளாகவும் இருந்திருப்பேன். இந்த எல்லாப் பிறவிகளும் நிலையற்றவையே! மாணிக்கவாசகரும் (சிவபுராணம்) திருவாசகத்தில்,

"புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகி பறவையாய் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறத்திளைத்தேன் ..." என்று அருமையாகச் சொல்லுகிறார்.

மனிதராய், தேவராய்த் தோன்றினாலும் எடுத்த பிறவிகளில் தாயார்கள் எத்தனையோ பேர்களாவர். இதைப் போலவே மனைவிமார்களும், புதல்வர்களும், உற்றார், உறவினர் உறவுகளும் தாற்காலிகமானது. இதில் நிலையானது எதுவும் இல்லை.

நீயே என் தாய். எல்லாப் பிறவிகளிலும் தொடர்ந்து வந்து நிலைத்து நிற்கும் மஹா மாதா நீயே! உன்னுடைய உறவு ஒன்றுதான் என்றும் சாசுவமதானது. ஒவ்வொரு நாளும், அல்லும் பகலும், உன்னை மறவாது எண்ணும் நெறியை (மார்க்கத்தை) எனக்கு நீ அருள வேண்டும். இந்த மாயப் பிறவியினின்று என்னை விலக்கி உன் அடிமையாய்த் தொண்டு செய்து கொண்டே வாழ்ந்திட உனது தாமரை மலர் போன்ற இரு பாதங்களைப் பற்றும் வகையில் அருள்வாய்! தாயே! மயிலாடுதுறையில், வணங்குபவர்களுக்கு வரையில்லா வரங்கள் தந்தருளும் வள்ளலாய்த் திகழும் மாயூரநாதனின் உயிர்நாடியாய், அடியார்களுக்கு அபயம் தந்து அருள்புரியும் அபயாம்பிகைத் தாயே!

இளமையிலேயே தாய் தந்தையர்களை இழந்த அபயாம்பிகை பட்டருக்கு அன்னையே ஒரு அந்தண மாதாகத் தோன்றி "மகனே! அழாதே! இதை உண்!" என்று சிற்றுண்டி அளித்துச் சிறிது நேரம் கழித்து மறைந்தனர். அத்தகைய பாக்யம் செய்தவர் அபயாம்பிகை பட்டர். அவர் பிறந்த மண்ணில் நாமும் பிறந்திருக்கிறோம் என்று நினைக்கும்போது நம் உடல் நம்மையறியாமல் புல்லரிக்கிறதல்லவா!

17.அன்னையே! அறியாமையை அகற்றி அருள்புரிவாய்!

சடத்தை எடுத்து மயல்நிகழ்த்தித் திகைப்பில் உயிரும் அகப்படவும்
தேசா சாரஅதிமோகத்திருக்கில் மனமும் உருக்கமுடன்
கடத்தை எனதென் றபிமானக் கருமா மயிலாருடன் ஆசைக்
காதலதனில் உயிர்மறந்து கலங்கித் தியங்கி அலைவேனோ
நடத்தை அறியாப் பரிபாகனாக்கி உன்றன் இருபதத்தை
நம்ப மனத்தில் உறுதியொன்றாய் நாட்டி எனையோ ராளாக்கி
மடத்தை அரிய வலிந்தழைப்பாய் மதிவாள் நுதலே மலைமகளே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

தாயே! பூர்ண சந்திரன் போன்ற திருமுகத்தை உடையவளே! பர்வத ராஜனுக்கு மகளாய்த் தோன்றிய பார்வதி தேவியே! மயிலாடுதுறையில் வரையிலா வரங்கள் தரும் வள்ளலாய் வீற்றிருக்கும் மாயூரநாதனின் உயிர்நாடியாய் அண்டினவருக்கு அபயம் தந்தருளும் அபயாம்பிகைத் தாயே! என்னை ஆட்டி வைக்கும் அறியாமையை அகற்றி அருள் புரிவாயே! ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் - 314. *ராகேந்து வதனா:* -- பூர்ண சந்திரன் போன்ற திருமுகத்தையுடையவள். கடல், யானை, சந்திரன் இவற்றை பார்க்கப் பார்க்க ஆனந்தமாகவே இருக்கும். அலுப்பே இராது. அது போன்ற திருமுகத்தை யுடையவள்.

நம் உடலில் உள்ள இந்திரியங்களினால் வரும் சிற்றின்பங்களை நாம் பேரின்பமாக நினைத்து அதிலேயே உழலுகிறோம். இதைத் தான் அபயாம் பிகை பட்டர் இப்பாடலில் குறிப்பிடுகிறார். இதுதான் மாயையின் வேலை.

பாலைவனத்தைப் போன்றது இந்த மானுட வாழ்க்கை. ஆனால் மனித மனமோ இதை சாஸ்வதம் என்று எண்ணி அதிலேயே நாட்டம் கொள்கிறது. கருங்கூந்தலுடைய பெண்களிடம் காதல் கொண்டு என்னை மறந்து, நான் செல்லும் பாதை புரியாமல் கலங்கி அலைவேனோ? என்று ஆசிரியர் அன்னையிடம் (நம் சார்பாக) கவலையுடன் வினவுகிறார்.

இம் மண்ணுலக வாழ்வில் மனிதன் மூன்று ஆசைகளில் மூழ்கி மூடனாய்த் திரிகிறான். (மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை) இம் மூன்றில் பெண்ணாசை என்பது மிக வலியது. அதைத் தாண்டுவது மிகவும் கடினமானது. இதைப் போக்கி என்னை ஆட்கொள்ள வேண்டும் என்று சிரம் தாழ்ந்து பணிவுடன் விண்ணப்பிக்கிறார் அபயாம்பிகை பட்டர்.

உலகமெல்லாம் வியாபித்திருக்கும் மாயையிலிருந்து என்னைக் காத்து, என்னை பக்குவப்படுத்தி உனது இரு திருவடிகளையே பற்றும் உணர்வினை எனக்குத் தந்து, என்னையும் ஒரு மனிதனாக்கி, என் அறியாமை அனைத்தையும் அறவே அழித்து என்னை ஆட்கொண்டு அருள் புரிவாயே! அபயாம்பிகைத் தாயே!

இங்கு "வலிந்தழைப்பாய்" என்று வருவதும் அபிராமி அந்தாதியில் (32), *"நின் பாதம் எனும் வாசக்கமலம் தலைமேல் வலிய வைத்து"* என்று வருவதும் காண்க. இதன் உட்பொருள் யாதெனில் அன்னையே மனம் உவந்து அன்பர்களிடம் அவளே வலிய வந்து (அதாவது தானாகவே வந்து) அவர்களை ஆட்கொள்வாள் என்பதே.

18. மயிலாபுரியே மண்ணின் கயிலாயம்!

காவே இலங்கும் பொன்னி நதிக்கரையே இலங்கும் மயிலைநகர்
கங்கை முதலாம் புனிதநதி கருதிப் பணியும் மூதூரே
பாவே இலங்குங் கவிவாணர் பகரும் மறை வேதாகமங்கள்
பயிலும் வீதிக் கமுகிளநீர் பாயும் வாழை குருந்தேறும்
ஆவே இலங்கு வயல்சூழும் அதிலே நானா விருஷமுடன்
அமுத ரசமாய்க் கனிபழுக்கும் அருகிற் பறவை யினஞ்சூழும்
மாவே இலங்கும் அனுதினமும் மருவுங் கயிலை நிகரான
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

சோலைகள் செழித்தோங்கும் பொன்னி (காவேரி) நதியின் கரையில் திகழும் மயிலாடுதுறையில், கங்கை போன்ற புண்ணிய நதிகள், துலா மாதத்தில் தங்கள் பாவச் சுமைகளைப் போக்க காவிரி நதியில் கலந்து புனிதம் பெறுகின்றன என்பது ஐதீகம். இந்தப் புனிதமான க்ஷேத்திரத்தில் சிறப்பு மிக்க தோத்திரங்களை வழங்கும் வல்லமை பெற்ற கவிஞர்கள் வேதங் களையும், ஆகமங்களையும் இயம்பி வருகிறார்கள். இத்தகைய அருளா ளர்கள் இங்கு வாழ்வதால், வாழை, கமுகு, தென்னை மரங்கள் சூழ இப் பகுதி நீர்வளம், நிலவளம் நிறைந்து விளங்குகிறது.

இங்குள்ள வயல்களில் நெற்பயிர்கள் எல்லாம் கதிர் முற்றி, சூல் கொண்ட அழகிய மங்கையர் நிற்பது போல் காட்சி தருகின்றன. வயல்களின் கரைகளில் பலவிதமான மரங்கள் பழுத்த கனிகளைத் தாங்கி நிற்கின்றன. இவற்றைச் சுற்றிச் சுற்றி பறவைக் கூட்டம் வலம் வருகிறது. "சோழநாடு சோறுடைத்து" என்ற பழமொழியும் காண்க. இத்தகைய வளங்கள் பொருந்திய மயிலாபுரியில் மனம் உவந்து தானே விரும்பி வந்து திருமகளும் உறைகிறார். எனவே கயிலைக்கு நிகரானது என்று சொல்லவும் வேண்டுமோ ? (மயிலையே கயிலை. கயிலையே மயிலை). இது சென்னை மாநகரில் உள்ள மைலாப்பூரை நினைவுபடுத்துகிறது. அங்கும் அன்னை மயிலாகத் தோன்றினாள்.

இத்தனை பெருமைகளும் இந்த தலத்திற்கு ஏற்பட்டதிற்குக் காரணம் இங்கு நீ மயிலாக வந்து, தவம் செய்து, உன் நாதனும் வரும்படி செய்து, இருவராக சேர்ந்து, அண்டி வரும் அன்பர்களுக்கு அபயமும், வரங்களும் வாரி வாரி வழங்குவதால் தானேயன்றோ ?

19. அம்மா! என்னை ஆட்கொண்டதை இல்லை என்பாயோ?

என்ன மயக்கம் இதுபுதுமை இதை யாருடனே யான் உரைப்பேன்
எடுக்க முடியா வினைச்சுமையை ஏழைத்தலை மீதெடுத்தேற்றி
மன்னிப் பிறக்க இடமும் இன்றி வாகாய் நடக்க வழியும்இன்றி
மயக்கக் கொடுவேல் முனைக்கானில் வனவேடர்கள் செந்நாயுடனே
என்னை மறிக்கக் கொடுமையுடன் எழுந்தே உழுவை பாய்ந்திடவும்
இதிலே மயங்கி அலைந்திடவிட்(டு) எங்கே ஒளிந்தாய் ஈஸ்வரியே
வன்ன மயிலே எனக்குரைத்த வசனமது பொய்யானதென்னோ
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

அருமையான பாடல் இது! தாயிடம் ஒரு சேய் உரிமையுடன் கேட்கும் கேள்வி. "அம்மா நீ என்னை உன் பிள்ளையில்லை என்று சொல்ல முடியுமா?" இதே கேள்வியை அபிராமி பட்டர் அபிராமி அந்தாதியில் (30). "*அன்றே தடுத்து என்னை ஆண்டு கொண்டாய் கொண்டது அல்லவென்கை நன்றே உனக்கு?*" அதாவது "என்னை நீ எப்போதோ ஆட்கொண்டு விட்டாய். இப்போது இல்லை என்ற சொல்வது நன்றாக இல்லையே" என்று அன்னையிடம் உரிமையுடன் கேட்கிறார்.

இங்கும் அபயாம்பிகை பட்டர் அன்னையைப் பார்த்து "பருவமறியாக் காலத்திலேயே அடியேனுக்கு அமுதூட்டி அருள் புரிந்தவள் நீ! இப்போது இல்லை என்று பொய் சொல்வாயோ? சொல்ல முடியுமோ? சொல் தாயே! என்பது, கண்களில் கண்ணீர் மல்க கேட்கும் காட்சியாக நம் கண்முன் தெரிகிறதல்லவா? தாய் - சேய் பாவத்தின் உச்சக்கட்ட நிலை இது.

விலங்குகள் காட்டில் வாழ்கின்றன. புலி, சிங்கம், கரடி, யானை, நரி என்று அவற்றைப் பார்க்கும்போது வெவ்வேறான தோற்றங்களிலிருந்து புரிந்து கொள்ளலாம். ஆனால் நாட்டில் வாழும் மனிதர்களை அவ்வாறு தெரிந்து கொள்ள முடியவில்லையே! வடிவத்தில் மனிதராய்த் தோன்றும் மனிதர்கள் விலங்கின் இயல்புடையவராய் இருக்கின்றனரே! என்ன மாயை இது? இதுவும் உன் அருளுடன் கூடிய புதுமையோ? இதை நான் யாரிடம் எடுத்துச் சொல்வேன்?

அறம், பாவம் என்ற சுமையை என் தலைமேல் ஏற்றி, விலங்கு இயல்புடைய மனிதர்களின் மத்தியில் நிறுத்தி, நடக்கவும் வழியின்றி உன் மாயையால் என்னை விட்டு எங்கு சென்றாய் தாயே? நான் உன் அடிமையென்று உனக்குத் தெரியாதா?

உன் கருணைப் புனலால் என் வினைகளைக் களைந்து என்னை

கரையேற்றக் கூடாதா? அது போகட்டும். இமயமலைச் சாரலிலே தோகை விரித்தாடும் வண்ண மயிலாய் இருப்பவளே! "நீ என் அடிமை" என்று சொல்லி உன் திருவடியால் என் தலையில் முத்திரை பதித்து என்னை ஆட்கொண்டது பொய்யோ? என்று நெக்குருகிக் கேட்கிறார் அபயாம்பிகை பட்டர் அன்னையிடம். இது தான் பக்திப் பரவசத்தின் மேல் நிலை.

இதே கருத்தில் *"உடையாள் உன் தன் நடுவு இருக்கும்"* என்ற பாடலில் மாணிக்கவாசகரும் திருவாசகத்தில் (கோயில் மூத்த திருப்பகத்தில்) சொல்வதும் காண்க. அன்னையின் அருளாளர்கள் அனைவரும் தங்களை "அன்னையின் அடிமை" என்று சொல்வதில் ஆனந்தம் அடைவதை நாம் உணருகிறோம்.

20. பாமாலை பாட பதம் தருவாய் தாயே!

பாகு சேருங் மொழியணங்கே பணத்தை அணியுஞ் சதுர்த்தோளி
பாதி மதியுங் கதிரணியும் பரம ஞான வெளிச்சுடரே
ஆகும் பருவம் அறிந்தென்றன் ஆவி நாளும் உபயபதம்
அடுத்துக் கவிதைச் சரந்தொடுத்தே அமைந்து பொழிய வரம்தருவாய்

ஏகு மயக்கத் துட்டருடன் இனிதா எனைச் சேர்த் தகற்றாதே
இமவான் அளித்த திருமகளே எங்கும் நிறைந்த பெருவெளியே
வாகு பொருந்துங் கிருஷ்ணனது வரிசைத் துணைவி சுகவதனி
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

ஆசிரியர் அன்னையிடம், "உனக்கு எப்படி நன்றி தெரிவிப்பேன்" என்று சொல்ல, அன்னை அவரிடம், "செந்தமிழ்ப் பாவால் என் சிந்தையைக் குளிரச் செய், அதுவே போதும்" என்று அசரீரியாய் அறிவிக்க, அப்போது அவர், "தாயே நான் கல்வியறிவு அற்றவன். எங்ஙனம், எப்படி பாடமுடியும்?" என்று கேட்க, அன்னை அபயாம்பிகையே அவர் அகத்துள் நின்று "அபயாம்பிகை சதகத்தை" இயற்றினாள் என்பது தெரிய வருகிறது. என்னே அவரது பாக்யம்!

வெல்லப் பாகு போன்ற இனிய மொழி கொண்ட தெய்வப் பெண்ணே! பாம்பை அணிகலனாக அணிந்திருக்கும் அன்னையே! நான்கு தோள்களைக் கொண்ட நாயகியே! சந்திரனையும், சூரியனையும் ஆபரணங்களாக கொண்டவளே! பரவெளிக்கும் மேலே யாருக்கும் புலப்படாத ஞானச் சுடரே!

யமன் 'என்று வந்து' என்னை கூட்டிச் செல்வான் என்று எனக்குத் தெரியாது. ஆதலால் யான் இப்போதிலிருந்தே உனது திருவடிகளை அடைய பாமாலைத் தொடுக்க வரம் தருவாய்!

துஷ்டர்களின் சகவாசத்தை தவிர்த்து, நல்ல ஸத்சங்கத்தில் நான் சேர்ந்து உன்மீது தொடர்ந்து பாடல்களை இயற்றிக் கொண்டிருக்க வேண்டும். இந்த என்னுடைய வேண்டுகோள்களை நிறைவேற்றித் தர வேண்டும் தாயே! கிருஷ்ணனின் சகோதரியே! இனிய திருமேனியுடையவளே! இமவான் பெற்ற செல்வமாய் திகழும் திருமகளே! எங்கும் நிறைந்த பெருவெளியாய் இருப்பவளே! மயிலாபுரியில் வாழும் ஈசனின் வாழ்வாய் விளங்கும் அபயாம்பிகைத்தாயே என்று மனமுருகி அன்னையிடம் பிரார்த்திக்கின்றார் அபயாம்பிகை பட்டர்.

அன்னை பாம்பை அணிந்திருப்பது பக்தர்களின் பயத்தைப் போக்க. (துணைவர் சிவபெருமானைப் போல) அன்னை சூரிய சந்திரர்களை தன் செவிகளில் குழைகளாகவும், திருமுகத்தில் கண்களாகவும், திருமேனியில் மார்பகங்களாகவும் கொண் டுள்ளாள் என்பது சுருதிப் பிரமாணம். அபிராமி பட்டர் அன்னையின் திருவாய் மொழியை - பாலையும், தேனையும், பாகையும் போலும் பனிமொழியே என்று அபிராமி அந்தாதியில் (86) கூறுவார்.

21. போதும்! போதும்! இந்த மானிடப் பிறவி !

விதியின் முறைமை எத்தனை நாள் வினையிற் படுவ தெத்தனைநாள்
விசுவாசிக்கக் கொடுமைபல விளையும் பகையும் எத்தனை நாள்
அதிக வினையும் எத்தனைநாள் அற்ப வாழ்வும் எத்தனை நாள்
அதிலே குரோதித் திருப்பதெல்லாம் அழியும் வகையும் எந்நாளோ
பொதிகை மலையன் அரிஅயனும் புகழ்சேர் காமன் திசைப்பாலன்
போற்றும் உன்றன் இருசரணம் பொருந்தி மகிழ்வதெந்நாளோ
மதியைத் தரித்த முகில்வேணி மயிலே குயிலே வான்மணியே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

இம் மண்ணுலக வாழ்வில் பந்தங்களிலும், பாசங்களிலும் பற்று கொண்டு மனிதர்கள் மானிடப் பிறவியின் மெய்யான பலனை பாழடித்து விடுகிறோம். அன்னையின் திருவடிகளில் பற்று கொண்டு வாழ்ந்தால் இம்மையிலும், மறுமையிலும் சுகமாக வாழலாம். பிறவிக்கடலையும் தாண்டி விடலாம். திருவள்ளுவர் திருக்குறளில்(350) சொல்லும் அறிவுரையும் இதுதான்.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்

பற்றுக பற்று விடற்கு"

பொருள் - பற்றில்லாத இறைவனுடைய பற்றை மட்டும் பற்றிக் கொள்ள வேண்டும் அப்பற்றை பற்றி கொண்டால் உலகப் பற்று தானாக அகன்று விடவும்.

விதியின் வசத்தால் அறம், பாவம் என்ற வினையால் வந்த இவ்வாழ்வில் எத்தனை நாட்கள் அவஸ்தைப்படுவேனோ? வினைகளின் விளைவுகள் மிகுந்து நீண்ட வாழ்க்கையானாலும், குறைந்து குறுகிய காலமானாலும், முடிவு ஒரு நாள் வருவது நிச்சயம். இதையெல்லாம் அறியாத மனம் - வேண்டியவர்கள், வேண்டாதவர்கள், நண்பர்கள், பகைவர்கள், உற்றார், உறவினர் என்று பல பற்றுகளில் மயங்குகிறது. எனவே துக்கம், சுகம், காமம், குரோதம் என்பது எல்லாம் நிறைந்தது தான் இந்த வாழ்க்கை. முடிவில் இந்த வாழ்க்கை முடிவதும் நிச்சயம். இதை சீவர்கள் உணரவேண்டும்.

பின் இவற்றிலிருந்து விடுவட வழிதான் யாது? அதுதான் அன்னையின் திருவடிகளைப் பற்றுவது. நமக்கு வழி காட்டுவது போல மும்மூர்த்திகளான அயன், அரி, சிவன், அகத்தியர் போன்ற முனிவர்கள் மன்மதன் மற்றும் தேவர்கள், அஷ்ட திக்பாலர்கள் எல்லோரும் அன்னையின் திருவடிகளை எந்நேரமும் பற்றிப் போற்றி பணிந்து வணங்குகிறார்கள்.

அபயாம்பிகை பட்டர் இந்த மாய வாழ்வினின்று விடுபட்டு அன்னையின் திருவடிகளில் குழந்தை போல என்றுமே நிலையாய் கிடக்க நினைந்து பாடிய பாடலிது.

அபிராமி பட்டர் அபிராமி அந்தாதியில் (97) *"ஆதித்தன், அம்புலி, அங்கி, குபேரன், அமரர் தங்கோன், போதிற்பிரமன், புராரி, முராரி, பொதிய முனி, காதிப் பொரு படைக் கந்தன், கணபதி, காமன் முதல் சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே"* என்று அன்னையை வணங்கும் அன்பர்களின் பட்டியலை அழகாகச் சொல்கிறார்.

சந்திரனை மேகம் போன்ற கருங்கூந்தலில் அணிந்தவளே! மயிலே! குயிலே! வானிலே ஒளிவீசும் சூரியனாகத் திகழ்பவளே! மயிலாடுதுறையின் பெருமைமிகு மாயூரநாதருக்கு உயிராய் இருப்பவளே! உன் திருவடிகளை அடியேன் அடையும் நாள் எந்நாளோ என்று அபயாம்பிகை பட்டர் கேட்பது நம் நெஞ்சங்களை உருக்குகிறதன்றோ!

22. அனைத்தும் அளிப்பவள் அன்னைதானே!

சிந்தா மணியின் பூசைசெய்தால் செகத்தில் எவர்க்கும் குறைவருமோ
செல்வமுடனே கல்வி அருள் திரளாய் விளையும் என்பதெலாம்
முன்றா னான போதிலையே முதல்வி உன்றன் அருளுலகில்
மூழ்கிக் கனமாய் வினையிருளும் முறியப் படர்ந்து மறைந்ததுபோல்
இந்தா எனவே நீகொடுத்த இயல்பே யல்லால் மானிடரோ(டு)
ஏற்கை சேர்க்கை அவர்உரைத்த(து) ஏதாகினும் உண்டோ
உரையாய்
மைந்தா எனவே அமுதளித்த வகையை நீயும் மறந்தாயோ
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

இம்மண்ணுலகில் அனைத்து செல்வங்களும் தமக்கு கிட்டியது அன்னையின் அருளினால்தான் என்பதை அபயாம்பிகை பட்டர் மனமார உணர்ந்தவர். அதை உலகோர்க்கு புரியவைக்கும் வண்ணம் இயற்றிய பாடலிது. மனிதர்கள் தங்களுடைய மதிமயக்கத்தினால் தாங்கள் பெற்ற பொருட்களெல்லாம் தங்கள் முயற்சியினால் வந்தது என்று எண்ணுவர். இந்த எண்ணம் அறவே அழிந்திட அமைந்த அருமையான பாடல் இது.

மனம் நினைப்பதைத் தந்தருளும் ரத்னம் சிந்தாமணி. அன்னையின் இருப்பிடமோ முழுக்க, முழுக்க சிந்தாமணிகளால் அமையப் பெற்றது. அன்னையை *"சிந்தாமணி க்ருஹாந்தஸ்தா"* என்று (57) ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் சொல்லுகிறது. (முன்னும் பார்த்தோம்)

சிந்தாமணி மந்திரம் என்பது அன்னையின் மூல மந்திரம். இந்த மந்திரத்தினால் பூஜை செய்பவருக்கு ஏதேனும் குறை வருமோ? என்று கேள்வியாய்க் கேட்கிறார் ஆசிரியர். அதாவது சகல சௌபாக்கியங்களையும் பெறுவர். (தனம், கல்வி முதலியன எல்லாம்) மனிதர்கள் நினைக்கலாம்?! நம் சொந்த முயற்சியால் எல்லாம் கிடைத்தது என்று. அது தவறு. எல்லாம் அன்னையே அருளியது என்ற எண்ணம் வரவேண்டும். அவளின்றி அணுவும் அசையாது என்று உணரவேண்டும்.

அன்னை எல்லோருக்கும் முதல்வியானவள். அவள் அருளைப் பெற்றதினால் வினை என்னும் இருள் பறந்து ஓடியது போல, அடியார்களுக்கு, மனிதர்கள் ஏதாகிலும் (செல்வம், வளம், பெருவாழ்வு) கொடுத்தார்கள் என்பது உண்டோ? இல்லையே! அதாவது அன்னையின் அருளால்தான் நாம் இவ்வுலகில் எல்லாம் பெறுகிறோம் (இம்மையில்). பின்னர் (மறுமையில்) மோட்சத்தையும் அடைகிறோம் என்ற கருத்தை ஆணித்தரமாக அறைகிறார். அபயாம்பிகை பட்டர். என்னே அவரது தூய ஆழ்ந்த பக்தி!

பாட்டின் முடிவில் குழந்தை கூறுவது போல, "தாயில்லாப் பிள்ளையான அடியேன் பசியால் 'அம்மா' என்று குழந்தைப் பருவத்தில் அழுதபோது, 'மகனே' என்று ஓடோடி வந்து நீ அமுது அளித்ததை மறந்தாயோ ?" என்று அன்னையிடம் கேட்கிறார். அதாவது நீ மறந்தாலும், நான் மறக்கமாட்டேன் என்று சொல்லாமற் சொல்லுகிறார். அபிராமி பட்டரும், *"உன்னை யான் மறவாமல் நின்று ஏத்துவனே"*(25), *"மறுக்கும் தகைமைகள் செய்யினும் யான் உன்னை வாழ்த்துவனே"* (46) என்று அபிராமி அந்தாதியில் கூறுவது காண்க!

மயிலாபுரியில் வந்திப்பவருக்கு வரையிலா வரம் தரும் வள்ளலாய்த் திகழும் மாயூரநாதனின் உயிர்நாடியாய் விளங்கும் அபயாம்பிகைத்தாயே !

23. அன்னையே! எனக்கு எல்லாமானவள் நீயே!

வெகுநாட் பழைய அடிமையென மிகவுங் கனிந்தே அருள் அளித்து
வெளியைக் காட்டிக் களிப்புடனே விம்மி விழிநீர் சொரிந்தருளத்
தகுமெய்ஞ் ஞானச் சாரமெலாந் தந்தோம் தந்தோம் என்றுரைத்த
தாய்தான் மறந்தால் உலகில் இனித் தான்ஆர் பகைஆர் என்செய்கேன்
புகழ் நாரணியே உன்னைவிடப் பொருளும் அருளும் வேறுண்டோ
பொல்லாதவனே யானாலும் பிள்ளை இவனென் றருள்புரிவாய்
வகுத்த சேயைப் பால்கொடுத்து வளர்க்கா திருக்கும் தாய் உண்டோ
மயிலாபுரியில் வளர்சன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

அன்னையே நீதான் எனக்கு எல்லாம். நீ எனக்கு ஆதரவு தரவில்லை என்றால் அடியேன் அநாதையாகிவிடுவேன். உன்னையன்றி உற்ற துணை உண்டோ ? என்று அன்னையிடம் மனம் கசிந்து மன்றாடுகிறார் அபயாம்பிகை பட்டர்.

வெகு நாட்களுக்கு முன்னேயே அடியேனை அடிமையாக ஆட்கொண்டு மிக்க ப்ரியத்துடன் என்மேல் கருணையும் அருளும் பொழிந்து, எனக்கு பரவெளியை உணர்த்தினாய். கரையிலா களிப்புடன் என் விழிகளிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருகி வழிய எனக்கு மெய்ஞ்ஞானத்தின் ரசத்தை தந்தேன், தந்தேன் என்று உரைத்ததை மறந்து விட்ட தாயானால், இனி யான் என் செய்வேன் ? இனியவர் யார், பகைவர் யார் என்பதை எப்படி அறிவேன் ?

ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் (298) *நாராயணீ* - நாராயணீ எனப்படுபவள்! நாராயணீ என்பதே நாரணி என்று தமிழில் சொல்லப்படுகிறது. சீரும் சிறப்பும் பெற்ற யாவரும் புகழும் நாரணியே! பூவுலக இயக்கத்திற்கு ஓர் காரணியே! 'நா' என்ற சொல் ப்ரஹ்மத்தைக் குறிப்பது. அதனிடமிருந்து தோன்றியதனால் ஜலம் - 'நாரம்' எனப்படும். கடல் மீது (நீர்) துயில் கொள்ளுபவர் மகாவிஷ்னு. எனவே 'நாரணி' என்பது நாராயணன் சகோதரி என்றும் பொருள்படும். நாரணி என்பது 'விஷ்ணு துர்காவை'யும் குறிக்கும், நாராயணன் என்ற பதம் சிவனைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். அப்போது நாரணி என்பது சிவனின் சக்தி என்று பொருள்படும். இதன் தத்துவம் யாதெனில் சிவன், சக்தி, விஷ்ணு இவர்களில் பேதம் கிடையாது. சிவன் அர்த்தநாரீஸ்வரராகவும், சங்கர நாராயணனாக இருப்பதும் காண்க.

நான் பொல்லாதவன் தான். ஆனால் நான் உன் சேய் தானே? பெற்ற பிள்ளைக்கு தாய்ப்பால் கொடுத்து வளர்க்காத தாய் உலகில் உண்டோ? அன்னையே உனது அன்பர் தாயுமானவர் *"பொல்லாத சேயெனில் தாய் தள்ளல் நீதமோ? புகலிடம் பிறிதுமுண்டோ?"* என்று சொல்லுவதை மறந்து விட்டாயோ?

இப்பாடலில் அபயாம்பிகை பட்டர் உலகோர்க்கு உணர்த்தும் உன்னத நீதி, அன்னையின் அருள் இல்லாவிட்டால் அனைத்துயிர்களும் அநாதை யாகிவிடும். நாம் மட்டும் அல்ல, சிவனும் சக்தியினின்று பிரிந்தால் சவம் போல் ஆகிறான் என்று தேவீ பாகவதமும் சௌந்தர்யலஹரியும் சொல்வது காண்க.

24. அம்மா என்னைக் கரையேற்றி அருள் புரிவாய்!

சோத்ர வழியால் வருவினையும் தொக்கு வழியால் வருவினையும்
தொடருஞ் சட்சு வழியாலும் சொல்நா வுடனே ஆக்ராணம்
பார்த்த வழியிற் கரணமதைப் பற்றி உயிரைக் கலங்கடித்துப்
பண்ணும் வினையும் வெகுகோடி பாழ் போனதுவும் வெகுகோடி
ஆற்றில் கரைத்த புளியெனவே ஆயிற் றொருவர்க் குதவியின்றி
அடியேன் முன்னாள் ஒருவருக்கும் ஆகாதவனோ அதை இனித்தான்
மாற்ற வகையும் அறியாயோ வகுத்த எனையும் மறந்தாயே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

மண்ணில் பிறந்த மனிதர்கள் மனிதப் பிறவியின் மகிமையை மறந்து உலக விஷயங்களில் மனதைப் பறிகொடுத்து பின் இறுதிக் காலத்தில் வருந்துகின்றனர். இதை மனதிற் கொண்டு அபயாம்பிகை பட்டர் அன்னையிடம் ஒரு வேண்டுகோள் விடுக்கிறார். தன்னை முன்னிறுத்தி உலகிலுள்ள குறிக்கோளில்லா வாழ்வு வாழும் மனிதர்களுக்காக மனமுருகி செய்யும் பிரார்த்தனைப் பாடலிது.

தாயே! காதின் வழியாலும், தோல் வழியாகவும், கண் வழியாகவும், நாவின் வழியாலும், மூக்கின் வழியாலும் ஆக பஞ்ச இந்திரியங்கள் வழியாலும் சேருகின்ற வினைகள், மனம், சித்தம், புத்தி, அகங்காரம் என்னும் நான்கு அந்தக் கரணங்களைப் பற்றி உயிரைக் கலங்கடித்து செய்யும் வினைகளும் வெகு கோடி. எண்ணிலடங்கா.

இந்த வாழ்வை கடலில் கரைத்த பெருங்காயம் போல் ஒரு குறிக்கோளும் இல்லாது வாழ்ந்து வீணாக்கி விட்டேன். ஒருவருக்கும் ஒரு ஒத்தாசை செய்தது இல்லை. எவருக்கும் ஆகாதவனாய் விட்டேன். இனி இதை நீதான் மாற்ற வகை செய்ய வேண்டும். நீயே அனைவரையும் பெற்ற தாய். எனவே நீ மறக்காமல் என்னை மாற்றி என் வாழ்க்கையைத் திருத்தி அமைத்து என்னை கரையேற்றி அருள் புரிவாய்.

"நம்பினோர் கெடுவதில்லை, நான்கு மறை தீர்ப்பு" என்று சொல்வார்களே! உன்னையே நம்பி வந்தேன். அண்டி வந்தவருக்கு அடைக்கலம் தந்து அருள் புரியும் அபயாம்பிகைத் தாயே! அஞ்சல் நாயகியே! மயிலாடுதுறையில் பெருமைமிகு மாயூரநாதனுக்கு உயிராய் அமைந்த அபயாம்பிகைத் தாயே! அனைவருக்கும் அருள் புரிவாயாக!

இந்திரியங்களைக் கட்டுப்படுத்தி, மனதை ஒருமுகமாக அன்னையின் திருவடிகளில் நிறுத்தி வழிபட வேண்டும். இதுவே மனித வாழ்க்கையின் லட்சியமாகக் கொண்டு வாழ்பவருக்கு இம்மையிலும், மறுமையில் சுகானந்தம் உண்டாகும்.

அப்பரும் *"பாலனாய் கழிந்த நாளும் பனிமலர் கோதையர் மேலனாய் கழிந்த நாளும் மெலிவோடு மூப்பு வந்து கையில் கோலனாய் கழிந்த நாளும் குறிக்கோள் இல்லாது கெட்டேன்"* என்று சொல்வதும் காண்க.

அன்னையின் அருளாளர்கள் அனைவரும் உலக க்ஷேமத்திற்காக மற்றவர்களின் குற்றங்களை தம் மேல் ஏற்றி, அவர்களுக்காக அன்னையிடம் மனமுருகி பிரார்த்தனை செய்வதில் ஒருமித்த மனமுடையவர்கள்.

25. அன்னையே! பிறவா வரம் தருவாய் !

நாளோ வினையோ வீணாளோ நானா தொழிலுக் கானதுவே
நலஞ்சேர் நீட்டைக் குதவிவரும் நாழி யொன்றா யினும் இலையோ
சூளைக் குயவன் விதிவசத்தால் துக்க சுகமும் தொடர்ந்து வரத்
துன்மார்க் கத்தால் வந்ததென்றுஞ் சொல்வார் பாரில் சூழ்மனிதர்
வேளைக் கிசைந்த மொழிபேசி வினையிற் புகுந்த சுகம் போதும்
வினையை ஒழித்தே அமலசுக வெளியைப் பொருத்தி வினைப்பிறவி
மாளும்படி நீ அருள்புரிவாய் வாலாம்பிகையே வான்மணியே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

அன்னையினால் அளிக்கப் பெற்ற வாழ்நாள் எவ்வளவு விலை மதிப்பற்றது என்பதை மனிதர்கள் அறிவதில்லை, உணர்வதில்லை. நேரம் என்பது நிற்காமல் ஓடிக் கொண்டே இருக்கும். கடந்த கணம் திரும்பி வருவதில்லை. இழந்த பொருளை மீண்டும் பெறலாம். கடந்த நாளை மீண்டும் பெற முடியாது. திருவள்ளுவர், திருக்குறளில் (334)

"நாள்என ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்

வாளது உணர்வார்ப் பெறின்" என்று வெகு அருமையாகக் காலத்தின் அவசியத்தை எல்லோருக்கும் உணர்த்துகிறார். *இதன் பொருள்* - மரத்தை அறுக்கும் தச்சன் வாளினால் மரத்தை அறுக்கும்போது மரம் அறுபட்டு அதன் அளவு குறைவது போல், நாள் என்னும் வாளால் "ஆயுள்" சிறிது சிறிதாகக் குறைகிறது. மனிதர்கள் பலவிதமான விஷயங்களுக்கு நேரத்தை செலவிடுகிறோம். ஆனால் அன்னையை அர்ச்சிக்க ஒரு கணநேரம் கூட ஒதுக்குவதில்லை. இதை நினைத்து வருந்துகிறார் அபயாம்பிகை பட்டர்.

பிரம்மா நம் முந்தைய பிறவிகளின் வினைக்கேற்ப நம்மைப் படைக்கிறான். வினைக்கேற்ப சுகம், துக்கம், இரண்டும் ஏற்படுகிறது. இவற்றில் ஈடுபாடு கொள்ளாது, அன்னையின் திருவடிகளின் மேல் நமது மனதைத் திருப்ப வேண்டும். அதாவது, "பிறந்தால் அழிவு உண்டு. அழிந்தால் பின்னும் பிறவி உண்டு. பிறவாமல் செய்! (அல்லது) இறவாமல் செய்!" என்கிறார் அபயாம்பிகை பட்டர்.

அப்போது நீ என்னை மலங்களற்ற சுகானந்த பரவெளியில் பொருத்திவிடுவாய்! வாலாம்பிகையாகக் காட்சி தருபவளே! வானத்தில் மணியாய்த் திகழ்பவளே! மயிலாபுரியில் ஈசனுக்கே வாழ்வளிக்கும் அபயாம்பிகைத்தாயே! அனைவருக்கும் அருள் புரிவாயே! வாலை என்றால் இளம்பெண் என்று பொருள்படும். இங்கு வாலாம்பிகை என்பது அன்னை யின் பல திருக்கோலங்களில் ஒன்றான பாலாம்பிகையைக் குறிக்கும்.

26. அன்னையே - ஸ்ரீ சக்கரத்தின் நாயகியே!

எந்தன் நினைப்பும் இனிக்கடந்தே ஏக வெளியின் நிலைதொடர்ந்தே
இரவும் பகலும் அற்றஇடம் இனிதாகிய பேரொளிவிளக்கே
சந்திக் கரையின் முடிவேற்றித் தனையுந் தலைவன் அடிசேர்த்துச்
சாட்சாத் கார பூரணமாய்ச் சர்வா னந்த மாயிருக்க
உந்தன் இருதாள் மலர்க்கருணை ஒளிசேர்க் கனகக் கிரிமுடிமேல்
உதித்தாய் எனது வினையறவும் உமையே இமையோர்க் கரசான
மந்த்ரக் கலைச்சி நவகோணம் வாழும் யோக நாயகியே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

அபயாம்பிகை பட்டர் ஒரு சிறந்த ஸ்ரீவித்யா உபாசகர். ஸ்ரீசக்கர பூஜையை அவர் தவறாது செய்து வந்த அனுபூதிமான் என்று இச்சதகத்தின் பாடல்களைப் படிக்கும் போது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது.

அடியேனுடைய மனம் நாசமடைந்து உன்னிடம் லயமாகி விடவேண்டும். இரவும் பகலும் அற்ற வெளியை உன் தயையினால் எனக்கு காண் பித்தருள்வாய். அந்நிலையில் உன்னுடைய பேரொளி தான் புலப்படும், இதைத்தான் ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமத்தில் (806) *பரஞ்ஜ்யோதி* என்று சொல்லப் படுகிறது. இதன் பொருள் - பேரொளியாக இருப்பவள். கடோபநிஷத்தில்,

"ந தத்ர ஸுர்யோ பாதி ந சந்த்ரதாரகம் நேமா
வித்யுதோ பாந்தி குதோऽயமக்னி: |
தமேவ பாந்தமனுபாதி ஸர்வம் தஸ்ய
பாஸா ஸர்வமிதம் விபாதி || என்று சொல்லப்படுகிறது

இதன் பொருள் - சூரியன் அங்கு பிரகாசிப்பதில்லை. சந்திரனும் நட்சத்திரங்களும், மின்னல்களும் அங்கு ஒளிர்வதில்லை. இனி, இந்த நெருப்பு எப்படி பிரகாசிக்கும்? பிரம்மத்தைச் சார்ந்து யாவும் பிரகாசிக்கின்றன. அதன் பிரகாசத்தினின்று இவை யாவுக்கும் வெளிச்சம் வருகிறது.

சந்திக் கரை என்பது "ஆக்ஞை"யைக் குறிக்கும். அதாவது, புருவநடு. குண்டலினி சக்தியை எழுப்பி ஆக்ஞையில் சேர்த்து அங்கிருந்து மின்னல் போன்று அது உச்சியில் இருக்கும் ஸஹஸ்ரதளத்தை அடையும் (சிவனுடன் ஒன்றும் போது) நிலையில் அமுதமாகின்றது. இந்த அமுதமே நமது உடலின் 72,000 நாடிகளையும் நனைக்கும் பட்சத்தில் சாதகனுக்கு அம்ருதத்வத்தை அளிக்கின்றது. இதைத்தான் அபயாம்பிகை பட்டர்

சாட்சாத்கார பூரணமாய் சர்வானந்த நிலை என்று குறிப்பிடுகிறார். இந்த நிலையை எனக்கு அருள்வாயாக என்று அன்னையிடம் வேண்டுகிறார்.

பொன் மயமான இமயமலை உச்சியில் உதிப்பவளே! உமையன்னையே! தேவர்களின் தலைவியே! மந்த்ரங்களின் மூலப் பொருளாய் விளங்குபவளே! ஸ்ரீ சக்கரத்தை உறைவிடமாய்க் கொண்டவளே! யோகத்தின் நாயகியே! உனது திருவடிகளை அடைய அருள் புரிவாய்! மயிலாபுரியில் மகிமைமிகு மாயூரநாதனின் உயிராய் விளங்கும் அபயாம்பிகைத் தாயே!

அபிராமி பட்டரும் அபிராமி அந்தாதியில் (19) *"ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே"* என்பார். அபிராமி பட்டரும் ஒரு சிறந்த ஸ்ரீவித்யா உபாசகர்.

27. அன்னையை காமாட்சியின் கோலத்தில் காண்கிறார் !

காமக் கிரி பீடத்தழகி கனக சபையில் நடனமாடும்
காத்யாயனியே கவுமாரி காமேஸ்வரியே ஈஸ்வரியே
பூமி தேவி நான்முகவன் புனித மனைவி இந்த்ராணி
புகழ் நாரணியும் தினம்பணியும் பூர்ண கலையே கதிமுதலே
சோமன் உதய மணிநுதலே சுருதி ஞான முடிமுதலே
துவாத சாந்த நிலையாளே சுகமே ஞான மணிவிளக்கே
வாம நயனி அதிரூபி வனசா கினியே மாமணியே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

அன்னையின் அன்பர்கள் அன்னையை பல கோலங்களில் காண்பதில் பரமானந்தம் கொள்பவர்கள். அன்பர்கள் தாய்மார்களாக மாறி, அன்னையை சேயாகப் பாவித்து அலங்காரங்கள் பல செய்து, ஆபரணங்களை அணிவித்து மட்டற்ற மகிழ்ச்சியடைவார்கள். அபயாம்பிகை பட்டரும் அதே நிலையில் இருப்பதை இப்பாடலில் காண்கிறோம்.

அன்னை, காஞ்சி காம கோட்டத்தில் காமாட்சியாக, சிறப்புமிக்க பேரரசியாக, பாசாங்குசம், மலர்க்கணைகள், கரும்பு வில் இவற்றைத் தாங்கி வீற்றிருக்கிறாள்.

"ஸுதாஸாகர மத்யஸ்த்தா காமாக்ஷீ காமதாயினி" என்று ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் (61,62,63) அன்னையை அற்புதமாகச் சொல்கிறது. அம்ருத கடலின் நடுவிலிருக்கும் காமாக்ஷீ நாம் விரும்பியவற்றை எல்லாம் அளிக்கும்

கருணை மிகுந்த அன்னை. மேலும் ஒரு பொருள் - அன்பர்கள் காமேச்வரரை அடைந்து அவராயிருக்கும் தன்மையைக் கொடுப்பவள். சிவனை அடைய சக்திதான் வழிகாட்ட வேண்டும்.

தில்லையில் (சிதம்பரத்தில் - பொன் சபையில்) நடேசருக்கு அனுசரணையாக அன்னையும் நடனம் ஆடுகிறாள். (734. *நடேச்வரீ*) கதர் என்ற ரிஷியின் மகளாய் அன்னை தோன்றியதால் காத்யாயனீ என்ற பெயர். (556. *காத்யாயினீ*) ஸகல தேவதைகளுடைய தேஜஸ்ஸின் சேர்க்கையால் ஏற்பட்ட ரூபம் காத்யாயினீ என்று வாமன புராணம் கூறுகிறது. இவள் ஒட்டியாண பீடத்தின் அபிமான தேவதை என்று காளிகா புராணம் பகருகிறது. கோபிகள் மார்கழி மாதத்தில் காத்யாயினியை வழிபட்டு கிருஷ்ணனை பதியாக அடைந்தார்கள். துர்க்கையின் ஒன்பது பெயர்களில் காத்யாயினீ ஆறாவதாக வருகிறது. ஆண்டாளும் மார்கழி மாதத்தில் விரதமிருந்து, காத்யாயினீ பூஜை செய்து தாமரைக் கண்ணனைத் திருமணம் செய்து கொண்டவள். மேலும் காத்யாயினீ என்ற பெயர் மருவி காத்தாயீ என்று வருவதும் காண்க. துர்க்கா ஸூக்தத்தில், *"காத்யாயநாய வித்மஹே கன்யகுமாரி தீமஹி । தந்நோ துர்க்கி: ப்ரசோதயாத் ॥"* என்று இறுதியில் சொல்லப்படுகிறது.

கவுமாரி என்றால் என்றுமே யௌவனமாக இருப்பவள். (358. *தருணீ* - எப்பொழுதும் யுவதியாக இருப்பவள்). சப்த மாதாக்களில் ஒருவர். காமேஸ்வரனின் பத்தினியாய், எல்லாவற்றிற்கும் ஈஸ்வரியான காமேஸ்வரியும் ஆனவள்.பூமி தேவியும், பிரம்மனின் மனைவி சரஸ்வதியும், இந்திராணியால் புகழப்படும் நாரணியும் தினம் உன்னைப் பணிகிறார்கள். பூர்ணமாகி, கலைகளுக்கு முதலாய் இருப்பவளே! சந்திரனைத் தரித்த அழகிய நெற்றியையுடையவளே! ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமத்தில் (15) *அஷ்டமீசந்த்ர - விப்ராஜ - தலிக - ஸ்தல - சோபிதா* என்று வருகிறது. அதாவது அன்னை அஷ்டமிச் சந்திரன் (அரைவட்டம்) போல் விளங்கும் நெற்றியுடையவள். ஸௌந்தர்யலஹரியில் "வெண்ணிலவு போன்ற அழகுடன் உன்னுடைய நெற்றியானது பிரகாசிக்கிறது" என்று அன்னையை மிக அழகாக கவிநயத்துடன் புகழ்கிறார் ஆதிசங்கரர்.

துவாதசாந்தப் பெருவெளியை இருப்பிடமாகக் கொண்டு பரமானந்தத்தை அருளுபவளே! வேதங்களின் ஞானபாகமாக விளங்கும் உபநிஷத்துக்களின் முடிவாயும் முதலாயும் இருப்பவளே! அபிராமி பட்டர் அபிராமி அந்தாதியில் (11) *"ஆனந்தமாய் என் அறிவாய் நிறைந்த அமுதமுமாய் வானந்தமான வடிவுடையாள் மறை நான்கினுக்கும் தானந்தமான சரணாரவிந்தம் ...."* என்றும், பின்னர், *"அருமறைக்கு முன்னாய், நடுவெங்குமாய், முடிவாய முதல்வி"* (55) என்றும் சொல்வார்.

மறைகளில் சொல்லிய வண்ணம் ஞானத்தை அருளும் மணிவிளக்கே! சுகத்தைத் தரும் இனியவளே! அழகிய கண்களை உடைய அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லியே! கதம்ப வனத்தில் இன்னிசை பாடும் குயிலே! மயிலாபுரியில் வீற்றிருக்கும் பெருமைமிகு மாயூரநாதனின் உயிராய் விளங்குபவளே! அடுத்தோருக்கு அபயம் தந்தருளும் அபயாம்பிகைத்தாயே! அனைவரையும் காத்து ரட்சிப்பாயாக.

அன்னையின் மேல் இயற்றிய எல்லா நூல்களும் அன்னையின் திருவிழிகளின் அழகையும் (ஸ்தூலம்), அவற்றின் கடாக்ஷத்தையும், சிலாகித்துச் சொல்கிறது. *'வாம நயனி'* என்பது ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமத்தில் (332) *"வாம நயனா"* என்று சொல்லப்படுகிறது - அழகான கண்களை உடையவள் என்று பொருள் படும். மேலும் காமாட்சி, மீனாட்சி, ம்ருகாக்ஷீ என்ற திருநாமாக்களும் அன்னையின் கண்களின் அழகையும், கருணையும், கடாக்ஷத்தையும் குறிப்பதே. 60. *கதம்ப வனவாஸினி* - அன்னையின் இருப்பிடமான சிந்தாமணிக்கிருகத்தைச் சுற்றி மணிமண்டபம். அதைச் சுற்றிக் கதம்பவனம். மதுரையையும் கதம்பவனம் என்று கூறுவர். அங்கு மீனாக்ஷியாக உறைபவள் மந்த்ரிணீ என்ற மஹாசியாமளா. அபிராமி பட்டரும், *"குயிலாய் இருக்கும் கடம் பாடவியிடைக் கோல இயல் மயிலாய் இருக்கும் இமயாசலத்திடை"* என்று அபிராமி அந்தாதியில் (99) கூறுவதும் காண்க. அதிலேயே, "உழையைப் பொரு (மான் போன்ற) கண்ணும் நெஞ்சில் எப்போதும் உதிக்கின்றவே" என்பார். அதாவது அன்னையின் கண்கள் அவருடைய நெஞ்சில் எப்போதும் நிலைத்து நிற்கிறதாம்! என்னே அவர் பக்தி!

28. அன்னையின் பாதாரவிந்தங்களில் பெருகும் அமுதம்!

மூலத் துதிக்கும் ஞாயிறுமாய் முளரி யிதழ்வாய்ச் சதுர்முகனாய்
மூல வுந்தித் திருமாலாய் மூளுங் கால காலனுமாய்
மேலுற் றருளுஞ் சதாசிவனும் விரியும் இதழோன் றருள்பரையும்
வித்தா ரமுமாய் உலகனைத்தும் விரிவாய் நின்ற விரிசுடரே
ஞாலத் தமைந்த இருபதமும் நடனச் சிலம்பும் கிண்கிணியும்
நணுகிப் பெருகும் இந்துநதி ஞான நதியாம் பரமநதி
மாலற் றவர்க்கும் உதவிநிற்கும் மதுர வசனி நவசரணி
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

அன்னையின் பல்வேறு இருப்பிடங்களை எண்ணிப் பெருமிதம் அடைகிறார் அபயாம்பிகை பட்டர்.

காலையில் உதிக்கும் சூரியனாகவும், தாமரையில் வாழும் நான்கு முகங்கள் கொண்ட பிரம்மனுமாகவும், பாற் கடலில் பள்ளி கொண்டிருக்கும் திருமாலாகவும், காலனுக்கு காலனாய் விளங்கும் ஈஸ்வரனுமாகவும், ஸஹஸ்ராரத்தில் ஆயிரம் இதழ்கள் கொண்ட பொற்றாமரை மீது சதா சிவனுடன் பரந்த பொருளாய், அருட் சக்தியாகவும் அன்னை புன்முறுவல் பூத்தவாறு அமர்ந்திருக்கிறார். இப்பாடல் அபிராமி அந்தாதியில் வரும் 34-வது பாடலை நினைவூட்டுகிறது.

"வந்தே சரணம் புகும் அடியாருக்கு வான் உலகம்
தந்தே பரிவோடு தான் போய் இருக்கும் சதுர்முகமும்
பைந்தேன் அலங்கல் பருமணி ஆகமும் பாகமும் பொற்
செந்தேன் மலரும் அலர்கதிர் ஞாயிறும் திங்களுமே".

அடுத்து அன்னையின் பாதார விந்தங்களின் பெருமையையும், மகிமையையும் பற்றி வர்ணிக்கிறார். அன்னை தனது திருப்பாதங்களில் ஒலிக்கும் கிண்கிணிகளுடன், இரத்தினப் பரல்கள் கொண்ட சிலம்புகளை அணிந்திருக்கிறார். அத்திருப்பாதங்களிலிருந்து மதியமுதம் பெருகி வழிகின்றது. இதை ஆசிரியர் "இந்து நதி, ஞான நதியாம் பரம நதி" என்று அற்புதமாக கவிநயத்துடன் சொல்லுகிறார். அதாவது சந்திர மண்டலத்தி லிருந்து பெருகும் மேலான. ஞானமான அமுத ஆறு என்று பொருள்படும். உலக மாயையிலிருந்து விடுபட்ட சீவர்களுக்கு மேலான முக்தி தரும் அமுதம் இது.

மதுர வசனி - இனிமை மிகு சொல்லுடையவள். அபிராமி பட்டர், "பண்ணளிக்கும் சொல் பரிமள யாமளைப் பைங்கிளியே" என்றும், "கடம்பாடவியில் பண்களிக்கும் குரல் வீணையும்" என்றும் அபிராமி அந்தாதியில் சொல்வார். அன்னையின் திருவாய் மொழி தேனிலும் இனிது. அன்னையின் இனிய குரல் வீணையின் நாதத்தையும் வென்றது என்று ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமமும், ஸௌந்தர்யலஹரியும் சொல்கின்றன. (27. *நிஜ ஸல்லாப - மாதுர்ய - விநிர்பர்த்ஸித - கச்சபீ*)

நவசரணி - அன்னையின் தாமரைத் திருவடிகள் அன்றலர்ந்த மலர்களைப் போல புதுமையுடனும், பொலிவுடனும் விளங்குவது (முன்னும் பதிமூன்றாம் பாடலில் பார்த்தோம்).

மயிலாடுதுறையில் வந்தவர்களுக்கு வரம் தரும் வள்ளலாய் விளங்கும் மாயூரநாதனின் உயிர்நாடியாய்த் திகழும் அபயாம்பிகைத் தாயே! அனைவருக்கும் அருள்புரிவாயே!

29. அன்னையே ! எப்போது என் மனக்கலக்கம் தீரும்?

ஏன்றான் மயக்கத் திருவினையும் மிடியும் வகையும் போதாதோ
ஏழை தனையே பகைப்பவர்கள் இருமா நிலத்திற் சலுகையுண்டாய்
நான்றான் பெரியன் என்றுரைத்த நாவும் வாயும் அடைத்தெமனார்
நகரிற் பயண மாகிவர நடத்தாய் கருணைச் சுடர்விளக்கே
தான்றான் செய்த வினைமுழுதும் தனக்கே யன்றி மனக்கவலை
தன்னாற் போமோ என்மனத்துத் தளர்ந்து புழுங்கும் என்செய்கேன்
வான்றான் பரவுந் திரிபுரையே மௌனா தீத மலர்க்கொடியே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

மண்ணுலக வாழ்க்கையில் மீண்டும் மீண்டும் வரும் இன்ப துன்பங்களால் மனம் வேதனையுற்று கலங்கும். பொய்யை மெய் என்று எண்ணி அதில் உழலுகிறோம். ஏன்தான் இந்த மனித வாழ்வினைத் தந்தாயோ? என்று வருத்தப்பட்டு, சீக்கிரம் உன் திருவடிகளில் என்னைச் சேர்த்துவிடு என்று அபயாம்பிகை பட்டர் சொல்லாமற் சொல்லும் பாடல்.

இந்த மயக்கமான மானிட வாழ்க்கையில் சிற்றின்பங்களைத் தேடிச் சென்று இறுதியில் பசி, பிணி போன்ற இன்னல்களில் சிக்கி அவஸ்தைப் படுகிறோம். இப்படிப்பட்ட அவல வாழ்க்கையில், சிலர் ஏழைகளைத் தாழ்த்தி, "நான் பணக்காரன், பலமுள்ளவன், அதிகாரமுள்ளவன்" என்ற சொல்லித் திரிபவர்களை நாவும், வாயும் அடக்கச் செய்து, அவர்களை எமலோகத்திற்கு அனுப்பிவித்து அருள் புரிவாய்! கருணைச் சுடர் விளக்கே!

அவரவர்கள் செய்த அறம், பாவம் என்ற வினையால் வரும் விளைவுகளை யாராய் இருந்தாலும் அனுபவித்த ஆக வேண்டுமன்றோ? இதனால் மனக்கவலை பெற்று தளர்வதில் யாதொரு பயனுமில்லை. இருந்தாலும் இந்த மனக்கலக்கம் என்று போகும் என்ற மனக்கவலையினால் நான் புழுங்கித் தவிக்கிறேன். தாயே, நான் என் செய்வது? திருவள்ளுவர், "தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு அல்லால் மனக்கவலை மாற்றல் அரிது" என்பார். அதாவது, தனக்கு நிகரில்லாத இறைவனது திருவடியைச் சேர்ந்தவர்க்கு அல்லாது மற்றையோர்க்கு மனக் கவலையை நீக்குதல் இயலாது.

பராகாச வெளியிலே பரந்து எங்கும் வியாபித்து இருக்கும் திரிபுரசுந்தரியே! மோனநிலை கடந்த இடத்தில் முளைத்த மலர்க்கொடி போன்றவளே!

30. தாயே! என் கனவு நனவாகும் நாள் என்று?

கள்ள மயக்கந் தொடராமல் கவலைப் பிணிகள் அடராமல்
கனவை நனவாய்த் தொடர்ந்தடர்ந்து கரைய விழியின் புனலாறாய்த்
துள்ளி மனந்தான் மிகச்சலனந் தொடுத்துத் தொடுத்தே அலையாமல்
சுகமாய் உன்றன் இருபதத்தைத் தொண்டன் மனத்துட் கொண்டருள்வாய்
உள்ளபடியே மனத்தடத்தில் ஒன்றாய் வாழுங் கனியமுதே
ஓங்காரத்துக் குள்ளிருந்தே உயர்ந்த கமலா சனத்தரசே
வள்ளல் இடத்தி அருள்மயத்தி வனச முகத்தி கனகசத்தி
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

அபயாம்பிகை பட்டர் சென்ற பாடலில் மானிட வாழ்வின் மயக்கத்தால் ஏற்படும் மனக்கவலைகளெல்லாம் போகும் வழி தெரியாமல் புழுங்கித் தவிக்கிறேன் என்று அன்னையிடம் மிக்க மனம் வருந்தி தன் இயலாமையைத் தெரிவித்தார். அதைத் தொடர்ந்து இப்பாடலில் உன் அன்பிற்கும், அருளிற்கும் பாத்திரமாக எண்ணி ஸதா ஸர்வ காலமும் உன் நினைவிலேயே இருக்குமாறு என் மனத்தை பக்குவப்படுத்தி வருகிறேன். இந்த நிலை நனவையும் (விழிப்பையும்) கடந்து கனவிலும் தொடருகிறது. என்னை உன் அடிமையாக ஆட்கொண்டு உன் இரு திருவடி தீட்சை எனக்கு அருளுவாய் என்பதே உன் கருணையால் வரும் கனவாய் நான் காண்கிறேன்.

மேற்கூறிய கனவில் வரும் காட்சி என் மெய்யை புளகாங்கிதம் அடையச் செய்து, விழிகளிலிருந்து கண்ணீர் ஆறாய் வழிந்தோட என் உடல் நனைந்து உள்ளமும் பரவசப்படுகிறது. தாயே இந்தக் கனவு எப்போது நனவாகும்? நிழல் எப்போது நிஜமாகும்?

சிற்றின்பங்களில் மனம் அலைந்து திரியாமல், சலனமடையாமல் நித்ய, நிரந்தர இன்பத்துடன் உனது இரு திருவடிகளையும் உனது தொண்டனான அடியேன் மனத்தாமரையில் பதித்து ஆட்கொள்வாய்! வெண்தாமரை மேல் இருக்கும் அன்னையே, நீ வெள்ளை உள்ளம் கொண்ட அடியார்களின் மனத்தாமரையில் விரும்பி வந்து ஆனந்தமாக வீற்றிருப்பவள் அன்றோ!

அபிராமிபட்டர், "வருந்தாவகை என்மனத் தாமரையினில் வந்து புகுந்து இருந்தாள் பழைய இருப்பிடமாக" என்று வெக அழகாக அபிராமி அந்தாதியில் (90) சொல்லுகிறார்.

மூலாதாரத்தில் முடங்கிக் கிடக்கும் குண்டலினீ சக்தியை எழுப்பி ஸஹஸ்ராரத்தில் சதாசிவனுடன் சேர்ப்பதே சாக்த சமயத்தின் அடிப்படைக் கொள்கை. இதை யோகத்தினாலோ, பக்தியினாலோ நிறைவேற்றலாம். அதாவது ஓங்கார பீடமான மூலாதாரத்தில் தோன்றி, மற்ற ஆதாரங்களைக் கடந்து எல்லாவற்றிற்கும் மேலான, உயர்ந்த ஸஹஸ்ரார பொற் தாமரையில் (ஆயிரம் இதழ்கள் கொண்ட) சதாசிவனின் இடப்பாகத்தில் அமர்ந்து இருப்பாள் அன்னை. அவள் அருளே வடிவானவள். தாமரை போன்ற திருமுகத்தை உடையவள். பொன் போன்ற திருமேனியை உடையவள்.

"வள்ளல் இடத்தி" என்பது சிவபெருமானின் இடப் பாகத்தில் வீற்றிருக்கும் அன்னையைக் குறித்து. மயிலாடுதுறையில் வீற்றிருக்கும் ஈசனுக்கு "வள்ளலார்" என்ற திருநாமமும் உண்டு. சிவபெருமான் தன்னை அண்டி வருபவர்களுக்கு வரங்களைத் தருவதில் வள்ளல் அன்றோ!

மயிலாபுரியில் பெருமைமிகு மாயூரநாதனின் உயிர்நாடியே. அபயம் தந்து அருள் புரியும் அபயாம்பிகைத்தாயே!

31. அன்னையே! உனது கடைக்கண் பார்வை எப்போது என் மீது அருளுவாய்?

பெரியோர் எவரைப் பழித்தேனோ பிரம தவத்தை அழித்தேனோ
பெற்ற தாயார் பசித்திருக்கப் பேணி வயிற்றை வளர்த்தேனோ
அரிய தவத்தோர்க் கிடைஞ்சல்செய்தே அற்பரிடத்தில் சேர்ந்தேனோ
அறியாமையினால் என்ன குற்றம் ஆர்க்குச் செய்தே
னோஅறியேன்
கரிய வினைதான் எனதறிவைக் கலங்க வடித்து முடிச்சதையுங்
கரைக்க வுன்றன் கருணையினால் கடாக்ஷம் பொருந்த அருள்புரிவாய்
வரிவில் புருவ மடமானே வதனாம்புய வாலாம்பிகையே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

இவ்வுலகத்தில் நல்லவர்கள் கஷ்டங்களைத் தாங்கள் அனுபவிக்கும் போது மற்றவர்களையோ அல்லது தெய்வத்தையோ நிந்திக்க மாட்டார்கள். இதெல்லாம் முன் செய்வினைகளினால் வந்த விளைவுகள் என்று உணர்ந்து

தெய்வத்தின் கருணையைக் கோருவர். அபயாம்பிகை பட்டர் முற்றும் துறந்தவர். மகாயோகி. சிறந்த ஞானி. தான் படும் இன்னல்களுக்குத் தானே காரணம் என்று அறிந்துணர்ந்தவர். இவற்றிலிருந்து மீள்வதற்கு ஒரே ஒரு வழிதான் உள்ளது என்று அவருக்குத் தெரியும். அதுதான் அன்னையின் கடைக்கண் பார்வை.

அம்மா! முந்தைய பிறவிகளில் செய்த வினையினால் வந்த விளைவுகளை இப்பிறவியில் அனுபவித்துத்தான் ஆகவேண்டும். இதற்கு யாரும் விதி விலக்கல்ல என்பதை நன்கு அறிவேன்.

அடியேன் என்னென்ன பாபங்களைச் செய்தேன் என்று தெரியாது. பெரியோர்களை பழித்தேனோ? அந்தணர்கள் செய்த தவத்தை அழித்தேனோ? பெற்ற தாயார் பட்டினி கிடக்க நான் மட்டும் நன்றாக உண்டு என் வயிற்றைப் பேணி வளர்த்தேனோ? மாபெரும் தவங்கள் செய்வோர்க்கு இடைஞ்சல்கள் செய்து அற்பர்கள் கூட்டத்தில் சேர்ந்தேனோ? அறியாமை யினால் யாருக்கு என்ன குற்றம் செய்தேனோ? அம்மா அடியேன் அறியேன். பிராப்த கர்ம வினையால் வந்த பாப மூட்டையைக் கரைக்க வழி தெரியாமல் கலங்கித் தவிக்கிறேன் தாயே.

உன் திருவருட்பார்வை அடியேன் மேல் விழுந்தால் மட்டுமே என் வினை முடிச்சைக் கரைக்க முடியும். ஆசிரியர் இங்கு 'கரிய வினை' என்று குறிப்பிட்டது - அறியாமையினால் விளைந்த தீவினை (அறியாமையின் நிறம் கருமையென்பது மரபு. முடிச்சு-வினைக்கூட்டம்) உன் கருணைக் கடாக்ஷத்தால் தான் அடியேன் அனுபவிக்கும் இன்னல் எல்லாம் தீர வேண்டும்.

தாமரைப் போன்ற அழகிய திருமுகத்தினையுடைய அபயாம்பிகையே! வில்லை போன்ற புருவமுடையவளே! புருவங்கள் பற்றி திருமூலரும் *"கொலை விற் புருவத்தாள்"* (திருமந்திரம் - 1050) என்பார். ஆதிசங்கரர் அன்னையின் புருவத்தை மன்மதனுடைய வில்லாகத் தியானிப்பதால். "காம ஜெயம்" ஏற்படும் என்று உலகோர்க்கு உணர்த்துகிறார்.

அபயாம்பிகை பட்டர் இங்கு அன்னை அபயாம்பிகையை வாலாம்பிகையாக வர்ணிப்பதைக் காண்க.

32. தாயே! நான் உன் சேய்! என் மீது சினம் கொள்ளலாகுமோ ?

கனத்த மலையை எடுத்தனுவாய்க் காலால் ஊன்றி மீதுவைத்தால்
கால்தான் தாங்க வசமாமோ கருணைநிதியே இனிஉனது
சினத்தை மகன்மேற் பொருத்திநின்றால் சிறியேன் பொறுத்து நிலைப்பேனோ
சிவையே உனது தயவுவரச் செய்வாய் இனி அஞ் சுகஇனமே
தொனித்த மறையின் முடிவிளக்கே சோதி வதனச் சுடரொளியே
சுத்த வியோம மண்டலத்தில் சுகமாய் வளரும் துரந்தரியே
மனத்துள் அழுக்கை அகற்றிஉன்றன் மலர்ப் பாதமதில் சேர்த்தருள்வாய்
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

தாயே நான் நல்ல பிள்ளை இல்லை தான். இருந்தாலும் மகன் மீது தாய் சினம் கொள்வதில்லையே! என்னைத் திருத்தி எனக்கு நற்கதியருளி என்னை ஆட்கொள்வாய் என்று மிக்க வினயத்துடன் அன்னையிடம் விண்ணப்பிக்கிறார் அபயாம்பிகை பட்டர்.

மலையைத் தூக்கி தலைமேல் வைத்தால் ஊன்றி நிற்கும் கால்கள் தாங்குமோ? அடியேன் அறிந்தோ அறியாமல் தவறுகள் செய்திருக்கலாம். மகன் தவறு செய்தால் தாய் கோபப்படுவது நியாயம் தான். ஆனால் அக்கோபத்தை மகன் மீது காட்டினால், அவன் தாங்க மாட்டான் என்று உணர்ந்து அந்தத் தாயானவள் கோபத்தை அடக்கி பொறுமையுடன் இருப்பாள் அன்றோ! என் அருமைத் தாயான நீ கோபித்தால் அதை என்னால் தாங்க முடியுமா? பரசுராமர் தன் தாயின் சிரஸை சேதித்தபோதும், தாய் ரேணுகாதேவி மன்னிக்கவில்லையா!

அழகிய கிளி போன்றவளே! கருணையின் இருப்பிடமே! கருணாநிதியே! சிவபெருமானையே ஆட்டிப் படைக்கும் சிவையே! (சிவை என்பது சிவனின் மனைவி என்று பொருள்படும்) அபிராமி பட்டர், *"விழியால் மதனை அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை அண்டமெல்லாம் பழிக்கும் படியொரு பாகம் கொண்டாளும் பராபரையே"* என்று அபிராமி அந்தாதியில் (87) அன்னை சிவபெருமான் இடப்பாகத்தை பறித்து அவனையே ஆளும் மேலான தெய்வம் என்று பெருமிதத்துடன் கூறுகிறார். ஒலிக்கும் வேதங்களின் உச்சியில் திகழும் ஒளியாய் இருப்பவளே!

பராகாச வெளியில் ஆனந்த சுடரொளியாய்த் திகழ்பவளே! உனது திருமேனி தேஜோமயமாகத் திகழ்கின்றதே!

என் மனத்துள் காலங்காலமாக அடைந்து கிடக்கும் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களையும் அறவே அகற்றி, நின் அருட் புனலால் துடைத்து, உன் உபய பாதங்களில் என்னை சேர்த்து அருள் புரிவாய்! அண்டினவருக்கு அபயம் தரும் அபயாம்பிகைத்தாயே! மயிலாடு துறையில் வந்திருப்பவருக்கு வரையிலா வரங்களைத் தரும் வள்ளலாய் விளங்கும் மாயூரநாதனின் வாழ்வாய்த் திகழும் அபயாம்பிகைத்தாயே!

அபிராமிபட்டரும், அபிராமி அந்தாதியில் *"நெஞ்சத்து அழுக்கை எல்லாம் நின் அருட்புனலால் துடைத்தனை"*(27) என்பார். இதன் சீரிய கருத்து யாதெனில் அன்னையின் அருளால்தான் நாம் நம் அறியாமையை வெல்ல முடியும். அவள் திருவடித் தாமரையையும் அடைய முடியும் என்பதே.

33. அன்னையே! அணுவிற்கும் அணுவானவளே!

கிளியே அருண வொளிச்சுடரே கிருபா னனமா முழுமதியே
கெடியாம் உன்றன் இருபதங்கள் கிடைக்கும் வகையும் பெறுவேனோ
ஒளியாயிருக்குங் கனகசபை ஒன்றோ இரண்டே விபரீதமே
உரைக்குங் கருணாநிதி மயிலே உதித்த பரமனுடன் ஆடும்
அளியா ரமுதே பரம்பரையே அணுவில் அணுவாய் அண்டபிண்டம்
அமர்ந்த சிவமே ஞானவெளிக்(கு) அரசே வேதத் துட்பொருளே
வளியே சுழியில் நடமிடு கண்மணியே எளியேற் கினியருள்வாய்
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

அன்னை எங்கும் வியாபித்திருந்தாலும் மிகச் சிறிய அணுவிற்கும் அணுவாய் இருப்பாள்! அவள் இல்லாத இடமே இல்லை. மாணிக்கவாசகர் சிவபுராணத்தில் (திருவாசகம்), "நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே" என்பார். ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம்(808) *"பரமாணு"* என்று சொல்லுகிறது. கடோபநிஷத்(II-20) "அணோரணீயான்" என்கிறது. அதாவது அன்னை மிகவும் ஸூக்ஷ்மமான அணுவர்க இருப்பவள். (அணுவை விட சிறிய அணு) அறிய முடியாத ரூபத்தை உடையவள் என்று பொருள். திருமூலரும், *"வாக்கு மனமும் மருவி ஒன்றாய் விட்ட நோக்கும் பெருமைக்கு நுண்ணறிவாமே"* என்பார். (திருமந்திரம்-1227). அபிராமி பட்டர், *"அளியேன் அறிவளவிற்கு அளவானது அதிசயமே"* என்று அன்னையைப் புகழ்வார். (அபிராமி அந்தாதி-16).

அன்னையைக் கிளியாகவும், வானத்திலே தோன்றும் சூரிய, சந்திரர்களாகவும் பார்க்கிறார் அபயாம்பிகை பட்டர். அன்னையே

எல்லாவற்றிற்கும் ஒளிதரும் பரஞ்ஜோதியாய் இருப்பவள் (முன்னும் பார்த்தோம்).

பொன்னம்பலத்தில் நடராசனுடன் நடனமாடும்போது, ஒன்றாயும், பின்னர் சொல்லும், பொருளாக காமேஸ்வர - காமேஸ்வரியாக இரண்டாய் உலகோர்க்கு காட்சி தருகிறாய். பின் பலவாகவும் உள்ளாய். கருணைக்கு நிதியாய் இருப்பவளும் நீயே.

"மயிலே உதித்த பரமனுடன் ஆடும் அளியாரமுதே" மயிலாடு துறையில் நீ பெண் மயிலாய்த் தோன்றி தவமிருந்தாய். உன் தவத்தை மெச்சி, சிவனும் ஆண் மயிலாய் வந்து உன்னுடன் நடனமாடிய காட்சி கண்ணுக்குத் தெவிட்டாத அமுதமாய் ஆனதே! இதைத்தான், *"விழியும் நெஞ்சும் களி நின்ற வெள்ளம் கரை கண்டதில்லை"* என்று அபிராமிபட்டர் ஆனந்தக் களிப்பில் பகருவர். (அபிராமி அந்தாதி - 19).

அமுதம் போன்றவளே! பரம்பொருளே! அணுவிற்கும் அணுவாய் இருப்பவளே! அண்டத்திலும், பிண்டத்திலும் அமர்ந்த சிவமாய், ஞான வெளிப் பேரரசியாய், வேதங்களின் உட்பொருளாய், காற்றாய், சூழுமுனை நாடியின் நடனமிடும் கண்மணியாய்த் திகழ்பவளே!

அன்னையே! என்று உன் இரு திருவடி சேரும் பேறு பெறுவேன்? எளியேனாகிய என்னை ஆட்கொண்டு அருள்புரிவாய்! மயிலாடுதுறையில் வரம் தரும் வள்ளலாய் விளங்கும் மாயூரநாதனின் உயிர்நாடியாய் விளங்குபவளே! உன்னை நாடி வந்தோருக்கு அபயம் தந்து அருள்புரியும் அபயாம்பிகைத்தாயே! அனைவருக்கும் அருள்புரிவாயாக!

34. கவலைக் கடலிலிருந்து கரையேற்றுவாய்! தாயே!

கவலைக் கடலில் வினையலையில் கனத்த மனமாகிய மடுவில்
கை நீச்சாக நீந்தஎன்றால் கரைதான் அடுத்துக் கிட்டவிலை
சவல மலையில் இடர்படவும் தகையும் வெகுளி மகரமது
தாவி வரவும் கைப்பிடிக்கத் தானா தரவும் இல்லாமல்
குவளை விழியில் புனல்பெருகக் கோகோ எனயான் அழுது நின்றால்
குறித்துன்னருள் தோணியில் ஏற்றிக்கொண்டே கரையில் சேர்த்தருள்வாய்
மவுனச் சிவனார் இடப்பாகம் வளரும் கருணாநிதி மயிலே
மயிலாபுரியில் வளர்சன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

மாயை, ஆசை, கவலை - இவை யாவும் கடலைப் போன்றவை, இக்கடலைத் தாண்டி கரையேறுவது மிகக் கடினமான காரியம். அன்னையால் மட்டுமே இதைச் செய்ய முடியும். இதை உணர்ந்தவர்கள் அன்னையின் அன்பர்கள். எனவே அன்னையிடம் மீண்டும், மீண்டும் ஒரு சேயைப் போலச் சொல்லிக் கொண்டே இருப்பார்கள். அபயாம்பிகை பட்டரும் அன்னையிடம் சேரத் துடிக்கும் சேயைப் போல பல பாடல்களில் அன்னைக்கு இந்தப் பிறவிக் கடலைத் தாண்ட விண்ணப்பித்துக் கொண்டே இருக்கிறார். அபிராமி பட்டரும் அபிராமி அந்தாதியில் (30), *"நடுக்கடலுள் சென்றே விழினும் கரையேற்றுகை நின்திருவுளமே"* என்று அன்னையிடம் வேண்டுகிறார்.

ஆசைக் கடலில் அகப்பட்டு, வினையலையில், மனமாகிய சூழலில் சிக்கி, கைகளை ஆட்டி அசைத்து அந்தத் துயரக் கடலில் நீந்த முயற்சி செய்து தவிக்கும்போது, கரையே கண்ணில் படவில்லையே? இனி என்ன ஆகுமோ என்று நடுங்கியிருக்கும் நேரத்தில், கோபத்துடன் ஒரு சுறா மீன் என்னைப் பற்ற வரும்போது, தப்ப வழி தெரியாது, 'கோ' வெனக் கதறி அழுவேன். அப்போது கருணையோடு நீ என்னைத் தேடி வந்து, உன் அருள் என்னும் தோணியில் என்னை அமர்த்தி என்னைக் கரையேற்ற வேண்டும் தாயே!

யோகமூர்த்தியாக, தட்சிணாமூர்த்தியாய், மௌனகுருவாய் விளங்கும் சிவனாரின் இடப்பாகத்தை உன்னுடைய, ஈடு, இணையில்லாத வல்லபத்தினால் எடுத்துக் கொண்டவள் அல்லவா! நீயே எல்லோருக்கும் கருணையின் கடலாயும், நிதியாகவும் திகழ்கிறாய்! மயில் வடிவம் எடுத்து மாயூரம் என்ற பெயரை 'மயிலாடுதுறை' என்று வழங்கச் செய்தது உன் அருள் அன்றோ. ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் 114. *பவாரண்ய குடாரிகா.* 880. *ஸம்ஸார பங்க நிர்மக்ன ஸமுத்தரண பண்டிதா* என்ற இரு நாமாக்களும். அன்னை ஸம்ஸாரக் கடலிலிருந்து நம்மை விடுவிப்பவள் என்ற பொருளில் அமைந்துள்ளது.

நமக்கு பெரியவர்களும், குருமார்களும் செய்யும் உபதேசம் - ஸம்சாரம் (பவ) என்பது சமுத்திரம் போன்றது. அந்த பந்தத்திலிருந்து விடுபட, பாசத்தை அழித்திட அன்னையால் மட்டுமே முடியும். எனவே அல்லும், பகலும் அவள் திருப்பாதங்களின் நினைப்பிலேயே இரு என்பதே.

மயிலாபுரியில் பெருமைமிகு மாயூரநாதனின் வாழ்வாய்த் திகழும் அபயாம்பிகைத்தாயே! அனைவருக்கும் அருள் புரிவாயே!

35. ஆணவம் அழிய அருள்புரிவாய் அம்மா!

நல்லார் நடக்கும் வகைஅறியேன் நான்நான் எனவே உலகமதில்
நாடு வீடு மாடுமக்கள் நம்பு மனையாள் வாழ்வதனில்
பொல்லா வறுமை பொருந்திவரப் புல்லர் தம்பால் வருந்திநின்று
பொழுதை வீணாக் கழித்தொழித்துப் பொய்யாம் உடலம் வீழ்ந்துவிடில்
எல்லாம் எனதென்றிருந்தவெல்லாம் எள்ளளவும் பின் தொடர்வதில்லை
இவற்றில் நிறுத்தி மயக்குவதை யானோ அறியேன் விதிவசத்தால்
வல்லாணவத்தால் அழியாதென் மனத்தில் குடிகொண் டாண்டருள்வாய்
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

இம் மானிட வாழ்வில் நான், எனது என்ற அகங்கார, மமகாரத்தில் சிக்கி அதிலிருந்து மீள முடியாது தவிக்கிறோம். பற்றுகளினால் ஏற்படும் பயிர் இது. இந்தப் பயிரை வளர விடாது இருக்க அதன் வித்தாக இருக்கும் பற்றை அழித்துவிட வேண்டும். இக்கருத்தினை 21-ம் பாடலிலும் பார்த்தோம். ஆசிரியர் மீண்டும் மீண்டும் சொல்வதின் காரணம் - பற்று என்பதிலிருந்து விடுபடுதல் அவ்வளவு எளிய காரியமல்ல. அன்னையை அயராது அல்லும் பகலும் துதிப்போருக்கே அது அமையும். அதாவது அன்னை தன் கருணை மனம் கொண்டு அருளினால் தான் முடியும் என்பதே.

அடியேன், நல்லோர் நடக்கும் வழி, வகைகளை அறியாதவன், நான் எனது என்ற மயக்கத்தில் சுழலுகிறேன. இவ்வுலகில் எனது நிலம், எனது வீடு, எனது மக்கள், எனது மனைவி மற்றும் நிலையற்ற பொருள்கள் மீது ஆசை வைத்து அல்லற்படுகிறேன். இவ்வாறு சம்சாரக் கடலில் சிக்கி இறுதியில் வறுமையிலும், துன்பங்களினாலும் அவஸ்தைப்படுகிறேன்.

தாற்காலிக உறவினர், உற்றார் மீது பாசம் வைத்து புல்லர்களின் துணை மெய்யென்று கருதி, காலத்தை வீணாக்குகிறேன். இந்த உடல் பொய்யானது, நிலையற்றது. இது ஒரு நாள் அழியும். அப்போது எதெல்லாம் எனது என்று கருதினேனோ அதில் எள்ளளவும் தொடர்ந்து வரப்போவதில்லை. இந்த மயக்கத்தில் இருந்து விடுபடும் ஞானமும் எனக்கில்லை. அதை நான் அறியேன். (புல்லர் - இழிந்த மக்கள்)

விதியின் வசத்தாலும், வலிமைமிகு ஆணவத்தினாலும் அடியேன் அழியாதிருக்க ஒரே ஒரு வழிதான் உள்ளது. அது என்ன தெரியுமா?

அன்னையே! நீ என் மனதில் வந்து குடியிருக்க வேண்டும். அப்போது என் மனமும் மலங்களற்று மணக்கும். அம்மா! என்மீது கருணை கொண்டு எனைக் காத்தருள வேண்டும்.

அபயாம்பிகை பட்டர் மானிட வாழ்க்கையின் ‘மயக்க’ நிலையையும், அதிலிருந்து விடுபடும் வழியையும் எளிய தமிழில் சொல்லியிருக்கும் பாடலிது. அன்னையின் அன்பர்கள், தங்களின் இயலாமையைத் தெரிவித்து அன்னையைச் சரண் அடைவார்கள். இது தான் அவர்கள் நமக்குச் சொல்லும் பாடம். அது மட்டுமல்ல அவர்கள் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை.

36. அன்னையே அடியேன் பிழை பொறுத்து தயை புரிவாயே!

அடியார் செய்யும் வினைதனக்கோர் அருள்செய்து வந்து காக்கிலையோ
யான் மாத்திரந்தான் உன்றனுக்கே ஆகாதவனாய்ப் போனேனோ
படிமேல் முன்செய் தவக்குறையோ பத்தர் தமக்குத் தீம்பு செய்த
பாபந்தானோ அறியாமற் பலவாய் என்றன் உயிர்மறுகி
முடியாக் கலக்கங் கொள்ளவைத்து மூழ்க அடித்தால் என்செய்கேன்
மோசமான இருவினையில் முளைத்தே எழுந்த செனனமதை
மடியக் கருணை இனிஅருள்வாய் புவனை வாலை திரிபுரையே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

தொடர்ந்து அபயாம்பிகை பட்டர் அன்னையிடம் தம் பிழைகளைப் பொறுத்து தயை புரிய வேண்டும் என்று வேண்டுகிறார். அபிராமி பட்டரும், “வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம் அடியாரை மிக்கோர் பொறுக்கும் தகைமை புதியதன்றே” என்று அன்னையிடம் முறையிடுவார்.

அதாவது, அடியார்களின் தவறுகளைப் பொறுத்து அவர்களைக் காத்த தெய்வமே! அடியேன் இதை அறிவேன். அப்படி இருந்தும் அடியேன் மட்டும் உனக்கு வேண்டப்படாதவனாகி விட்டேனா? இந்த பூமியில் முற்பிறவிகளில் செய்த வினைகளாலும், அடியார்களுக்கு அறியாமல் செய்த தீய வினைகளின் விளைவாய் வரும் துயரங்களையும் நான் அறிவேன். விதைப்பவனே அறுக்க வேண்டும் என்ற விதியையும் யான் அறிவேன். ஆனால் இப்பாபங்களினால் வரும் துயரங்களைத் தாங்க முடியவில்லையே. என் உயிர் கலங்குகிறது. என் மனம் துடிக்கிறது. முடிவற்ற கலக்கத்தில் என்னைத் திளைக்க வைத்தால் என் செய்வேன்? மோசமான அறம், பாவம் என்னும் இருவினையால் உண்டானது இப்பிறவி என்று யான் அறிவேன்.

இந்தப் பிறவி அழிந்தொழிய, கருணையின் இருப்பிடமான நீ என் மீது கருணை கொண்டு அருள் புரிவாய்!

இங்கு அன்னையை புவனை, வாலை, திரிபுரை என்று போற்றிப் புகழ்கிறார். புவனை - பதினாலு புவனங்களையும் தோற்றுவித்து, காத்து பின் தன்னுடன் லயித்துக் கொண்ட 'புவனேச்வரி'யானவள். ஹ்ரீம் என்னும் மாயா பீஜத்திற்கு புவனேச்வரி பீஜம் என்று பெயர். 'ஹ்ரீம்' என்பது அன்னையின் மூலமந்திரம். ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் (294) *புவனேச்வரீ.*

வாலை - பாலா, பாலாம்பிகை, வாலாம்பிகை என்ற திருநாமங்கள் அன்னையை சிறுவயதுப் (ஒன்பது வயசுப்பெண்) பெண்ணாக வர்ணிப்பது, சிறுமி போல் லீலையில் ஆசைப்படுவதால் அம்பிகைக்கு 'பாலா' என்ற பெயர் என்று த்ரிபுராஸித்தாந்தம் கூறுகிறது. (965. பாலா - பாலா த்ரிபுரஸுந்தரியாக, குமாரியாக இருப்பவள்)

593. *பாலஸ்தா* - நெற்றியில் உள்ள ஆக்ஞா சக்கரத்தில், "ஹ்ரீம்" பீஜத்தில் உள்ள பிந்து ரூபமாக இருப்பவள்.

சித்தர்கள், 'பாலா தேவியை' - 'வாலை' என்பார்கள். 'வாலையடி சித்தருக்கு தெய்வம் தெய்வம்' என்பது வழிவழியாய் வந்த மொழி. சித்தர்கள் வாலையைத்தான் வழிபடும் தெய்வமாகக் கொண்டிருந்தனர். சித்தர்கள் குறிப்பிடும் வாலை கன்னிப் பருவத்திய, சக்திமிக்க பாலா என்னும் தெய்வம். பாலா உபாசனை சித்தர்க்குரியது. சக்தி வழிபாட்டை வலியுறுத்தும் கொங்கணர் என்ற சித்தரின் பாடல்கள் -

"சக்தி சடாதரி வாலைப் பெண்ணாம்..."

"சித்தர்கள் போற்றிய வாலைப் பெண்ணாம்..."

"எங்கும் நிறைந்தவள் வாலைப் பெண்ணாம்..."

"வாலை - வள்ளி என்பதும் உண்டு. மாதா பிதா கூட இல்லாமலே வெளி மண்ணும் விண்ணுமுண்டு பண்ணவென்று பேதைப் பெண்ணாம் முதல் வாலைப் பெண்ணாளென்று புகுந்தாளிந்தப் புவியடக்கம்"

'ஐம் க்லீம் ஸௌ:' - என்பது பாலா மந்திரம் (குரு மூலமாக உபதேசம் பெற்று பின் ஜபிக்கவேண்டும்) ஐம் - தேவியின் முக சந்திர மண்டலம். நற்கல்வி, ஞானம், கவிதா சக்தி வழங்கும். க்லீம் - பாலாவின் கழுத்தின்கீழ் பகுதியிலிருந்து இடுப்பு பிரதேசம் வரை உள்ள பகுதி. இகத்தில் சுகம் பரத்தில் லயம் அளிக்கிற காமராஜ பீஜம். ஸௌ - பாலாவின் இடுப்பிற்குகீழ் உள்ளது. சகல பாக்கியங்களையும் அளிப்பது. கந்த சஷ்டி

கவசத்திலும், "ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும் உய்யொளி சௌவும் - உயிரையுங் கிலியும் கிலியுஞ் சௌவும்..." என்று வருவது காண்க.

வாலைச்சாமி சித்தரும், *"வாலையின் அட்சரம் மூன்றாகும் அதை*
வாய்கொண்டு சொல்பவர் யார் காணும்
மேல் ஒன்றும் கீழ் ஒன்றும் மத்திம்முங்கூட்டி
விரைந்து பாரடி ஞானப்பெண்ணே! - என்கிறார்.

"பத்து வயதினை உடை பாலையினையன்றோ நீ
சித்தர்க்கெல்லாம் தாயாய் செய்தாய் மனோண்மணியே" என்ற மஸ்தான் சாகிபு பாடல் இங்கு நோக்கத் தக்கது.

"காணாத வாலையைக் கண்டுகொண்டால் - காட்சி காணலாம் ஆகாயம் ஆளலாமே" - கொங்கண சித்தர். *"ஊமை எழுத்தே உடலாச்சு மற்றும் ஓமென்றெழுத்தே உயிராச்சு ஆமிந்தெழுத்தை அறிந்து கொண்டு விளையாடிக் கும்மி அடியுங்கடி"*

வாலைச்சித்தர் - *"அட்சரமா மவுனாட்சரமாவது, ஆனால் நல்ல திறவு கோலாம் உச்சிதமாகத் திறந்தாலே அந்த உச்சி வழி காணும் ஞானப்பெண்ணே"*

கருவூரார் - *"சூச்சமவள் வாசமது நிலைத்த வீடு சொல்லுதற்கே எங்குமாய் நிறைந்த வீடு தேசமதில் போய் விளக்குமிந்த வீடு சித்தாந்த சித்தரவர் தேடும் (ம்) வீடு ஓசை மணிபூரமதில் உதிக்கும் வீடு ஓகோகோ அதிசயங்கள் உள்ளவீடு ஆசு கவி மதுரமது பொழியும் வீடு அவனருளுங் கூடி விளையாடும் வீடே"*

திரிபுரையே - அன்னை அபயாம்பிகையைத் திரிபுரசுந்தரியாகக் காணுகிறார் அபயாம்பிகை பட்டர். அபிராமி பட்டரும், *"திரிபுர சுந்தரி ஆவது அறிந்தனமே"* (2), *"பொருந்திய முப்புரை..."* (5), *"திரிபுரை பாதங்கள் சேர்மின்களே."* (54) என்று அபிராமி அந்தாதியில் சொல்லுகிறார். தேவி உபாசனையில் எல்லாத் திருக்கோலங்களும் பூர்ணமாய் அமைந்து நிற்பது ஸ்ரீலலிதா மஹாதிரிபுரசுந்தரியாகும். இதைத் தான் சாக்த சமயத்தின் அனைத்து நூல்களும், தோத்திரங்களும் சொல்லும். திரிபுரை - முப்புரை என்பவையெல்லாம் மும்மூன்றாக இருப்பவற்றைக் குறிக்கும். அன்னை இவற்றில் எல்லாம் இருப்பவள், அதற்கும் அதீதமாகவும் இருப்பவள்!

முத்தொழில், முக்குணம், வாக்பவம் முதலிய மூன்று பீஜங்கள், ஸ்ரீவித்யா மந்த்ரத்தின் மூன்று கண்டங்கள், ஸ்ரீசக்கரத்தின் கோணத்ரயம், ரேகாத்ரயம், பூபுரத்யம், மூவுலகு, மூன்று பீடங்கள், இடா முதலிய நாடித்ரயம், மனம், சித்தம், புத்தி என்ற மூன்று முதலியன.

இதில் முக்கியமானது - அன்னை மும்மூர்த்திகளுக்கும் முந்தியிருப்பவள். ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமத்தில் அன்னைக்கு - த்ரிபுரா, த்ரிபுராம்பிகா, த்ரிபுராஸ்ரீ, த்ரிபுரேசீ, த்ரிமூர்த்தி, த்ரிலோசனா, த்ரியம்பகா, த்ரிஸ்த்தா, த்ரிகூடா, த்ரயீ, த்ரிகுணா, த்ரிநயனா, த்ரிபுரமாலினீ இன்னும் எவ்வளவோ நாமாக்கள் சொல்லப்படுகின்றன.

அதாவது அன்னையே அனைத்துமாகி நிற்பவள் என்பதே இதன் சூட்சுமப் பொருளாகும். அன்பர்களுக்காக அன்னை பல வடிவங்களை உண்டாக்கி அதற்குரிய திருநாமங்களுடன் விளங்குகிறாள்.

அபயாம்பிகை பட்டர் மயிலாடுதுறையிலேயே இருந்து கொண்டு தன்னுடைய மனத்தில், அன்னையின் அனைத்துத் திருக்கோலங்களையும் கண்டு இன்புறும் காட்சி நம் கண்கள் முன் நிற்கிறதல்லவா!

37. தாயே! கோவிந்தரூபிணியும் நீயே!

எங்கும் சரியாய் நீ இருந்தே ஏற்றல் குறைச்சல் பேதகற்றி
என்னாருயிரை இப்பிறப்பில் எடுத்தாட்டியதும் அறியேனே
சங்கம் ஆழி தரித்தவளே சகல உயிர்க்கும் உயிர்க்குயிராய்த்
தானாய் இருந்த தவப்பொருளே தமியேன் செய்த வினைமுழுதும்
மங்கும் படியே நீபார்த்து மடங்காக் ககனப் பெருவெளியில்
மாறா தருணக் கமலமதில் வாழக் கருணை நீஅருள்வாய்
வங்கங் கொழிக்கும் பொன்னிநதி வளர்ந்த புனலாறிசைந்துவரு
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

அபயாம்பிகை பட்டர் அன்னையை இங்கு கோவிந்தரூபிணியாய் காண்கிறார். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழில்கள் புரிபவள் அன்னை. காத்தல் தொழிலை கோவிந்தனிடம் தந்து மேற்பார்வை செய்கிறாள். இம்மண்ணுலகில், மாய மானிட வாழ்வில் மாட்டிக் கொள்ளாது "கோவிந்தனாக" என்னைக் காத்தருள்வாய் என்று அன்னையிடம் வேண்டுகிறார்.

தாயே உன்னுடைய முழுமையான கருணையால் எனக்கு துன்பமேதும் இல்லை. எல்லா இடங்களிலும் உள்ளிருந்து, எந்தவித வேறுபாடுகளும் இல்லாமல் எல்லா உயிர்களையும்க் காத்து ரட்சிப்பவளே! எல்லாம் உன் செயல்! எல்லோரையும் ஆடவைப்பவள் நீ! ஆட்டிவைப்பவளும் நீயே! வினைகளை செய்ய வைத்தவளும் நீ! அதன் விளைவுகளை அனுபவிக்க

வைப்பவளும் நீ! திருமாலின் ஆயுதங்களான சங்கும், சக்கரமும் தாங்கி என்னைக் காத்தருள வேண்டும் தாயே! *"போகேச பவானி, புருஷேச விஷ்ணு; கோபேச காளி; ஸமரேச துர்கா"* என்று அன்னை பலவிதமான கோலங்களைக் கொண்ட மூலப்ரகிருதியாவாள். உயிர்களின் உள்ளிருந்து ஒளிரும் தவப்பொருளும் அவளே!

அடியேன் செய்த வினைகளை எல்லாம் உன் கருணையால் அகற்றி என்னை உனது தாமரைத் திருவடிகளில் பொருத்துவாய்! பெருவெளியில் பேரின்பமாய்த் திகழ்பவளே! ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமத்தில், 266. *கோப்த்ரீ,* 267. *கோவிந்தரூபிணி* என்று வரும். காத்தல் தொழிலைச் செய்யும் (கோவிந்தன்) விஷ்ணுவின் வடிவானவள்.

ஆசிரியர் இங்கு மயிலாடுதுறையின் பெருமையையும் சொல்லுகிறார். மயிலாடுதுறையில் பொன்னி நதியென்னும் பெயரிலே காவேரி அன்னை, நீர்வளத்தை பெருக்கும் என்றும் வற்றாத நதியாய் ஓடுகிறாள். இப்படிப்பட்ட பொன்னி நதியில் கப்பல்கள் நிறைந்து காணப்படுகிறதாம். அதாவது பலவிதமான தொழில் போக்குவரத்துடன் பல நாட்டினரும் வந்து போவதால் மயிலாடுதுறை செல்வ வளம் மிகுந்து காணப்படுகிறது.

பல வளங்களும் காணப்படும் மயிலாடுதுறையில் வரங்களை வாரி வழங்கும் வள்ளலான மாயூரநாதனின் உயிராயிருக்கும் அபயாம்பிகைத் தாயே! அனைவரும் நலமாய் வாழ அருள் புரிவாயே!

38. அன்னையே! நீயே நன்னெறி நல்குவாய்!

ஓலமிடவும் அமலையுந்தான் உறுதி மனத்திற் பொருந்தவில்லை
ஒரு நாழிகையாயினும் மிடியன் உபய பதத்தை நினைத்ததில்லை
காலம் அறிந்து நினதடியார் கருது மொழியும் கேட்டதில்லை
கனவாகிய சம்சாரமெனுங் கடலினிடைவீழ்ந் தலைமோத
நீல இருளில் விழிக்குருடாய் நின்றே மயங்கிக் கிடப்பேனை
நீதான் கிருபை பொருந்தியுன்றன் நெறிதான் அளித்து நிலைவைப்பாய்
வாலை வடிவே ககனமுடி வான திருவே மலைமகளே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

நல்ல ஸத்சங்கமும், நன்மார்க்கமும் அமைந்தால் தான் ஆண்டவனை அடைய முடியும் என்னும் அரிய கருத்தினை உலகோர்க்கு சொல்லும் பாடல் இது.

தாயே! உன் திருநாமங்களைத் திரும்பத் திரும்பச் சொன்னாலும் (ஓலமிடவும்) மலங்களற்ற பார்வதியாகிய (அமலை) நீ என் உள்ளத்தில் அமரவில்லையே? ஏன்? அடியேன் மனம் அழுக்குடைத்து என்பதாலா? தாயே என் செய்வது? அடியேன் மனம் மாசு படிந்து, மலங்களைத் தாங்கும் சுமைதாங்கி போல் ஆகிவிட்டது. அறியாமை என்னும் இருளில் வாடித் தவிக்கின்றது. ஒரு நாழிகை கூட இந்தப் பாவி உன் உபய பாதங்களை நினைத்ததில்லை. உன் அடியார்கள் சொல்லும் பெருமைக்குரிய திருவாசகங்களைக் கேட்காமல் என் வாழ்நாளை வீணாக்கி விட்டேன். இதே கருத்தில் மாணிக்க வாசகரும் திருவாசகத்தில் (ஆனந்த மாலை - 3)

"சீலம் இன்றி நோன்பு இன்றிச் செறிவேஇன்றி அறிவு இன்றித்
தோலின் பாவைக் கூத்தாட்டாய்ச் சுழன்று விழுந்து கிடப்பேனை
மாலும் காட்டி வழிகாட்டி வாரா உலகம் நெறி ஏறக்
கோலும் காட்டி ஆண்டானைக் கொடியேன் என்றோ கூடுவதே"

என்று மெய்யுருகிப் பாடும் பாடல் இது.

'கனவாகிய சம்சாரம்' என்று வெகு அழகாய்ச் சொல்லுகிறார் அபயாம்பிகை பட்டர். கண் திறந்து விட்டால் மறைவது கனவு. அது போல் சம்சார வாழ்வும் நிலையற்றது. இந்த சம்சாரம் என்பது கடல் போன்றது. இதில் சிக்கிக் கொண்டால் கரையேறுவது கடினம். கரிய இருளில் (அறியாமை) குருடனாய் வீழ்ந்து கிடக்கும் என்னை, நீதான் காப்பாற்றி அருள் புரிய வேண்டும். சதா சர்வ காலமும் உன் நினைப்பிலேயே வாழும் நன்னெறியை எனக்கு அருள்வாய்! அன்னையிடம் பக்தி ஏற்பட அவள் நினைத்தால் தான் அது நிறைவேறும். அவள் அருளின்றி ஆவது ஒன்றுமில்லை!

வாலை வடிவாக, சிறு பெண்ணாய், பாலாவாகத் தோற்றந் தந்து அன்பர்களை மகிழ்விப்பவளே! ககனத்தையும் (பரவெளி) தாண்டி நிற்கும் பரம்பொருளே! பர்வதராசனுக்கு மகளாய்த் தோன்றிய பார்வதி தாயே! மயிலாடுதுறையில் பெருமைமிகு மாயூரநாதனின் வாழ்வாய்த் திகழும் அபயாம்பிகைத் தாயே! அனைவரையும் நல்ல நெறியில் நிறுத்தி நல்வாழ்வு நல்குவாய்!

39. தாயே! உனை மறவாமை அருளினாய்! பிறவாமையும் அருள்வாய்!

ஆண்டவளும் நீ யாமாகில் அழகு துரைச்சி நீயாகில்
அருணன் நிறத்தி நீயாகில் அமுதச் சிவத்தி நீயாகில்
பூண்ட இமயா சலத்தின்உயர் பொன்னே நீதா னாமாகில்
புகழ்ந்தே எனக்குள் அருள்முலைப்பால் புசிக்கக் கொடுத்த தாயாகில்
நீண்ட புகழ்உன் சமயமெனும் நெறிதந்துதவும் நிசமாகில்
நிலத்தில் எனையே பகைத்தகற்ற நேரிட்டிருப்போர் பேருடலம்
மாண்டு விடவே அருள்புரிவாய் வாரா கினியே அருள்மணியே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

அபயாம்பிகை பட்டர், தனது குழந்தைப் பருவத்தில், அன்னை தனக்கு அமுதம் ஊட்டியதை நினைத்துப் பார்க்கிறார். அன்னையின் அருளாம் அமுதத்தினை அருந்திய அருட்புதல்வர் அபயாம்பிகை பட்டர் என்ற நினைப்பில் நாம் புளகாங்கிதம் அடைகின்றோமல்லவா! அடியேனும் (நாயேனையும்) அபயாம்பிகை சதகத்திற்கு ஒரு விளக்கவுரை எழுதும் பாக்யம் பெற்றதை நினைத்து, நினைத்து அவள் கருணையையும் அருளையும் உணர்ந்து ஆனந்தா அதிசயத்தில் ஆழ்ந்துகிறேன். என்னே அன்னையின் கருணை உள்ளம்! எல்லாம் அவள் செயலன்றோ!

குழந்தைகள் தாயிடம் பழகும் பாவங்கள் அலாதி. சில சமயம் கொஞ்சும், சில சமயம் கெஞ்சும். சில சமயம் உரிமையுடன் சண்டை போடும். சில சமயம் சவால் விடும். சில சமயம் போராடும். "நீ என் தாய் என்பது நிஜமானால் இதையெல்லாம் செய்யவேண்டும்" என்று அன்புக் கட்டளை இடும். அதையெல்லாம் தாய் இன்பத்துடனே அனுபவிப்பாள். குழந்தையிடம் தாய்க்கு கோபம் வராது.

இப்பாடலில் அபயாம்பிகை பட்டர் அன்னையின் அன்புக் குழந்தையாகச் சவால் விடுகிறார்.

என்னை இவ்வுலகில் படைத்தவள் நீ! அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி நீ! உனது திருமேனியோ உதிக்கின்ற சூரியனைப் போன்றது! அமுதம் போலும் மிக இனிய சிவசத்தி. பல காலம் தவம் புரிந்த பர்வதராசனுக்கு மகளாய் தோன்றிய பார்வதியும் நீயே!

அடியேனின் குழந்தைக் காலத்தில், நான் தாயில்லாப் பிள்ளையாய்த் தவித்த பொழுது, நீ ஓடி வந்து அன்புடன் என்னை அரவணைத்து

உன்னுடைய திருமுலைப்பால் என்னும் அருளமுதம் அளித்தவளாயிற்றே! அதுமட்டுமா! உன்னையே எப்போதும் போற்றிப் புகழ்ந்து துதிக்கும் உன்னுடைய சமயத்தை (சக்தி உபாசனை) எனக்கு நல்கினாய். தொடர்ந்து அதிலேயே நிற்கும் மறவாமையையும் தந்தருளினாய். என்னே உன் கருணை! மாணிக்கவாசகரும் (ஆனந்தமாலை), "நாயேன் அடிமை உடன் ஆக ஆண்டாய்! நான்தான் வேண்டாவோ?" என்று கேட்கிறார்.

நீ செய்த இதெல்லாம் உண்மையாகில், இப்போது "பிறவாமை" அளிக்க வேண்டும். மண்ணுலகில் மீண்டும், மீண்டும் இறந்தும், பிறந்தும் அவதியுறும் நிலையை அகற்றி அருள்புரிவாய்! அருளுக்கு மாரியாய் விளங்கும் அருள்மணியே! வாராகினியே! உனக்கு இது அரிதான செயலோ?

மயலிடுதுறையில் வந்திப்பவர்க்கு வரையிலா வரங்கள் தரும் வள்ளலாய் வீற்றிருக்கும் மாயூரநாதனின் உயிராய்த் திகழும் அபயாம்பிகைத்

40. அன்னையே! மாயையை நீக்கிடுவாய்!

அலையில் துரும்பாய் மனம்அலைய அனலில் மெழுகாய் மனம்உருக
அளிந்த பழம்போல் உடல்தளர அருவி விழிகள் புனல்சொரிய
கலையில் அறிவும் பிசகிநின்ற கலக்கமதனை அகற்றி ஒரு
கனஞ்சேர் உன்றன் இணைடியைக் காண
வசங்கொண்டிருக்கவைப்பாய்
சிலையைப் பிடித்த கரத்தழகி சிவத்தி தவத்தி பவம்அகற்றி
செயமே தரித்த மனோகரத்தி சிந்தாமணி ரத்னாபரணி
மலையில் உதித்த நவ பீடவாசம் உறை மாயேஸ்வரியே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

மனிதர்களாய் பிறந்த நாம் மாயையில் மாட்டி கொண்டு மனக்கலக்கம் கொண்டு தவிக்கிறோம். இவ்வுலக வாழ்க்கை நிரந்தரம் என்று நினைத்து முடிவில் வேதனையில் உழலுகிறோம். இதைத் தவிர்ப்பது எப்படி? அதற்கு ஒரே வழி - அன்னையின் திருப்பாதங்களை எப்போதும் நம் நினைவில் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். இந்த நினைப்பும் அன்னையின் அருளினால் தான் நமக்குக் கிடைக்கும். இதைத் தான் அன்னையிடம் வேண்டுகிறார் அபயாம்பிகை பட்டர்.

அலையில் சிக்குண்ட துரும்பாய் மனம் அலைந்து, அனலில் அகப்பட்ட மெழுகாய் உருகி, அழுகிய பழம் போல் உடல் தளர்ந்து.

பஞ்சடைந்த கண்கள் நீர் சொரிய, மனநிலை அழிந்து படும் அவஸ்தைகளைப் போக்கி, கலைஞானம் இல்லாத அறிவையும் அழித்து என் மனக் கலக்கத்தை அகற்றி உனது தாமரைத் திருவடிகளை மனதில் காண (அகக் கண்ணில்) அருள் புரிவாய் தாயே!

திருக்கையிலே நீ கரும்பு வில்லைத் தரித்த திருக்கோலம் கொண்டாய். வில்லை மனதிற்கு ஒப்பிடுவார்கள். அடியார்கள் மனம் இந்திரியங்கள் வழி செல்லாமல் இருக்கத்தானே! சிவந்த மேனியாய் சிவ மாய் காட்சி தருபவளே! தவம் செய்வதில் தன்னிகரில்லாதவளே! பவம் என்பது சம்சாரத்தைக் குறிக்கும். சம்சாரப் பிணியை அழித்து வெற்றியைத் தரும் மனோகரி! ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் (842) *பவரோகக்னி* - சம்சாரம் என்ற நோயை அகற்றுபவள். 880. *ஸம்ஸார பங்க நிர்மக்ன ஸமுத்தரண பண்டிதா* - ஸம்ஸார சகதியில் முழுகியவர்களை தூக்கி வெளியே எடுப்பதில் திறமை வாய்ந்தவள். (முன்னும் பார்த்தோம்)

சிந்தாமணிக் கல் நினைத்ததை தரும் தன்மையுடையது. அன்னை நினைத்ததிற்கும் மேலாகக் கொடுப்பவள். இங்கு அன்னையை 'சிந்தாமணியாக' ஆசிரியர் உருவகப்படுத்தியுள்ளார். நவரத்னங்களையும் மாலையாக அணிந்தவள். (51. *ஸர்வாபரண பூஷிதா.* எல்லா ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டவள்) மலைமகளாய்த் தோன்றிய வளும், நவபீடங்களிலும் உறைபவளும், மாயையின் ஈஸ்வரியாய் விளங்கு பவளும் நீயே! (215. *மஹா மாயா* - மஹா ரூபிணியாக இருப்பவள். 716. *மாயா* - மாயையாக இருப்பவள்) இதில் உள்ள மற்றொரு சூட்சுமமான பொருள் மாயா என்பதற்கு 'க்ருபை' என்ற பொருளும் உண்டு. அதனால் 'க்ருபை' நிறைந்தவள் என்றாகிறது. அதாவது அன்னையே மாயையைத் தந்து பின் க்ருபையையும் தருவாள் என்பதே இதன் கருத்து. அன்னை, "பாலாவாக" தன் குழந்தைகளுடன் விளையாடுகிறாள் எனறும் சொல்லலாம்.

41. தாயே! அடியேன் தமியேன்! தயை புரிவாய்!

உடலும் பகைக்க அகம் பகைக்க ஒக்கப் பிறந்தார் மனையாட்டி
உடனே பகைக்க ஊர்பகைக்க ஒழிந்த பெரியோர்களும் பகைக்கக்
கடலும் பகைக்க நிலம்பகைக்கக் கனல்கால் ககனமுடன் பகைக்கக்
கருதி இருக்கும் வேளை இதைக் கண்டாயோ என் மாதாவே
சடலந் தனையே பகைப்பதல்லால் சர்வ மூல முதல்வி உனைத்
தானே பகைக்க இக்கயவர் தம்மாலாமோ தார்குழலே
அடலம் பரையே உனை அடுத்தேன் வந்தென்றனைநீ காத்தருள்வாய்
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

இவ்வுலகில் நாம் எதை எண்ணி மிக்க நேசிக்கிறோமோ அதுவே நமக்கு எதிரியாய் மாறிவிடுகிறது. காலத்தின் போக்கில் பின் அதை எண்ணி வருந்துவதிலேயே மிச்ச காலமும் சென்று விடுகிறது. எண்ணிப் பார்த்தால் எல்லாமே பகையாகி, நாம் வேண்டப் படாதவர்களாய் தனித்து நிற்கிறோம். ஆனால் எந்நேரமும், எக்காலத்திலும் நமக்கு துணையாய் இருப்பது ஒன்று உள்ளது. அதுதான் அகிலாண்ட நாயகியான அன்னையின் பாத கமலங்கள்.

பல காலம் இராப் பகலாகக் கஷ்டப்பட்டு பொருள் தேடி வசதியுடன் வாழுங் காலத்தில் உற்றார், உறவினர், நண்பர் மற்றும் பலரும் நம்முடன் உறவு கொண்டாடுவர். நாம் நாடி தளர்ந்து நரை மிகுந்து, பொருள் அழிந்து, மண்ணுக்கு பாரமாய் விண்ணுக்கு ஏகத் துடிக்கும் நேரத்தில் நம் மீது பகைத்து, எடுத்ததற்கு எல்லாம் எரிந்து விழும் விந்தையை எண்ணி சிரிப்புத் தான் வருகிறது. இது போதாது, நம் உடலும், உள்ளமும் பகைக்கிறது. உடன் பிறந்தோர், மனைவி எல்லோரும் எதிரிகளாய் விடுகின்றனர். நிலமும், நீரும் எல்லாமுமே பகைக்கின்றன.

இத்தருணத்தில் அடியேன் விரைந்து வந்து உன் திருவடியைப் பற்றிக் கொள்வேன். ஏனென்றால் நீதான் என்னை அரவணைக்கும் அன்புத்தாய்! எல்லாவற்றிற்கும் மூல முதல்வியான உன்னைப் பகைக்க முடியுமோ? அது போன்று உன் உபய பாதங்களைப் பற்றிய பின் என்னையும் பகைக்க முடியுமோ?

மாலை அணிந்த கூந்தலையுடைய ஆரணங்கே! வலிமை மிகு வானமாக வியாபித்திருப்பவளே! உன்னையே அண்டி ஓடி வந்தேன்! உடனே வந்து என்னைக் காத்தருள்வாய்! பல வளமும், பேரழகும் கொண்ட மயிலாபுரியின் தாயே! மாயூரநாதனின் உயிர்நாடியாய் விளங்கும் தாயே! அண்டினவருக்கு அபயம் தந்தருளும் அபயாம்பிகைத்தாயே! அனைவரையும் காத்தருள்வாய்!

42. அன்னையே! உன்னையே அடுத்தேன்!

உற்றார் பெற்றார் தமைவேண்டேன் ஊழ்வினையால் வரும்பொருளும்
உடலும் வேண்டேன் செழித்திருக்கும் ஊரும் உலகுமதை வேண்டேன்
சற்றாயினும் இவ்வுலகிலுள்ளே தனுவாதிகளும் வரல்வேண்டேன்
தன்னை அறிய அறிவருளுந் தாயே உன்றன் இருபதங்கள்
பெற்றார் அடிஎன் சிரமதனில் பிரியாதிருக்கும் வகைவேண்டிப்
பிடித்தேன் எனது மனவுறுதி பிசகாதிருக்க வரம் அருள்வாய்
மற்றாரையும் நான் நம்பவில்லை வரையின் மகளே உனைஅடுத்தேன்
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

அன்னையைத் தொழும் அடியார்களின் பெருமையைச் சொல்லும் பாடல் இது. சிவனும் சக்தியும் தங்களைத் தொழுவதைவிட தங்கள் அடியார்களைத் தொழும் அன்பர்களைக் கண்டு ஆனந்தப்படுவர். அடியார்களின் குழுதான் ஸத்சங்கம் எனப்படும். திருமூலர், மாணிக்கவாசகர் சமயக்குரவர்கள் மூவரும் அடியார்களைப் பற்றி நிறைவாகவே சொல்லி யுள்ளனர். அபிராமிபட்டரும், *"வெருவிப் பிறிந்தேன் நின் அன்பர் பெருமை எண்ணாத கரும நெஞ்சால் மறிந்தே விழும் நரகுக் குறவாய மனிதரையே"* (3) *"மறை சொல்லிய வண்ணம் தொழும் அடியாரைத் தொழுபவர்க்குப் பல்லியம் ஆர்த்தெழ வெண்பகடு ஊரும் பதம் தருமே"* (91) என்று அபிராமி அந்தாதியில் சொல்லுகிறார். இவர்கள் சொன்னது போல் அபயாம்பிகை பட்டரும் அன்னையின் அடியார்களைத் தொழுவதை தனது பாக்யமாகக் கருதுகிறார். ஆதிசங்கரரும் பஜகோவிந்தத்தில். *"ஸத்ஸங்கத்வே நிஸ்ஸங்கத் வம்"* என்று கூறுகிறார்.

எனக்கு பெற்றார், உற்றார் என உறவுகள் வேண்டா. வினைகளின் வழியாய் வரும் பொருளும், இவ்வுடலும் வேண்டேன். ஊரும், உலகும் வேண்டேன். பொருளைக் கொண்டு அடையும் மண்ணுலக சுகங்களும், பெண்ணுலக இன்பங்களும், அவற்றை எல்லாம் மெய் என்று எண்ணி மகிழும் இந்தப் பாழும் உடலும் வேண்டேன். அவையெல்லாம் நிலையற்றவை. இவையெல்லாம் நிரந்தரமானது இல்லையே? எல்லாம் அழியக் கூடியவைதானே.

இந்த மெய்யுணர்வை எனக்குத் தந்து "என்னை" நான் அறிந்து கொள்வதற்கு, எனக்கு அருள்புரிந்த தாயே! உனது உபய பாதங்களின் அருள் பெற்ற அடியார்களின் திருவடிகளை என் சிரம் மீது பொருத்தி, அவை பிரியாமல் நிலைத்து நிற்க மன உறுதியுடன் பற்றிப் பிடித்துக்கொண்டேன். இந்த மன உறுதி தளராமல் நிலைத்து நிற்க நீயே எனக்கு அருள் புரிவாய்!

"நம்பினோர் கெடுவதில்லை, நான்கு மறை தீர்ப்பு" என்பது முதியோர் வாக்கு. அது போல் உன்னையே நான் நம்பினேன். மற்ற யாவரையும் நான் நம்பவில்லை. மலைமகளே! உன்னை நம்பி வந்து உன்னிடம் சரணடைகிறேன்.

மயிலாபுரியில் பெருமைமிகு மாயூரநாதனின் வாழ்வாய் விளங்கும் அன்னையே! அண்டினவருக்கு அடைக்கலம் தரும் அஞ்சல் நாயகியே! அபயாம்பிகைத்தாயே!

43. அம்மா! உயிர் பிரியும்போது உனது உபயபதம் காட்டியருள்வாய்!

ஒன்றோடொன்று நெருங்கி இந்த உடலை விலக்கி உயிர் நெகிழ
உற்ற காலமதனில் எனக்(கு) உனது பதங்கள் எதிராக
நின்றே எனக்குன் அருள் அளிப்பாய் நிதியே கருணைக்
கடல்மயிலே

நேரில் அமைந்த தற்பரையே நித்யா னந்த மானவளே
அன்றே அனைத்தும் ஒன்றாக அரனாரிடத்தில் இருப்பவளே
அடர்வில் புருவ மணிநுதலே அமுதே என்றன் அகத்துயிரே
மன்றே பொருந்தும் இருபாதம் மறவாதிருக்க வரம் அருள்வாய்
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

சான்றோர்கள் நமக்குத் தரும் உபதேசம் - சதா இறைவனின் திருநாமங்களை ஜபித்துக்கொண்டு இரு. இந்தப் பயிற்சி நாம் இம் மண்ணுலக வாழ்விலிருந்து விடுபடும்போது (உயிர் பிரியும் வேளையில்) நமக்கு உதவும். இறக்கும் தருவாயில் இறைவன் நாமத்தை சொல்பவர்க்கு மோட்சம் நேரடியாகக் கிடைக்கும் என்பது நம் சமயங்களின் நம்பிக்கை. அபயாம்பிகை பட்டர் அன்னையின் இரு தாமரைத் திருவடிகளின் காட்சியை தாம் காணவேண்டும் என்று சாமர்த்தியமாக விண்ணப்பிக்கிறார். அதாவது அன்னை நேரில் வந்து அவரைக்காத்து அருள் புரிய வேண்டும்.

அபிராமி பட்டரும், *"உடம்போடு உயிர் உறவு அற்று அறிவு மறக்கும் பொழுதென் முன்னே வரல் வேண்டும் வருந்தியுமே"* (89) என்று அபிராமி அந்தாதியில் உருக்கமாக அன்னையிடம் வேண்டுகிறார்.

நமது உடல் பஞ்ச பூதங்களால் ஆனது. அதாவது ஆகாயம், காற்று, நெருப்பு, நிலம், நீர். இவை ஐந்தும் ஒன்றொடொன்றாக இணைந்து உடலை விட்டுச் சென்றால் உயிர் நீங்கும். அச்சமயத்தில் அன்னை உடனடியாக வந்து அவளது இரு தாமரைத் திருவடிகளையும் காட்டி அருள வேண்டும் என்று அன்னையிடம் வேண்டுகிறார் அபயாம்பிகை பட்டர். உலகில் உள்ள எல்லாவற்றிற்கும் நிதியாய் இருப்பவளே! கருணைக் கடலே!

மயிலாடுதுறையில் மயிலாய் வந்து தவம் இருந்து, பின் சிவனும் உன் தவத்தை மெச்சி, தானாகத் தோன்றிய தற்பரையே!

நித்யானந்தம் = நித்ய + ஆனந்தம். நித்யமான அதாவது அழிவில்லாத சாஸ்வதமான ஆனந்தம். அன்னை எப்போதும் ஆனந்தத்தில்

திளைப்பவள் அன்றோ! சிவனுடன் சேர்ந்து ஒன்றானவளே! சிவனும், சக்தியும் மூன்று விதமாகத் தோன்றுகிறார்கள். (1) இருவரும் தனித்தனி உருவங்களாகக் காணப்படுவது. (2) இருவரும் சேர்ந்த அர்த்த நாரீ ஸ்வரூபம் (3) ஒருவரில் மற்றவர் அடங்கி இருக்கும் வடிவம். காமாக்ஷியின் வடிவில் சிவன் அடங்கி இருக்கிறார். தக்ஷிணாமூர்த்தி வடிவில் அம்பாள் அடங்கியுள்ளார்.

வில்லைப் போன்ற புருவங்களுடன் மணிபோன்று ஒளிக்கும் பிரகாசமான நெற்றியையுடையவளே! அமுதமானவளே! உள்ளத்தின் உயிர் போன்றவளே! கனகசபையில் நடனமாடிய உன்னுடைய திருப்பாதங்களை என்றும் மறவாதிருக்க வரம் தந்து அருள்வாய்!

மயிலாபுரியில் வந்தவர்க்கெல்லாம் வரையிலா வரம் தரும் வள்ளலாய் விளங்கும் மாயூரநாதனின் உயிர்நாடியாய் இருப்பவளே! அடியார்க்கு அபயம் தந்து அருள் புரியும் அபயாம்பிகைத்தாயே! அனைவரையும் காத்து அருள்வாய்!

44. அன்னையே! அறம் வளர்த்த நாயகியே!

ஐம்பத்தோராம் அக்ஷரத்தி அகிலாண்டத்தி அந்தரத்தி
அமல சகத்தி அருள்மயத்தி அருண நிறத்தி அம்பரத்தி
எண்பத்தோராம் பதங்கடந்த ஏக வெளிச்சி காரணத்தி
இமயாசலத்தில் வந்தருளி இரு நாழிகைநெற் கொண்டுலகில்
உம்ப ரடியார்க் கறம்வளர்த்த உமையே அருள் வாரிதிமாதே
உனது பதத்தை அடியேனும் உரைத்து மகிழ வரம் அருள்வாய்
மண் பூத்தலரும் கமலமதில் வளரும் கனமே கொடி அனமே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே

அன்னையின் ஸ்தூல வடிவங்களைப் போற்றிப் புகழும் அபயாம்பிகை பட்டர், அவ்வப்போது 'ஸூக்ஷ்மமான' சில கருத்துக்களையும் பொருள் செறிவுடன் பாடல்களில் சொல்லியிருப்பதையும் நாம் உணர முடிகிறது. ஸகுண உபாசனையிலிருந்துதான் நிர்க்குண உபாசனைக்கு செல்ல முடியும் என்பது நடைமுறையில் நாம்அறிந்த உண்மை. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு நிலைகளையும் கடந்த மாபெரும் மகான் அபயாம்பிகை பட்டர். உலகோர் உணருவதற்காக எளிய முறையில் அவர் சொல்லியிருக்கும் அருமையான கருத்துக்களும், தத்துவங்களும் நமக்குக் கிடைத்த வரப்பிரசாதம்.

ஐம்பத்தோராம் அக்ஷரத்தி : அகரமுதல எழுத்தெல்லாம் வடிவாகக் கொண்டவளே! திருக்குறள் *"அகரமுதல எழுத்தெல்லாம் ஆதிபகவன்*

முதற்றே உலகு" என்று தானே ஆரம்பிக்கிறது. அட்சரங்கள் 'அ' என்ற எழுத்தில் ஆரம்பிக்கின்றன. ஓங்காரத்தின் முதல் அட்சரம் "அ". எவ்வாறு எழுத்துக்களுக்கு அகரம் மூலமாகின்றதோ அது போல் அனைத்து உயிர்களுக்கும் அன்னையே மூலமுதலாகி நிற்பவள்.

அகரம் முதல் க்ஷகரம் வரை ஐம்பத்தோரு எழுத்துக்களின் வடிவமாய் இருக்கிறாள். ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் (489) *அக்ஷமாலாதிதரா* - அக்ஷமாலையைத் தரித்திருப்பவள். அதாவது 'அ' முதல் 'க்ஷ' வரையில் உள்ள எழுத்துக்களை அக்ஷமாலை என்பார்கள். (மொத்தம் '51' அட்சரங்கள்). அன்னை அபயாம்பிகையின் வலது மேற்கையில் அக்ஷமாலை உள்ளது.

577. *மாத்ருகா வர்ண ரூபிணி* - மாத்ருகா அக்ஷரங்களைக் கொண்டவள். அதாவது ஐம்பத்தொரு எழுத்துக்களின் ரூபமாக இருப்பவள். இந்த எழுத்துக்களுக்கு நிறங்கள் (வர்ணம்) இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. மாத்ருகா வர்ணங்களே ஸ்ரீசக்கரம் என்றும் கூறப்படுகிறது. (மாத்ருகா விவேகம்).

ஆறு ஆதாரங்களான மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம் மணிபூரகம், அநாஹதம், விசுத்தி, ஆக்ஞை இவற்றில் முறையே 4,6,10,12,16,2 இதழ் தாமரைகளில் அன்னை வெவ்வேறு கோலங்களில், அதற்குரிய திருநாமங் களுடன் வீற்றிருக்கிறாள். இவற்றின் எண்ணிக்கை 50. இவைகள் அட்சரங்களாகும். 'ஓம்' என்றும் மூல எழுத்துடன் அட்சரங்களின் எண்ணிக்கை ஐம்பத்தொன்றாகும். இவற்றின் வடிவாய் இருப்பவள் அன்னை.

திருமூலரும் திருமந்திரத்தில் (1307) "ககராதி" என்னும் பாடலில், முன்பு தமிழ் எழுத்துக்கள் ஐம்பத்தொன்று வழக்கில் இருந்ததைப் பற்றிக் கூறுகிறார். அதிலேயே பாடல் - 1264 *"அம் முதல் ஆறும் அவ் ஆதி எழுத்தாகும்..."* என்று சொல்கிறார். அதாவது, அகர முதல் ஆறு ஆதாரங்களிலும் பொருந்தி உள்ள எழுத்து ஆதி முதலான "ஓம்" என்னும் பிரணவ எழுத்தாகும். இவை பராசக்தியின் எழுத்தாகும். பாடல் 1219-ல் *"ஆகின்ற நாள்கலை ஐம்தொருவர்கள் ஆகி நின்றார்களில் ஆருயிராம் அவள்"* என்று கூறுவார். உலகத் தோற்றம் நாள் முதலான எழுத்துக்கள் ஐம்பத்தொன்று. இவை அனைத்திலும் அன்னை கலந்திருக்கிறாள்.

மேலும் பாடல் 910ல் ("ஆனந்தம் ஒன்று என்று அறைந்திட ஆனந்தம்") அ, இ, உ, எ, ஒ, என்னும் குற்றெழுத்துக்கள் சக்தி சொரூபம் எனவும், ஆ, ஈ, ஊ, ஏ, ஓ, என்னும் நெட்டெழுத்துக்கள் சிவசொரூபம் எனவும் அம்-ஹ்ரீம், அம்-க்ஷம், ஆம் - என்பன பீஜாட்சரம் என்றும் கூறுவர்.

ஸ்ரீஸஹஸ்ர நாமத்தில் எவ்வாறு மனிதர்களின் உடலில் அட்சரங்கள் ஒலியாக உருவாகின்றது என்பதை நான்கு நாமாக்களில் தெள்ளத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அவையாவன: 366-*பரா*. 368-*பச்யந்தீ*. 370-மத்யமா. 371-வைகரீரூபா - அதாவது அன்னை 'பரா' என்ற சப்தஸ்வரூபிணியாக இருப்பதாக சொல்லப்படுகிறது. பிரம்மம் மாயையுடன் கூடினால் 'அவ்யக்தம்' எனப்படும். அந்நிலை காரண பிந்து சிருஷ்டி ஆரம்பம். சீவர்களுடைய உடலில் உள்ள குண்டலினீ சக்தி காரண பிந்து வடிவம். இது மூலாதாரத்திலிருந்து கிளம்பி நாபிக்கு வந்தால், கார்ய பிந்து, பச்யந்தீ; இருதயத்துக்க வந்தால், நாதம், மத்யமா; கழுத்துக்கு வந்தால் பீஜம் அல்லது அட்சரம், வைகரீ.

அகிலாண்டத்தி: அநேக கோடி அகிலாண்டங்களையும் தோற்று வித்தவள். அபிராமி பட்டர், அபிராமி அந்தாதியில் நூற்பயன் சொல்லும் பாடலில் *"ஆத்தாளை எங்கள் அபிராமவல்லியை அண்டமெல்லாம் பூத்தாளை..."* என்று பெருமிதத்துடன் அன்னையை போற்றுகிறார்.

அந்தரத்தி - ஆகாயமே வடிவானவள்

அமல சுகத்தி - மலங்களற்ற சுகத்தைத் தரும் அமலை (பார்வதி)

அருள் மயத்தி - அள்ளி அள்ளித் தரும் அருளே உருவான அன்னை

அருண நிறத்தி - உதயமாகும் சூரியனைப் போல சிவந்த திருமேனியுடையவள்.

அம்பரத்தி - அழகிய பராசக்தி

வியோம வியாபினி முதல் சிவாய நம: என்ற எண்பத்தொரு பத மந்திரங்களையும் கடந்த துவாத சாந்தப்பெருவெளியில் உறைபவள். இவளே எல்லாவற்றிற்கும் பரம காரணமாயிருப்பவள். தன் துணைவன் பரமேசுவரன் கொடுத்த இரண்டு படி நெல்லை வேளாளரிடம் கொடுத்துப் பெருக்கி முப்பத்திரண்டு அறங்களையும் செய்த அன்னையே! (இது காமாக்ஷியாக அமர்ந்த கோலத்தில், காஞ்சிபுரத்தில் அன்னை செய்தாள் என்று புராணம் கூறுகிறது) ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் 59 - *தர்மவர்த்தினீ* - தர்மத்தை வ்ருத்தி செய்பவள். திருவையாறு எனப்படும் பஞ்சநத க்ஷேத்திரத்தில் "தர்மஸம்வர்த்தினி" (அறம் வளர்த்த நாயகி) என்ற பெயருடன் இருப்பவள். அபிராமி அந்தாதியில் (57) *"ஐயன் அளந்தபடி இருநாழி கொண்டு..."* என்று வருவதும் காண்க.

அருளே கடலாய் உருவான தெய்வப் பெண்ணே! உனது திருவடிகளைப் போற்றி உன்னைப் புகழ்ந்து பாடி, மகிழ்ச்சியுற அடியேனுக்கு வரம் தந்தருள்வாய்! மண்ணில் வாழும் மனிதர்களின் மனத்தில் பூத்து மலரும் பெருமைமிகு அன்னக் கொடியே!

ஏண்பத்தோர் ப3தங்கள்: 1. ஓம்காரகலா பதம் 2. வ்யோம வ்யாபி 3. வ்யோமரூப 4. ஸர்வ வ்யாபி 5. ஸிவ 6. அனந்த 7. அனாத4ா 8. அனாஸ்ரிதா 9. த்4ருவ 10. ஶாஸ்வத 11. யோகபீடஸமஸ்தித 12. நித்ய யோகி3 13. த்4யானஹார 14. ஓம் ந் நமோ ஸிவாய 15. ஸர்வ பிரபு4 16. ஸிவ 17. ஈசானமூர்த்த4 18. தத் புருஷ வக்த்ர 19. அகோர ஹ்ருத3ய 20. வாமதே3வ கு3ஹ்ய 21. ஸத்3யோஜாதமூர்த்தி 22. ஓந் நமோ நம 23. கு3ஹ்யாதி3 கு3ஹ்யாதி3 24. கோப்த்ரு 25. அனித4ன 26. ஸர்வயோகா3தி4க்ருத 27. ஸர்வ வித்யாதிப 28. ஜ்யோதி ரூப 29. பரமேஶ்வர பத3 30. அசேதன சேதன 31. வ்யோமிந் வ்யோமிந 32. வ்யாபி வ்யாபிந் 33. அரூபிந் அரூபி 34. ப்ரத2ம ப்ரத2ம 35. தேஜஸ்தேஜ 36. ஜ்யோதிர் ஜ்யோதி 37. அரூப 38. அனக்3னி 39. அதூ4ம 40. அப4ஸ்ம 41. அனாதே3 42. நாநா நாநா 43. தூ4தூ4 தூ4தூ4 44. ஓம் பூ4: 45. ஓம் பு4வ: 46. ஓம் ஸுவ: 47. அனித4ன 48. நித4ன 49. நித4னோத்ப4வ 50. ஶிவ 51. ஸர்வ 52. பரமாத்ர 53. மஹேஸ்வர 54. மஹாதே3வ 55. ஸத்3ப4வேச்வர 56. மஹாதேஜ: 57. யோகா4திபதி 58. முஞ்ச முஞ்ச 59. ப்ரத4ம ப்ரத4ம 60. ஶர்வ ஶர்வ 61. பீ4வபீ4வ 62. பீ4வோத்ப4வ 63. ஸர்வபூ4த ஸுகப்ரத3 64. ஸர்வ ஸான்னித்3யகர 65. ப்ருஹ்ம விஷ்ணு ருத்ரபர 66. அனார்ச்சித அனார்ச்சித 67. அஸம்ஸ்துத அஸம்ஸ்துத 68. பூ2ர்வஸ்தித பூ2ர்வஸ்தித 69. ஸாக்ஷி ஸாக்ஷி 70. துரு துரு 71. பதங்க3 பதங்க3 72. பிங்க3 பிங்க3 73. க்ஞான க்ஞான 74. ஸப்3த3 ஶப்3த3 75. ஸூக்ஷ்ம ஸூக்ஷ்ம 76. ஶிவ 77. ஸர்வ 78. ஶர்வ 79. ஸர்வத3 80. ஓந் நமோ நம: 81. ஓம் ஸிவாய நமோ நம:

மயிலாபுரியில் வரம் தரும் வள்ளலான மாயூரநாதருக்கு உயிர்நாடியாய் விளங்கும் அபயாம்பிகைத்தாயே! அனைவரையும் காத்தருள்வாயே!

45. அன்னை அருளும் அமுதம் : அடியார்க்குப் பேரானந்தம்

மண்ணால் கரகந்தனைப் பிடித்து வாரி யெடுத்துத் தலைமீது
வைத்து ஆடும் பூசாரி மனம்போல எனது மனம் உவந்து
அண்ணாந் திருந்து குறிபார்த்தே அசையாதிருக்கில் அசைந்துருகி
அமுத தாரை ஒழுகிவர அதனுட்பொழுதைச் செலுத்தஅருள்
ஒண்ணாங் ககன முடிப்பொருளே உள்ளச் சிவமே நவரசமே
ஒன்றா யூக மனத்துயிராய் உயிருக் குயிராய் இருந்தவளே
வண்ணா லயமே ஞானவெளி வனமே எனைவந் தாண்டருள்வாய்
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே

ஸ்ரீஸஹஸ்ர நாமத்தில் எவ்வாறு மனிதர்களின் உடலில் அட்சரங்கள் ஒலியாக உருவாகின்றது என்பதை நான்கு நாமாக்களில் தெள்ளத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அவையாவன: 366-*பரா*. 368-*பச்யந்தீ*. 370-மத்யமா. 371-வைகரீரூபா - அதாவது அன்னை 'பரா' என்ற சப்தஸ்வரூபிணியாக இருப்பதாக சொல்லப்படுகிறது. பிரம்மம் மாயையுடன் கூடினால் 'அவ்யக்தம்' எனப்படும். அந்நிலை காரண பிந்து சிருஷ்டி ஆரம்பம். சீவர்களுடைய உடலில் உள்ள குண்டலினீ சக்தி காரண பிந்து வடிவம். இது மூலாதாரத்திலிருந்து கிளம்பி நாபிக்கு வந்தால், கார்ய பிந்து, பச்யந்தீ; இருதயத்துக்க வந்தால், நாதம், மத்யமா; கழுத்துக்கு வந்தால் பீஜம் அல்லது அட்சரம், வைகரீ.

அகிலாண்டத்தி: அநேக கோடி அகிலாண்டங்களையும் தோற்று வித்தவள். அபிராமி பட்டர், அபிராமி அந்தாதியில் நூற்பயன் சொல்லும் பாடலில் *"ஆத்தாளை எங்கள் அபிராமவல்லியை அண்டமெல்லாம் பூத்தாளை..."* என்று பெருமிதத்துடன் அன்னையை போற்றுகிறார்.

அந்தரத்தி - ஆகாயமே வடிவானவள்

அமல சுகத்தி - மலங்களற்ற சுகத்தைத் தரும் அமலை (பார்வதி)

அருள் மயத்தி - அள்ளி அள்ளித் தரும் அருளே உருவான அன்னை

அருண நிறத்தி - உதயமாகும் சூரியனைப் போல சிவந்த திருமேனியுடையவள்.

அம்பரத்தி - அழகிய பராசக்தி

வியோம வியாபினி முதல் சிவாய நம: என்ற எண்பத்தொரு பத மந்திரங்களையும் கடந்த துவாத சாந்தப்பெருவெளியில் உறைபவள். இவளே எல்லாவற்றிற்கும் பரம காரணமாயிருப்பவள். தன் துணைவன் பரமேசுவரன் கொடுத்த இரண்டு படி நெல்லை வேளாளரிடம் கொடுத்துப் பெருக்கி முப்பத்திரண்டு அறங்களையும் செய்த அன்னையே! (இது காமாக்ஷியாக அமர்ந்த கோலத்தில், காஞ்சிபுரத்தில் அன்னை செய்தாள் என்று புராணம் கூறுகிறது) ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் 59 - *தர்மவர்த்தினீ* - தர்மத்தை வ்ருத்தி செய்பவள். திருவையாறு எனப்படும் பஞ்சநத க்ஷேத்திரத்தில் "தர்மஸம்வர்த்தினி" (அறம் வளர்த்த நாயகி) என்ற பெயருடன் இருப்பவள். அபிராமி அந்தாதியில் (57) *"ஐயன் அளந்தபடி இருநாழி கொண்டு..."* என்று வருவதும் காண்க.

அருளே கடலாய் உருவான தெய்வப் பெண்ணே! உனது திருவடிகளைப் போற்றி உன்னைப் புகழ்ந்து பாடி, மகிழ்ச்சியுற அடியேனுக்கு வரம் தந்தருள்வாய்! மண்ணில் வாழும் மனிதர்களின் மனத்தில் பூத்து மலரும் பெருமைமிகு அன்னக் கொடியே!

எண்பத்தோர் பதங்கள்: 1. ஓம்காரகலா பதம் 2. வ்யோம வ்யாபி 3. வ்யோமரூப 4. ஸர்வ வ்யாபி 5. ஸிவ 6. அனந்த 7. அனாதா 8. அனாஸ்ரிதா 9. த்ருவ 10. ஶாஸ்வத 11. யோகபீடஸமஸ்தித 12. நித்ய யோகி 13. த்யானஹார 14. ஓம் ந் நமோ ஸிவாய 15. ஸர்வ பிரபு 16. ஸிவ 17. ஈசானமூர்த்த 18. தத் புருஷ வக்த்ர 19. அகோர ஹ்ருதய 20. வாமதேவ குஹ்ய 21. ஸத்யோஜாதமூர்த்தி 22. ஓந் நமோ நம 23. குஹ்யாதி குஹ்யாதி 24. கோப்த்ரு 25. அனித்ன 26. ஸர்வயோகாதிக்ருத 27. ஸர்வ வித்யாதிப 28. ஜ்யோதி ரூப 29. பரமேஶ்வர பத 30. அசேதன சேதன 31. வ்யோமிந் வ்யோமிந 32. வ்யாபி வ்யாபிந் 33. அரூபிந் அரூபி 34. ப்ரதம ப்ரதம 35. தேஜஸ்தேஜ 36. ஜ்யோதிர் ஜ்யோதி 37. அரூப 38. அனக்னி 39. அதூம 40. அபஸ்ம 41. அனாதே 42. நாநா நாநா 43. தூதூ தூதூ 44. ஓம் பூ: 45. ஓம் புவ: 46. ஓம் ஸுவ: 47. அனித்ன 48. நித்ன 49. நித்னோத்பவ 50. ஶிவ 51. ஸர்வ 52. பரமாத்ர 53. மஹேஸ்வர 54. மஹாதேவ 55. ஸத்பவேச்வர 56. மஹாதேஜ: 57. யோகாதிபதி 58. முஞ்ச முஞ்ச 59. ப்ரதம ப்ரதம 60. ஶர்வ ஶர்வ 61. பவபவ 62. பவோத்பவ 63. ஸர்வபூத ஸுகப்ரத 64. ஸர்வ ஸான்னித்யகர 65. ப்ருஹ்ம விஷ்ணு ருத்ரபர 66. அனார்ச்சித அனார்ச்சித 67. அஸம்ஸ்துத அஸம்ஸ்துத 68. பூர்வஸ்தித பூர்வஸ்தித 69. ஸாஷி ஸாஷி 70. துரு துரு 71. பதங்க பதங்க 72. பிங்க பிங்க 73. க்ஞான க்ஞான 74. ஸப்த ஶப்த 75. ஸூக்ஷ்ம ஸூக்ஷ்ம 76. ஶிவ 77. ஸர்வ 78. ஶர்வ 79. ஸர்வத 80. ஓந் நமோ நம: 81. ஓம் ஸிவாய நமோ நம:

மயிலாபுரியில் வரம் தரும் வள்ளலான மாயூரநாதருக்கு உயிர்நாடியாய் விளங்கும் அபயாம்பிகைத்தாயே! அனைவரையும் காத்தருள்வாயே!

45. அன்னை அருளும் அமுதம் : அடியார்க்குப் பேரானந்தம்

மண்ணால் கரகந்தனைப் பிடித்து வாரி யெடுத்துத் தலைமீது
வைத்து ஆடும் பூசாரி மனம்போல எனது மனம் உவந்து
அண்ணாந் திருந்து குறிபார்த்தே அசையாதிருக்கில் அசைந்துருகி
அமுத தாரை ஒழுகிவர அதனுட்பொழுதைச் செலுத்தஅருள்
ஒண்ணாங் ககன முடிப்பொருளே உள்ளச் சிவமே நவரசமே
ஒன்றா யூக மனத்துயிராய் உயிருக் குயிராய் இருந்தவளே
வண்ணா லயமே ஞானவெளி வனமே எனைவந் தாண்டருள்வாய்
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே

ஆடி மாதம் வந்து விட்டால் அன்னைக்குக் கொண்டாட்டம்தான். ஊரெல்லாம் திருவிழாக்கோலம் பூண்டுவிடும். தேன், பால், தயிர், இளநீர் போன்றவற்றால் அபிடேகங்கள் நடக்கும். வண்ண வண்ண பூக்களினால் அலங்காரங்களும், அர்ச்சனைகளும் செய்வர். பலவிதமான உடைகளைச் சாத்துவர். ஆடி மாதம் பருவம் மாறும் காலம். பலவித நோய்களைத் தடுக்க அன்னையை மனமாற வேண்டுவர்.

பூசாரிகள் மண்ணால் கரகம் செய்து, வேப்பிலையாலும், பூக்களாலும் அலங்கரித்து தங்கள் தலை மேல் வைத்து ஆனந்தக் கூத்தாடுவர். அதாவது அன்னையே கரக வடிவில் தலைமேல் இருப்பதாக பாவித்து ஆனந்த களிப்பு அடைவர். உடலும், உள்ளமும் அன்னையாக ஆகி விட்டால் ஏற்படுவது பேரானந்தந்தானே!

அபயாம்பிகை பட்டரும் இப்பேர்ப்பட்ட பேரானந்தத்தில் மிதக்க நினைக்கிறார். தாயே உன்னைக் கரக வடிவில் சிரமேற்றி ஆனந்தக் கூத்தாடும் பூசாரி போல், மானசீகமாக உனது திருவடிகளை என் தலைக்கு அணியாகச் சூடிக்கொள்ளும்போது, வானவெளியில் வீற்றிருக்கும் உன்னைக் கண்ணால் காணும் அவாவில் அண்ணாந்து அசையாதிருக்கும் போது, உனது அருளான அமுததாரை என்மேல் பொழிவதை உணர்கிறேன். அந்த அனுபூதிப் பேரானந்தத்தை அனுபவித்திருக்கும் ஆனந்த நிலையில் அப்படியே அசையாதிருக்க கருணை புரிய வேண்டும் தாயே! இந்தப் பேரானந்த நிலையை ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் அழகாகச் சொல்லுகிறது.

106 *ஸுதாஸாராபி வர்ஷிணி* - 'ஸுதா' எனும் அமிருதத்தை ஸஹஸ்ராரத்திலிருந்து எல்லா நாடிகளிலும் பெருகும்படி செய்பவள்.

பரவெளியில் ஒன்றேயான சிவப் பரம்பொருளாய் இருப்பவளே! இன்பம், நகை, கருணை, கோபம், வீரம், பயம், அருவருப்பு, அற்புதம், சாந்தம் என்ற ஒன்பது ரஸங்களின் நாயகியாத் திகழ்பவளே! உயிருக்கு உயிரான உமையே! எழுத்துக்களின் உறைவிடமானவளே! ஞானவெளிப் பூங்காவே!

மயிலாபுரியில் வரங்களைத் தரும் வள்ளலாய் இருக்கும் மாயூரநாதனின் ப்ராணநாடியாய் விளங்குபவளே! அண்டினவருக்கு அபயம் அளித்து அருள் புரியும் அபயாம்பிகைத்தாயே! அனைவரையும் காத்து ரட்சிப்பாயே!

46. அன்னையே! நீயே பரிபூரணி!

அவகாலத்தில் மனமும் எனக்(கு) அடங்கா தெழுந்தே எழுந்துவிம்மி
அகத்தைப் படைத்தே உனதுதிரு வருளந் தாதி தனைமறந்து
பவமா மயலா ருடன்சேர்ந்து பண்ணும் வினைநான் என்சொல்வேன்
பார்க்கப் போனால் அதற்கொருவர் பகையார் உறவார் உலகமதில்
சிவமா யிருந்த சமுத்திரத்தைத் திரிபாய் நினைக்கு மிதன்வலுமை
தேய்த்தே உனது திருவருளைத் திறமாய்ப் பெறவே வரமளிப்பாய்
மவுனா தீத அலர்கொடியே வனமூலிகையே பூரணியே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே

மனித வாழ்வில் இருவகைப்பட்டவர்களைப் பார்க்கிறோம். சிலர் எப்போதும் தெய்வ சிந்தனையோடு வாழ்வர். "எல்லாம் அவள் செயலே" என்ற நம்பிக்கையில் திடமாய் இருப்பர். எது வந்தாலும் (நல்லதோ, கெட்டதோ) எல்லாம் அவள் பார்த்துப்பாள் என்ற உறுதியுடன் இருப்பர்.

மற்றும் பலர் உலக விஷயங்களில் ஈடுபட்டு போகங்களை அனுபவிப்பதே மனிதப்பிறவியின் பயன் என்று நினைத்து உற்றார், உறவினரிடம் பற்றும், அழியும் பொருள்களின் மீது ஆசை வைத்தும் சிற்றின்பங்களில் சிக்கித் தவிப்பர். இவ்வாறு இவர்கள் வாழ்ந்த காலத்தை அவகாலம் என்று ஆசிரியர் மிகப் பொருத்தமாகச் சொல்லுகிறார். அதாவது அது வீணான காலம்.

அவகாலத்தில் நம் மனம் ஒரு இடத்தில் நிலைத்து நிற்பதில்லை. அது க்ஷணத்திற்கு க்ஷணம் மாறிக்கொண்டே இருக்கும். இதைத்தான் "அலைபாயும் மனம்" என்று கூறுவார்கள். அது அடங்குவதேயில்லை. நிலையற்ற பொருட்களின் மீது பற்றுக் கொண்டு உடைமைகளையும் சிற்றின்பங்களையும் பெற்று பெற்று ஆணவ மலத்தையும் அதிகரிக்கிறது. இதனால் ஞானம் மங்கி, அன்னையின் நினைவும் சிறிதாகக் குறைகிறது.

தாயே! இப்படிப்பட்ட வினைகளை உருவாக்கும் பகைவர் யார்? இதினின்று நம்மை மீள வைக்கும் உறவினர் யார்? அடியேன் ஒன்றும் புரியாமல் மயக்கத்தில் கிடக்கிறேன்.

சிவப் பரம்பொருளாகிய சமுத்திரத்திற்கு நீ கலங்கரை விளக்காய் அகில முழுவதும் வியாபித்திருக்கிறாய். நீயே என் மயக்கத்தைத் தீர்த்து உன் திருவருளைப் பொழிந்து உறுதியுடன் அடியேன் உய்ய வரம் அளிப்பாய்! மௌனத்திற்கும் மேற்பட்ட நிலையில் உள்ள கொடியே! பிணிகள் அனைத்தையும் போக்கவல்ல மூலிகைகளைக் கொண்ட பூங்காவாய் இருப்பவளே! எங்கும் பூரணமாய் நிறைந்த பரிபூரணியே! ஸ்ரீ லலிதா

ஸஹஸ்ரநாமம் (292) *பூர்ணா* நிறைந்தவள் - காலம், தேசம், வஸ்து இவற்றால் கட்டுப்படாதவள். எனவே எப்போதும், எங்கும் எதிலும் நிறைவாய், ப்ரஹ்மத்தின் வடிவாய் இருப்பவள். அதாவது பரிபூரணமாய் இருப்பவள்.

ஈசாவாஸ்யோபநிஷத்தில் அன்னை எப்போதுமே பூர்ணமாய் இருப்பதை வெகு அருமையாய்ச் சொல்லும் ஸ்லோகம்:

ஓம் பூர்ணமத: பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ண முதச்யதே.

பூர்ணஸ்ய பூர்ண - மாதாய பூர்ண மேவோ வசிஷ்யதே! ஓம்

அது பூர்ணம். இதுவும் பூர்ணம் . பூர்ணத்திலிருந்து பூர்ணம் உதயமாயுள்ளது. பூர்ணத்தினின்று பூர்ணத்தை எடுத்தும் பூர்ணமே எஞ்சி நிற்கின்றது. அபிராமி பட்டர் அன்னையை "பூரணாசல மங்கலையே" என்பார். (அபிராமி அந்தாதி-20)

மயிலாடுதுறையில் மாயூரநாதனின் வாழ்வாய் விளங்கும் அபயாம்பிகைத்தாயே! அனைவருக்கும் அருள் புரிவாயே!

47. அன்னையே வினையை வெல்லமுடியாதோ?

வினையின் பயனே பயன்அதனை வெறுத்துத் தறிக்கப் போகாதோ
வெய்யோன் உதயத் தெதிர்பனியும் விம்மிச் சுரந்து வளர்ந்திடுமோ
நினையும் நினைப்பும் அதற்காதி நீயும் உனது பதியோனும்
நிசமாய் எனது வசமானால் நில்லாதெந்த வெவ்வினையும்
தனையே அறிந்தால் இன்பதுன்பத் தடைதான் வந்தால் அதுநிகரோ
தகைவோர் இவைகட் கஞ்சுவரோ தாயே மிகுந்த சவுந்தரீ உன்
மனையே அறியக் கருணைபுரி மணி நாதாந்தத் தனிச்சுடரே
மயிலாபுரீயில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே

தாய், தந்தையர் தங்கள் குழந்தைகளிடம், அவர்கள் நலம் கருதி, சில காரியங்களை உடனே செய்யாது தள்ளிப் போடுவர். அப்போது அந்தக் குழந்தைகள் தாயிடம் உரிமையோடு. "நீ நினைத்தால் இப்பவே செய்ய முடியாதா ?" என்று வாக்குவாதம் செய்யும். அன்னையின் அன்பர்கள் அனைவருமே தங்களைக் குழந்தைகளாகக் கருதுபவர்கள். தாயிடம் எதை வேண்டுமானாலும் மனம் விட்டு பேசுவார்கள். உள்ளொன்று வைத்து, புறமொன்று பேசாது குழந்தைகள். உள்ளதை உள்ளபடி சொல்லும் உயர்ந்த நிலையில் இருப்பவர்கள். அது போல் அபயாம்பிகை பட்டர் அன்னையிடம் "நீ நினைத்தால் என்னை வினையினின்றும் அதன் விளைவுகளினின்றும் காப்பாற்றி தடுத்து ஆட்கொள்ள முடியாதா ?" என்று கேட்கிறார்.

அறம், பாவம் என்ற இருவினையின் பயன்களை அனைவரும் அனுபவித்தே ஆக வேண்டும் என்கிறார்கள். வினையின் விளைவுகளை என்னால் தவிர்க்க முடியாதோ?

காலையில் கதிரவன் வானில் வந்தவுடன், அதன் ஒளிபட்டவுடன் பனிமூட்டம் உருகி விலகுவது போல் உன்னையே நினைத்திருக்கும் நினைவுகள் உன்னையும் உன் பதியையும் என் வசமாக்காதோ? அப்பனும் அம்மையும் என் பக்கம் இருந்தால் கொடிய வினைகளும் என்னை விட்டு ஓடாதோ? உனது அடியார்கள் இதற்கெல்லாம் அஞ்சுவார்களோ?

அபயாம்பிகை பட்டர் சிறு குழந்தைபோல் தாயிடம் கேள்வி மேல் கேள்வி கேட்டு வாதாடும் காட்சியை நம் கண் முன்னால் காண்கின்றோமன்றோ? இதுதான் "சக்தி வழிபாட்டின்" சிறப்பம்சமாகும். தெய்வத்தைத் தாயாகக் கொண்டு விட்டால் நாம் கவலைப்பட வேண்டியதில்லை. நாம் என்ன பேசினாலும், செய்தாலும் அதை மனதிற் கொள்ளாது, பாரபட்சம் இன்றி அனைவருக்கும் அருள் புரிபவள் அன்னை.

அழகிய சுந்தரியே! ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் (48) *மஹாலாவண்ய சேவதி* - அழகுக்கெல்லாம் ஒரு களஞ்சியம் அல்லது பெட்டகமாயிருப்பவள். ஸௌந்தர்ய லஹரீ (12) - *"த்வதீயம் ஸௌந்தர்யம்..."* என்ற ஸ்லோகத்தில் "பிரம்மா போன்றவர்கள் கூட உன்னுடைய அழகை வர்ணிக்க முடியாத நிலையில் உள்ளனர்" என்று ஆதிசங்கரர், அழகில் அன்னைக்கு ஈடாக யாரும் இல்லை என்பதைப் பெருமிதத்துடன் உரைக்கிறார்.

அன்னையே உனது கருணாலயத்தை வலம்வர எனக்கு அருள் புரிவாயாக!

48. அன்னையே அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரிவாய்!

கனிந்து கனிந்துன்றனைப்பாடிக் கசிந்தே இருகண் புனல்பெருகக்
காது உபயம் உனதருளாம் கதையைக் கேட்க உனதடியார்
இனந்தான் உறவாய் மனம்புதைய எந்த நாளும் அவர் இருந்த
இடத்தை இருதாள் சுற்றிவர இரவும் பகலும் நினதருளை
நினைந்த படியே சிந்தைசெய்யும் நெறியை உதவி எனைக்காப்பாய்
நித்யானந்தப் பழம்பொருளே நிமலி அமலை புகழ்விமலி
வனைந்த சடலத் தொழில் உனது அடிக்கே இதமாய் அருள்புரிவாய்
மயிலாபுரியில் வளர்சன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே

அபயாம்பிகை பட்டர் தீராப் பக்தி கொண்டவர். அத்துடன் நில்லாது அடியார்களின் (ஸத்சங்கம்) உறவையும் உன்னதமாக நினைத்தவர். அடியார்களுக்கு அடியாராக இருந்தால் ஆண்டவனை அடைதல் எளிது. அடியார்களின் திருவடிகளையும் வணங்கியவர் தாயுமானவர், *"அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கிவிட்டு விட்டால் இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே"* என்பர். மாணிக்க வாசகரும் *"அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய்"* என்று சொல்லுகிறார். அபிராமிபட்டர் *"அப்பனும் அம்மையும் அவர் இருக்கும் இடம் தேடி வந்து. அடியார்களின் நடுவே இருக்கச் செய்தார்கள்"* என்று அபிராமி அந்தாதியில் (41) கூறுவர். ஆதிசங்கரரும் பஜகோவிந்தத்தில் ஸத்சங்க்கத்தின் அவசியத்தை வலியுறுத்துகிறார். (*ஸத்சங்கத்வே நிஸ்ஸங்கத்வம்* என்ற ஸ்லோகத்தில்)

அன்னையை உபாசனை செய்யும் அன்பர்களுக்கு ஸத்சங்கம் ஒரு முக்கியமான அங்கம் என்பதை நினைவுபடுத்துகிறார் அபயாம்பிகை பட்டர். அடியார்கள் என்றால் அன்னையின் திருவடியைப் பற்றியிருப்பவர்கள். நாமும் அவளது திருவடியை அடைய வேண்டுமானால், முன்னமே, அவளது திருவடிகளைப் பற்றியவரிடம் (குருவிடம்) பணிந்தால்தான் அது முடியும். அவளது திருவடிகளைப் பற்றிய அடியார்க்குத் தீங்கு நினைப்பவன் கடைத்தேற இயலாது. இதுதான் சாக்தத்தின் அடிப்படைக் கொள்கை.

தாயே! உன் அழகுத் திருஉருவத்தை உள்ளத்தில் பதித்து, உன் திருநாமங்களையே பாடும் திருப்பணியைக் கொள்ள வேண்டும். கசிந்து கசிந்து உன்னைப்பாடி கண்களில் நீர் பெருகி வழிய வேண்டும். உடல் மயிர் கூச்சடைய வேண்டும். அப்போது அடையும் ஆனந்த நிலையில் உள்ளம் திளைக்க வேண்டும். எனது இரு செவிகளும் உனது பெருமையையும், கருணையையும் சொல்லும் கதைகளையே கேட்க வேண்டும். ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும். எந்நாளும் அந்த அடியார்களின் திருவடிகளை சுற்றி, சுற்றி வரவேண்டும். அப் பாக்கியம் அடியேன் அடைவதற்கு அல்லும் பகலும் உனது நினைவில் நான் திளைத்திருக்க வேண்டும். இவ்வளவும், தாயே! நீதான் அடியேனுக்குத் தந்து அருள்புரிய வேண்டும் என்று அன்னையிடம் உருகுகிறார் அபயாம்பிகை பட்டர்.

நித்யானந்த சொரூபியே! பார்வதியே! அனைவரும் புகழ்ந்து விளங்கும் விமலையே! அடியேனுடைய உயிரும், உடலும் உன் திருவடியிலே திளைக்க அருள்புரிவாய்!

49. தாயே! என்ன மனித உலகம் இது!

குலந்தான் நலந்தான் குடியிலுள்ள குணந்தான் கனந்தான் எமதெனவே
கொள்ளும் கயவர்க்கதுவசனங் குலவும் உன்றன் இருபதத்தைச்
சிலந்தி யிழைபோல் அறிவுருகச் செகத்தில் கண்டு பிடித்தவர்க்குச்
செகதூஷணிப்பும் நகைப்பும் என்ன செய்யும் அவரை மலர்க்கொடியே
அலர்ந்த முளரி முகத்தாள் உன் அடிமையான நாயேனை
யார்தான் நகைத்துப் பழித்தும் என்ன ஆதி கிருஷ்ணன்றன் துணைவி
மலர்ந்த மனமார் அடியவர் பால் வளரும் ஒளிசேர் நிலமாதே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே

வாழ்க்கையில் (எந்தத் துறையானலும்) கஷ்டப்பட்டு உழைத்து முன்னேற்றம் கண்டு எல்லோருக்கும் முன்னோடியாக நிற்பவர்களைப் பார்த்து சிலர் பொறாமை கொள்ளுவர். தாறுமாறாகப் பேசுவார்கள். அவருடைய குணங்களைப் பற்றி விமரிசனம் செய்வார்கள். அன்று முதல் இன்று வரை எல்லா இடங்களிலும் இவ்வாறு நடப்பதைக் காண்கிறோம்.

உலகப் பற்றற்று அன்னையின் உபய பாதங்களையே பற்றாகப் பற்றி வாழ்ந்த மாபெரும் மகான் அபயாம்பிகை பட்டர். அன்னை அபயாம்பிகைத் தாயின் சன்னிதியிலேயே எப்பொழுதும் இருந்து கொண்டு அன்னையின் திருக்கோலத்தின் அழகைப் பார்த்துப் பார்த்து ஆனந்தம் அடைந்து அன்னையின் திருநாமங்களை ஜபிப்பர். இப்பேர்ப்பட்ட ஜீவன் முக்தரை சிலர் தூஷித்தனர். அபிராமி பட்டரும் இது மாதிரி இன்னல்களுக்கு ஆளானவர் என்பது நமக்குத் தெரிந்ததே!

இவ்வாறு பலர் சொன்ன பழிச்சொற்களால் மனம் வருந்தி அன்னையிடம் முறையிடுகிறார் மிக்க வருத்தத்துடன். பிறகு ஒருவாறு மனம் தேறி, *"தூற்றுவார் தூற்றட்டும், போற்றுவார் போற்றட்டும். அதைப் பற்றி எனக்கு என்ன கவலை! உன்னுடைய திருவடிகள் உற்ற துணையாக இருக்கின்றதே! அது போதும்"* என்று சற்று சாந்தமடைகிறார்.

தாயே எனது குலம், எனது குடி, எனது ஜாதி, எனது பெருமை, எனது கூட்டம் என்று தற்பெருமை பேசித் திரியும் கயவர்கள் சொல்லுவதைக் கேட்டு அடியேன் கவலைப்படவில்லை. உனது அழகிய திருக்கோலத்தை உள்ளத்திலே ஏற்றி உனது திருவடிகளை சிலந்தி பின்னுவது போல் அடியேனுடைய கரங்களினால் பற்றிக் கொண்டேன் இக்கயவர்களின்

பழிச்சொல் என்னை என்ன செய்யும்? உனது அடிமையான அடியேனை யார் ஏசினால் என்ன? பேசினால் என்ன? என்று வருத்தம் நீங்கி, அழுத்தந் திருத்தமாகப் பாடும் பாடலிது.

தாமரை மலர் போன்ற திருமுகத்தை உடையவளே! கூப்பிட்ட குரலுக்கு ஓடிவந்து காக்கும் தாமரைக் கண்ணனின் திருத்தங்கச்சியே! கஜேந்திரன் என்ற யானை, "கோவிந்தா" என்று கூப்பிட்ட குரலுக்கு ஓடி வந்து மோட்சம் அளித்தவரும், "கிருஷ்ணா" என்று திரௌபதி அழைத்தவுடன் அவள் மானத்தை காப்பாற்றிய திருமாலின் சகோதரியே! அடியார்களைக் காத்து, அவர்கள் உள்ளத்தில் ஒளியாய் இருக்கும் நிலவைப் போன்றவளே! மயிலாடுதுறையில் மாயூரநாதனின் ப்ராணநாடியாகவும், அடியவர்களுக்கு அபயம் தந்து அருள்புரியும் அபயாம்பிகைத்தாயே! அனைவரையும் காத்து அருள் புரிவாயே!

50. அன்னையே! கயவர் பின் செல்லாமல் காத்தருள்வாய்!

நீர்மேல் குமிழியாம் உடலை நிலையாம் எனவே கயவரெல்லாம்
நின்று புவியில் தனம் தேடி நீள மயக்கால் மிகவாடிப்
பார்மேல் பெரியோர் தமைப்பழித்துப் பண்ணும் வினைகள்
வெகுகோடி
பாவியர்கள் பாற் சேராதுன் பதமே கதியாய்ப் பதித்துவைப்பாய்
கார்மேல் பொருது மதிக்கதிரே கனகா பரணி மணிப்பிறையே
ககன முடியில் வளர்ந்தெழுந்த கஞ்சாசனத்து நிலையாளே
வார்மேற் பொருது மலர்க்குயத்தி வானில் வளரும் முகில்வேணி
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே

உலகில் காணும் பெரிய விந்தை - நம்மைச் சேர்ந்த உற்றார், உறவினர் மற்றும் பலர் நம் கண் முன்னாலேயே உயிர் நீப்பதை காண்கிறோம். இருந்தாலும் இம்மானிட வாழ்க்கை நிரந்தரம் என்று நினைக்கிறோம். அதாவது *"உலகே மாயம்! உடலே மாயம்!"* என்பதை மறுக்கிறோம்.

நீர்மேல் தோன்றும் குமிழி போன்ற நிலையில்லாத உடலை சாசுவதமானதாக எண்ணி, அந்த உடலின் மேலுள்ள ஆசையால் அதைப் போற்றி பேணிக் காத்து அதன் கள்ளப் புலன்கள் விரும்பும் வேட்கைகளைத்

தீர்க்க, ஓடி ஓடிப் பொருள் சேர்க்கும் கயவர்கள் இவ்வுலக சிற்றின்பங்களில் மயங்கி, அவற்றையே பேரின்பமாக நினைத்து போலியான சுகத்தை அடைகின்றனர். இந்த சுகம் நிலையற்றது. மிக அல்பமானது என்று உணர்வதில்லை. சாந்தோக்ய உபநிஷத் *"யோவை பூமா தத் ஸுகம் நால்பே ஸுகமஸ்தி"* என்று அருமையாகச் சொல்கிறது. (எது அளவு கடந்ததோ அதுவே சுகம். அல்பத்தில் சுகமில்லை).

"உலகம், உடல், அதில் வரும் சுகம் எல்லாம் நிலையற்றவை. அன்னையின் அருளே ஆனந்தம். அதுவே நித்யமானது" என்று அறியாமல் பெரியோர்களை இழிவாகப் பேசி, பாபச் செயல்களில் ஈடுபடும் கயவர்களிடம் மறந்தும் சேராது என்னைக் காத்து, உனது திருவடிகளையே அடியேன் எப்போதும் பற்றிப் போற்றி பணிந்து இருக்க அருள் புரிவாய் அன்னையே! "உன் பதமே கதியாய் பதித்து வைப்பாய்" என்று அபயாம்பிகை பட்டர் சொல்லும் விதமே மிகு அருமையாய் உள்ளது!

மேகக் கூட்டத்திடையே தோன்றும் பூர்ண சந்திரனாய், பொன்னாபர ணங்கள் பூண்ட பூரணியாய், உணர்வுடையோர் மதிக்கின்ற மாணிக்க பிறையாய் (மாணிக்க கல் எப்போதும் தானே ஒளி விடும் தன்மையுடையது) எந்நேரமும் ஒளிரும் ஜோதியே! புவனம், வானம், ககனம் என்ற மூன்றிலும் ககனத்தின் முடிவில் பரவெளியில் (அப்பாலுக்குப் அப்பாலாய்) தாமரையே தனது ஆசனமாகக் கொண்டு அமர்ந்திருப்பவளே! (ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் 278 *பத்மாஸனா*).

அடியார்களுக்கும், அன்பர்களுக்கும் எந்நேரமும் வழங்குதற்குரிய, வார் அணிந்த தனபாரங்கள் கொண்டு அருள்புரியும் அன்னையே! அன்னையின் திருமுலைப்பால் கருணையும், அருளும் நிறைந்தவை. அன்னையின் அமுதத்தை அருந்திய ஞானசம்பந்தர் தலைசிறந்த கவிஞர் ஆகிவிட்டார் என்று ஆதிசங்கரர் ஸௌந்தர்யலஹரியில் (75) பெருமிதத்துடன் கூறுகிறார். வானில் வளரும் முகில் வேணியே!

மயிலாபுரியில் பெருமைமிகு மாயூரநாதனின் உயிரே! அண்டினவருக்கு அபயம் தரும் அபயாம்பிகைத் தாயே!

51. அம்மா! எப்போது என்னை உன் அடிமையாக்குவாய்?

ஏழை எனையே காக்கவகை எடுத்த உன்றன் இதயமெலாம்
இரங்கி இரங்கிச் சலித்துமதி எனையே குறிக்கப் பொருந்திலையோ
சூழஉன்றன் இருபதத்தைச் சுகமாய் மனதில் பொருத்தி இன்னஞ்
சொந்த அடிமையாக்கிலையோ சும்மா இருப்ப தென்வகையோ
ஆழி யமுதை அடுத்தவருக்(கு) அகத்திற் பசியும் உண்டாமோ
அமுத வருஷம் பொழிந்திடில் என் அதிட்டமதிலோர் குடையாக
வாழப் பிடித்தால் உன்னைஎன்னால் வசனித்திட வாக்கினைத்தருவாய்
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

அன்னையின் அருளாளர்கள் அனைவரும் அன்னையின் அடிமையாய் இருக்கவே ஆசைப்படுவதின் நோக்கம் என்ன? அடிமையாகி விட்டால் அவர்களுக்கு என்று ஒன்றும் இருக்காது. எல்லாப் பொறுப்புகளும் அன்னைக்கே! அப்போது அவர்கள் ஒருவித நினைப்பின்றி எப்போதும் அன்னையையே தியானித்துக் கொண்டு இருக்கலாம். எந்தவித சுக துக்கங்களுக்கும் ஆளாக வேண்டாம். இதுதான் "ஆனந்தா ஆனந்த நிலை" அபயாம்பிகை பட்டரும் வேண்டுவது இதுதான்.

அம்மா எப்போதும் உன்னையே நினைத்து, உன் திருநாமங்களைச் சொல்லிக் கொண்டு, உன் அடியார்களின் நடுவிலே இருக்க ஆசைப் படுகிறேன். இன்னும் ஏன் உன் மனம் இரங்கவில்லை? என்னைக் காக்க வேண்டும் என்ற எண்ணம் உன் கருணை உள்ளத்தில் இன்னும் ஏன் தோன்றவில்லையோ? உன் திருவடிகளைத் தவிர வேறு பற்று இல்லாத இந்த ஏழை மீது கருணை கொண்டு, என்னை உனது அடிமையாக்கிக் கொள்ள மாட்டாயா? நான் என்ன சொல்லியும் நீ பேசாமல் சும்மா இருப்பது, எந்த வகையைச் சேரும்? தாயே! நான் உனக்கு அடிமையாக இருக்கும் தன்மையை நீயேதான் எனக்கு அருள வேண்டும். நான் உனக்கு அடிமை என்று எண்ணினால் போதாது.

அமுதம் அருந்தியவருக்கு பசியென்னும் பிணியே (எந்தப் பிணியுமே) இராது என்பார்கள். என்னைப் பொறுத்த வரையில் உன் கருணை மழையே என்மீது பொழிய நான் விரும்பும் அமுத மழை. அதுவே நான் ஏங்கும் அதிர்ஷ்டக் குடை. என் தாயின் கருணை மழை என்மேல் பொழிந்தால், அவள் கருணைக் குடையை என்னை நோக்கி அருளினால், அந்த ஆனந்த வெள்ளத்தில் அவள் திருநாமங்களைச் சொல்லிக் கொண்டே பேரானந் தத்தில் திளைத்திருப்பேன்.

52. அன்னை - வேத விழுப்பொருள்

கொடுங்கை தன்னால் எடுத்தசிறு குழந்தை தனைத்தாய்
எறிவாளோ
கோபங் கொண்டால் யான்நீகரோ குலவுங் கருணை நிலையாளே
அடங்கி உனது கோபமெல்லாம் அகற்றி எனது பரிதாபம்
அறிந்துன் னருளைப் பாலித்தே ஆள்வாய் வேத விழுபொருளே
தொடங்கும் பரமன் இடப்பாகத்(து) ஒளிரு மணியே அணிப்பணியே
தொலையாச் செனன அலைஅகலத் தோற்றும் உனது துணைப்பாதம்
அடங்கத் தெரிய மனம் அடங்க வாரிக் கருணை பொழிந்தருள்வாய்
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

அன்னை பராசக்தி வேதத்தின் விழுப்பொருள் ஆனவள். வேதங்கள் அவள் திருவடிகளின் கீழ் இருக்கின்றன. அன்னை வேதங்களையே தன் திருப்பாதங்களில் சிலம்புகளாக அணிந்துள்ளாள். அவள் உறையும் சிந்தாமணி கிருகத்தின் நான்கு வாயில்களாக வேதங்கள் இருக்கின்றன. அவளே வேதமாதா! வேத ஜனனீ! வேத வேத்யா! அவளே வேதங்களின் அடி, நடு, முடியாக உள்ளாள். அபிராமி பட்டர், அபிராமி அந்தாதியில் அன்னை வேதங்களின் பலவித அங்கங்களாகவும், அவற்றின் உட்பொருளாகவும் இருக்கிறாள் என்று பல பாடல்களில் சொல்லுகிறார். சுருங்கச் சொன்னால் அன்னை அநாதி, வேதம் அநாதி.

சிவப்பரம்பொருளின் இடது பாகத்தில் அமர்ந்து சிவனுக்கே பெருமை சேர்ப்பவள் நீ! மாசிலாமணியாய் எந்நேரமும் ஒளிர்பவளும் நீயே! சிவத் தொண்டினையே உனது அணியாகவும் கொண்டவள்! ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் (727) உன்னை *சிவஜ்ஞாந ப்ரதாயினீ* என்று சொல்லுவது மிகப் பொருத்தமே. அதாவது, அடியார்களுக்கு சிவமான அறிவை அளிப்பவள். (அல்லது சிவதத்துவத்தை உணர்த்துபவள்).

அலைகள் ஓய்வதில்லை. அவ்வாறே இப்பிறவியும் இந்தப் பிறவிப் பிணியிலிருந்து விடுபட, உனது திருவடிகளையே பற்றத் துடிக்கிறேன் தாயே! அறியாமை என்னும் இருளில் கிடந்து அவஸ்தைப்படுகிறேன். அந்த இருளிலிருந்து என்னை விடுவிக்க ஒளிமயமான உன் திருவடித் தாமரைகளை முழுதும் தெரியுமாறு எனக்கு காட்டியருள்வாய் தாயே!

சேய் செய்யும் தவறைக் கண்டு கோபமடைந்தாலும், தாய், கையில் எடுத்த சேயை எறிவாளோ? அவள் கை வளைந்திருப்பது (கொடுங்கை -

வளைந்த கை) கருணை கொண்டு கையில் எடுத்த குழந்தையை வாரி அணைத்துக் கொள்ளத்தானே! நான் செய்யும் தவறுகளுக்காக தாயான நீ, என்மேல் கோபங்கொண்டால், அதைத் தாங்கும் சக்தி ஏது எனக்குத் தாயே? அன்னை அபயாம்பிகையின் கீழ் இடது திருக்கையும் சற்றே வளைந்துள்ளது! (ஊருஹஸ்தம்)

கருணையே உருவான தாய் நீயல்லவா! உன் கோபத்தை விட்டு என் மீது கருணை காட்ட வேண்டுகிறேன். எனது பரிதாப நிலையை உணர்ந்து என்னை ஆட்கொண்டு அருள் புரிவாய் அபயாம்பிகைத் தாயே! மயிலாபுரியில் மாயூரநாதனுக்கு ப்ராண நாடியாய இருப்பவளே!

53. அன்னையே! அடியேனுக்கு சிவலோகம் சிந்திப்பது எப்போது?

கானலதனைப் புனலாகக் கருதி நினைக்கும் மானது போல்
கவலையுடனே குடும்பம் எனும் கனவாகிய பொய்ம் மாயைதனில்
ஈனருடனே இருந்துசொல்லி எல்லாம் எமதென்றெயிலாக
இறுமாப் படைந்து மனம் வீணாயிரிந்து கலங்கித் திரியுமையோ
நான்நான் எனவே மகிழ்ந்திருந்த நடத்தையகலச் சிவபுரத்தில்
நாதன் கழல்கள் உணர்வினுள்ளே நடு வாழ்ந்திருக்க அருள்புரிவாய்
வானானந்தத் தவக்கொடியே வனச முகத்தி வாள்நுதலே.
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

சென்ற பாடலில் அன்னையை சிவபெருமானின் இடப்பாகத்திலிருந்து சிவத் தொண்டினைச் செய்யும் ஸதாசிவ குடும்பினியாகப் பார்த்தோம். அன்பர்களுக்கு சிவஞானம் தருவதை உணர்ந்தோம். இதற்கு பின் சிவபுரம் அடைவோம் என்று மனதில் உறுதி வந்தாலும் அபயாம்பிகை பட்டர் 'அது எப்போது' என்று குழந்தை போல் ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் அன்னையிடம் கேட்கிறார். அபிராமி பட்டரும் அபிராமி அந்தாதியில் (28).

"சொல்லும் பொருளும் என நடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே நின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும் அவர்க்கே அழியா அரசும்
செல்லும் தவநெறியும் சிவலோகமும் சித்திக்குமே" - என்பார்.

சிவனும், சக்தியும் ஒன்றேயான பொருள். நாணயத்தின் இரு பக்கங்கள். சிவனைத் தொழுது, அவன் திருவடி சேர சக்தி கொடுப்பவள் சக்தி. இதுதான் இதன் உட்பொருளும், கருத்தும், *'சிவலோகம்*

சித்திக்குமே' என்று சொல்லியிருப்பது மிக அருமை. அதாவது அல்லும் பகலும் (சதா சர்வகாலமும்) அன்னையைத் துதிக்கும் அன்பர்களுக்கு அவர்கள் கோராமலே சிவலோகம் கிடைக்கும் என்பதே!

கானல் நீரை உண்மையான நீராகக் கருதி ஓடும் மான் போல், மாயையான இவ்வுலக வாழ்வில் ஈடுபட்டு பொய்யான கனவாகிய சம்சாரத்தில் உழன்று, நான், எனது உறவு, எனது உடைமைகள் என்று இறுமாப்புடன் கீழான உணர்வுகளுடைய உறவினருடன் கூடி மகிழ்ந்து திரியும் நானும், ஒருவன் ஆவேனோ?

இந்த அகங்கார, மமகார உணர்வுகளும், செயல்களும் என்னை விட்டு நீங்க, தாயே! என்னை சிவபுரத்து குடிமகனாக்கி, எப்போதும் நாதன் கழல்களின் நினைவிலேயே வாழ்ந்திருக்க அருள் புரிவாய்.

வானத்தில் படர்ந்து திகழும் தவக்கொடியாய் இருப்பவளே! தாமரை போன்ற திருமுகத்தை உடையவளே! ஒளி வீசும் அகன்ற நெற்றியை உடையவளே! மயிலாபுரியில் பெருமைமிகு ஈசனாய் விளங்கும் மாயூரநாதனின் உயிர்நாடியாய்த் திகழும் அபயாம்பிகைத்தாயே!

54. அன்னையே! உனது அருட்பால் தந்தருள்வாய்!

நிலம் கால் ககனம் கடல்அனலும் நீள இருந்த நெறிச்சுடரே
நிரவி உலகெங்கினும் உயிராய் நிறைந்தேயிருந்த தவப்பொருளே
பல காலமும்உன் இருபதங்கள் பாடிப் பாடிக் கசிந்துருகிப்
பரவும் விழிகள் புனல்ஆறாய்ப் பெருகி எனது மனம் உருகக்
கலையும் நிலையும் தெரிந்திருக்கக் கனவாய் உலகம் மறந்திருக்கக்
கபிலைப் பசுவுங் கதறிமிகக் கன்றைத் தேடி வருவதுபோல்
மலமா யாதி அகலஎன்பால் வந்துன்னருட்பால் தந்தருள்வாய்
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

பஞ்ச பூதங்களின் தன்மையாய் இருக்கிறாள் அன்னை. அன்னை நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயமென்று இருப்பவள். இந்த அண்டத்தில் உள்ளது பிண்டத்திலும் உள்ளது என்று சொல்லுவார்கள். இந்த பஞ்ச பூதங்களாகவும், சீவர்களின் உடலில் நின்று ஒளிரும் ஒளியாய் இருக்கிறாள். மூலாதாரத்தில் பிருத்வீ தத்துவமாகவும், ஸ்வாதிஷ்டானத்தில் அக்னி

தத்துவமாகவும், மணிபூரகத்தில் நீரின் தத்துவமாகவும், அநாஹதத்தில் வாயு தத்துவமாகவும், விசுத்தியில் ஆகாய தத்துவமாகவும், ஆக்ஞையில் மன தத்துவமாகவும் அன்னை விளங்குகிறாள் என்று ஆதிசங்கரர் ஸௌந்தர்யலஹரியின் 9-வது ஸ்லோகத்தில் (*மஹீம் மூலாதாரே*) உலகோர்க்கு உணர்த்துகிறார்.

ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமத்தில் (949) அன்னையை *"பஞ்சபூதேசி"* என்று வாக்தேவதைகள் சொல்கிறார்கள். அதாவது மேற்கூறிய பஞ்ச பூதங்களுக்கும் ஈஸ்வரி.

உலகுக்கெல்லாம் உயிராய் நிறைந்த தவப்பொருளே! காலம் காலமாக உன்னுடைய இரு தாமரைத் திருவடிகளை உள்ளத்தில் இருத்தி, உனது திருநாமங்களை நாவினால் பாடி, விரும்பித் தொழுது விழிநீர் மல்கி, மெய் புளகம் அரும்பித் ததும்பிய ஆனந்தமாகி, கனவாய் உலகம் மறக்க, நினைவாய் உன் திரு உருவம் நிலைத்து நிற்க, கதறும் கன்றை நோக்கி ஓடிவரும் தாய்ப்பசுவைப் போல, என் மலங்களும், மாயங்களும் அகல என்பால் வந்து உனது ஞானப் பாலை (அருட்பாலை) தந்தருள்வாய்!

சீர்காழியில் அழுத குழந்தைக்கு வானில் இருந்து பறந்து வந்து அன்னை ஞானப்பாலை ஊட்டியதால் அன்றோ, அக்குழந்தை பிற்காலத்தில் திருஞான சம்பந்தர் என்ற பெயர் பெற்று, உலகம் புகழும் கவிஞராக விளங்கியது. (ஸௌந்தர்யலஹரி-75-"தவஸ்தன்யம்")

இப்பாடல் அபயாம்பிகை பட்டர் தன் குழந்தைப் பருவத்தில், தாயில்லா பிள்ளையாக, அழுத குரலுக்கு அன்னை பாலூட்டியதை நினைத்து பாடிய பாடலாக அமைகிறது.

55. அன்னையே, மௌனானந்த சுடர்விளக்கே!

எந்த நாளும் உனதருட் பேரழகை அறிவில் ஒருபிடியா
யிருத்தி மகிழ்ந்து கனககிரி ஏறி முதல்வன் ஈசனது
சிந்தை மிகுந்து புகழ்ந்துவரச் செல்வமுடனே கல்விவரச்
செக சாலங்கள் தமைக்கடந்து சிற்சொருப மனம் புணர்ந்து
வந்துன் னாத முடியருளும் மௌனானந்தச் சுடர்விளக்கே
மாலாகிய கிருஷ்ணன் துணைவி வனச மலரின் நிலையாளே
மைந்தனிடம் வந்தெனைக் காப்பாய் மணியே யோக ஒளிமணியே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

அழகு என்று சொன்னாலேயே மனம் இன்படைகிறது. உலகில் அழகான பொருள்களைப் பார்க்கும்போது ஜடவஸ்துவானாலும், மனிதர் களானாலும், மற்ற ஜீவராசிகளானாலும் மனம் மகிழ்ச்சி கொள்கிறது. இவை யாவும் ஸ்தூல வடிவங்கள். ஒருநாள் அழிந்துவிடும். ஆனால் அன்னையின் பேரழகோ என்றுமே நித்யமானது, சாசுவதமானது. அதுதான் அருட்பேரழகு, தெய்வீக அழகு. இந்தப் பேரழகைத்தான் சிந்தையில் நிறுத்தி மனநிறைவு அடைகிறார் அபயாம்பிகை பட்டர்.

குமரகுருபர முனிவரும், "எறிதரங்கம் உடுக்கும் புவனம் நின்ற ஒருவன் திருவுள்ளத்தில் அழகு ஒழுக எழுதிப் பார்த்திருக்கும் "உயிர் ஓவியமே" என்று பாடுகிறார். (மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்-62). அதாவது அன்னையின் திருவுருவத்தைச் சிவபெருமானே தன் உள்ளத்தில் ஓவியமாக எழுதிப்பார்க்கிறாராம்! இதில் அடைவதுதான் பரமானந்தம். இது எனக்கு கிட்டும்போது, மேருப் பிரஸ்தாரமான ஸ்ரீசக்கரத்தின் உச்சியில் நீ வீற்றிருக்க, ஈசனின் சிந்தையிலும் நீ நிறைந்திருக்க, எனக்கு நல்லனவெல்லாம் வந்து அமையும் உன் அருளால். கல்வி, செல்வம், புகழ் எல்லாம் என்னைத் தேடி வரும். ஆனால் இவையெல்லாம் நிரந்தரமானவை இல்லை. இதுஒரு செகசாலம். ஆகையால் இதில் நான் மயங்கேன்.

எனக்கு வேண்டுவதெல்லாம், கண்ணை மூடிய உடனே என் அகக்கண்ணில் (மனம்) தோன்றி நிறையும், நிரந்தரமான சிற்சொரூபம். பார்க்கும் திசைதோறும் உன்பேரழகு தோன்ற வேண்டும். என் சென்னியை உன் திருவடி அலங்கரிக்க வேண்டும். உனது திருவடித் தாமரைகள் என் தலைமீது வைக்கும்போது எனக்கு ஏற்படும் ஆனந்தம் மன அமைதியைத் தரும். மனத்திற்கு சாந்தியை அளிக்கும். மௌனானந்தம் அது. அதை அனுபவிக்கும் போது நீ என் உள்ளத்தே சோதியாய், சுடர்விளக்காய் ஒளிர்வாய்! தக்கத் தருணத்தில் வந்து பக்தர்களைக் காப்பாற்றும் திருமாலாகிய கிருஷ்ணனின் திருத்தங்கச்சியல்லவா நீ!

தாமரையில் வீற்றிருக்கும் நீ, உள்ளமே தாமரையானவளாயிற்றே! மணியானவளே! மாபெரும் யோகிகளுக்கு யோக ஒளி மணியாய் திகழ்பவளே! அம்மா நான் உன் மைந்தன். வந்து என்னைக் காப்பாய் தாயே! மயிலாபுரியில் பெருமைமிகு மாயூரநாதனின் வாழ்வாய் விளங்கும் அபயாம்பிகைத் தாயே!

56. அன்னையே! கதம்பவனக் குயிலே!

கொஞ்சும் கிளியே அருள்பழுத்த கொம்பே கதம்ப வனத்தில்வளர்
குயிலே இமயாசலத்தில் வரும் கொடிவான் மதியே பேரொளியே
அஞ்சு தொழிலுக் கதிகாரி அதிமோகனமே மாமாயை
அமுத வசனி நான்மறைக்கும் அடங்கா தகண்ட பெருவெளியே
விஞ்சு புகழ்சேர் திருமகளும் வேதன் மனையாளொடு நிதமும்
மிகுந்து பணியும் அரிஅயனும் விபுதர் முனிவர் மறையோர்கள்
வஞ்சியே உன் பதங்காண வகையும் அறியார் வளமயிலே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

அன்னையின் அன்பர்கள் அன்னையை விதம், விதமாக வர்ணிப்பதில் அளவில்லா ஆனந்தம் அடைவர். எவ்வளவு தடவை சொன்னாலும் அவர்களுக்கு அலுப்பு தட்டாது. திருப்தியிராது. அல்லும் பகலும் அன்னையின் திருஉருவத்தை மனக்கண்ணில் கண்டு களிக்கும் அபயாம்பிகை பட்டரும் அவ்வாறே என்று கூறவும் வேண்டுமோ?

கிளி பார்ப்பதற்கும், பழகுவதற்கும் ஒரு ரம்மியமான பறவை. அதன் மூக்கு சிவப்பு. உடல் பச்சை. சிவனும் சக்தியும் ஒன்றான கோலம். தாயிடம் கொஞ்சாத சேய் உலகிலுண்டோ? அதுபோல், தாயைக் கொஞ்சும் கிளியாக வர்ணிக்கிறார். அன்னையே அனைவருக்கும் ஊன்றுகோலாய் தக்க துணையாய் நின்று நம்மைக் காத்து ரட்சிக்கும் அருளே வடிவமானவள். (*கோமள யாமளை கொம்பிருக்க* - அபிராமி அந்தாதி-71)

பருவதராசன் தவத்தை மெச்சி அவனுடைய பெண்ணாக, பார்வதியாக இமய மலையில் தோன்றியவள் அன்னை. அங்கு வளரும் கொடியாக வளப்புடன் வாழ்ந்தவள். அபிராமி பட்டரும் அபிராமி அந்தாதியில் (48) *"சுடரும் கலைமதி துன்றும் சடை முடிக்குன்றில் ஒன்றிப் படரும் பரிமளப் பச்சைக் கொடியை..." "கொடியே இளவஞ்சிக் கொம்பே"* (21) என்று கூறுவார். வானத்து நிலவாய், வையத்து பேரொளியாய்த் திகழ்பவள் அன்னை! அதாவது சந்திரனாகவும், சூரியனாகவும் அன்னை இருக்கிறாள் என்று அபயாம்பிகை பட்டர் சொல்லும் விதம் கவி நயத்துடன், பொருள் செறிவுடன் காணப்படுகின்றதன்றோ!

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளுதல் என்ற ஐந்து தொழில்களுக்கும் அதிகாரி அவளே.

அதிமோகனமே மாமாயை : அன்னை எல்லோரையும் மோகம் அடையச் செய்து மாயையில் மூழ்கும்படி செய்கிறாள். இது அவளுக்கு பிடித்த

விளையாட்டு. பின் முக்தி தருபவளும் அவளே. ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் 562. மோஹினீ - மயக்குபவள், மோஹம் அடையும்படி செய்பவள். விஷ்ணுவும் அன்னையை தியானித்து மோகினி வடிவம் பெற்றார் என்று சௌந்தர்யலஹரி, 5-வது ஸ்லோகத்தில் (*ஹரிஸ்-த்வா மாராத்ய*) ஆதி சங்கரர் காவ்யரசத்துடன் கூறுகிறார். அன்னையின் திருவாய் மொழியே அமுதம் என்று சொல்லுவது மிக்க சிறப்பு. நான்கு வேதங்களுக்கும் எட்டாத அகண்ட பெருவெளியாய், பரம்பொருளாய் இருப்பவள் அன்னை.

அடுத்து அபயாம்பிகை பட்டர் தேவியின் பக்தர்களைப் பட்டியல் போட்டு சொல்வதில் பெருமிதமடைகிறார்.

திருமகளும், கலைமகளும் அன்னையின் இருபக்கமும் நின்று சாமரம் வீசிக் கொண்டிருக்கிறார்களாம். ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமத்தில் 614 *"ஸசாமர ரமா வாணீ ஸவ்யதக்ஷிண ஸேவிதா"* என்று சொல்லப்படுகிறது.

இதன் முக்கியமான உட்பொருள் யாதெனில் சக்தி உபாசனையில் சாதகனும், சக்தியும் ஒன்றாகி விடுவதால், சாதகனுக்கு லக்ஷ்மி கடாக்ஷமும், சரஸ்வதியின் அருளும் எப்போதும் உள்ளது என்பதே.

மேலும் திருமாலும், பிரம்மாவும், தேவர்களும், முனிவர்களும் மறை ஓதுபவர்களும் வந்து உன் திருவடியைக் காண நினைக்கின்றனர். ஆனால் கண்டார்களா ? அதுதான் இல்லை.

கதம்ப வனக்குயில் - மதுரை க்ஷேத்திரத்திற்கு கடம்பவனம் என்று பெயர். அங்கு உறைபவள் மீனாட்சியான மந்த்ரிணீ என்ற மஹாசியாமளா. அபிராமி பட்டர் *"கண் களிக்கும்படி கண்டு கொண்டேன் கடம்பாடவியில்"* என்று அபிராமி அந்தாதியில் (70) வெகு அழகாகச் சொல்கிறார். ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் 60. *கதம்ப வனவாஸினீ* - கதம்ப மரக்காட்டில் வசிப்பவள்.

மீனாட்சி பற்றிய புராணம் - விசுவாவசு என்ற கந்தர்வனின் மகள் வித்யாவதி. அன்னை பராசக்தியை நோக்கி தவம் இருந்தாள். அன்னை வித்யாவதி முன் தோன்றி, "உனக்கு என்ன வேண்டும்' என்று கேட்க அதற்கு வித்யாவதி 'நீ எனக்கு மகளாய் பிறந்து, சிவபெருமான் மருமகனாக வரவேண்டும்' என்று வேண்டினாள். அன்னையும் கருணைப் புன்முறுவலோடு 'நீ மலையத்துவச பாண்டியன் மனைவியாக காஞ்சனமாலை என்ற பெயரில் பாண்டிய நாட்டில் தோன்றும்போது உனக்கு நான் மகளாவேன்' என்று அருள் பாலித்தாள்.

மலையத்துவச பாண்டியன் செய்த புத்ரகாமேஷ்டி யாகத்தில் வேள்வி குண்டத்தில் முலை மூன்றுடைய மூன்று வயசுப் பெண்ணாக அன்னை தோன்றினாள். ஆண் மகவு பெற விரும்பி செய்த வேள்வியில் பெற்றதோ

பெண்! அதுவும் மூன்று முலைகள் உடைய பெண். இதற்காக பாண்டியன் வருந்தியபோது வானத்திலிருந்து 'மன்னவ நின் திருமகட்கு மைந்தர் போல் சடங்கனைத்தும் தவறாது, வேதம் சொன்ன முறை செய்து, பெயர் தடாதகை என்று இட்டு முடி சூட்டுவாய். இப் பொன்னனையாள் தனக்கு இறைவன் வரும்போது ஓர் முலை மறையும். புந்தி மாழ்கேல்!' என்ற அசரீரி வாக்கு பிறந்தது. சிறிது காலம் சென்ற பின்னர் அன்னையின் மூன்றாம் மூலையும் அசரீரியில் சொன்னபடி மறைந்தது. தடாதகை மீனாட்சி என்ற பெயரில் மதுரையை ஆண்ட மகா பேரரசி.

57. அன்னையே-பரவெளியில் ஏகாம்பரேசனுடன் திகழும் காமாக்ஷியே!

ஏதோ கன்ம விவகாரம் இதனால் உயர்த்தி தாழ்த்தி என
இறந்தும் பிறந்தும் நரகமதில் இருந்து மனது சஞ்சலிக்கப்
பேதா பேதம் மிகப்பேசிப் பெருமை சிறுமை இதனாலே
பெற்ற சுகந்தான் இனிப்போதும் பிரியா துன்றன் இருசரண
வேதாந் தவருட் கமலமதை விருதாப் பிடித்துக் கருதிநிற்க
வெட்ட வெளியோன் ஏகனுடன் விளங்கக் கருணை நிலைஅருள்வாய்
மாதா வேமெய்ஞ் ஞானமுதே மறையின் முடியில் வளர்பவளே
மயிலாபுரியில் வளர்சன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே

சென்ற பாடலில் மதுரை மீனாட்சியாகக் கண்ட அன்னையைய இங்கு பரவெளியில் எல்லாவற்றிற்கும் மேலான ஏகாம்பரேசனுடன் இணைந்து காட்சி தரும் காமாட்சியாக நினைத்துப் பார்க்கிறார். முன்னும் 27-ம் பாடலில் வெளிப்படையாகவே, *"காமக் கிரி பீடத்தழகி"* என்று போற்றிப் புகழ்ந்தார் அபயாம்பிகை பட்டர். எங்கு பார்த்தாலும் எதைப் பார்த்தாலும் அவருக்கு அன்னையின் பல்வேறு வடிவங்களும், திருநாமங்களும் நினைவில் தோன்றிக் கொண்டே இருக்கிறது. அன்னையே எனக்கு எல்லாம் என்ற அனன்ய பக்தியில் ஆழ்ந்து கிடப்பவர். அபிராமி பட்டரும், "பார்க்கும் திசைதொறும் பாசாங்குசமும் பனிச்சிறை வண்டு ஆர்க்கும் புது மலர் ஐந்தும் கரும்பும்..." என்பார் (அபிராமி அந்தாதி-85).

அறம், பாவம் என்ற இருவினைகளின் பயனாகத் தோன்றியது இம்மானிட வாழ்க்கை. "நீ தாழ்ந்தவன் நான் உயர்ந்தவன்" என்றும் "நீ இல்லாதவன் நான் உள்ளவன்" என்றும் உயர்வு தாழ்வு பேசி, பெருமைக்கும் சிறுமைக்கும் வசப்பட்டு வாழும் அவல வாழ்க்கையிது. மெய்யாகப் பார்த்தால் இவ்வுலக வாழ்க்கை பயனற்றது என்பதை உலகோர்க்கு உணர்த்த அருளிய

பாடலிது. பட்டினத்தாரும் *"மாதா உடல் சலித்தாள், வல்வினையேன் கால் சலித்தேன், வேதாவும் கை சலித்து விட்டானே"* என்று அருமையாக சொல்கிறார் (வேதா - பிரம்மா)

போதும்! போதும்! இந்தப் பிறவி! இதைத் தவிர்ப்பதற்கு வழி என்ன? உனது திருவடிக் கமலங்களை விடாது பற்றிக் கொள்ள வேண்டும். அவை வேதாந்தமாக (வேதத்தின் முடிவான உபநிஷத்துக்கள்) இருப்பவை. அபிராமி பட்டர் *"மறை நான்கினுக்கும் தான் அந்தமான சரணாரவிந்தம்"* என்று அற்புதமாக பக்தி பூர்வமாக வர்ணிக்கிறார். (அபிராமி அந்தாதி - 11)

எல்லாவற்றிற்கும் அப்பாலாகி பரவெளியில் ஏகாம்பரேசனுடன் சேர்ந்து காட்சி தரும் அன்னை காமாட்சியே! எல்லா ஜன்மங்களிலும் துணையாகத் தொடர்ந்து தாயாக வரும் மகாமாதாவே! உன் திருவடிகளைப் பற்றுபவர் களுக்கு மெய்ஞ்ஞான அமுதத்தை தரும் வேதக் கொழுந்தானவளே!

மண்ணுலகத் தாய்மார்கள் ஒரு பிறவியில் தன் குழந்தைகளுக்குத் துணையாக நிற்பவர்கள். ஆனால் அன்னை அபயாம்பிகைத் தாயோ எல்லாப் பிறவிகளிலும் சீவர்களைத் தொடர்ந்து தக்க துணையாயிருந்து நல்வழியும் காட்டுவாள். அதனால் தான் ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம், *"ஸ்ரீமாதா"*என்ற திருநாமாவுடன் ஆரம்பிக்கிறது. "ஸ்ரீமாதா" - சிறப்புமிக்க, எல்லாவற்றிலும் சிறப்புமிக்க அன்னை என்று பொருள்படும். அபிராமி அந்தாதியின் முதல் பாடலிலேயே, *"அபிராமி என்றன் விழுத்துணையே"* என்பார் அபிராமி பட்டர்.

மயிலாபுரியில் பெருமைமிகு மாயூரநாதனின் உயிராய்த் திகழும் அபயாம்பிகைத்தாயே!

58. தாயே-உனது திருப்பாதங்கள் என் மனதில் பதிய வேண்டும்

சோற்றுத் துருத்தி வெகுபுழுக்கள் சுகமா யென்றன் அகம்எனவே
சொல்லி வளருங் கருங்காடு சூளைக் குயவன் உத்தியினால்
பார்த்துப் பிடித்த பழம்பாண்டம் பகைத்தே ஏமன் றானுடைக்கும்
பனங்காட் டிலுறை நரிநாய்கள் பருந்தும் விருந்தாய் அருந்திமகிழ்
ஊற்றைப் பிணத்தை எனதெனவே உகந்து நின்ற சுகம்போதும்
உனது பதங்கள் என்மனத்துள் உறவே கருணை மிகஅளிப்பாய்
மாற்றொன் றில்லா அருட்கனக வரையின் முடிமேல் வளர்பவளே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

சிலர் இவ்வுலகில் உண்பதையே தொழிலாகக் கருதி உடம்பையே பேணி வளர்த்து உலக விஷயங்களில் உறவுகொண்டு உல்லாசம் புரிவர். இவர்களைப் பற்றிய வேதனையில் எழுந்த பாடலாகக் கருதலாம். உடலைப் போற்றுபவர்கள் ஓயாத துன்பங்களில் சிக்கித் தவிப்பவர். திருமூலரும், (திருமந்திரம் - 2064) *"ஊனுக்கு இருந்தார் உணராத மாக்களே"* என்கிறார். அதாவது உணவுக்கே எப்போதும் முக்கியத்வம் அளிக்கும் மக்களை அவர் மாக்கள் என்று இழிவாக பேசுவதைக் காண்க.

எத்தகைய கேவலமான உடல் இது? சோற்றை அடைக்கும் பையும், அதனுள் எத்தனையோ கிருமிகளும் கொண்ட இந்தப் பாழும் உடலை மகிழ்வோடு "நான்" என்று கூறிக்கொள்ளும் பேதமை. பிரமன் என்ற குயவனால் பிடித்துப் போடப்பட்ட (எப்போதும் உடையலாம்) மண்பாண்டம் இது.

இந்த மண் பாண்டத்தை எமன் எப்போது உடைப்பான் என்று தெரியாது. இந்த பாண்டத்தை எப்போது எமன் உடைப்பான் என்று பனங்காட்டிலுள்ள பிணம் கூட்டும் நரி நாய்களும், விருந்தாய்க் கொள்ளத்துடிக்கும் பருந்துகளும் அருந்தி மகிழக் காத்துக் கிடக்கின்றன. இந்த ஊற்றைப் பிணத்தை எனது எனது என்று போற்றிச் சுகம் காணும் பேதமை போதும் தாயே! கடுவெளிச் சித்தர் இந்நிலையை அழகாக வர்ணிக்கிறார்.

"நந்தவனத்தில் ஓர் ஆண்டி - அவன்
நாலாறு மாதம் குயவனை வேண்டி
கொண்டு வந்தான் ஒரு தோண்டி - அதைக்
கூத்தாடி கூத்தாடி போட்டுடைத் தாண்டி"

இந்த மனித வாழ்வின் வேதனையிலிருந்து என்னை நீதான் காப்பாற்றியருள வேண்டும் தாயே! தாமரையின் மேல் வீற்றிருக்கும் தாயே! என் மனமும் மலங்களற்று வெள்ளைத் தாமரையாகி உனது திருவடிகளைத் தாங்கும் தன்மையைத் தருவாயே! தயைமிக்க தாயே! மாற்றொன்றில்லா (எதுவும் உதாரணம் காட்ட முடியாதபடி) அருள்மிகு மேருமலையின் முடிவில் வீற்றிருப்பவளே!

மயிலாபுரியில் வரம் தரும் வள்ளலாய் விளங்கும் ஈசனான, மாயூரநாதனின் ப்ராண நாடியாய்த் திகழ்பவளே! அபயாம்பிகைத்தாயே!

59. தாயே! உயிர் பிரியுமுன்னே நீ என் சிந்தையுள் வரவேண்டும்

எடுத்த செனனம் இறக்குமுன்னே என் சிந்தையுள்நீ வரவேண்டும்
இரவும் பகலும் உனதடியை ஏத்தும்வரம்நீ தரல்வேண்டும்
அடுத்துக் கலக்கும் இருவினைகள் அறவே சிவத்தில் உறவேண்டும்
அனுட்டானாதி தன்னை இழந்(து) அமல சுகத்தைப் பெறவேண்டும்
தொடுத்த படியே எனைச்சார்ந்து தூக்கி எடுத்து நடுவணையில்
சுகமாயி ருப்ப வரம் அருள்வாய் துவாத சாந்த நிலையாளே
மடுத்த கனத்தி நின்மயத்தி மடலே கருணைக் கடலாளே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

சான்றோர்கள் நாமபாராயணத்தை முக்கியமாகக் கருதுவார்கள். ஆண்டவனின் திருநாமங்களை எப்போதும் சொல்லிக்கொண்டே இருக்க வேண்டுமென்று தங்களுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு இறைவனின் திரு நாமங்களை சூட்டுவதற்கு காரணமும் இதுவே. பிள்ளைகளைப் பெயர் சொல்லி அழைக்கும்போது, ஆண்டவனும் செவி சாய்ப்பான் அன்றோ? இவ்வுலகில் நாம் கண்கூடாகப் பார்ப்பது, மரண அவஸ்தை ஏற்படும்போது இறைவன் நினைவு வருவதில்லை. சாகும் தருவாயில் சங்கரா, சங்கரா என்பது எளிதன்று. இதை அப்பர் ஸ்வாமிகளும், "ஒண்ணுளே ஒன்பது வாயில் வைத்தாய், ஒக்க அடைக்கும்போது உணரமாட்டேன்" என்று கூறுகிறார்.

இதையெல்லாம் எண்ணிப் பார்த்துதான் அபயாம்பிகை பட்டர் அன்னையிடம் *"உயிர் பிரியுமுன்னே (எடுத்த செனனம் இறக்கு முன்னே) நீ என் சிந்தையுள் வரவேண்டும்"* என்று மிக அருமையாக வேண்டுகிறார்.

ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் (732) - *நாம பாராயண ப்ரீதா* - நாம பாராயணத்தால் ப்ரியம் அடைபவள். அல்லும் பகலும் அனவிரதமும் உனது திருவடியை பற்றிப் போற்றிப் புகழ்ந்து பணிய நீ எனக்கு வரம் தருவாய். இருவினைகளைப் போக்கி பரம்பொருளான சிவத்திடம் என்னை சேர்க்க வேண்டும். சரியை, கிரியை, யோகம் ஆகிய அனுஷ்டானங்களைக் கடந்து ஞானத்தைத் தந்து மலங்களற்ற சுகத்தை தர வேண்டும்.

என் வினைப்பயனைக் காரணங் காட்டி இவ்வுலகில் என்னைப் பிறவி எடுக்க வைத்தாய். இப்போது நீயே என்னை எடுத்து துவாதசாந்த பெருவெளியில் உன் திருவடியில் சேர்த்து சுகமாய் இருக்க அருள்புரிவாய். உனது பெருமையோ எல்லையில்லாதது. ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமத்தில் 940

பராமோதா - சிறந்த கீர்த்தியையுடையவள். 429. *நிஸ்ஸீம மஹிமா* - எல்லையற்ற பெருமையுள்ளவள். இதைத்தான் அபயாம்பிகைபட்டர். *"மருத்த கனத்தி"* என்று வெகு அழகாகச் சொல்லுகிறார். நிர்மலமானவளே! கருணைக் கடலே! மயிலாடுதுறை மாயூரநாதனின் வாழ்வே! அபயாம்பிகைத் தாயே! அருள்புரிவாய்!

60. அன்னையே! ஓங்கார சொரூபிணியே!

உந்திக் கமலத் துறைபவளே ஓங்காரத்தி சதுர்கோணத்(து)
ஒளிரும் இதய நிலையாளே உமையே கமலா சனமணியே
சிந்தித் திடவே அறுகோணஞ் செறிந்த மனையின் நிலையாளே
செய மோகினியே டாகினியே சிந்தா மணியே யோகினியே
சந்தித் திடவே உன்னிருதாள் தனையே அருள்வாய் தற்பரையே
சகல மகவான் திருக்கிருஷ்ணசாமி துணைவி பார்வதியே
வந்தித் திடவே தேவரெலாம் மகிழத் தோற்றும் மலர்க்கொடியே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே

மனித உடலில் அன்னை ஆறு ஆதாரங்களில் பலவித திருமுகங்களுடனும், பல இதழ் கொண்ட தாமரை மலர்களின் மீதும், வெவ்வேறு திருநாமங்களுடனும் வீற்றிருப்பதை இங்கு வர்ணிக்கிறார் அபயாம்பிகை பட்டர். மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அநாஹதம், விசுத்தி, ஆக்ஞை என்பதே அந்த ஆறு ஆதாரங்கள். (முன்னும் பார்த்தோம்) உந்திக் கமலமாகிற மூலத்தாமரையில் வீற்றிருப்பவளே என்று பாடல் அழகாக ஆரம்பிக்கிறது.

அவள் "ஓங்கார சொரூபிணி"! மூலாதாரத்தில் உள்ள நாலிதழ் தாமரைக் கர்ணிகையில் உள்ள நாற்கோண சக்கரத்தில் குண்டலினீ சக்தியாக அன்னை இருக்கிறாள். ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம். 514. *மூலாதாரம்புஜாரூடா* - மூலாதாரம் என்பது குஹ்ய ஸ்தானம். நான்கு இதழ்கள் கொண்ட தாமரை மீது ஐந்து திருமுகங்களுடன் "ஸாகினி" என்ற திருநாமம் கொண்டு புகை வர்ணத்தோடு நாட்கோண சக்கரத்தில் அன்னை அமர்ந்திருக்கிறாள். திருமூலரும் (திருமந்திரம் - 1212)

"நாலாம் நளினம் நின்று ஏத்திநட்டு உச்சிதன்
மேலாமெழுத்தின் ஆமத்தினாலே" என்று உரைக்கிறார்.

இதன் பொருள் - மூலாதாரமாகிய நான்கிதழ் உடைய தாமரை இதழில் பொருந்தியுள்ள அன்னை பராசக்தியை எண்ணி "ஓம்" என்னும் பிரணவத்தை ஓத, உச்சி நடுவில் அவள் விளங்கப் பெறுவாள்.

உமையே! கமலாசனத்தில் வீற்றிருப்பவளே! உன்னையே சிந்திப்பவர்களுக்கு இருதயமாகிற அநாகத சக்கரத்தில் உள்ள அறுகோணத்தில் ஈசுவரனுக்கு துணைவியாக "ராகினீ" என்னும் சக்தியாக இருப்பவளே. 485. *அனாஹதாப்ஜ நிலயா:* இருதயத்தில் (வாயுஸ்தானம்), 12 இதழ்களுடன கூடிய தாமரை மீது இரண்டு திருமுகங்களுடன் "ராகினி" என்ற திருநாமத்துடன் (பசுமை நிறம்) தேவியாக விளங்குபவர்.

475. *விஸுத்தி சக்ரநிலயா.* கழுத்தில் 16 இதழ்களுடைய தாமரை மீது ஒரு முகமும், மூன்று கண்களுடன் (த்ரிலோசனா) "டாகினீ" தேவியாக (ஆகாயத் தத்துவம்) சிவப்பு கலந்த வெண்ணிறமாக (பாதிரி பூவைப் போல) உள்ளாள்.

ஜெய மோகினியே! சிந்தாமணியே! யோகினியே! ஆடி வரும் உன் பாதத்தைத் தேடி வரும் எனக்கு சூடி அருள்வாய்!

எல்லா யாகங்களுக்கும் தலைவனான திருமாலின் சகோதரி பார்வதியே! தேவர்கள் எல்லாம் உன்னைத் தேடி வந்து தொழுதவுடன் அவர்கள் உள்ளம் மகிழ காட்சி தருபவளே! மயிலாபுரியின் வளரீசன் வாழ்வாம் அபயாம்பிகைத் தாயே!

61. தாயே! நான் உன் மகனல்லவா! என்னைக் காத்தருள்வாய்!

முகம் பார்த் தொருவர் பேசாமல் முனிவோர் முன்னே
அரக்கர்போல்
முடியப் பழித்த பழிப்பாலே முனையும் மழுங்கி என்றனுயிர்
அகந்தான் உருகும் இனிஅதைத்தான் ஆரோடுரைப்பன் அருட்கடலே
அதிக வினையேன் அற்பருக்கே அனைத்தும் வசிய மாகுமையே
சகந்தான் நகைத்தால் ஞானிஎன்பர் தமியேன் பருவம் பொருந்தாமல்
தாயே உனையான் வேண்டும்வரம் தயைசெய் திருத்தி எனதுளத்தில்
மகனாம் எனவே அருள்புரிவாய் வடிவே ஞான மறைமுடிவே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

அபயாம்பிகை பட்டர் தன் சொந்த வாழ்க்கையில் பிறரால் உண்டான வேதனைகளினால் மனம் நொந்து அன்னையிடம் முறையிடும் பாடல் இது. சான்றோர்களையும் எள்ளி நகையாடும் கயவர் நிறைந்த உலகமிது. ஆன்மீக வழியில் சென்று பிறருக்கு நல்லதே செய்யும் பெரியோர்களையும் தூற்றுவோர் சிலர். அபிராமி பட்டரும் தன் வாழ்க்கையில் இப்படிப்பட்டத் துயரங்களை அடைந்தவர். மற்றவர்கள் தங்களைத் திட்டினாலும் தர்மத் தொழிலினின்று வழுவாது, இதையொரு சத்ய சோதனையாக எடுத்துக் கொண்டு தொடர்ந்து தங்கள் தெய்வப் பணியில் ஈடுபடுபவர்கள் சத்யசீலர்களான அன்னையின் அன்பர்கள்.

தாயே என்னிடம் முகம் கொடுத்து யாரும் பேசுவதில்லை. நான் உன் சன்னிதியில் நின்று உன்னை பூஜிக்கும் போது என்மேல் கோபம் கொண்டு அரக்கர்கள் போல என்மேல் எரிந்து விழுந்து என்னை ஏசும்போது என் மூளையே மழுங்கிப் போகிறது. (முனையும் மழுங்கி) இவற்றால் என் உள்ளம் வேதனையில் உருகிப் போகிறது. இதை நான் யாரிடம் சொல்வேன்? உன்னை விட்டால் எனக்கு யார் இருக்கிறார்கள்? (உன்னையன்றி உற்ற தெய்வம் உண்டோ உலகத்திலே!)

இவ்வுலகத்தில் நல்லவர்களுக்குத் தீங்கிழைக்கும் அற்பர்களுக்குத் தானே வாழ்வும், வளமும், சுகமும் போகமும் அமைகின்றன. அற்பர்கள் யாரைப் பார்த்துச் சிரிக்கிறார்களோ "அவனை ஞானி" என்று நீ சொல்வது எனக்குப் புரிகிறது. ஆனாலும் இந்த இழிதகையாளர்கள் என்னைப் பார்த்து (பருவம் பொருந்தாமல்) பரிகாசம் பண்ணுவதையும், இழிசொல் சொல்வதையும் என்னால் பொறுத்துக் கொள்ள முடியாமல் தவிக்கிறேன் தாயே!

அருள் கூர்ந்து நீ எனது மனத்தில் எப்போதும் கொலு வீற்றிருந்து, எதைப் பற்றியும் கவலைப்படாமல், எதையும் தாங்கும் இதயத்தை நீ எனக்கு அருள்வாய்! என் மீது தயைகொண்டு உன் மகனான எனக்குக் கொஞ்சம் கருணை காட்டக் கூடாதா?

ஞான வடிவாய்த் திகழ்பவளே! வேதங்களின் முடிவாய் இருப்பவளே! மயிலாபுரியில் பெருமை மிகு மாயூரநாதனின் உயிராய்த் திகழும் அபயாம்பிகைத் தாயே!

62. அன்னையே! இமயாசலத்துறை மயிலே!

அரசே என்றன் அகத்துயிரே அமுதே கருணை மதிநுதலே
அகண்டாகாரப் பெருவெளியே அமல சுகமே அந்தரமே
உரைசேர் மறையின் முடிமுதலே உணர்வே உணர்வின்
ஒளிச்சுடரே
ஓத வறியா அதிசயமே உமையே இமையோர்க் கரசான
தரைசேர் தண்டைச் சிலம்பணியுந் தாளி பணிகள் அணிதோளி
தருணம் இதுவே சிவபுரத்தி சர்வானந்த பரம்பரத்தி
வரிசை இமயாசலத்திலுறை மயிலே எனக்குன் அருள்புரிவாய்
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

அல்லும் பகலும் அனவிரதமும் அன்னையின் நினைவிலேயே வாழ்ந்தவர் அபயாம்பிகை பட்டர். அவளைத் தவிர வேறு ஒன்றும் அறியாதவர். அனன்ய பக்திக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் மாபெரும் யோகியும், மகானும் ஆவார். அன்னையின் மயில் உருவத்தை மனதில் நினைத்துப் பார்க்கிறார். வெகு தூரத்தில் உள்ள இமயமலையில் அன்னை மயிலாய் நடனமாடுவதை அகக் கண்களில் கண்டு மகிழ்ச்சி அடைகிறார். அம் மகிழ்ச்சியில் உருவான ஆனந்தப் பாடல் இது.

அகிலாண்டத்தையும் ஆளும் பேரரசியே! அப்படியிருந்தும் என் உள்ளத்தின் உயிராய் இருப்பவளே! அமுதமே வடிவானவளே! கருணையே உனது திருமுகமாய் அதில் சந்திரன் போன்ற நெற்றியை உடையவளே! ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமத்தில் (15) *அஷ்டமீ சந்திர விப்ராஜ-தலிக-ஸ்தல-சோபிதா* (அரைவட்ட வடிவான) அஷ்டமி சந்திரன் போல் விளங்கும் நெற்றியை உடையவள். சௌந்தர்யலஹரீ ஸ்லோகம் - 46-லிலும் (*லலாடம் லாவண்ய*) இவ்வாறு சொல்லப் படுகிறது.

பராகாசப் பெருவெளியாய் இருப்பவளே! 782. *பராகாசா* - சிறந்ததான ஆகாசமாக இருப்பவள். எங்கும் விளங்குவது ஆகாயம். அது இருப்பதை உணர முடிகிறது. காணக் கூடிய பரிமாணம் இல்லை. ஆகையால் ஆகாயம் ஸூக்ஷ்மமானது. இந்த ஆகாய வடிவில் இருப்பவள். மலமில்லா சுகத்தை அருளுபவளே! எல்லாவற்றிற்கும் முடிவானவளே! வேதங்களின் முதலாயும், உட்பொருளாயும், முடிவாயும் இருப்பவளே! உணர்வைத் தரும் சக்தியாயும், அந்த உணர்வாகவும் விளங்குபவளே!

எடுத்து இயம்ப முடியாத அதிசயப் பொருளே! மாணிக்கவாசகரும், சிவபுராணத்தில் (திருவாசகம்) *"தில்லையுள் கூத்தனே தென்பாண்டி*

நாட்டானே, அல்லற் பிறவி அறுப்பானே, ஓவென்று சொல்லற் கரியானைச் சொல்லி" என்று பரம்பொருளின் பெருமையை விளக்குகிறார். தேவர்களுக் கெல்லாம் அரசனான சிவப்பரம்பொருளின் தேவியே! உமையே! தண்டையும், சிலம்பும் கொஞ்சும் தாள்களையுடையவளே! பாம்புகளை அணிகலன்களாக தோளில் அணிந்தவளே! அப்பனும் அம்மையும் பாம்புகளை தம் உடலில் அணிவது பக்தர்களின் பயத்தை போக்கத்தானே. சிவபுரத்து சீமாட்டியே! அனைத்து ஆனந்தங்களையும் அருளும் எல்லாவற்றிற்கும் மேலான பரம்பொருளாய் இருப்பவளே!

இமயாசலத்தில் உறையும் மயிலே! மாயூரம் தேடி வந்து மயிலாய் பக்தர்களுக்கு மனமகிழ்ச்சி தந்தவளே! இத் தருணம் இதுவே தக்க சமயமென்று என்னை ஆட்கொண்டருள்வாய்!

63. அன்னையே! மன்றே நடனம் இடும் சரண மயிலே!

ஒன்றே ககன முடிமுதலே ஒளியே வெளியே அகண்டிதமே
உலகாசாரங் கடந்து நின்ற உமையே அமல சுகப்பொருளே
என்றே உலகம் அனைத்துயிர்க்கும் இரவும் பகலும் எங்கெங்கும்
இரு நாழிகைநெற் கொண்டுலகை இசைய வளர்த்த மலர்க்கொடியே
தன்றே மூலாதார முதல் தாவும் புருவ நடுவரையில்
தழைத்த பரமே நிராமயமே சாகா வேகாப் பூரணமே
மன்றே நடனம் இடும்சரண மயிலே குயிலே சிவபதியே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

சென்ற பாடலில் 'இமயாசலத்திலுறை மயிலே! எனக்குன் அருள்புரிவாய்' என்று சொன்னார் அபயாம்பிகை பட்டர். சேய் கூப்பிட்ட குரலுக்கு பறந்து வருபவளன்றோ தாயாகப்பட்டவள்! இமயத்திலிருந்து பறந்து வந்து மயிலாய் பொதுவெளியில் நடனமாடி அன்பர்களுக்கு அபயம் தரும் அஞ்சல்நாயகியைப் போற்றுகிறார்.

ஒன்றானவளே! ஒன்றான பராகாயத்தின் முடிவாகவும், முதலாகவும் உள்ளவளே! எல்லையற்றவளே! (அகண்டிதமே) உலக ஒழுக்கத்தைக் கடந்து ஞான நிலையிலிருக்கின்ற உமையே! மலங்களற்ற சுகப் பொருளே! *"உலகினை இறந்து நின்றது அரனுரு என்பதோரார்"* என்பர் சிவஞான சித்தியார். ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் 623. *கேவலா.* 665. *ஏகாகினீ.* என்று

சொல்லுகிறது. தனித்த வடிவினள். தனித்து இருப்பவள். வேறு எந்த குணமோ, தோஷமோ கலக்காமல் தானாக இருப்பவள். எல்லாவற்றையும் தனி ஒருத்தியாகவே செய்பவள். 667. *நிர்த்வைதா* - இரண்டற்றவள். த்வைத பாவமில்லாதவள்.

சிவப் பரம்பொருள் கொடுத்த இரண்டு படி நெல் கொண்டு 32 அறங்களைச் செய்து இரவும் பகலும் அனைத்துயிர்க்கும் தாயைப் போல் உலகில் அறம் வளர்த்த நாயகியே! (44ம் பாடலிலும் பார்த்தோம்). மூலாதாரம் முதல் புருவ நடுவில் இருக்கும் ஆக்ஞை வரை ஆறு ஆதாரங்களிலும் வீற்றிருப்பவளே! பிறப்பு இறப்பு அற்ற பரிபூரணமே! *"நிராமயமே"* என்பது வியாதியே இல்லாதவள் என்று பொருள் படும். இவளே எல்லா வியாதிகளுக்கும் மருந்து. அப்படியிருக்க அவளிடம் எப்படி வியாதி இருக்க முடியும்? ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் 866. *அஜா* - பிறக்காதவள். 867. *க்ஷய வினிர்முக்தா* - மரணத்திலிருந்து விடுபட்டவள். 876. *நிராமயா* - வ்யாதி இல்லாதவள்.

அனைவரும் ஆனந்தம் அடையும்படி மயிலாய், மயிலாடுதுறையில் நடனம் ஆடி மகிழ்வித்தவளே! இவள் மயிலாய் வந்து நடனமாடியதாலே மாயூரம் (மாயவரம்) "மயிலாடுதுறை" எனப் பெயர் பெற்றது. தன்னை அண்டினவருக்கு அபயம் அளிக்கும் அஞ்சல்நாயகி இவளே. பாட்டும் பரதமும் என்று சொல்வார்கள். அதாவது, குயிலாகவும், மயிலாகவும் வந்து அன்னை அனைவரையும் ஆனந்தக் களிப்பில் ஆழ்த்துகிறாள். சிவபதியாய் இருப்பவளும் இவளே. சீவர்களுக்குப் பதியாய் இருப்பவளும் இவளே.

மயிலாபுரியில் வாழும் ஈசனின் உயிராம் அபயாம்பிகைத்தாயே! அனைவருக்கும் அருள்புரிவாயே!

அன்னை செய்த அறங்கள்

1. நோயாளிக்கு உணவு அளித்தல். 2. திருமுறை ஓதுவார்க்கு உணவிடுதல். 3. அறு சமயத்தோர்க்கு உணவு. 4. பசுவிற்கு உணவு. 5. சிறையில் உள்ளோர்க்கு உணவு. 6. பிச்சையிடுதல். 7. தின்பண்டம் தருதல். 8. மகப் பெறுவித்தல். 9. மகவு வளர்த்தல். 10. மகப்பால் வளர்த்தல். 11. அறவைப் பிணம் சுடுதல். 12. அறவைச் சோறு. 13. அறவைத் தூரியம். 14. சுண்ணாம்பு தருதல். 15. நோய்க்கு மருந்து தருதல். 16. வண்ணார்க்கு உதவுதல். 17. நாவிதர்க்கு உதவுதல். 18. கண்ணாடி தருதல். 19. காதோலை தருதல். 20. கண் மருந்து தருதல். 21. தலைக்கு எண்ணெய் தருதல். 22. பெண் போகம். 23. பிறர் துயர் காத்தல். 24. தண்ணீர்ப் பந்தல் அமைத்தல். 25. மடம் கட்டுதல். 26. சோலை அமைத்தல். 27. குளம் வெட்டுதல். 28. ஆவுரிஞ்சுதறி அமைத்தல். 29. விலங்குகளுக்கு உணவு தருதல். 30. ஏறு விடுத்தல். 31. விலை கொடுத்து உயிர்காத்தல். 32. கன்னிகாதானம்.

64. அறியாமை அகற்றும் அருள் நூல்

ஆய்ந்த உன்றன் அருள்நூலை அடுத்தே இழையைத் தொடுத்தெடுத்து
அதனைக் கயிறாகவே முறுக்கி அலையும் மனத்தை இறுக்கியுன்றன்
தோய்ந்த சிவக்கால் தனைப்பூட்டித் தொண்ணூற் றாறு கருவிமயல்
தொடுத்த சடத்தை இகழ்ந்துனது துவாத சாந்த வெளிதனிலே
பாய்ந்த படியே குடியாகப் பல சொப்பனமும் கண்டுவிடப்
பதத்தைக் கடந்தே இதத்துடனே பரமனாந்த சிவபுரத்தில்
வாய்ந்த வாஞ்சையுடன் புகழும் வானே வானோர் தொழுந்தேனே
மயிலாபுரியில் வளர்சன்வாழ்வே அபயாம்பிகைத்தாயே

அன்னையே! உனது பெருமைகளைப் பேசும் நூல்களை இழையாகக் கொண்டு அதனைக் கயிறாக முறுக்கி, மனத்தைக் கட்டி உனது சிவந்த உபய பாதங்களோடு பிணைக்க வேண்டும்.

பேசுதல், கேட்டல், உணவு உட்கொள்ளுதல், ஜீரணம் செய்தல் முதலிய பல தொழில்கள் இந்த உடம்புக்குள் நடந்து கொண்டிருக்கின்றன. இந்தத் தொழில்களை 96 கருவிகள் செய்கின்றன. இதைத் தொண்ணூத்தாறு தத்துவங்கள் என்று பேசுவார்கள். (பாடல் ஆறில் இதைப் பார்த்தோம்) இவற்றால் இயங்கும் சடலத்தை (உடலை) இகழ்ந்து உனது துவாதசாந்தப் பெருவெளிதனிலே பாய்ந்து உனது திருவடிகளைப் பற்றிக்கொண்டு பரமானந்த சச்சிதானந்த நிலையில் தோய்ந்துவிட வேண்டும். அது ஆனந்தமயமான கனவு நிலை.

சிவபுரத்தில் அத்தனாகிய சிவப்பரம்பொருள் உன்னைச் சார்ந்து அத்தகைய நிலையிலேயே ஆழ்ந்து விடுவான். ஐயனை நீயும் அன்போடும், கருணையோடும் ஏற்றுக் கொள்வாய். அத்தகைய புகழரசியான உன்னை, தேவர்கள் உன்னுடைய கருணைத் தேனுக்காக ஏங்கித் தொழுகிறார்கள். உன் கருணைக்கிரங்கி சிவபெருமானும், தேவர்களும், முனிவர்களும் உன்னைத் துதிக்கிறார்கள்.

பரம கருணைப் பேரரசியான நீ, என்னை உய்விக்க வேண்டும் என்பதற்காக இந்த ஏழை எளியவனையும் ஒரு பொருட்டாக மதித்து ஆட்கொள்ள இந்த மயிலாடுதுறை வந்திருக்கிறாய்! நீ எப்போதும் தனியாக வரமாட்டாய் அல்லவா! (*அமுதீசர் ஒரு பாதம் அகலாத சுகபாணி* என்ற அபிராமியம்மை பதிகம் நினைவிற்கு வருகிறது) துணையோடுதானே வருவாய்! எனவே மயிலாபுரிக்கே பெருமைதரும், வரங்களை வரையிலாது வழங்கும் வள்ளல் மாயூரநாதனின் உயிர்நாடியாய் வந்து ஆட்கொண்டாய்! அஞ்சல் நாயகியே! அபயாம்பிகைத்தாயே!

65. உள்ளம் பெரும் கோயில்; ஊனுடம்பு ஆலயம்

அருளுக் கறிவா யிருந்ததெய்வம் அமர்ந்த திருநாட் கொடியேறி
அலங்காரமுமாச் சித்தமெனும் அமை கேடகத்தில் எழுந்தருளி
மருளும் மனதைப் பலிகொடுத்து வரிசையுடனே நடு வீதி
வரையிற் பலவாம் அதிசயங்கள் வகைதான் உரைக்க முடியாது
சுருளப் பிரியா ரதம் ஏறிச் சோதி வதன ஒளிதாண்டிச்
சுத்த வியோம நிலையதனில் சுகமாய் நிறுத்திக் கொடியிறக்கி
மருளற்றிருக்க அருள்புரிவாய் வாலாம்பிகையே காரணியே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே

சான்றோர்கள் 'கடவுள்' என்பதற்கு இறைவன் நம் உள்ளேயே இருக்கிறான். அதனால் அவனை வெளியே தேடவேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லுவார்கள். அதாவது நம் உடலைத் தூய்மையாக வைத்துக் கொண்டு உள்ளத்திலே அந்தப் பரம்பொருளை மானசீகமாக வழிபாடு செய்வதே நம்மை இறைவனிடத்தில் சேர்க்கும். இதுதான் "அது நீயானாய்" என்ற மஹாவாக்கியத்தின் உட்பொருள். இறைவனும், நானும் ஒன்றே என்ற உணர்வு. அபயாம்பிகை பட்டரும் உடம்பை ஆலயமாகக் கருதி எழுதிய தத்துவமான பாடல் இது.

திருமூலரும் திருமந்திரத்தில் (725)
"உடம்பினை முன்னம் இழுக்கு என்று இருந்தேன்
உடம்பினுக்கு உள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேனே" என்பார்.

பின்னும் *"உள்ளம் பெருங் கோயில் ஊனுடம்பு ஆலயம்"* (1823) என்று அருமையாகச் சொல்லுவார்.

திருவிழாக் காலங்களில் கோயில்களில் கொடி ஏற்றுவார்கள். ஒவ்வொரு நாளும் தெய்வீக மூர்த்தங்களுக்கு அபிஷேகம், அலங்காரம் விமரிசையாக நடக்கும். உற்சவ விக்கிரகங்களை தினமும் வெவ்வேறு வாகனங்களில் உலா வரச் செய்து தேர்த் திருவிழா நடத்துவர். விழாக்களும், பவனி வருவதும் பரிபூரணமானபின் ஏற்றிய கொடியை இறக்குவர்.

அபயாம்பிகை பட்டர் உடலை கோயிலாக்கி அதில் கொடியேற்றம் முதல், கொடி இறக்கும் வரை நடக்கும் திருவிழாக் காட்சியை நம் கண்களுக்கு விருந்தாக படைக்கிறார்.

அறிவு, உடலில் ஏற்றப்படும் கொடி. சித்தம் என்பது கேடகம். (வாகனம்) மனம் - பலி. சுழுமுனை - நடுவீதி. சகஸ்ராரம் என்பதே தேர். வ்யோம நிலை - உச்சி. (தேர்நிலை) பரம்பொருள் ஆகாயத்திற்கும் மேலே பரவெளியில் இருக்கிறான். (வ்யோம நிலை) அங்கு அவனுடன் ஐக்கியமாகி மனம் கலக்கமற்று சுகமாய் இருக்க நீ அருள்புரிவாய் தாயே! வாலாம்பிகையே! எல்லாவற்றிற்கும் காரணப் பொருளாய் இருப்பவளே! மயிலாபுரியின் பெருமைக்கு ஈசனான மாயூரநாதனின் வாழ்வாய்த் திகழும் அபயாம்பிகைத் தாயே!

66. தாயே! மௌனானந்த நிலை தருவாயே!

ஊசி நுனியில் மனதை உன்னி உயர்ந்த மனிதர் மயிர்பதினாறு
ஒன்றும் நுழையா இடத்தில்தமர் ஒடுங்கி அடங்கிக் குறிபார்க்கில்
காசிப் புனலும் நிறைந்தகங்கைக் கரையுங் கடந்து திரைகடந்து
கனக மணியின் ஒலிகடந்து கருணைக் கடலுந் தான்கடந்து
பேசும் பருவம் உரைகடந்து பெருமை சிறுமை தமைக் கடந்து
பேயினுடனே பேயனுமாய்ப் பிரமை கொண்டே அறிவழிந்து
வாசித் தடமே கடந்து நின்ற மௌனானந்தம் எனக்கருள்வாய்
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

அபயாம்பிகை பட்டர் எல்லாம் அறிந்தவர். சிறு வயதிலேயே அன்னையின் அருளமுதம் அருந்தியவர் அன்றோ! சரியை, கிரியை, யோகம், ஞானம் கடந்த ஜீவன் முக்தர். இப்பாடலில் அவரை நாம் ஒரு மாபெரும் தவயோகியாய்க் காண்கிறோம். யோகத்தில் முக்கியமாகச் சொல்லப்படுவது - மௌனமாக இருக்கும் நிலை. *"சும்மா இரு சொல்லற என்றலுமே அம்மா பொருளொன்றும் அறிந்திலேனே"* என்று சொல்லுகிறார் அருணகிரிநாதர். அபிராமி பட்டரும் *"உங்களையும் படையாவண்ணம் பார்த்து இருமே"* என்று அருமையாக உரைக்கிறார். (அபிராமி அந்தாதி - 84). அதாவது புறக்கண்ணில் பார்த்து அகக்கண்ணில் அன்னையின் திருஉருவத்தை நிறுத்தினால் சலனமற்ற பேசா நிலை உருவாகும்.

புருவ மத்தியில் (ஆக்ஞையில் - சுழுமுனையின் உச்சியில்) மனதை ஒருநிலைப்படுத்தி, மயிரை பதினாறு கூறாக்கி அதன் கூறும் நுழையாத

மிகமிக நுண்ணிய இடமாகிய சுழுமுனையின் மத்தியில் அடக்கி உற்று நோக்கினால் கங்கையும், அதன் கரையும், அலைகளும் தோன்றும் என்கிறார் அபயாம்பிகை பட்டர். அது மட்டுமல்லாது, கனகமணியின் நாத ஒலி கேட்கும். கருணைக் கடலாகிய அன்னையின் தரிசனம் கிடைக்கும். பேசாது ஒடுங்கும் பெரு நிலையாகிற அனுபூதி பிறக்கும்.

மேற்கூறிய உயர்ந்த நிலையை அடைந்து விட்ட பிறகு, பெருமை, சிறுமை என்ற பேதம் நீங்கும். மெய்ஞ்ஞான உணர்வு இல்லாத பேய்க் கூட்டத்திலிருந்து கொண்டு பல்வேறு சபல சுகங்களுக்கு ஆளாகி அறிவு இழக்கும் நிலையிலிருந்து விடுபெற்று, பேச்சு, மூச்சு அற்ற மௌனானந்த பெருநிலையை எனக்கு அருள வேண்டும் தாயே என்று அன்னையிடம் வேண்டுகிறார் அபயாம்பிகை பட்டர்.

மயிலாடுதுறையில் பெருமைமிகு மாயூரநாதனின் வாழ்வாய்த் திகழும் அபயாம்பிகைத்தாயே! அனைவருக்கும் அருள்புரிவாயே!

67. அன்னையே! நந்தி விடையோன் இடத்தாளே!

செல்லும் மனமும் அடங்கியபின் சென்றே ஊமைப் பருவமது
சேர வரவே அறிவழிந்து செகத்தோர் நகைத்துப் பகைத்திடவும்
அல்லி முளரித் தடந்தாண்டி அருண வுதய ரவிதாண்டி
அடங்கி யிருக்கச் சிவபுரத்தில் அடியேன் குடியாய் நிலைக்கஅருள்
நல்ல கமல முகத்தாளே நந்தி விடையோன் இடத்தாளே
நறு மாமலர்ச் செஞ்சடையாளே நதிகள் பெருகும் பதத்தாளே
வல்ல பரையே பரம்பரையே மௌனாதீத மோகனமே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

அபயாம்பிகை பட்டர் தன்னை ஏசுபவர்களைக் கண்டு மனம் வருந்தி அன்னையிடம் தான் படும் வேதனையைச் சொன்னார். அன்னையின் பெருங்கருணையால் - சொல்லும், மனமும் அடங்கிய பின் மௌனானந்த நிலை அடைந்த பின், இயற்றிய பாடலாகத் திகழ்கிறது இப்பாடல்.

உன் திருவடியில் மனம், அறிவு, செயல் அத்தனையும் ஒடுங்கிச் சேரும் பாக்கியம் பெற்ற பின் அடியேன், மற்றவர்கள் என்னைப் பற்றி என்ன பேசினாலும் மதி மயங்கேன். தூற்றுவார் தூற்றற்றும்! போற்றுவார் போற்றற்றும்! அதைப் பற்றி அடியேன் கவலைப் படப் போவதில்லை என்று

ஞானத்தின் உச்சியில் நின்று நவிலுகிறார் அன்னையின் அருட்மைந்தன் அபயாம்பிகைபட்டர்.

தாமரை வதனத்தாயே! விடையொரு பாகனின் இடையொரு பாகம் பிடித்தவளே! மணம் பூத்த நறுமலர் செஞ்சடைப் பூத்தாளே! உன்னுடைய திருவடியிலிருந்து நதிகள் பெருகுவதால் அவை புண்ய நதிகளாய் பூமிக்கு வந்து மனித உயிர்களையும் புனிதப்படுத்துகிறதோ! நதி கமழ்தாள் எமக்கொரு கதியாள் நீயே!

அக இதழ் தாமரை, அல்லிக்குளம் தாண்டி, சிறந்த உதய கால சூரியனைக் கடந்து, பரிபாகம் அடைந்த அனுபவ ஞானிகளுக்கு விசுத்தியில் தோன்றும் கோடி சூரியப் பிரகாசத்தை அடியேனுக்கும் அருளி, சிவன் உறையும் சிவபுரத்தில், என்னை நிலையாக இருக்கச் செய்வாய்!

எல்லாம் வல்ல என் அருமைத்தாயே! எல்லாவற்றிற்கும் மேலாக இருக்கும் பரையே! பரம்பரையே! சிவசக்தியே! மயிலாபுரியில் பெருமைமிகு ஈசனான மாயூரநாதனின் உயிர்நாடியாய் இருப்பவளே! அபயாம்பிகைத் தாயே! அருள் புரிவாயே!

68. அன்னையே! அடியார் மனத்தாமரையினில் அமர்ந்திருப்பவளே!

அடர்ந்த ககன முடியினிலோர் அமுத நதிதான் பெருகிவர
அதனைப் புசித்துப் பசிதணித்து அடியேன் மனந்தான் லயமாகத்
தொடர்ந்து சிவமே அநுக்ரகித்துத் தொல்லை வினையைப் பறக்கடித்துத்
தொலையாச சென்ன வழிதொலைத்துச் சுகமாயிருக்க அருள்புரிவாய்
படர்ந்த அருண மணிநுதலே பரம சுகவானந்தமதில்
பாவம் அகன்ற மனத்துள் வளர் பத்மாசனியே வான்மணியே
மடந்தைப் பருவம் உடையாளே வளர்மின் கொடிபோல் இடையாளே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

அன்னை எப்பொழுதும் தாமரையின் மேல் வீற்றிருப்பவள். அவளை ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமத்தில் (278) *பத்மாஸனா* என்று வாக்தேவதைகள் போற்றிப் புகழ்கிறார்கள். பத்மம் என்றால் தாமரை. தாமரையை ஆசனமாகக் கொண்டவர்கள் ப்ரம்மா, சரஸ்வதி, லக்ஷ்மி ஆகிய மூவரும். இம்மூவரின் வடிவமும் தேவியே தான் என்பதால் பத்மாஸனா. அகத்தூய்மை பெற்ற

அடியார்களின் மனமும் தாமரை போல் ஆகிவிடுவதால் அன்னை அவர்களின் மனத்தாமரையை தன் இருப்பிடமாகக் கொண்டு அங்கேயே உறைகிறதாம். அபயாம்பிகை பட்டரும் அப்புண்யவான்களில் ஒருவர் என்று சொல்லவும் வேண்டுமோ?

அபிராமி பட்டர், அபிராமி அந்தாதியில் (90) *"வருந்தாவகை என் மனத்தாமரையினில் வந்து புகுந்து இருந்தாள் பழைய இருப்பிடமாக"* என்று ஆனந்தக் களிப்பில் சொல்கிறார்.

சுழுமுனையைத் தாண்டி ககன உச்சியில் அமுதநதி பெருகிவரும் போது அதனை அருந்தி ஞானப்பசி தணிந்து, அடியேனுடைய மனம் ஆன்ம லயமாகி சிவானுக்ரகம் பெறுவேன். சிவத்தை அடையும் சிவானந்த நிலை கிடைத்த பின் தொல்லை வினைகள் பறந்தோடும். எளிதில் நீங்காத பவப்பிணி யிலிருந்து ஜென்மம் விடுதலை பெறும். பின்பு அடைவது பரமானந்த சுகமே.

செக்கச் சிவந்த மாணிக்க கல் போன்ற ஒளி தரும் நெற்றியை உடையவளே! பாவங்கள் (ஆணவம், கன்மம், மாயை) அகன்ற அடியார்களின் மனத்தாமரையில் வளரும் பத்மாசனியே! வானத்தில் ஒளிரும் மணியே! என்றுமே மடந்தைப் பேரழகியாய் இருப்பவளே! மின்னலைப் பழிக்கும் இடையைக் கொண்டவளே! மயிலாபுரியில் மாயூரநாதனின் வாழ்வான அபயாம்பிகைத்தாயே!

ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் (358) *தருணீ* - என்றும் யௌவனத்தில் இருப்பவள். 430. *நித்யயௌவனா* - என்றுமே யௌவனத்துடன் இருப்பவள் 360. *தனுமத்யா* - குறுகிய இடையுள்ளவள் 107. *தடில்லாத ஸமருசி* - மின்னல் கொடி போல் பிரகாசிப்பவள். ('*வித்யுல்லேகேவ பாஸ்வரா*' என்று நாராயண ஸூக்தத்தில் வரும்). ஸ்ரீ லலிதா த்ரிசதீ. 272. *லப்தயௌவனசாலினீ.* அபிராமி பட்டர் அபிராமி அந்தாதி முதற் பாடலிலேயே அன்னையை, *"மலர்க்கமலை துதிக்கின்ற மின்கொடி"* என்று புகழ்கிறார். திருமூலரும் *"திண் கொடியாகத் திகழ் தரு சோதியாம்"* என்று திருமந்திரத்தில் (1142) சொல்லுகிறார். ஆதிசங்கரர் சௌந்தர்யலஹரியில், "அன்னைக்கு இடை இருக்கிறதோ, இல்லையோ" என்று நினைக்கும்படி

69. அன்னை! கணுவற்றக் கரும்பு!

அணுவுக் கணுவா யிருக்கும்உனை அறிய வசமோ அருட்கடலே
யார்தான் அறிவார் அரிபிரமன் அவரால் அறியா அதிசயத்தாய்
குணமற் றகன்ற நிரஞ்சனமே குறியற் றிருந்த பரம்பரமே
கொள்ளைப் பிறவி தனையகற்றுங் கொடியே ககன மின்கொடியே
கணுவற் றகண்ட அருட்கரும்பே கண்ணின் மணியே மணியினுள்ளே
கலங்கா திருந்த ஒளிச்சுடரே கருணைக் கடலே நவமணியே
மணமுற் றொளிர் பூங்கமலமிசை வளருந் திருவே மலைமகளே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

அன்னை எல்லா இடத்திலும் வியாபித்திருக்கிறாள். அவள் மிகப் பெரியவள். ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் (774) *மஹதீ* என்று சொல்லுகிறது. மிகப் பெரியது என்ற அளவிற்கும் பெரியவள். அதிலேயே, 808. *பரமாணு* - மிகவும் ஸூக்ஷ்மமான அணுவாக இருப்பவள். கடோபநிஷத் (II-20) "*அணோரணீயான்*" என்று சொல்லும். "அணுவைவிட சிறிய அணு" என்பதாம். இதன் கருத்து "அன்னை எவராலும் அறிய முடியாதவள்".

அன்னையை அறிந்து கொள்வதற்கு ஜன்மாந்தரங்களில் புண்ணியம் செய்திருக்க வேண்டும். யாருக்கு மறு பிறவியில்லையோ அவர்தான் அன்னையை அறிய முடியும். திருமாலும், பிரம்மாவும் சிவனின் அடி, முடி காணாமல் தோல்வியை ஒப்புக் கொண்டனர் அன்றோ! சிவனும், சக்தியும் அபேதம். அதே போல் சக்தியையும் அறிய முடியவில்லை அவர்களால். அன்னை அப்பேர்ப்பட்ட அதிசயத்தாய்!

அவள் குணமற்று அகன்ற நிரஞ்சனம்! குறியற்று இருந்த பரம்பரத்தி! அவளுடைய கருணையைப் பெற்ற அடியார்களின் அடுத்து அடுத்து வரும் பிறவிப்பிணியைப் போக்கும் ககன மின்கொடியும் அவளே!

கரும்பு சிறுவர் முதல் முதியோர் வரை எல்லோரும் விரும்பிச் சாப்பிடுவது. தின்னத் தின்ன தெவிட்டாத சுவை தருவது. ஆனால் நடுவில் கணு என்ற ஒன்று வந்து நிற்கும். அன்னையோ கணு இல்லாத அருட்கரும்பு. ஔவைப் பாட்டி விநாயகர் அகவலில், "*அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க் கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி*" என்று மிக அழகாகச் சொல்லுகிறார். அன்னையின் கருணையை என்னென்பது? அன்னையின் கருணை என்னும் கரும்பை அடியார்கள் தடையின்றி சுவைக்க வேண்டுமல்லவா!

அன்பர்களின் கண்களுக்கு மணியானவள் நீ! கண்மணியானவளும் நீயே! அந்த மணியில் ஒளிரும் ஒளிச்சுடரும் நீ! கருணைக் கடல் நீ! நவமணியாய் விளங்குபவளும் நீ! மணம் உள்ள தாமரையில் வளரும் செல்வத் தாயான லட்சுமியும் நீயே! பர்வதராஜனின் மகளாய் தோன்றியவளும் நீயே!

மயிலாபுரியில் வரம் தரும் வள்ளலாகிய மாயூரநாதனின் உயிர்நாடியாய்த் திகழும் அபயாம்பிகைத்தாயே! அனைவரையும் காத்து அருள்வாய்!

70. அன்னையே பாபங்களைப் பொசுக்கும் பொறியாவாள்!

நெஞ்சிற் சபலம் பொருந்தாது நிலையை அறிவால் உணர்ந்தொன்றாய்
நின்னை நினைக்கப் பொன்னதனில் நெறிமாற் றுயரும் வண்மைஎனப்
பஞ்சப் பொறிபோற் பவம் அகலப் பலவாம் நினைவுகளும் அகலப்
பரிந்தென்பால் வந்தருள்புரிவாய் பரமானந்த சுகப்பொருளே
அஞ்சும் உடலாயிருப் பவளே ஆறுங் கடந்த பரம்பரையே
அமுத வசனத் திருக்கிஷ்ணன் ஆதித் துணைவி அந்தரியே
வஞ்சி நவ மோகனரூபி வதனாம் புயத்தி அருள்மயத்தி
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

நாம் கணக்கில்லாமல் தினமும் தவறாது பாபங்களைச் செய்து கொண்டே இருக்கிறோம். அது மூட்டை போல் சேர்ந்து விடுகிறது. எளிதில் அழிக்க முடியாது. தீ வைத்து எரித்தால் தான் அதை ஒழிக்க முடியும். அன்னையின் அருளினால் அவள் கடைக்கண் பார்வை பட்டால், நம் பாப மூட்டைகள் பஞ்சுப் பொதியில் பட்ட தீப்பொறி போல பற்றி எரிந்து அழியும். இந்தக் கருத்தினை ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் வெகு அழகாகச் சொல்கிறது. 743. பாபாரண்ய தவாநலா - பாபம் என்னும் வனத்திற்கு பெருந்தீயாக இருப்பவள். அதாவது நம் பாபங்களை அழிக்க அன்னையின் அருளின்றி முடியாது என்பதை அடித்துச் சொல்கிறார் அபயாம்பிகை பட்டர்.

தாயே! நெஞ்சிலுள்ள ஆசைகள் அகலவேண்டும். எப்போதும் உன்னையே நினைக்கும் நினைவு வேண்டும். வேண்டாத நினைவுகளும் என் மனத்திலிருந்து அகலட்டும். உன் பார்வைப் பொறி பட்டு, பிறவிப் பிணியாகிற பஞ்சுப் பொதி எரியட்டும். நீ கருணையோடு வந்து ஆட்கொண்டால் தான் இதெல்லாம் நடக்கும்.

நீயே அண்டத்திலும், பிண்டத்திலும் பஞ்ச பூதங்களாய் நிற்கிறாய். மனித உடலிலும் ஆறு ஆதாரங்களில் (மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அநாஹதம், விசுத்தி, ஆக்ஞை) அமர்ந்து அதைக் கடந்து அருள் புரிபவளாயும் இருக்கிறாய். அமுதம் போன்ற மொழி உடையவளே! திருமாலின் சகோதரியே!

ஆகாசமாய் நிற்பவளே! கொடி போன்றவளே! என்றுமே புதுமையாய்த் தோன்றும் மோகன வடிவானவளே! தாமரை போன்ற வதனத்தை உடையவளே! அருளே ரூபமானவளே! மயிலாபுரியில் என்றும் வளரும் ஈசனின் வாழ்வாம் அபயாம்பிகைத் தாயே! அனைவருக்கும் அருள் புரிவாயாக!

71. தாயே! நீ வண்ண ஓவியமன்றோ!

பச்சை முழுபொன்னிறமுடனே பளிங்கு பவளமுடன் நீலம்
பருத்த மேகமுடன் ஆறாய்ப் பரவியிருக்கும் பசுங்கிளியே
அச்ச மறவே அதன்மீதில் அருண வுதய ரவிகோடி
அகண்டாகார ரூபமதாய் அமர்ந்த சிவமோகனமாதே
செச்சை யதன்மேல அணிச்சிலம்புஞ் சிறுகிண்
கிணித்தண்டைகளொலிக்கச்
சிவனோடிருக்குங் கொலுமுகத்தைச் சிறியேன் காண அருள்புரிவாய்
வச்ச உனது பொருள் எனக்கு வரத்தாற் கருத்தில் உரைத்தருள்வாய்
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

அன்னையின் அருளாளர்கள் அனைவரும் அவ்வப்போது அன்னையின் திருக்கோலங்களை வர்ணித்துக் கொண்டே இருப்பார்கள். அது அவர் களுக்கு அளவிலா மகிழ்ச்சியை அளிக்கும். அபயாம்பிகை பட்டரும் இப்பாடலில் அன்னையை பலவித வடிவங்களில், பலவித வண்ணங்கள் நிறைந்த திருக்கோலங்களில் கண்டு ஆனந்தம் அடைகிறார்.

ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமத்தில். வாக்தேவதைகள், "529. *ஸர்வ வர்ணோப சோபிதா"* என்று வர்ணிக்கிறார்கள். அன்னை எல்லா வர்ணங் களாலும் ப்ரகாசிப்பவள். அபிராமி பட்டரும் "பிங்கலை, நீலி, செய்யாள், வெளியாள், பசும் பெண் கொடியே" என்பார் (அபிராமி அந்தாதி - 21)

அன்னை பச்சை வண்ணத்தில் பார்வதியாகவும், மீனாட்சியாகவும் காட்சி தருகிறாள். வெள்ளை நிறத்தில் கலைவாணியாகவும், சிவந்த நிறத்தில் ராஜராஜேச்வரியாகவும், லட்சுமியாகவும், நீலநிறத்தில் (கறுப்பு) காளியாகவும், மஞ்சள் நிறத்தில் மனோன்மணியாகவும் இருக்கிறாள்.

அடியார்களின் அச்சங்களைப் போக்கும், அதாவது இருளை நீக்கும் கோடி உதயசூரியனாக விளங்குகிறாள். ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் 6. *உத்யத் பானு - ஸஹஸ்ராபா* - ஆயிரம் (அல்லது எண்ணிக்கையற்ற) சூரியர்கள் உதித்தாற் போல் பிரகாசம் உடையவள்.

நினைப்பவருக்கு நினைத்தபடி தன் அழகுக் கோலத்தை காட்டும் அன்னை தனது அழகினால் சிவபெருமானையே மயக்கி, யோகியை போகியாக்கினாள் என்று ஆச்சரியத்தால் ஆனந்தப்படுகிறார் அபயாம்பிகை பட்டர். தாயே! செக்கச் சிவந்த உனது உபய பாதங்களின் மேல் சிலம்பும், சிறு கிண்கிணியும், தண்டையும் அணிந்து கொண்டு, அதில் ஏற்படும் ஒலியினால் மயங்கும் சிவப் பரம்பொருளுடன் இணைந்து நீ அமர்ந்திருக்கும் திருவோலக் கத்தை சிறியேனான அடியேன் காண அருள்புரிவாய்! அன்னையே! நீ என்னை ஆட்கொள்வதாக அளித்த வரத்தை உனக்கு அடியேன் நினைவு கூறுகிறேன். காவியங்கள் எல்லாம் வர்ணிக்கும் உன் ஓவியக் கோலத்தை என் மனதில் பதிய வைப்பாயாக! மயிலாடுதுறையில் பெருமைமிகு ஈசனான மாயூரநாதனின் உயிர்நாடியாய்த் திகழும் அபயாம்பிகைத்தாயே! அனைவருக்கும் அருள்புரிவாய்!

இப்பாடலில் ஒரு ஸூக்ஷ்மமான தத்துவத்தை அபயாம்பிகை பட்டர் சொல்கிறார். சிவனும் அவனது மடியில் அல்லது வாம பாகத்தில் இருக்கும் சக்தியையும் சேர்த்து தியானித்து அவர்களுடன் ஐக்கியமாகிவிட்டால் சிவன் சிரசில் இருக்கும் கங்கா அமுத மழை பொழிவாள். அந்நிலை அடையவே அன்னையிடம் வேண்டுகிறார் அபயாம்பிகை பட்டர்.

72. அன்னையே! பேசா மோனக்கொடியே!

அணங்கே நவபீடாசனியே அருளே உதய மதிச்சுடரே
ஆகாயத்தில் முளைத்தெழுந்தே அலர்ந்த முளரி நிலையாளே
இணங்கும் அடியர் நினைத்தபடி இசைந்த புவனத் தவமணியே
ஏகாகாரமாக எனை எடுத்துன்னருளைக் கொடுத்தாள்வாய்
பிணங்கு மலமாயாதிதனிற் பிரிய விடவும் மாட்டாயே
பேராயிரத்தி தவபுரத்தி பேசா மோனக் கொடி மடலே
மணங் கொண்டிருக்குங் குழலாயே வந்தென் றனையாட்
கொண்டருள்வாய்
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

தனது குழந்தைப் பருவத்தில் அன்னை அபயாம்பிகை தாய் வடிவில் வந்து தனக்கு பசியார அமுதத்தை அருளியதை நினைத்துப் பார்க்கிறார் அபயாம்பிகை பட்டர். அந்த ஆனந்தக் களிப்பில் அன்னையை வர்ணிக்கிறார்.

தெய்வப் பெண்ணே! நவபீடத்தை ஆசனமாகக் கொண்டவளே! இங்கு ஸ்ரீசக்கர பூஜையில் வரும் நவ ஆவரணங்களில் (பீடங்களில்) அமர்ந்தவள் என்றும் சொல்லலாம். நவரத்னங்கள் பொறித்த பீடத்தில் வீற்றிருப்பவளாகவும் கொள்ளலாம். உதயகால சூரியன் போல் ஒளி விடுபவளே! பராகாசப் பெருவெளியை தன் உறைவிடமாகக் கொண்டு ஆகாயத் தாமரையில் இருப்பவளே!

அடியார்களின் விருப்பத்திற்கேற்ப அருள்புரியும் தவமணியே! தவம் புரிபவர்களுக்கு விலை உயர்ந்த மாணிக்க மணியாய்த் திகழும் தவமணியே! ஒன்றேயான, ஒப்பற்ற உன் திருக்கோலத்தை எனக்குக் காட்டி, உன் கருணையை என் மேல் பொழிய வேண்டும்! உன்னுடைய திருநாமங்கள் ஆயிரம். (உண்மையில் அவை கணக்கிலடங்கா) அடியேன் எந்த திருநாமத்தைச் சொல்வது? தவம் செய்வோர்க்கு தனியிடம் அருளும் தவபுரத்தி நீ!

உன் திருவடியைப் பற்றி, போற்றி, பணிந்து நான் ஏதேதோ சொல்லிக் கொண்டிருக்கிறேன். ஆனால் நீயோ புன்முறுவலுடன் ஏதும் பேசாமல் பேசா மோனக் கொடியாய் வீற்றிருக்கிறாய். நீ பேசினாலும் அழகு! பேசாவிட்டாலும் பேரழகு! அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி அல்லவா நீ!

திருக்கல்யாண கோலத்தில் வீற்றிருக்கும் தாயே! பிறவிப் பிணிகளுக்கு ஆளாகி, சபலங்களில் சிக்கி காம, மோக சேற்றில் உழல என்னை விட்டுவிட மாட்டாய் என்று அடியேன் அறிவேன். ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் (880) - *ஸம்ஸார பங்க நிர்மக்ன ஸமுத்தரண பண்டிதா* - ஸம்ஸார சகதியில் (சேற்றில்) மூழ்கியவர்களைத் தூக்கி வெளியே எடுப்பதில் திறமை வாய்ந்தவள். அன்னையே நீ நேரில் வந்து என்னை ஆட்கொண்டு அருள்புரிவாய்!

மயிலாபுரியில் பெருமைமிகு ஈசனின் வாழ்வே! அபயாம்பிகைத்தாயே! அனைவருக்கும் அருள்புரிவாயே!

73. அன்னையே! ஈசனுடன் நடனமிடும் நங்கையே!

குடும்பம் எனுமைக் கடல்தனிலே குலவும் உடலாகிய தோணி
குறித்தே பிரமன் வகுத்தவகை கொள்ள மேற்கால கீழ்க்காலாய்த்
தடம்புக் கியதோர் நாளையிலே தடுத்து வழியோர் சுழலடிக்கத்
தாறு மாறா யொருமுடுக்கில் தானே ஒதுங்கிக் கிடக்குமையே
திடம்புக் கிடவே நேர்காற்றால் சேர்ந்து வரவே கரைஒதுங்கச்
சற்றே தயவாய்ப் பார்த்தருள்வாய்ச் செஞ்சொற் கிசைந்த திருமாதே
மடம்பார் முடியில் நடனமிடும் மதிசூடிய பேரொளி விளக்கே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

சம்சாரத்தை 'சாகரம்' என்று சொல்லுவார்கள். சம்சாரம் என்பது ஆழம் காண முடியாத கடல் போன்றது. அதை மனிதனால் தனியாகக் கடக்க முடியாது. அதற்கு வழி யாது? அதுதான் அன்னையின் அருள். அவள் கடைக்கண் பார்வை கிடைத்து விட்டால் என்ன வேண்டுமானாலும் செய்ய முடியும். இதை மனதிற் கொண்டு அபயாம்பிகை பட்டர் அன்னையிடம், ஒரு சேயைப் போல திரும்பத் திரும்ப, அவள் அருளை வேண்டிக் கொண்டே இருக்கிறார்.

சம்சாரம் என்னும் கடலில் சுழலும் தோணியாய் இந்த உடல் அமைகிறது. "மைக்கடல்" என்று இங்கு சொல்வது கருமையான அஞ்ஞானம், அறியாமை இவற்றைக் குறித்தது. பல ஜன்மங்களில் செய்த வினைகளின் விளைவுகளை இன்னின்னவாறு அனுபவிக்க வேண்டும் என்று பிரம்மா விதித்த விதிப்படி இந்த உடல் நடந்து கொள்கிறது. இந்த உடலாகிற தோணி -- மேற்காற்று, கீழ்காற்று இவைகளினால் அலைக்கழிக்கப்பட்டு ஆடுகிறது. இந்த சம்சாரக் கடலில்தான் எத்தனை புயல்கள்! எத்தனை சூறாவளிகள்! இவற்றிற்கெல்லாம் ஆளாகி அலைகளால் ஒதுக்கப்பட்ட துரும்பு போன்ற என்னை அம்மா! நீதான் உன் கருணைக் கண்களால் பார்த்து அருள் புரிய வேண்டும்!

மெய்யான பக்தி பூண்டு தூய்மையான சொற்களினால் உன்னைப் போற்றும் பக்தர்களுக்கு அபயம் தந்து அருள்புரியும் அஞ்சல் நாயகி நீயல்லவா!

பிரளய காலத்தில் உலகங்கள் அனைத்தும் நீரால் சூழப்படும்போது, சர்வ சங்காரியாய் ஈசனுடன் திருநடனம் புரியும் நாட்டியப் பேரொளியே!

சந்திரனைத் திலகமாக நெற்றியில் அணிந்த ஒளி விளக்கே! ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமத்திலும் அன்னையின் நடனத்தைப் பற்றி வெகு அழகாகச் சொல்லப் பட்டிருக்கிறது. 232. *மஹேச்வர - மஹாகல்ப - மஹாதாண்டவ - ஸாக்ஷீ.* 577. *மஹா - ப்ரளய சாக்ஷீ.* ஆதிசங்கரர் சௌந்தர்யலஹரீ ஸ்லோகங்கள் 26, 41-ல் பிரளய கால நடனத்தைப் பற்றி வெகு விமரிசையாக விவரிக்கிறார்.

மயிலாபுரியில் பெருமைமிகு மாயூரநாதனின் உயிர்நாடியாய்த் திகழும் அபயாம்பிகைத்தாயே! அனைவரையும் காத்து அருள்புரிவாய்!

74. தாயே! கவிமாரி பொழிய வல்லமை தாராயோ?

கல்லாய்க் கயவர் முகம்பார்த்துக் காத்துக் கிடந்து விழிபுனலாய்க்
கரையக் கரைய இதம்பேசிக் கலங்கித் திரியும் கடையேனை
நல்லார் பதத்துக்கான எழில் நடத்தை அறிய எனதுமதி
நம்ப உறுதி அருள்புரிவாய் ஞானானந்தச் சுடர்விளக்கே
பொல்லா வறுமைதனை அகற்றிப் பொழுதை மறைத்துச் சரமேகம்
பொழியும் வகை போற் கவிமாரி பொழிய மொழி நல்வாக்களித்தே
வல்லானாக்கி எனை ஆள்வாய் வாலாம்பிகையே நாரணியே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

அன்னையின் அருளால் மனம் கரைந்த அபயாம்பிகை பட்டர், "இவ்வளவு பெருங்கருணைக்கு யாது செய்வேன்" என்று அன்னையிடம் சொல்ல, அசரீரியாக அன்னை, “செந்தமிழ் பாவால் என் சிந்தையை மகிழ்விப்பாய். அதுவே போதும்” என்று சொன்னதாக வரலாறு கூறுகிறது. அப்போது அபயாம்பிகை பட்டர், “அடியேன் கவிதை இயற்றும் அளவுக்கு கல்வி கற்றிலேனே? எங்ஙனம் பாடுவேன், ஆணையிட்ட அம்மையே! அதற்கு ஏற்ற அறிவும் அருளவேண்டும்” என்று வேண்ட, அன்னையே பட்டரின் அகத்துள் உணர்த்த இச்சதகம் எழுந்தது.

வறுமையில் வாழும் புலவர்களும், பணத்தாசை கொண்ட பாடலாசிரியர்களும் சில செல்வர்களைத் தேடிச் சென்று, அவர்களைப் பற்றி பொய்யும் மெய்யும் கலந்து பாடுவார்கள். இந்த நிலையை அருளாளர்கள் கண்டித்திருக்கிறார்கள். சுந்தரமூர்த்தி சுவாமிகள், அருணகிரிநாதர், ஆழ்வார்கள் போன்றவர் இதைப் பற்றிய பல பாடல்களைப் பாடியுள்ளனர்.

இங்கு அபயாம்பிகை பட்டர் (அபிராமி பட்டர் - அபிராமி அந்தாதியில் கூறுவது போல) இதே கருத்தைச் சொல்கிறார். மற்றவரை குற்றம்

சொல்லாமல் தாமே அப்படிச் செய்வதாக அந்தக் குற்றத்தை தன் மேல் ஏற்றிக் கொண்டு சொல்கிறார். இது பெரியோர்கள் இயல்பு. தாம் செய்யாத குற்றங்களையும் தான் செய்ததாகக் கூறி, இரங்குவார்கள். இதை நைச்சியானு சந்தானம் என்பர். திருவள்ளுவர் (திருக்குறள் - 978).

"பணியுமாம் என்றும் பெருமை சிறுமை

அணியுமாம் தன்னை வியந்து" என்று அருமையாகக் கூறுவர். அபயாம்பிகை பட்டர் அன்னையிடம் "தாயே! கல்லாத மூடர்கள் முகம் பார்த்து, அவர்களுக்காகக் காத்துக் கிடந்து, கண்களில் நீர் சொறிய, இல்லாதது சொல்லி, இச்சகம் பேசிக் கலங்கித் திரியும் கடையேனைக் காத்து உன்னையன்றி யாரையும் புகழாத ஞானிகளின் பாதையை எனக்கு நீ காட்டியருள வேண்டும்" என்று வேண்டுகிறார்.

ஞானிகளுக்கு ஆனந்தத்தை அருளும் ஞானானந்த சுடர்விளக்கே! நாட்டில் வறுமை போக, மெய்ஞ்ஞான வளமை கூட்ட, இனிய தமிழால் உன் பெருமை பேசும் வல்லமை, நீ எனக்கு அருள வேண்டும்! வாலாம்பிகைத்தாயே! நாரணியே! மயிலாபுரியில் பெருமைமிகு ஈசனாகிய மாயூரநாதனின் வாழ்வாய் விளங்கும் அபயாம்பிகைத் தாயே! அருள் புரிவாயே!

75. சக்தியின்றி சிவன் சக்தியற்றவன்!

அரி பிர்ம்மாதி தேவரொடும் ஆழி கடைய விடம் பிறக்க
அதனாற் பயந்தே அபயமிட அபயங் காத்தோன் கரியுரித்தோன்
எரியப் புரத்தை நகைத்தெரிந்தோன் இறையோன் என்பர்
அறியாதார்
இறையோன் உடலில் நீபாதி இருந்தே செய்த விலகாரம்
தெரியா துலகம் அறியாதோ சிவனார் தமக்கோர் தொழில்ஏது
தேகம் நீஉன் தொழில் எனவே செப்பு மறைகள் அநுதினமும்
வரிவில் தரித்த மலர்கொடியே வந்தென் றனையா தரித்தருள்வாய்
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

ஆதிசங்கரரைத் தட்சிணாமூர்த்தியின் அம்சமாகக் கூறுகிறார்கள். அவர் அருளிய சௌந்தர்யலஹரீயின் முதல் ஸ்லோகமே "சக்தியின்றி (அன்னை) யாராலும் எதையும் செய்ய முடியாது" என்று தெள்ளத் தெளிவாகச் சொல்கிறது. *"சிவ: சக்த்யா யுக்தோ யதி பவதி சக்த:"* என்று ஆரம்பிக்கிறது. அதாவது 'மங்கள மூர்த்தியான மகாதேவன் பராசக்தியாகிய

உன்னுடன் கூடியவராக இருந்தால் மட்டும் பிரபஞ்சத்தை ஆக்குவதற்கு திறமையுடையவர் ஆவார். அவ்வாறு கூடியில்லாவிட்டால் அசைவதற்குக் கூட திறமை உடையவராக ஆவதில்லையன்றோ' என்பதே பொருள். இதைத்தான் இப்பாடலில், "சிவனார் தமக்கோர் தொழில் ஏது' என்று அருமையுடன் வினவுகிறார் அன்னையின் அருள் மைந்தன் அபயாம்பிகை பட்டர்.

விஷ்ணு, பிரம்மா மற்றும் அனைத்து தேவர்களும் திருப்பாற்கடலை, அமிர்தம் வேண்டிக் கடைந்தனர். ஆனால் முதலில் வந்ததோ கொடிய விஷம். அஞ்சி ஓடினார்கள் சிவனிடம். அவ் விடத்தை பருகி, பரமன் அவர்களைக் காத்தான். கஜமுகாசுரனை வதம் செய்து ஆனைத் தோல் தரித்தான். திரிபுரங்களை தன் சிரிப்பினாலேயே எரித்தான். இப்படி எல்லாம் சிவப் பரம்பொருளின் பெருமையைப் பற்றிப் பேசுவார்கள். அவர்களுக்கு முழுக் கதையும் தெரியாதே ? சிவபெருமானுக்கு அத்தகைய ஆற்றல் எப்படி வந்தது ? அரனுக்குச் சக்தியாய் இருந்து செயல்படுவது நீ அன்றோ ?

"அருளது சக்தியாகும் அரன் தனக்கு" என்பது சிவஞான சித்தியார். சிவபெருமான் செயல்கள் அனைத்திற்கும் சக்தியளிக்கும் சக்தியானவள் நீ என்று வேதங்கள் கூறுகின்றனவே! எல்லாவற்றிற்கும் வேதங்கள் தானே பிரமாணம். மனிதர்களின் மனத்தை கரும்பு வில்லாகக் கரத்தில் கொண்டவளே! நீ வந்து என்னை ஆட்கொண்டு அருள வேண்டும் தாயே! என்கிறார் அபயாம்பிகை பட்டர்.

மயிலாபுரியில் பெருமைமிகு ஈசனின் வாழ்வாம் அபயாம்பிகைத் தாயே! அனைவருக்கும் அருள் புரிவாயே!

76. அதிசயமான வடிவுடையாள் அன்னை!

இறைவி இருந்த அதிசயத்தை எவரால் அறிய வசமாகும்
ஈசன் தனக்குள் தானறிவார் இரு மாநிலத்தோர் அறியாரே
நீறையுங் கடலும் நிலம் பவனம் நெருப்பு ககனம் அறியாதே
நின்னை அறிந்தார் பிறப்பிறப்பு நிலத்தில் திரும்ப முளையாரே
அறையஞ் சிலம்பு மிகஒலிக்க அமுத கிரணச் செஞ்சரணி
அடியேன் அறிவுக் கோரறிவாய் அமைந்தே இருந்த பரம்பரையே
மறையின் முடிவில் நடனமிடும் வனச மலர்ப்பூம் பதத்தாளே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

அன்னையின் வடிவம் கற்பனைக்கு அப்பாற்பட்டது. அதை, ஒருவரைத் தவிர வேறு எவராலும் அறிய முடியாது. யார் அந்த ஒருவர்? அவர்தான் பரம்பொருளான சர்வேச்வரன். ஆதிசங்கரர் சௌந்தர்யலஹரீ பன்னிரண்டாவது ஸ்லோகத்தில் (*த்வதீயம் சௌந்தர்யம்*) "பனிமலையரசன் பெண்ணே! கவி சிரேஷ்டர்கள், ஸரஸ்வதி வல்லபரான பிரம்மா போன்றவர்கள் கூட உன்னுடைய அழகுக்கு உவமை கூறுவதற்கு எப்படி எப்படியோ கற்பனை செய்து பார்க்கிறார்கள். ஆனால் அவர்களால் முடியவில்லை" என்று மிகுந்த காவ்ய ரசனையுடன் கூறுகிறார். *"மொழிக்கும், நினைவுக்கும் எட்டாத நின் திருமூர்த்தம்"* என்கிறார் அபிராமி பட்டர் (அபிராமி அந்தாதி-87)

மனிதர்களோ, தேவர்களோ (இரு மாநிலத்தார்) அறிய இயலாது அன்னையின் அதிசயத்தை! பஞ்ச பூதங்களாகிய நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் இவற்றாலும் அறிய முடியாது! உன் திருவடியைத் தவிர வேறு எந்த பற்றுக் கோடும் இல்லாத உன் மெய்யடியார்கள் நீ இருந்த அதிசயத்தை, உன் பெருமையை, உன் கருணையை அறிவார்கள். அதனால்தான் அவர்கள் மீண்டும் வந்து இந்த மண்ணில் பிறப்பதில்லை.

ஒலிக்கின்ற சிலம்புகளை அணிந்த உபய பாதங்களை உடையவளே! அமுத விழிப்பார்வையால் அடியார்கள் மேல் கருணை மழை பொழிபவளே! சிவந்த திருவடிகளைக் கொண்டவளே! அபிராமிபட்டர் அபிராமி அந்தாதியில் "அழகுக்கு ஒருவரும் ஒவ்வாதவல்லி அருமறைகள் பழகிச் சிவந்த பதாம் புயத்தாள்" என்று அன்னையின் சிவந்த பாதங்களை வர்ணிக்கிறார். மேலும், அபிராமி அந்தாதியின் பதினேழாம் பாடலில் *"அதிசயமான வடிவுடையாள்"* என்றும் அன்னையை ஆனந்தமாகப் போற்றுகிறார். அதிசயத்தக்க வடிவு ஒன்று உண்டென்றால் அதுதான் அன்னையின் வடிவம். மற்றெல்லாம் வடிவமல்ல! வடிவமைக்கப் பெற்றவை.

அன்னையே! அடியேன் அறிவுக்கும் உணரக் கூடிய பேரறிவாய் அமைந்தவளே! வேதங்களின் முடிவாய் அமைந்த உபநிடதங்களில் நடனமிடும் தாமரை மலர் போன்ற திருப்பாதங்களை உடையவளே! இதைத்தான் அபிராமி பட்டர், மேலே *"அருமறைகள் பழகிச் சிவந்த பதாம் புயத்தாள்"* என்றார். இருவருமே அன்னையின் அருள்மைந்தர்கள் தானே! வேறு எவ்வாறு அன்னையின் திருவடித் தாமரைகளை வர்ணிக்க முடியும்?

மயிலாபுரியில் வரங்களைத் தரும் வள்ளலாய் பெருமைமிகு ஈசனான மாயூநாதனின் உயிர்நாடியாய் விளங்கும் அபயாம்பிகைத் தாயே! அனைவருக்கும் அருள் புரிவாயே!

77. அன்னையே! நின்னையே சரணடைந்தேன்!

கருத்தோ செலுத்தச் சல்லடைக்கண் களைப்போற் கலங்கி மயங்குமையோ
கனவில் எவர்க்கும் உபகாரங் கருதினாற் போல் காணலுற்றேன்
பருத்த இருளில் விழிக்குருடன் பாதை அறிந்து நடப்பானோ
பதியே எனது மதிவினையால் படும் பாடினை நான் ஏது சொல்வேன்
ஒருத்தர் உதவிகளுங் காணேன் உனையே அடைந்தேன் ஒளிச்சுடரே
உதித்த கதிர்முன் இருள்போலும் ஓட்டி வினையை வாட்டிடுவாய்
வருத்தம் அறிந்த தாயே உன் மலர்ப்பாதத்தில் வீழ்ந்தடுத்தேன்
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

அன்னையின் அருளாளர்கள் அனைவரும் அன்னையின் திருவடி களிலேயே எப்போதும் கண்ணும் கருத்துமாய் இருப்பார்கள். அல்லும் பகலும் அவள் நினைப்பில் இருந்தாலும் தங்கள் இயலாமையைக் கூறி அன்னை யிடம் சரணமடைவதையே தங்கள் வாழ்க்கையின் குறிக்கோளாய் கொண்டவர்கள். இதுதான் அனன்ய பக்தியின் உச்சநிலை. அபயாம்பிகை பட்டரும் "என் நினைவு உன் மீதே எப்பவும் இருப்பதற்கு அருள்புரிவாய்" என்று பிரார்த்தனை செய்யும் பாடலிது.

அன்னையே எப்போதும் உன் நினைவாகவே இருக்க வேண்டும் என்று, என் கருத்து முழுவதும் உன் திருவடியிலேயே நிறுத்த முயலுகிறேன். ஆனால் வினைகளின் விளைவு, அந்தக் கருத்தை எப்படியல்லாமோ எங்கேயோ கொண்டு செல்கிறது.

எவ்வளவோ முயற்சிகள் செய்து, அலையும் கருத்தை உன் திருவடியில் நிறுத்தப் பார்க்கிறேன். இதற்குள் மனம் சல்லடைக் கண்ணாய் மயங்குகிறது. கனவு ஒன்று காண்கின்றேன் தாயே! அந்தக் கனவில் உன் அடியார் ஒருவருக்குக் கருணை செய்து ஆட்கொண்டது போல் ஒரு காட்சி வந்தது! நானும் உன் கருணைக்காகத் தானே ஏங்குகிறேன்! உனது திருவடியை நோக்கி குருடன் இருட்டில் நடப்பது போல் நடந்து வருகிறேன்.

அன்னையே! என் வினைகளால் நான் படும் துயரை எப்படிச் சொல்வேன்? யார் வந்து எனக்கு உதவப் போகிறார்கள்? உன்னையே சரணடைந்தேன். உன்னைத் தவிர ஏது கதி எனக்கு? எல்லாவற்றிற்கும்

ஒளியைத் தரும் ஒளிமயமானவளே! கதிரின் ஒளியில் கார் இருள் காணாது போவது போல, என் வினையனைத்தும் விரட்டிடுவாய்! என்னுடைய வருத்தம் அறிந்த தாயே! உன் திருவடியே சரணம் என் வீழ்ந்து சேர்ந்தேன்.

இப்பாடலில் *"பருத்த இருளில் விழிக்குருடன் பாதை அறிந்து நடப்பாளோ"* என்று வரும் கவிநயம் காண்க. அதாவது கண்ணொளியும், சூரிய ஒளியும் கலந்து பொருள் விளக்கம் காண வேண்டியிருக்க, மிக்க இருளும் குருட்டு விழியும் கூடுமா? ஆகவே எங்ஙனம் குருடன் வழி நடக்க இயலும் என்பதாம். என்னே அபயாம்பிகை பட்டரின் கவிதாவிலாசம்! அன்னையின் அருளினால் இயற்றிய பாடல் ஆயிற்றே! அன்னை தானே கவிமழை பொழிகிறாள்!

மயிலாபுரியில் பெருமைமிகு ஈசனின் வாழ்வாம் அபயாம்பிகைத் தாயே! அனைவருக்கும் அபயம் தந்துஅருள் புரிவாயே!

78. அன்னையே! நினது சேவடி சென்னி வைக்க!

சத்த பரிசமொடு ரூபம் தரித்த ரசமா கனக்கந்தம்
தாவும் பொறிகள் தாம் அறியுந் தனையே அறியும் கரணமது
உற்ற உயிர்தான் இவை அறியும் உயிர்தான் அறியும் அதுசாக்ஷி
உகந்த சாக்ஷி தனைஅறிய ஒருவர் தமையும் நான் காணேன்
முற்ற அறிவை உடையோர்தாம் முதலாஞ் சாக்ஷி தனையறிந்து
மோகா வேசந் தனைக்கடந்த் முனிவரானோர் இருபதங்கள்
வைத்தென் சிரசில் தியானமுடன் மகிழ்ந்தேயிருக்கும் வகைஅருள்வாய்
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" என்பது ஔவைப் பாட்டியின் அருமையான வாக்காகும். எவ்வளவோ பிறவிகள் எடுத்தாலும் மானிடப் பிறவியில் தான் அன்னையின் திருவடியடைந்து முக்தி அடைய முடியும். அன்னையின் திருவடிக்கும் நம் தலைக்கும் (சென்னி) ஒரு இணைப்பு ஏற்பட நாம் முயற்சி செய்து கொண்டே இருக்க வேண்டும். தாயிடம் செல்லத் தவிக்கும் சேயைப் போல அன்னையின் திருவடிகளுக்குத் திரும்பிச் சென்று விட வேண்டும். இதுதான் மானிடப் பிறவியின் முக்கிய நோக்கமாய் கொள்ள வேண்டும். இந்த சந்தர்ப்பத்தை தவறவிடக் கூடாது. அபயாம்பிகை பட்டர் இது வரையிலும் அன்னையின் திருவடி நிழலிலேயே இருந்தார். இப்போது தருணம் வந்து விட்டது என்று உணர்ந்து, "என் தலைமேல் உனது திருவடிகளைப் பதிப்பாயாக" என்று பக்திப் பரவசமாகக் கேட்கிறார்.

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்று பஞ்சபூதங்கள். அவற்றின் குணங்கள் முறையே, கந்தம் (வாசனை) ரஸம் (சுவை), ரூபம் (ஒளி), ஸ்பரிசம் (தொடும் உணர்ச்சி), சப்தம் (ஒலி) இவற்றை அறிவதற்கு மூக்கு, நாக்கு, கண், மெய், காது ஆகிய ஐந்தும் உதவுகின்றன. இவை ஞானேந்திரியங்கள் எனப்படும். மேலும் பேசுதல், நடத்தல், உழைத்தல், மலம் விடுதல், சுக்கில நீக்கம் என்ற ஐந்து தொழில்களையும் செய்யும் நாக்கு, கால்கள், கைகள், எருவாய், கருவாய் ஆகியவை கன்மேந்திரியங்கள் எனப்படும், இதைத் தவிர மனம், சித்தம், அகங்காரம், புத்தி என்ற நான்கு உட்கருவிகள். இவற்றை அந்தக்கரணங்கள் என்று கூறுவர். மனம் ஒன்றைப் பற்றும், சித்தம் சிந்திக்கும், அகங்காரம் சித்தம் சிந்தித்த பொருளைத் துணிவேன் என ஒருப்பட்டு எழும். புத்தி நிச்சயிக்கும். (அதாவது ஆன்ம தத்துவங்கள்-24).

மேற்கூறிய இந்திரியங்கள் போகத்தை நாடும். தன்னை அறியும் ஞானம் தருவது உயிரே. பொறிகளை அந்தக்கரணம் அறியும். உயிரை 'தான்' என்னும் பொருளாகிய பதி அறியும். அதுவே சாட்சியுமாம். அந்த சாட்சியை அறிய ஒருவருமில்லை. முதிர்ந்த உணர்வுடைய ஞானிகள் முதலாம் சாட்சியை அறிந்து தியானிப்பர். அவர்கள் மோகாவேசங்களைக் கடந்தவர்கள். அத்தகைய முனிவர்களைப் போன்று அடியேனும் உன் உபய பாதங்களை என் சிரசில் வைத்து தியானமுடன் மகிழ்ந்திருக்க நீ அருள்புரிய வேண்டும் தாயே! மயிலாபுரியில் பெருமைமிகு ஈசனான மாயூரநாதனின் உயிராய்த் திகழும் அபயாம்பிகைத்தாயே! அனைவருக்கும் அருள் புரிவாயே! அபிராமி பட்டரும் அபிராமி அந்தாதியில் மீண்டும் மீண்டும் *'சேவடி சென்னி வைக்கும்'* பாக்யத்தை அன்னையிடம் வேண்டுவர்.

79. தாயே! தருவாய் மனப்பக்குவம்!

தனதென்றிருப்பர் உலகமதில் தந்தையொடு தாய் தனதாமோ
தனந்தான் தனதோ அகம்தனதோ தழுவும் மனையாள் தனதாமோ
எனதென் றிருந்த பாழும் உடல் இதுதான் தனதோ மனம்தனதோ
எல்லாம் உலக விருத்தியினால் இதம்போற் கரவில் இசைந்திருப்ப
உனது பதத்தை யான் பிடித்தேன் உணர்ந்தொத்திருக்க வகையடுத்தேன்
உடலும் மனமும் வினைவசத்தால் ஒடுங்கித் தளர்ந்து துடிக்குமையோ
மனதின் நீங்கி எனது வசமாகக் கருணையது புரிவாய்
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

மனிதப் பிறவி என்பது நிலையற்றது. இம்மண்ணில் நாம் பிறக்கும்போதே நம் மரணமும் நிச்சயிக்கப்படுகிறது. மனித வாழ்வு ஒரு குறுகிய காலம் தான்! இது சாஸ்வதமல்ல என்று தெரிந்தும் அதில் எவ்வளவோ பாச பந்தங்களை ஏற்படுத்திக் கொண்டு துயரத்தில் சிக்குகிறோம். திரும்பத் திரும்ப "நான்", "எனது" என்று சொல்லிக்கொண்டு வாழ்நாளை வீணடிக்கிறோம். எனது தாய், எனது தந்தை, எனது பணம், எனது வீடு என்று நாம் சொல்கிறோம். இன்னும் சொல்லப் போனால் உடலையும் எனது என்று சொல்லிக் கொண்டு அதைப் பேணிப் போற்றி பாதுகாக்கிறோம். இதில் எது நம்முடையது என்று சிந்திப் பார்த்தால் எதுவுமே நமது இல்லை என்று புரியும். இந்தப் பிறவியில் நமக்குத் தாய், தந்தை, மனைவியாக இருப்பவர்கள் போன பிறவியில் அவ்வாறு இருந்திருக்க சாத்தியமில்லை. அமைய வாய்ப்பில்லை.

மற்றுமொரு பிறவி ஏற்பட்டால் அதிலும் இவர்கள் நமக்கு உறவினராக அமையப் போவதில்லை. அப்படித்தான் ஜடவஸ்த்துக்களும். நம்முடைய வீடு, நிலம், வாகனங்கள் எல்லாமே நிரந்தரமில்லை. நாம் போற்றிப் பாதுகாக்கும் உடலும் நம்முடையது அல்ல. சட்டை மாற்றுவது போல உடலையும் மாற்றிக் கொண்டே இருக்கிறோம். எவ்வாறு வாடகை வீடு நமது இல்லை என்று நமக்குத் தெரியுமோ, அவ்வாறே ஒருநாள் இந்த உடலை விட்டுப் பிரிவோம் என்று உணரவேண்டும். இதெல்லாம் இந்த உலகியல் வாழ்க்கையின் மாயத்தோற்றத்தின் விளைவுகள்.

எதுவுமே நிரந்தரம் இல்லையென்றால், பின் எதுதான் நிரந்தரம் என்ற கேள்வி எழுவது நியாயம்தான். ஒன்றே ஒன்றுதான் நிரந்தரம். அது பிறக்கவும் இல்லை. அழியப்போவதும் இல்லை. அது தான் நம் அறிவுக்கு எட்டாத பரம் பொருள். ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமத்தில் (296) *"அநாதி நிதனா"* என்று அன்னையை போற்றுகிறார்கள். இதன்பொருள் - ஆதியும் அந்தமும் இல்லாதவள் - முதலும் முடிவும் இல்லாதவள். (மனிதன்தான் நடுவில் தோன்றி நடுவில் மறைகிறான் என்பதை உணரவேண்டும்).

தாயே உனது திருவடிதான் சாசுவதம் என்று உணர்ந்தேன். ஆனால் இந்தப் பாழும் உடலும், மனமும் வினை வசத்தால் ஒடுங்கித் தளர்ந்து துடிக்கிறது. இந்த மாயைகளில் சிக்காமல் இருக்க எனக்கு மனப் பக்குவம் தந்தருள வேண்டும். மனம் பக்குவமடைவது எளிதானதல்ல. இது உனக்குத் தெரியும்! எத்தனை பிறவிகள் எடுத்தாலும், மனப்பக்குவம் ஏற்பட்டு, சித்தம் ஒருநிலைப் பட்டு, நின் திருவடி சேர, உனது அருள் இருந்தால் மட்டுமே முடியும். என் மனம், என் வசமானால் உன் திருவடியிலேயே நிலைத்து நிற்க முடியும்.

மயிலாபுரியில் பெருமைமிகு ஈசனான மாயூரநாதனின் வாழ்வாய் விளங்கும் அபயாம்பிகைத்தாயே! அவைருக்கும் அருள் புரிவாயே!

80. அன்னையே! அருட் கவிதைப் பொழிய அருள் புரிவாய்!

காண வேண்டும் இருபதத்தைக் களிக்க வேண்டும் அநுதினமும்
கவலைக் கடலாகிய வினைகள் கரைய வேண்டும் எனைஅகன்று
தோண வேண்டும் திருக்கிருஷ்ணன் துணைவி உனது திருக்கருணை
தோற்ற வேண்டும் நடுவணையில் துவாதசாந்த வெளியில் மனம்
பூண வேண்டும் அருளமுதம் புசிக்க வேண்டும் எனதுடலம்
புகழ வேண்டும் அருட்கவிதை பொழிய எனக்குன் அருள்புரிவாய்
வான மதியே அபரஞ்சி மனையில் இருந்த சவுந்தரியே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

இப்பாடலில் அபயாம்பிகை பட்டரின் அனன்ய பக்தி நிலையை கண் கூடாகக் காண்கிறோம். எந்நேரமும், எப்போதும் அன்னையின் திருவடியைக் காண வேண்டும் என்று துடிக்கிறார். அந்தத் திருவடிகளைக் கண்டு என் உள்ளம் களிக்க வேண்டும். என்னைச் சூழ்ந்து இருக்கும், வினைகளால் வந்த கவலைக்கடல் கரைய வேண்டும். திருக் கிருஷ்ணனின் சகோதரியான உனது திருக்கருணை தோன்றிக் கொண்டே இருக்க வேண்டும். புருவ நடுவாகிய ஆக்ஞையில் உன்னை தியானித்து துவாதசாந்தப் பெருவெளியில் உனது தோற்றத்தை மனம் பூண வேண்டும். உனது கருணையான அமுதத்தை அடியேன் அருந்த வேண்டும். மீண்டும், மீண்டும் இடையறாது உன் திருநாமங்களை எனது நாவினால் சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும்.

உனது பெருமைகளையும், கருணைச் செயல்களையும் கவிதையாய் பொழிய நீ எனக்கு அருள் செய்ய வேண்டும்!

விண்ணில் தோன்றும் அழகிய மதியே! தங்க மாளிகையில் வாழும் நிகரில்லா அழகுபடைத்த சௌந்தரியே! மயிலாபுரியில் பெருமைமிகு ஈசனாகிய மாயூரநாதனின் உயிர்நாடியாய் விளங்கும் அபயாம்பிகைத் தாயே! அனைவருக்கும் அருள்புரிவாயே!

81. அன்னையே மூலப்ரக்ருதி!

அத்து விதமே சிவபுரமே அணுவில் அணுவே அகண்டிதமே

அமுதச் சிவமே அழகொழுகும் அருண நுதலே நவநிதியே

முத்தர் அறிவே கனகமுடி மோனப்பதியே அதிரசத்தின்

முக்யரசமே நவமுடியில் முடிந்த பரமே திருப்பரையே

சுத்த வெளியே வெளிக்குநடு சூழ்ந்த ஒளியே ஒளிக்குமுனந்

தோயுந் திரையே திரைக்கும் அப்பால் தோன்றும் வெளியே வளிக்கனலே

மத்த மதனப் பிரபஞ்ச வடிவே இமய மலைமகளே

மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

அன்னை "ஒன்றே" வடிவானவள். அதாவது இரண்டற்றதான பொருள். எல்லாவற்றிற்கும் ஆதி காரணமான ப்ரக்ருதி ரூபமாக இருப்பவள். ப்ரக்ருதி என்பது மாறுதல்கள் இல்லாத வஸ்து. 'அத்துவிதமே' என்று அருமையாக இந்தப் பாடலை ஆரம்பிக்கிறார் அபயாம்பிகை பட்டர்.

அத்துவிதமே என்பது இரண்டற்ற தன்மையைக் குறிக்கும். ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் 667. *நிர்த்வைதா* - இரண்டற்றவள் 668. *த்வைத வர்ஜிதா* - 'த்வைதம்' அதாவது இரண்டாவதான ஒன்று இருக்கும் பாவம் நீங்கியவள். பரப்ரஹ்மத்திலிருந்து (பரம்பொருள்) வேறுபட்டதாக ஜீவனை நினைக்கும் வரை 'த்வைத பாவம்'. இது மறைந்தால் பரம்பொருள் மட்டுமே தோன்றும் அத்வைத நிலை. திருமூலரும்

"சீவன் எனச்சிவன் என்ன வேறில்லை

சீவனார் சிவனாரை அறிகிலர்

சீவனார் சிவனாரை அறிந்தபின்

சீவனார் சிவன் ஆயிட்டு இருப்பரே" என்கிறார் (திருமந்திரம் - 2017)

இதன் கருத்து - சீவன், சிவனும் தானும் வேறல்ல என்னும் ஞான உணர்வு அடைந்தால் சிவன் ஆகிவிடுவான்.

அன்னை சிவபுரத்தின் நாயகி என்பதை உணர்த்த அன்னையையே "சிவபுரமே" என்று சொல்வது அருமை! அணுவிற்கு அணுவாயும், அகண்டித மாகவும் (எல்லையற்ற பரவெளி) இருப்பாள். அமுதச் சிவமாக இருக்கிறாளாம் அன்னை! அழகு ஒழுகும் சிவந்த நெற்றியை உடையவள். நவநிதிகளுக்கும் அவளே அதிபதி. ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம். 690.

கோசநாதா - பொக்கிஷத்திற்கு அதிகாரி. ஜீவன் முக்தர்களின் அறிவாய் இருப்பவளும் அவளே. அபிராமிபட்டர், அபிராமி அந்தாதியில் (11) *"ஆனந்தமாய் என் அறிவாய், நிறைந்த அமுதமாய்"* என்று வெகு அழகாகச் சொல்கிறார்.

உடலாகிற மேரு மலையின் உச்சியிலுள்ள மோனநகரம் என்றும், சுவைகளில் இனிய சுவையாகவும், நவமுடிமேல் முடிந்த பரமே என்றும், திரிபுரசுந்தரி என்றும், பராகாச வெளியில் உறைபவள் என்றும், அதன் நடுவில் தோன்றும் பரஞ்ஜோதியாகவும், அன்னையை வர்ணிக்கிறார் அபயாம்பிகை பட்டர். அன்னையே மாயையாகவும், திரோதன சத்தியாகவும், மதம் பிடித்து திரிகின்ற உலகமாகவும் இருக்கிறாள். ஒளியாகவும், ஒளியை மறைக்கும் திரையாகவும், பின் திரைக்குப் பின்னால் தோன்றும் சக்தியாகவும் இருக்கிறாள்.

82. அன்னை - அனைவரும் வணங்கும் அன்னை!

மருத நிலத்தோன் ஒருபாலில் வந்து வணங்கக் கனல்மறலி
வருணன் நிருதி குபேரனொடு வாயு முடிவில் ஈசானன்
பொருந்தி வணங்க அமரர்முடி புனையும் பதத்தி அருள்மயத்தி
பூமா தொடு வாணியும் வணங்கும் பொன்னாபரணம் அணிபுயத்தி
கருதும் அடியார் நினைவினுள்ளுங் கலந்த வதனி கல்யாணி
காமக் கிரிபீடாசனியே கன்னி உமையே காரணியே
வருநற் பருவமாக்கி எனை வளர் சேவடிக்காளாக்கிடுவாய்
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

தாய் வழிபாடுதான் தரணியில் சிறந்த வழிபாடு ஆகும். தாய் தயையே வடிவானவள். "தாயிற் சிறந்த கோயிலுமில்லை" என்பது சான்றோர் வாக்கு. பதினான்கு புவனங்களிலும் வணங்கப்படும் "புவனேச்வரியாக" விளங்குகிறாள்அன்னை! அனைவரும் வணங்கும் அன்னை என்ற பெருமிதத்துடன் ஆனந்தக் களிப்பில் அறைகிறார் அபயாம்பிகை பட்டர்.

'எங்கள் அம்மாவை வணங்குபவர்கள் யார் யார் தெரியுமா? இந்திரன், அக்னி, எமன், வருணன், நிருதி, குபேரன், வாயு. இவர்களுடன் ஈசானனும் உன்னை வணங்குகிறான். அமரர்கள் அனைவரும் உன் திருவடிகளில் தலை தாழ்ந்து வணங்குகிறார்கள். அருள்மயமான உன்னை லட்சுமியும், சரஸ்வதியும் வணங்குகிறார்கள். ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமமும் (614) *ஸசாமர*

ரமா வாணீ ஸவ்ய தக்ஷிண ஸேவிதா என்று கூறுகிறது. கைகளிலேந்திய சாமரங்களுடன் தேவியின் இடது, வலது பக்கங்களில் லட்சுமியாலும், சரஸ்வதியாலும் சேவிக்கப்படுபவள் அன்னை. பொன்னாபரணம் அணிந்த திருக்கரங்களை உடையவளே!

உன்னையன்றி வேறல்லாது நினைந்து, நினைந்து உருகும் அடியார்கள் மனக்கோயிலில் குடியிருக்கும் அழகிய திருமுகத்தைக் கொண்டவளே! மங்களமே வடிவான கல்யாணியே! காமக்கிரி பீடாசனியான காமாட்சியே! கன்னி உமையே! காரணியே! என் வாழ்க்கையின் எஞ்சியுள்ள காலத்தை நற்பருவமாக்கி, என்னை உன் திருவடியில் சேர்த்துக் கொள்ள வேண்டும் தாயே! மயிலாபுரியில் பெருமைமிகு ஈசனான மாயூரநாதனின் வாழ்வாய்த் திகழும் அபயாம்பிகைத் தாயே! அருள் புரிவாயே!

அபிராமி பட்டரும் அபிராமி அந்தாதியில் (97) மிகுந்த களிப்புடன் அன்னையை வணங்குபவர்களின் பெயர்களைத் தந்து இறுதியில், *"சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே"* என்று கூறுவார்.

"ஆதித்தன், அம்புலி, அங்கி, குபேரன், அமரர் தங்கோன்
போதிற் பிரமன், புராரி, முராரி, பொதிய முனி
காதிப் பொருபடைக் கந்தன், கணபதி, காமன் முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே".

இப்பாடலின் கருத்து - அன்னையே அகிலாண்டத்திற்கும் தாயானவள். தாயை வணங்காத சேயில்லை என்பதே.

83. தாயே! திரிகோணாசனத்தி!

தக்க திரிகோ ணாசனத்தி சகல புவனமான சத்தி
சர்வ பூதமான சத்தி சகலாகமங்களான சத்தி
திக்கே உடையாய் அமர்ந்தவளே திரிகோணாதீதப் பொருளே
செம்பொற் கலசத் தனத்தழகி திவ்ய சோதி மயமான
புக்கே அடியார் சிந்தையினில் புகழ்ந்து நடனமிடுஞ் சரணி
பூதம் ஐந்தாய் நாதாந்தப் பொருளாய் இருந்த மலர்க்கொடியே
மக்கும் எனது மனச்சலனம் மாற்றிக் கருணை மிகுத்தருள்வாய்
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

அபயாம்பிகை பட்டர் ஒரு தலை சிறந்த ஸ்ரீவித்யா உபாசகர் என்பதை அவர் அருளிய அபயாம்பிகை சதகத்தின் பாடல்கள் நமக்குத் தெளிவாக

உணர்த்துகின்றன. இப்பாடல் அன்னை முக்கோண ஆசனத்தியாக அமர்ந்து இருப்பதிலிருந்து வர்ணனை ஆரம்பிக்கிறது.

ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் (986) *த்ரிகோணகா* - முக்கோண வடிவமான யோனி சக்கரத்தில் இருப்பவள். ஸ்ரீசக்கரத்தின் மத்தியில் இருக்கும் யோனி சக்கரமாகிய த்ரிகோணமே அம்பாளின் ரூபம். பிந்து சிவஸ்வரூபம். இது ஸ்ரீ லலிதா த்ரிசதியில் சொல்லப்படுகிறது. திரிகோணசனத்தில் இருந்து கொண்டு அதற்கும் மேலான, ஞானிகளால் மட்டும் அறிந்து கொள்ளும் சக்தியாக விளங்குபவள்.

"திரிகோண ரூபிணீ ஶக்தி: பிந்து ரூப: பர: ஶிவ: ஸ்ம்ருத ।

அவிநாபாவ ஸம்பந்த தஸ்மாத் பிந்து த்ரிகோணயோ ॥

திருமூலரும் (திருமந்திரம் - 401)

"அளியார் முக்கோணம் வயிந்த வந்தன்னில்

அளியார் த்ரிபுரையாம் அவள்தானே

அளியார் சதாசிவமாகி அமைவாள்.

அளியார் கருமங்கள் ஐந்து செய்வாளே" என்று கூறுகிறார்.

இதன் பொருள்: கருணை ததும்பும் முக்கோண வடிவான பீடத்தில் மையப் புள்ளியில் கருணை புரியும் மகாசக்தி அவளே. அந்தச் சக்தியே அருள் வழங்கும் சதாசிவமாகவும் வீற்றிருப்பாள். அவளே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்து காரியங்களையும் செய்பவளு மாவாள் (வயிந்தவம் - ஸ்ரீசக்கரத்தில் உள்ள நாற்பத்து மூன்று கோணத்தில் நடுவில் உள்ள புள்ளி) ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் 905. *பைந்தவாஸனா* - பிந்துவை ஆஸனமாகக் கொண்டவள்.

அன்னையே சகல புவனங்களுக்கும் சக்தியானவள். அவளே சர்வ பூதமான சக்தி. அவள் சகல ஆகமங்களிலும் உறைகிறாள். எல்லா திக்குகளையும் ஆள்கிறாள். திரிகோணத்தையும் கடந்த பிந்துவில் வசிப்பவள். பொற் கலசங்களைப் போன்ற தனபாரங்களை உடையவள். ஜோதிமயமாய் அடியார்களின் உள்ளங்களில் மனம் உவந்து ஆனந்த நடனமிடுகிறாள். *"செப்பும் கனக கலசமும் போலும் திருமுலைமேல்"* (அபிராமி அந்தாதி-78).

பஞ்ச பூதங்களாய்த் திகழ்பவளும் அன்னையே! நாதந்தப் பொருளான மலர்கொடியாய் படருபவளும் அவளே! "சஞ்சலங்களால் அவதிப்பட்டும் மக்கிக் கொண்டிருக்கும் என் மனச் சலனத்தைப் போக்கி என்னை நீ கருணையோடு ஆட்கொள்ள வேண்டும்" என்று அன்னை அபயாம்பிகையிடம் வேண்டுகிறார் அபயாம்பிகை பட்டர். திருமூலரும் (திருமந்திரம்-1048) *"நல்குந் திரிபுரை நாதநாதாந்தங்கள்"* என்று கூறுவார்.

84. தாயே! துயரத்தைத் துடைக்கும் துர்கா தேவியே!

அனைத்தும் அகண்ட முடிவிலொன்றாய் அருளாய்ப் பழுத்த தவப்பொருளே

அகில போக தனுகரணமான சுகமே அற்புதமே

செனித்த பிறவுத் துயரறுக்குஞ் சீர்வாள் பிடித்த கரத்தழகி

தினமும் உனையே பணிந்தவர்கள் சிந்தை நிலையாயிருப்பவளே

கனத்த மயிடாசுரன் சிரத்தைக் கலங்க உதைத்த பதத்தாளே

கருணைக் கடலே பரநிதியே கண்மூன்றுடைய கற்பகமே

மனத்துள் சலனம் அறக்கருதி மலர்ச்சேவடியை அளித்தருள்வாய்

மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

இந்தப் பாடலும், அபிராமி அந்தாதி எட்டாவது பாடலாக வரும்

"சுந்தரி எந்தை துணைவி என்பாசத் தொடரை எல்லாம்

வந்தரி சிந்துர வண்ணத்தினாள் மகிடன்தலை மேல்

அந்தரி நீலி அழியாத கன்னிகை ஆரணத்தோன்

கந்தரி கைத்தலத்தாள் மலர்த்தாள் என் கருத்தனவே" என்ற பாடலும் மிகுந்த ஒற்றுமையுடன் காணப்படுகிறது. இரண்டிலும் பிறவித் துயரை போக்குபவள் அன்னை என்றும், அறியாமையின் அடையாளமான அசுரன் மகிடன் வதத்தையும், அன்னையை துர்கா தேவியாகக் காண்கிறோம். அன்னையின் திருவடியை அபிராமி பட்டர் மலர்த்தாள் என்கிறார்! மலர்ச்சேவடி என்கிறார் அபயாம்பிகை பட்டர்! இருவரும் அன்னையின் அருள்மைந்தர்கள் தானே! அன்னையே, அபிராமி பட்டருக்கு "அபிராமியாகவும் (திருக்கடவூர்) அபயாம்பிகைபட்டருக்கு "அபயாம்பிகையாகவும் (மயிலாடுதுறை) அருள் புரிந்தாள் என்பதே ஸூக்ஷ்மமான பொருள்.

அன்னையே! அனைத்தினிற்கும் அந்தமான ஒன்றான பொருளே! உன்னையே ஸதா த்யானிக்கும் அன்பர்களுக்கு கருணையே பழமாய் பழுத்த தவப்பயன் நீ! தனு (உடல்), கரண (கருவி), புவன (பிரபஞ்சம்), போகம் (அனுபவ பொருள்) இவையெல்லாம் மாயையால் உண்டாவது. அன்னைதான் "மஹாமாயா" ஆனவள். இங்கு *"அகில போக தனுகரணமான சுகமே"* என்பது மாயையின் தோற்றம். அபிராமிபட்டரும், அபிராமி அந்தாதியில் (36) *"பொருளே பொருள் முடிக்கும் போகமே அரும்போகம் செய்யும் மருளே மருளில் வரும் தெருளே..."* என்று பொருள் செறிவுடன்

சொல்கிறார். அற்புதப் பொருளே என்று அன்னையைக் கூறுவது அவளை எவராலும் வர்ணிக்க இயலாது என்பதைக் குறித்தது.

அன்னையே! பிறவிப் பிணியினை அறுக்கும் அற்புதமான வாளைத் தாங்கும் பேரழகியே! ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் 114. *பவாரண்ய குடாரிகா* ஸம்ஸாரமாகிய காட்டையழிக்கும் கோடரி போன்றவள். அவளே சர்வ து:க்க விமோசினீ. தினமும் உன்னையே தியானிப்பவர்களின் சிந்தையில் நிலைத்து இருப்பவளே! அறியாமையால் செருக்குற்ற மகிடாசுரன் சிரத்தை கலங்க உதைத்த பாதங்களை உடையவளே! கருணைக் கடலே! மேலான பொக்கிஷமே! மூன்று கண்கள் கொண்ட கற்பகவல்லியே! அடியேன் மனத்திலுள்ள சலனங்களைப் போக்கி உன் மலர் போன்ற திருவடிகளை என் சிரசில் அணிவிப்பாய்! என்று வேண்டுகிறார் அபயாம்பிகை பட்டர்.

85. தாயே! அமலசுகம் அடையும் அறிவு அருள்வாயே!

துரங்கம் பதினாறங்குலமே சுகமாய் நடனமிடுஞ்சரணீ
தொலையா வெளியே வெளிமுதலே சுயம்பிரகாச நிலையாளே
இரங்கும் அடியர் சிந்தையுள்ளே இனிதாய் வளரும் வாரிதியே
இலகு நினைவும் உடையவளே ஈனரகம் விட்டிருப்பவளே
அரங்க முடியில் நடுவணையில் அமுதாய்ச் சொரியும் அருள்நதியே
அமல சுகத்தை அடியேனும் அடையும் அறிவு தரல்வேண்டும்
வரங்கள் இனி வந்தருள்புரிவாய் வனசாசனத்துள் இருப்பவளே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

அபயாம்பிகை பட்டர் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு நிலைகளையும் கடந்த ஜீவன் முக்தர். பல பாடல்களில் யோக நெறியும் அவ்வப்போது சொல்கிறார். அபயாம்பிகை சதகம் வெறும் தோத்திர நூலாக இல்லாமல் பல வழிகளையும், முறைகளையும் சொல்லும் சிறப்புடைத்து.

இப்பாடலில் காற்றுப் பயிற்சியைப் பற்றி சொல்கிறார். (திருமூலரின் திருமந்திரம் இதைப் பற்றி விரிவாகச் சொல்லுகிறது) மூச்சுப் பயிற்சி முறையாகச் செய்தால் கடவுளைக் காணலாம். மூச்சுக் காற்று குதிரைக்கு (துரங்கம்) உவமையாகச் சொல்லப்பட்டது. குதிரையை சரியாக அடக்கினால் அதன்மீது சுகமாக சவாரி செய்யலாம். இல்லையென்றால், அது தலை குப்புற தள்ளிவிடும். இது போன்றே மூச்சுக்காற்றும். (துரங்கம் - குதிரை).

பூரணமாக உள்ளே இழுக்கப்படும் பதினாறு அங்குல நீளமான பிராணவாயுவாகிற குதிரையிலிருந்து அன்னை சுகமாக நடனமிடுகிறாளாம்.

வானவெளியில் பராகாச ஸ்வரூபமாகவும், அதே சமயம் சுயம் பிரகாச வடிவினளாகவும் இருக்கிறாள். ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் 414. *ஸ்வப்ரகாஸா* ஸ்வயம் ப்ரகாசமாக இருப்பவள். அதாவது தன்னிடமிருந்து வேறல்லாத ப்ரகாசத்துடன் கூடியவள். சூரியன், சந்திரன், அக்னி ஆகிய மூன்றும் அன்னையிடமிருந்து தான் ஒளியைப் பெறுகிறது. ("*தஸ்ய பாஸா ஸர்வ மிதம் விபாதி*" - கடோபநிஷத் 5.15).

அன்னையின் அடியார்கள் அன்னையின் கருணைக்காக ஏங்கு கிறார்கள். அவர்கள் மனத்தில் (அவர்கள் எதிர்பார்த்ததைவிட) கருணைக் கடலாய் இனிதே பொங்கி வளருகிறாள் அன்னை! இளகிய மனம் கொண்ட தாய்! அன்பர்களின் துயரை பொறுக்க மாட்டாள். அடியார்களின் ஆக்ஞையிலிருந்து அமுதைப் பொழியும் பூரணசந்திரன்!

நிலையற்ற சுகங்கள் வேண்டாம். அவை அல்பம். பேரின்பமாய் திகழும் தாயே! நீ அருளும் அமல சுகத்தை அடியேன் அடைய, அதற்குரிய அறிவையும் தந்து அருள்வாய்! இகத்தில் காணும் சுகமெல்லாம் மலத்துடன் உள்ளவை. பரத்தில், தாயே, உன் அருளினால் உணரப்படும் சுகம் அமலமானது. தூய்மையின் சிகரமாகும்! அதையே அருள்வாயாக! உன்னை வந்திருப்பவருக்கு வரையிலா வரங்கள் தந்து அருள்புரிவாய்! தாமரை மீது வாசம் செய்பவளே!

86. தாயே! வம்பில் பழுத்த ரசக்கனியே!

உம்பர் முனிவர் முதலோர்க்கும் உணர்தற்கரிதா யிருப்பவளே
ஓதா வேதம் உணர்பவளே உயிருக்குயிரே ஒளிக்கொளியே
அம்பு படர்ந்த விழிப்பொருளே அரவ முடியில் இருப்பவளே
அரனார் தினமும் நினைத்தருளும் அடியாருளத்துள் மணிவிளக்கே
கும்ப முனிக்கும் வியாசருக்கும் குலவு நவசித்தாதிகட்கும்
குறித்த சனகாதியர்கட்கும் குறிப்பை அருளும் நிலையாளே
வம்பில் பழுத்த ரசக்கனியே மதமோகினியே யோகினியே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

அன்னை யாவருக்கும் உணர்தற்கு அரியவள். வேதங்கள், சாஸ்திரங்கள் மற்றும் ஏனைய ஆன்மீக நூல்களும் இதைத்தான் கூறுகின்றன. அவளை அறிய வேண்டுமானால் அவள் திருவடிகளையே எப்போதும் சிந்தையில் நிறுத்தி தியானித்து அவளுடன் ஐக்யமாக வேண்டும். இதுதான் சாக்த பக்தர்கள் வேண்டுவது. இதையே கருத்தில் கொண்டு

அபயாம்பிகை பட்டர் தொடர்ந்து அன்னையின் திருவடிக் கமலங்களைப் பற்றி சொல்லிக் கொண்டே இருக்கிறார்.

தாயே! தேவர்களும், முனிவர்களும் கூட உன்னை உணர்வதற்கு அரிதாய் இருப்பவள் நீ! வேதங்கள் ஓதாமலே நீ ஞான ரூபிணியாக இருக்கிறாய்! ஏனெனில் நீயே தான் வேதம்!

'ஓதா வேதம் உணர்பவளே' என்று அபயாம்பிகை பட்டர் சொல்வது சூட்சுமமான அரிய கருத்து. வேதம் சிவப்பரம்பொருளின் திருமுகத்திலிருந்து தோன்றியது. அன்னையை உட்பொருளாக வைத்து படைக்கப் பட்டது. ஆனால் சிவபெருமானோ மௌனசாமி. அதனால் தான் "ஓதா" என்று குறிக்கப் பட்டது. ஆனால் அன்னை அதை உணர்ந்து கொண்டாள். பின்னர் தன் அளவில்லாக் கருணையால் அன்னை அதை உலகிற்கு வழங்கினாள். அதனால்தான் அவளை "வேதஜனனீ" என்கிறார்கள். உயிர்களுக்கெல்லாம் உயிராய் இருப்பவளும் நீ! ஒளிக்கும் ஒளி தருபவள் நீ!

உனது தரிசனம் பெற்ற புண்ணியர்களின் விழிகளிலிருந்து ஆனந்தக் கண்ணீர் அருவியாய் ஓடும். அரவ (பாம்பு) முடியில் மாணிக்கமாய் இருக்கிறாய். உன்னை நினைக்காத நேரமில்லை - அந்த சிவப்பரம் பொருள். *"சிந்தையுள்ளே பந்திப்பவர் அழியாப் பரமானந்தர்..."* என்று காவ்ய ரசனையுடன் அபிராமி அந்தாதியில் (14) அபிராமி பட்டர் கூறுகிறார். இவ்வளவு உயர்ந்த நிலையில் இருக்கும் மகாராணியான நீ அடியார் உள்ளத்தும் மணிவிளக்காய் விளங்குகிறாய்! என்னே உந்தன் கருணை!

அகத்தியர், வியாசர் போன்ற முனிவர்களுக்கும், எங்கும் உலவும் சித்தர்களுக்கும், சனகர், சனந்தனர், சனாதனர், சனத்குமாரர் போன்ற யோகீசுவரர்களுக்கும் குருவாய் நின்று, சிவஞானத்தை குறிப்பால் உணர்த்திய தாயே! ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம். 725. தக்ஷிணாமூர்த்திரூபிணீ.

'வம்பில் பழுத்த ரசக்கனியே' என்றுமே புதிதாய் விளங்கும், பழுத்த ரசம் ததும்பிய கனியே! கனி என்பது அரும்பு, பூ, காய், கனி என்ற நான்கு இயல்பான நிலையில் இறுதியில் வருவது. அது பக்குவமடைந்தது. அதற்கு மேல் ஒன்றும் இல்லை. அதைப் போல் நாமும் பக்குவம் (பரிபாகம்) அடைய வேண்டும். அபிராமி பட்டர், அபிராமி அந்தாதியில் (22) *"கொடியே இளவஞ்சிக்கொம்பே எனக்கு வம்பே பழுத்தபடியே..."* என்று வெகு அழகாகச் சொல்கிறார்.

மனிதர்களின் மனத்திலுள்ள மலங்களை அகற்றும் மோகினியே! யோகத்தை செய்பவருக்கு அருளும் யோகினியே! மயிலாபுரி வளர் மயூரநாதனின் வாழ்வாம் அபயாம்பிகைத்தாயே! அருள்புரிவாயே!

87. தாயே! அடியேனுக்கு நல்வழி காட்டுவாய்!

தொந்த வினையாய் இருந்த கன்மம் தொலைக்கு மருந்தா யிருந்தவளே
துக்க சுகமா யிருந்ததனைத் துடைக்குங் கதியாயிருப்பவளே
அந்தகனுமாயிருந்தும் அவர்க்(கு) அதிகாலனுமாயிருப்பவளே
அரியும் அயனாயிருந்தும் அவர்க்(கு) அப்பாலாகி இருப்பவளே
முந்தி நடுவாயிருந்தும் அதன் முதலாய் முடிவாயிருப்பவளே
முத்தர் சிவமாயிருந்தும் அருள் மோனப் பதியாயிருப்பவளே
வந்தித்திட நீ வந்தெனக்கோர் வழியைக் காட்டி ஆதரிப்பாய்
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

அன்னை எல்லாமுமாய் இருந்தும், எல்லாவற்றிற்கும் அப்பாலாய் இருப்பவள். இதுதான் அன்னையின் அதிரகசியம். இதைத்தான் ஔவைப் பாட்டியார் விநாயகர் அகவலில் *"அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்"* என்று சூட்சுமமாகச் சொல்கிறார். அவளை வணங்குதற்கும் அவளே அருள் புரிய வேண்டும். மாணிக்க வாசகர், *"அவன் அருளால் அவன் தாள் வணங்கி"* என்று சிவபுராணத்தில் (திருவாசகம்) சொல்கிறார். அதை சிறிது மாற்றி, *"அவள் அருளால் அவள் தாள் வணங்கி"* என்று வெகு அருமையாகக் கூறுகிறார் அபயாம்பிகை பட்டர் இப்பாடலில். சிவனும் சக்தியும் அபேதமல்லவா!

ஒவ்வொரு பிறவியிலும் தவறாது ஆன்மாவைத் தொடர்ந்து வருவது (தொந்தம் - தொடர்ந்து) அறம், பாவம் என்கிற இருவினை. இவற்றைத் தொலைப்பதற்கு அன்னையே அருமருந்து! அபிராமி பட்டரும் *"உலகுக்கு அபிராமி என்னும் அருமருந்தே"* என்று அபிராமி அந்தாதியில் (25) கூறுகிறார். ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமத்தில் (84) *ஹரநேத்ராக்னி - ஸந்தக்த - காம ஸஞ்ஜீவ - நௌஷதி* என்று அன்னையை வாக்தேவதைகள் போற்றிப் புகழ்கிறார்கள். அதாவது சிவனது நெற்றிக்கண் தீயால் எரிக்கப்பட்ட மன்மதனைப் பிழைப்பூட்டிய ஸஞ்ஜீவினி மருந்து - அன்னை.

சுகம், துக்கம் மாறி மாறி வரும். இந்த நிலையைப் போக்கி, எப்போதும் பரமானந்தத்தில் திளைக்கக் கதியாய் இருப்பவள் நீயே! காலனுக்கும் காலனாய் இருப்பவள் நீ! (திருக்கடவூர் காலஸம்ஹரார க்ஷேத்ரம் அல்லவா!) விஷ்ணுவும் நீயே! பிரம்மனும் நீயே! அதற்கும் மேலான பரம்பொருளாகவும் (யாரும் எட்டாத நிலையில்) இருக்கிறாய்! வேதத்தின்

வேராகவும், கிளைகளாகவும், அதன் கொழுந்தாகவும் இருப்பவளும் நீயே! வேதமே நீ தானே அம்மா! முதலும் நீ! நடுவும் நீ! முடிவும் நீயே! முத்தர் சிவமானால் மோனப்பதியானவள் நீ! (*"அருமறைக்கு முன்னாய், நடுவெங்குமாய், முடிவாய முதல்வி தன்னை"* - அபிராமி அந்தாதி-55).

உன்னை வணங்க வேண்டும் என்ற எண்ணத்தைக் கொடுப்பவளும் நீ! அதைச் செயலாற்றுவதும் நீ! உன்னை நான் வணங்க வேண்டுமானால் அதற்கும் உன் அருள் வேண்டுமே! அந்த அருளைத் தந்து நீதான் எனக்கோர் நல்வழியைக் காட்டி ஆதரிக்க வேண்டும் தாயே! என்று மனமுருகிக் கேட்கிறார் அபயாம்பிகை பட்டர்.

ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் (201) *ஸத்கதி ப்ரதா* - நல்ல வழியை அளிப்பவள். அபிராமி பட்டரும் அபிராமி அந்தாதியில் (7)

"ததியுறு மத்திற் சுழலும் என் ஆவி தளர்விலதோர் கதியுறு வண்ணம் கருது கண்டாய்..." என்று கூறுவார்.

மயிலாபுரியில் வரங்களை வரையிலாது வழங்கும் வள்ளல் பெருமான் மாயூரநாதனின் வாழ்வாய் வீற்றிருக்கும் அபயாம்பிகைத் தாயே! அனைவருக்கும் அருள் புரிவாயே!

88. அன்னையே! அருள்மிகு நடனத் தாண்டவத்தியே!

பூதம் ஐந்தும் சதுர்க்கரணம் புலனோரைந்தும் பொறிகள்பத்தும்
புகழும் வித்யா தத்துவங்கள் பொருந்தோரேழும் சிவம் ஐந்தும்
பேதா பேதம் ஓரேழில் பிடித்த தேகக் கோடியினிற்
பிறந்தும் பிறந்தே இறந்திறந்து பேய்போல் திரிந்தே பொய்பேசிக்
காதலுடைய மனத்தையுன்றன் கருணை விழிகொண்டினி நோக்கிக்
கவலை தணிய வரம் அருளுவாய் கண்ணே எனது கண்மணியே
வாதமகன்ற பெருவெளியில் வளரும் நடனத் தாண்டவத்தி
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

அபயாம்பிகை பட்டர் இப்பாடலில் அற்புதமான, அரிய, ஆழ்ந்த கருத்துக்களையுடைய தத்துவங்களைப் பற்றிச் சொல்கிறார்.

தத்துவங்கள் - 1. ஆன்ம தத்துவம் - 24. 2. வித்தியா தத்துவம் - 7. சிவதத்துவம் - 5. ஆக மொத்தம் - 36.

ஆன்ம தத்துவம் - பஞ்ச பூதங்கள் - 5 (ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், நிலம்) இவற்றின் குணங்கள் - 5 (சப்தம், ஸ்பரிசம், ரூபம், சுவை, வாசனை) அடுத்து ஞானேந்திரியங்கள் - 5 (செவி, தோல், கண், நாக்கு, மூக்கு) ஆனால் இவற்றை அறிகின்றோம் என்று இக்கருவிகளுக்குத் தெரியாது. கன்மேந்திரியங்கள் - 5. (நாக்கு, கால்கள், கைகள், எருவாய், கருவாய்) இதைத் தவிர அந்தக் கரணங்கள் (உட்கருவிகள்) என்று நான்கு. அதாவது மனம், சித்தம், புத்தி, அகங்காரம். மனம் ஒன்றைப் பற்றும், சித்தம் சிந்திக்கும். அகங்காரம் சித்தம் சிந்தித்த பொருளைத் துணிவேன் என ஒருப்பட்டு எழும். புத்தி நிச்சயிக்கும். இவ்வாறு நிலம் முதல் புத்தி வரையிலுள்ள ஆன்ம தத்துவம் இருபத்திநான்கு.

வித்தியா தத்துவம் - காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை - என்று ஏழாகும்.

சிவ தத்துவம் - சிவம், சத்தி, சதாசிவம், ஈசுரம், சுத்தவித்தை என்ற ஐந்து.

இத்துடன் தாவரங்கள், ஊர்வன, நீர் வாழ்வன, பறவை, விலங்கு, மக்கள், தேவர் என்று ஏழு வகையான, பேதா பேதம் கொண்ட எண்பத்து நான்கு நூறாயிரமான தேகங்களும் பிறந்தும், இறந்தும் ஆவியானது அல்லற்படுகிறது. பேய் போல திரிந்து பொய்களையே பேசிக்கொண்டு வாழும் இந்தப் போலி வாழ்வு வேண்டாம் தாயே!

தாயே! உன் கருணை விழி கொண்டு இந்த ஏழையை சற்றே பார்ப்பாயாக! என் கவலையெல்லாம் தீரும்! இந்தப் பிறவிப் பிணியும் தொலையும்! அதற்கு நீயே வரம் தர வேண்டும் தாயே!

கண்ணே! என் கண்ணின் மணியே! காற்று அகன்ற பெருவெளியில் ஞானமே உருவாகி, ஆனந்த நடனமிடும் தாண்டவத்தி நீ! சிவனுடன் இணைந்து ஆனந்த நடம் புரியும் ஆனந்த பைரவி நீ! மயிலாபுரியில் வரம் தரும் வள்ளலாய் விளங்கும் மாயூரநாதனின் உயிர்நாடியாம் அபயாம்பிகைத் தாயே! அனைவருக்கும் அருள் புரிவாயே!

89. அன்னையே! ஆயிரம் பேர் உடையவளே!

ஆராரகமும் நீயானாய் ஆரா அமுதும் நீயானாய்
ஆராருயிரும் நீயானாய் யாவர் பொருளும் நீயானாய்
பேராயிரமும் உடையாளே பேதாபேதம் பேசி என்ன
பெருமை சிறுமை நீயானாய் பிரியா அருளும் நீயானாய்
நாராயணியே பூரணியே நளினாசனத்துள் நடிப்பவளே
நாட்டம் அறியாதவருளத்தும் நடனம் புரிந்தே நிற்கிலையோ
வாராகினியே தயை புரிவாய் வாலாம்பிகையே பலவகையே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

அன்னை அனைவர் உள்ளத்திலும் அந்தர்யாமியாக அமர்ந்திருக்கிறாள். அவளுக்கு நல்லோர், தீயோர் என்ற பாரபட்சம் கிடையாது. அவள் அகிலத்திற்கும், அனைத்துக்கும் அன்னையாயிற்றே! அவள் எப்படி இருக்கிறாள் தெரியுமா? தெவிட்டாத அமுதமாய் எல்லா உயிர்களிடத்தும் அவள் உறைகிறாள். எல்லாப் பொருள்களிலும் அவள் நிறைந்து நிற்கிறாள்.

திருமூலர், திருமந்திரத்தில் (3021) இறைவன் எங்கும் இருப்பதை வெகு அழகாகச் சொல்கிறார்.

"இங்கு நின்றான் அங்கு நின்றான் எங்கு உளன்
பொங்கி நின்றான் புவனாபதி புண்ணியன்
கங்குல் நின்றான் கதிர்மாமதி ஞாயிறு
எங்கு நின்றான் மழைபோல் இறைதானே"

இதன் கருத்து யாதெனில், எல்லாவற்றிற்கும் மேலான பரம்பொருள். அங்கிங்கு எனாது எங்கும் நிறைந்துள்ளது.

எங்கும் நிறைந்த இறைவி என்றாலும் அன்னை தன் கருணையால் வெவ்வேறு இடங்களில், வெவ்வேறு கோலங்களில், வெவ்வேறு திருநாமங் களோடு அன்பர்களுக்குக் காட்சி தருகிறாள். அவளுக்கு ஆயிரம் திருநாமங்கள் என்று பெருமிதத்துடன் சொல்கிறார். அன்னையின் அருள் மைந்தன் அபயாம்பிகை பட்டர். ஆயிரம் என்பது எண்ணிக்கையைக் குறிக்காது. உன்னைத் துதிக்க நாமங்கள் வந்து கொண்டே இருக்கும். உனது புகழைப் பாடும் நாமங்களுக்கு ஓர் அளவுதான் உண்டோ?

காஞ்சியில் காமாட்சி, மதுரையில் மீனாட்சி, மும்பையில் மும்பாதேவி, கல்கத்தாவில காளி, காசியில் விசாலாட்சி, தில்லையில் சிவகாமி, நெல்லையில் காந்திமதி, திருவேற்காட்டில் கருமாரி, மயிலையில் கற்பகம்,

மயிலாடுதுறையில் அபயாம்பிகை, திருக்கடவூரில் அபிராமி, திருமீயச்சூரில் ஸ்ரீலலிதாம்பிகை என்று சொல்லிக் கொண்டே இருக்கலாம்.

வாழ்த்தினாலும், வைதாலும் அன்னை ஒரே நிலையில் இருப்பவள். அவளையே நினைப்பவர்களுக்கு பிரியா அருளாவாள். நான் அறிவேன் தாயே உன் பெருமையை நாராயணியே! பூரணியே! பூவுலகு அனைத்துக்கும் காரணி நீயே! தாமரையை ஆசனமாகக் கொண்டவளே! அகக் கண்ணில் பார்க்கும் அறிவு இல்லாதவர்கள் உள்ளங்களிலும் நடனம் புரிந்து நிற்கும் உன் பெருமையையும், கருணையையும் எப்படி சொல்வேன்? வாலாம்பிகைத் தாயே! மயிலாபுரியில் பெருமைமிகு ஈசனான மாயூரநாதனின் வாழ்வாம் அபயாம்பிகைத் தாயே! அனைவருக்கும் அருள்புரிவாயே!

90. தாயே! தயையின் இருப்பிடமே!

தட்டாதுனது மொழிகேட்டுத் தமியேன் பிழைக்கும் வழிதேடித்
தயைசெய்வதும் உன் கடன்அலவோ தாயே கருணைக்கோர்முதலே
கட்டாயிருக்கும் உலகாய்தர் கலங்கிப் பிரிய அருள்புரிவாய்
கமலாசனியே மாமணியே· கருணாநிதியே கற்பகமே
முட்டாதிருந்த சலனமிவை முழுதும் துடைப்பாய் முழுமுதலே
முனிவர் புகழுந் திருக்கிருஷ்ணமூர்த்தி துணைவி மோகனமே
வட்டா காயத்தொளிர்ச் சுடரே வாலாம்பிகையே வந்தாள்வாய்
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

தாயிடம் உரிமை கொண்டு போராடும் சேயாகக் காட்சி தருகிறார் அபயாம்பிகை பட்டர்.

தாயே! உன்னுடைய அருள் செறிந்த வார்த்தைகளை அடியேன் செவி கொடுத்து கேட்டு, அதனின்று வழுவாமல், நீ சொல்லும் நல்ல நெறியில் வாழ்ந்திட நீயே தயை புரிந்திட வேண்டும். அடியேன் தமியேன். திக்கற்ற வன். என்னைப் போன்றவர்கள் மீது கருணை காட்டுவது உன் கடமை அல்லவா? அன்னையே! கருணையின் முழுமுதற் பொருள் நீதானே! தயையின் இருப்பிடமே! மூலப்பொருளே! நீ என்பால் தயை புரிந்தால் உனக்கு தயையின் அளவுதான் குறைந்து விடுமோ? (தாய்-சேய் பாவத்தின் உச்சக்கட்ட நிலையிது).

உலகாய்தர் என்பது 'கண்டதே காட்சி, கொண்டதே கோலம்' என்னும் மதவாதிகளைக் குறிக்கும். தெய்வங்களுக்குள் பேதம் பேசுவதையே உறுதியாகச் செய்யும் அந்த மதவாதிகள் உறவு எனக்கு வேண்டவே

வேண்டாம். (அதாவது என்னை எப்போதும் உன் அடியார்களின் அமைப்பில் இருக்கும்படி செய்ய வேண்டும்).

தாமரையை ஆசனமாகக் கொண்டவளே! மணிகளில் சிறந்த, உயர்ந்த மாமணியாய் (மாணிக்கமாய்) விளங்குபவளே! கருணையின் பெட்டகமே! கற்பகமே! ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் (353) *'பக்திமத் கல்பலதிகா'* - பக்தர்களுக்குக் கல்பகக் கொடி போன்றவள். அதாவது நினைத்ததைத் தருபவள்.

என் மனச் சஞ்சலங்களையெல்லாம் அறவே அகற்றி மனதில் அமைதியை அருள்வாய். எல்லாவற்றிற்கும் முதலாய், பூர்ணமாய் விளங்குபவளே! ஞானத்தின் உச்சியில் திகழும் முனிவர்கள் போற்றும் கிருஷ்ணனின் சகோதரியே! எப்போதும் மோகனப் புன்னகையுடன் காட்சி தருபவளே!

வட்டமாய்த் தோன்றும் ஆகாயத்தின் ஒளிச்சுடரே! அன்னையே! ஆகாயத்தில் சூரியனாகவும், சந்திரனாகவும் தோன்றுபவளே! தாயே! வாலாம்பிகையாய் திருக்கோலம் கொள்பவளும் நீயே! அடியேனை வந்து ஆட்கொள்வாய்! மயிலாபுரியில் வள்ளலாய் விளங்கும் மாயூரநாதனின் உயிர்நாடியாயத் திகழும் அபயாம்பிகைத்தாயே! அனைவருக்கும் அபயம் தந்து அருள் புரிவாயே!

91. தாயே! தத்துவங்களைக் கடந்து நிற்பவளே!

தத்வாதீதச் சுடர்விளக்கே தமியேன் உயிராயிருப்பவளே
சர்வலோக தயாபரியே சாக்ஷாத்கார மானவளே
சித்த மோனத்தடியார் தஞ் சிந்தையிடையில் குடியான
சேக்ஷாபரணி மலர்ச்சரணி திருவே அருவே திகழுருவே
வித்தாயடியிற் கனகசபை மேல்ாய்ச் சுகமாய்க் குண்டலியாய்
விளங்கா நிற்கும் அருட்கனியே மேலோர் கீழோர் தொழுபவளே
வற்றாதுலவும் அருட்கடலே மகிழ்ந்தென்றனை வந்தாண்டுகொள்வாய்
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

எண்பத்தி எட்டாம் பாடலில் தத்துவங்களைப் பார்த்தோம். இங்கு தாயை, தத்துவங்களை கடந்து நிற்பவள் என்று சொல்லுகிறார். அபயாம்பிகை பட்டர். *"தத் த்வமஸி"* என்பது வேதத்தின் மஹாவாக்கியம். இதற்குப் பொருள் - தத் (அது), த்வம் (நீ) அஸி(ஆனாய்). சீவன் சிவனாகி விடுகிறான். அதாவது தத்துவங்களைக் கடந்த நிலையில். இதுதான் தத்வாதீதம் (தத்துவத்தையும் தாண்டிய நிலை) என்று சொல்லப்படுகிறது.

அதாவது பரம் பொருளுடன் நாம் ஐக்கியமாக வேண்டுமானால் தத்துவங்களைக் கடந்து அதற்கு அப்பாலும் செல்லவேண்டும்.

தத்துவங்கள் அனைத்தும் தாயின் திருவடிகளில் தோன்றினாலும், அவை எல்லாவற்றையும் கடந்து நிற்பவளும் அவளே! தத்வாதீத சுடர் விளக்காய் திகழ்கிறாள் அன்னை! ஏழை எந்தனுக்கு உயிராய் இருப்பவள் நீ! எல்லா உலகங்களுக்கும் கருணையை வாரி விளங்கும் சர்வலோக தயாபரியே! ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம். 906-தத்வாதிகா - தத்துவங்களுக்கு அப்பாற்பட்டவள்.

சாக்ஷாத்காரம் என்பதற்கு "கண்டு துணையாய் இருப்பது" என்று பொருள். உன்னை உணரும் மெய்யன்பர்களுக்கு என்றும் துணையாக இருக்கும் சாக்ஷாத்காரமானவள் நீ! சித்தம் தெளிந்த உன் அடியார்களின் உள்ளத்தில் குடியிருப்பவளும் நீ! பாம்புகளை ஆபரணங்களாக அணிந்தவளே! தாமரைத் திருவடியாளே! அழகோவியமே! உருவமான பொருளே! அருவமானவளே!

மூலமாய், முடிவாய், முத்தான கனகசபை மேலாய், சொத்தான சுகமாய், குண்டலினியாய் அஞ்ஞான உள்ளங்களுக்கு விளங்காத மெய்ஞ்ஞான பொருளாய் திகழும் அருட்பழமே! மண்ணுலகில் உள்ளோரும், தேவர்களும் தொழும் தெய்வமே! வற்றாத கருணைக் கடலே! மன மகிழ்ந்து என்னை நீ இவ்விடம் வந்து ஆண்டு கொள்வாயாக! மயிலாபுரியில் பெருமைமிகு ஈசனான மாயூரநாதனின் உயிர்நாடியாய்த் திகழும் அபயாம்பிகைத்தாயே! அனைவருக்கும் அபயம் தந்து அருள் புரிவாய்!

92. அன்னையின் அன்பர்களுக்கு அனைத்தும் வசியமாகும்

அம்மா உனையே அடுத்தவர்கட்(கு) அனைத்தும் உலக வசியம் உண்டாம்
அஷ்டாங்காதி யோகமுடன் அடியும் முடியும் கவனம் உண்டாம்
தம்மாற் சாபாநுக்ரகமும் சகல மூர்த்தி கரமாகும்
சடமே வெகுநாள் நரைதிரைகள் தமையே அகற்றித் தனியிருக்கும்
சும்மா அவர்கள் விரல் அசைந்தால் தொடர்ந்தீரெழுபார் சுழன்றுருளும்
துக்க சுகமும் அணுகாது சுகரூப பாதி அருளமையும்
அம்மா அதைத்தான் ஏது சொல்வேன் வாக்கு மனதுக் கடங்காதே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

அபயாம்பிகை சதகத்தில் நூற்பயன் பாடல் இல்லை. ஆனால் அபயாம்பிகைபட்டர் அவ்வப்போது அன்னை தன் கருணை உள்ளத்தினால் அன்பர்களுக்கு அளவிலாது அருள்பவள் என்று தொடர்ந்து சொல்லிக் கொண்டே இருக்கிறார்.

இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்யாகாரம், தாரணை, தியானம், சமாதி முதலான அஷ்டாங்க யோகங்களும் உன் அருளினால் சித்திக்கும். (அதாவது சாதகன் கோராமலே) அபயாம்பிகை பட்டர் ஒரு தவயோகி அல்லவா! அன்னையே! உன்னை விரும்பித் தொழும் அன்பர்களுக்கு உலகம் அனைத்தும் வசியமாகும்! இதைத்தான் அபிராமிபட்டரும், *"இனி எனக்குப் பொருந்தாதொரு பொருள் இல்லை"* என்று சொல்லுகிறார். (அபிராமி அந்தாதி-90).

அன்னையின் திருவடியும், திருஉருவமும் எப்போதும் எங்கேயும் காணும் பாக்யத்தைப் பெறுவர். எல்லா சித்திகளும் பெற்றவர்களாதலால், அவர்களால் எதையும் செய்ய முடியும். அவர்கள் சபித்தல், அநுக்ரகம் என்ற இரண்டு ஆற்றல்களையும் பெற்றவர்கள். அவர்களால் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழிலையும் செய்ய முடியும். அபிராமி பட்டர் அபிராமி அந்தாதியில் (26) *"ஏத்தும் அடியவர் ஈரேழுலகினையும் படைத்தும், காத்தும் அழித்தும் திரிபவராம்..."* என்று சொல்வதும் காண்க!

அதாவது, அன்னையை அல்லும் பகலும் த்யானிப்பவர்கள் இறுதியில் அன்னையாகவே மாறிவிடுவர்! ஸ்ரீவித்யா உபாசனையில் குரு, சிஷ்யன், *தேவதை, யந்திரம், மந்திரம் எல்லாம்* அபேதம். இதைத் தான் "தாதான்மியம்" (ஒன்று பட்டிருத்தல்) என்று சொல்வார்கள். ஆதி சங்கரர் சௌந்தர்யலஹரீ (22) ஸ்லோகத்தில் (*பவானித்வம் தாஸேமயி*) அன்னை அடியார்களுக்கு, "ஸாயுஜ்ய பதவி" அளிப்பதைப் பற்றி வெகு அழகாகச் சொல்கிறார்.

அன்னையின் அன்பர்களை சுகதுக்கங்கள் அணுகாது! எல்லாவற்றிற்கும் மேலான பேரானந்தத்தில் இருப்பார்கள்! அம்மா, தாயே! இவ்வளவும் அவர்கள் பெற்றது உனது கருணை என்னும் கடைக்கண் பார்வையால்தானே! உன்னுடைய லீலா விநோதங்களைச் சொல்ல யாரால் முடியும் தாயே? நீ வாக்கிற்கும் மனதுக்கும் எட்டாதவள் அன்றோ! ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமத்தில் (415) *"மனோவாசா மகோசரா"* என்றும், தைத்திரிய உபநிஷத்தில் (24) *"யதோ வாசோ நிவர்த்தந்தே"* என்று சொல்லுவதும் இக்காரணத்தினால் தானே! மயிலாபுரியில் பெருமைமிகு ஈசனின் வாழ்வான அபயாம்பிகைத் தாயே! அருள் புரிவாயே!

93. அன்னையே! மறையின் அரும்பொருளே!

பொன்னே நிறைந்த புதுமலரே புகழ்சேர் மறையின் பொருள்அணங்கே
பொற்றாமரைப் பூங்கமலமதில் புகழ்ந்தே யிருக்கும் போதகமே
மின்னே பவழக் கொடிவடிவே மேகம் அனைய கருங்குழலே
விளங்கு நவபீடாசனியே வித்தாய் மரமாய் மறைமுடியில்
முன்னே பழுத்த கதிப்பழமே முதிர்ந்த மொழியிற் படர்ந்தகொடி
முதலே நுதலே குடியாக முடிவாயிருந்த மோகனமே
அன்னே பொருந்த அருளளிக்கும் வாலாம்பிகையே வான்மணியே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

அன்னைக்கு ஓர் அழகான அர்ச்சனை செய்கிறார் அபயாம்பிகை பட்டர்! எப்படி? சாதாரண மலர்களால் அல்ல! என்றும் அழியாத சொல் மலர்களால்! அன்பர்களுக்கு பக்தி முற்றிய நிலையில் அது காதலாகி கசிந்து ஒழுகும்! அன்னையை தோத்திரம் செய்வதே அவர்களுக்கு பேரானந்தம் தரும்! ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம். 732. *நாம-பாராயண-ப்ரீதா.*

பொன்னே! நிறைந்த புதுமலரே! புகழ்மிகு வேதத்தின் பொருளாய் விளங்கும் தெய்வப் பெண்ணே! சந்திர மண்டலமாகிய ஸஹஸ்ராரத்தில் ஆயிரம் இதழ்கள் கொண்ட பொற்றாமரையில் வீற்றிருக்கும் ஞானக் கொழுந்தே! (போதகம்) அபிராமிபட்டரும் அபிராமி அந்தாதியில் *"எழுதா மறையின் ஒன்றும் அரும் பொருளே"* (10), *"மறை நான்கினுக்கும் தானந்தமான சரணார விந்தம்"* (11), *"அறைகின்ற நான்மறையின் அடியோ, முடியோ"* (20) *"மறையின் பரிமளமே"* (22) என்று அன்னையே வேதமானவள் என்று வெகு அருமையாகச் சொல்கிறார்.

மின்னல்கொடியே! பவழக் கொடியே! மேகத்தையொத்த கருங் கூந்தலை உடையவளே! நவபீடத்தை ஆசனமாய் கொண்டவளே! வேதத்தின் வேராகவும், சாகைகளாகவும், கொழுந்தாகவும் இருக்கிறாள் அன்னை! அபிராமி பட்டரும் அபிராமி அந்தாதியின் இரண்டாவது பாடலிலேயே, *"சுருதிகளின் பணையும், கொழுந்தும், பதிகொண்ட வேரும்"* என்று சொல்வர்.

வேதமாதா நீ! வேதத்தின், ஆழ்ந்த, எளிதில் புலப்படாத பொருளாய் விளங்குபவளே! "மறைக்கும் தாய் நீ தான். மறையின் தாயும் நீ தான்!'

அடியார்களுக்கு கருணை செய்வதைக் காரியமாகக் கொண்டு முன்னே பழுத்த பழமே! நற்கதியைத் தரும் கனிந்த கதிப்பழமே! ஞானிகளின் அமுத மொழிகளை, படரும் கொடியான உனக்கு கொம்பாகக் கொண்டவளே! புருவ நடுவில் (ஆக்ஞை) வீற்றிருக்கும் அன்னையே!

அகிலத்திற்கும் ஒளி தரும் வானத்தின் மணியாய் இருப்பவளே! என்றுமே கன்னி கழியாதவளாய் இருக்கும் பாலாவாக, வாலையாக, பாலாம்பிகையாக, வாலாம்பிகையாக விளங்கும் தாயே! மயிலாபுரியில் பெருமைமிகு ஈசனான மாயூரநாதனின் உயிர்நாடியாய்த் திகழும் அபயாம்பிகைத் தாயே! அனைவருக்கும் அருள் புரிவாயே!

94. அன்னையே! வாலாம்பிகையாக விளங்கும் உனையடுத்தேன்!

தூல சூக்ம காரணமே தொலையாக் கருணை வாரிதியே
துவாதசாந்த வெளிதனிலே சுகமாயிருக்கும் நிரந்தரமே
மேலாம் தவத்துக்கதிகாரி விரிந்த கமல நடுப்பீடம்
வியாபித் தொளியாய் வெளியதன்மேல் வெளியாயிருந்த மெய்ப்பொருளே
ஆலகாலவிடம் அருந்தும் அரனார் இடப்பாகத்தில் வளர்
அமுத தேகவொளிமயமே அருணாம் புயத்திரியம்பிகையே
வாலாம்பிகையே உனையடுத்தேன் வந்தென்றனை நீ காத்தருள்வாய்
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

அன்னையின் ஸ்தூல வடிவங்களைப் போற்றித் துதிக்கும் அபயாம்பிகை பட்டர் அவ்வப்போது ஸூக்ஷ்மமாக அன்னை இருப்பதையும் சொல்லி வருகிறார்.

தாயே! தூய ஸ்தூல வடிவிலும், ஸூக்ஷ்ம ரூபத்திலும் இருப்பவளே! என்றுமே குறையாத கருணைக் கடலே! துவாதசாந்தப் பெருவெளியில் நிரந்தரமாய் வீற்றிருப்பவளே! உன்னையே நினைத்து உருகும் தவயோகிகளுக்கு அத்தவத்தின் அதிகாரியாய் இருப்பவளே! ஸஹஸ்ராரத்தில் ஆயிரம் இதழ்கள் கொண்ட பொற்றாமரையின் மேல் அமர்ந்திருப்பவளே! எங்கும் பரவி ஒளியாய் ஆகாயத்தில் இருப்பவளே! ஆகாயத்திற்கும் மேலே பரவெளியில் படர்ந்திருக்கும் மெய்ப்பொருளே!

திருப்பாற்கடலைக் கடைந்த போது கொடிய விடம் முதலில் வெளிவந்தது. அதைக் கண்டு அஞ்சி தேவர்கள் சிவபெருமானிடம் சென்று வேண்டிக் கொள்ள, அவரும் தேவர்களைக் காப்பாற்ற கருணையுள்ளம் கொண்டு (சிவனும் சக்தியும் அபேதம்) அவ் விடத்தை அருந்தினார். அதனால் அவருடைய தொண்டை (கண்டம்) நீல நிறமாயிற்று. இதனால்

அவருக்கு நீலகண்டர் என்ற பெயர். அவருடைய இடப்பாகத்தை தனது வல்லபத்தினால் பறித்து கொண்டாளாம் அன்னை. சிலப்பதிகாரம் வேட்டுவ வரியில், *"நஞ்சுண்டு கறுத்த கண்டி"* என்று வருவதும் காண்க!

அபிராமி பட்டர் அபிராமி அந்தாதியில் (87) *"விழியால் மதனை அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை அண்டமெல்லாம் பழிக்கும்படியொரு பாகம் கொண்டாளும் பராபரையே"* என்று பெருமிதத்துடன் கூறுவர். மேலும் அபிராமி அம்மை பதிகத்தில் *"அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி"* என்றும் கூறுவார்.

அன்னையே! அமுதம் போன்றவளே! ஒளிமயமான திருமேனி படைத்தவளே! சிவந்த தாமரை மீது அமர்ந்திருக்கும் முக்கண்ணியே! ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் (762) *த்ர்யம்பகா* - முக்கண்ணி. ஸூர்யன் (வலது) சந்திரன் (இடது), அக்னி (நெற்றி) ஆகியவர்களைத் தன் கண்களாகக் கொண்டவள்! அதனாலன்றோ உலகிற்கு ஒளி கிடைக்கிறது! மும்மூர்த்திகளின் தாயார் என்றும் சொல்லலாம். (*"முதல் மூவருக்கும் அன்னே"*-அபிராமி அந்தாதி-25.)

வாலாம்பிகையாகத் திகழும் அன்னையே! உன் திருவடிகளையே எண்ணி உன்னைச் சார்ந்தேன்! சீக்கிரம் வந்து என்னைக் காத்து அருள்வாய்!

மயிலாபுரியில் பெருமைமிகு மாயூரநாதனின் வாழ்வாய்த் திகழும் அபயாம்பிகைத் தாயே! அனைவருக்கும் அருள்புரிவாய்!

95. தாயே! ஸர்வ மந்த்ர ஸ்வரூபிணி!

மூன்றேழுத்தா யிருப்பவளே முனைமேலெழுத்தே பதினைந்தா
முதலா யிருபத்தெட்டாக முடிவாயிருந்த மோகனமே
நீண்ட சமயா சாரமுமாய் நெறியந் தரமாய் முகமாகி
நிகழாதாரக் குண்டலியாய் நின்றேயிருந்த நேரிழையே
பூண்ட அடியர் அகந்தோறும் பொன்னம்பலமாய நடமிடும்
பொருளே அருளே எனையாளும் பொன்னே கண்ணினுண்மணியே
மாண்ட குருவாய் வந்தவளே மருவுஞ் சுகத்தைத் தந்தவளே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

அபயாம்பிகைபட்டர் ஸ்ரீவித்யா உபாசகர் என்பதை இப்பாடல் உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளக்குகிறது. எவருக்கு ஸ்ரீவித்யா உபாசனை கிடைக்கிறதோ அவருக்கு மறுபிறவி இல்லை என்பது திண்ணம்.

ஸ்ரீலலிதா த்ரிசதியின் பலஸ்ருதி *"மோனக்ஷக ஹேது வித்யா ஸா ஸ்ரீவித்யைவ ந ஸம் ஶய"* அதாவது மோக்ஷத்திற்கு காரணமானது ஸ்ரீவித்யையே, சந்தேகமில்லை என்பதே பொருள். பல உயர்ந்த பொருள்களை சில அக்ஷரங்களாலேயே குறிக்கும் இந்த வித்யையை "ஸ்ரீவித்யை" என்பது சாலப் பொருத்தமே.

ஸ்ரீம் என்ற சக்தி மந்திரத்தில் ஸகார, ரகார, இகாரங்களைக் காண்கிறோம். இதுதான் *'மூன்றேழுத்தாயிருப்பவளே'* என்பதின் பொருள். முனை மேலெழுத்தே - அன்னை நாதவடிவாகிய பிரணவத்தில் (ஓம்) உள்ளாள். ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம்.630.*த்ரயக்ஷரீ*-மூன்றெழுத்துக்களின் வடிவானவள்.

ஸ்ரீவித்யை "காதிவித்தை", "ஹாதி வித்தை" என்று இருவகைப்படும். அபயாம்பிகை பட்டர் "காதி வித்தையைப்" பயிற்சி செய்து வந்தார் என்று தெரிய வருகிறது. இதில் பதினைந்து எழுத்துக்கள் கொண்டது பஞ்ச தசாக்ஷரீ என்னும் மஹா மந்திரம். இதற்கு மேற்பட்டு இருபத்தி எட்டு எழுத்துக்கள் கொண்ட "ஷோடஸி" என்னும் மந்திரம். (இவை வெகு ரகசியமாய் பாதுகாக்க வேண்டும். எனவே குரு உபதேசம் பெற வேண்டும்)

அடுத்து அம்பிகையை வழிபடும் "சமயாசாரா" நெறியைப் பற்றிக் கூறுகிறார். இந்த முறையில் அன்னையை மானசீகமாக (எந்தவித உபகரணங்கள் இன்றி) வழிபடுவார்கள். பாவனோபநிஷத்-தன்னையே அன்னையாக நினைத்து மனத்தினுள் வழிபடும் முறையை முழுக்க, முழுக்கச் சொல்வதாகும். ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் தனது சரீரத்தையே சிறந்த யந்திரமாகக் கருதினார். *"அமீ யந்த்ர, துமீ யந்த்ரீ - நான் யந்திரம், நீ யஜமானீ"* என்று தேவியை நோக்கிக் கூறுவார்.

அன்னை குண்டலினி ரூபமாக, மூலாதாரத்தில் மூன்றரைச் சுற்றுக் குண்டலமிட்டுப் பாம்பு போல் மூச்சு விட்டுக் கொண்டிருப்பவள். இந்த மூச்சுதான் ஜீவ சக்தியான பிராணன். இதை எழுப்பத்தான் சித்தர்கள் "ஆடு பாம்பே" எனப் பாடுகின்றனர். இந்த குண்டலினீ சக்தியை மேலே எழுப்பி, ஆறு ஆதாரங்களையும் கடந்து, ஸஹஸ்ராரத்தில் சேர்ப்பவனுக்கு உடலில் உள்ள 72,000 நாடிகளையும் நனைக்குமாறு மேலிருந்து அமுதத்தைப் பொழிவாள் அன்னை. அவள் திருவடியைத் தலையில் சூட்டிக் கொள்ளும் புண்ணியசாலிகளுக்கு அவர்கள் அகத்தே பொன்னம்பலத்தில் நடனமாடிய காட்சியை அளிப்பாள்!

பொருளே! பொன்னே! அருளே! கண்ணின் மணியே! மாட்சிமை பொருந்திய குருவாய் வந்தவளே! மருவுஞ் சுகத்தை தந்தவளே! மயிலா புரியில் பெருமைமிகு மாயூரநாதனின் வாழ்வாம் அபயாம்பிகைத் தாயே!

96. அன்னையே ஆறு சமயங்களுக்கும் தலைவி!

ஆறு சமயங் கடந்து நின்ற அருணநிதியே சுந்தரியே
ஆசா பாசம் அகன்றவர்பால் அருளாயிருந்த அருந்ததியே
தேறும் பதினெண் புராணமுமாய்த் திசை தீக்ஷையுமாய் நின்றவளே
திக்கே உடையாய்த் தரித்தவளே செகமே வடிவாய் நின்றவளே
கூறும் ஐம்பத்தொன்றதிலுங் கோடா கோடி மந்திரமும்
குறிக்கும் அனந்த வேதமுமாய்க் குறிப்பாயிருந்த பரமாதே
மாறி எனது மலம் அறவே வந்தே அடிமை கொண்டருள்வாய்
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

ஆதிசங்கரர், வேதத்தைப் பிரமாணமாகக் கொண்டு, சௌரம் (சூரிய வழிபாடு) காணாபத்தியம் (கணபதி), கௌமாரம் (முருகன்) வைஷணவம் (விஷ்ணு), சைவம் (சிவன்) சாக்தம் (சக்தி வழிபாடு) என்னும் ஆறு சமயங்களைத் தோற்றுவித்தார். இந்த ஆறு சமயங்களுக்கும் தலைவியாயும், அதைக் கடந்து நின்றவளாயும் இருக்கிறாா் எங்கள் அன்னை என்று பெருமையாகக் கூறுகிறார் அபயாம்பிகை பட்டர். அபிராமி பட்டரும் அபிராமி அந்தாதியில் (63) *"குறிக்கும் சமயம் ஆறும் தலைவி இவளாய் இருப்பது..."* என்று கூறுவதும் காண்க.

ஆசையாகிற பற்றுகள், விருப்பங்களைத் துறந்தவர்களுக்கு அருள் பாலிக்கும் அருந்ததியாய் விளங்குகிறாளாம் அன்னை. திருமணங்களிலும் தாலி கட்டிய பின் ஹோமங்கள் நடக்கும். அப்போது தம்பதிகள் இருவரையும் அருந்ததியை (வானத்து நட்சத்திரம்) வானில் பார்க்கச் சொல்வார்கள் பெரியோர்கள். அருந்ததி ஒருசிறந்த பதிவிரதை.(வசிஷ்டரின் மனைவி).

பதினெண் புராணங்களின் வடிவாயும் அம்பிகை இருக்கிறாள். குரு - சிஷ்ய சம்பிரதாயத்தில், குரு - சிஷ்யன் தலைமேல் தன் திருவடிகளை வைத்து அருட் பாலிப்பது தீட்சை எனப்படும். அன்பர்கள் எல்லோரும் அன்னையிடம் வேண்டுவது, அவள் திருவடிகளைத் தங்கள் தலைமேல் வைப்பதைத்தானே! இதை 'தீக்ஷையுமாய் நின்றவளே' என்று குறிப்பிடுகிறாா். அன்னை தானே உலகிற்கு முதல் குரு. ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம். 725. *தக்ஷிணாமூர்த்திரூபிணீ.*

திசைகளையே உடைகளாய்த் தரிப்பவள். உலகமே தன் வடிவாய்க் கொண்டவள். ஐம்பத்தொரு அட்சரங்களையும் அவற்றின் வடிவாயும், பொருளாயும் இருப்பவள். மந்த்ரஸ்வரூபிணியாகவும் இருப்பவள் வேதத்தின் வடிவினளாகவும் விளங்குபவள் அன்னையே! (முன்னேயும் பார்த்தோம்).

அபயாம்பிகை பட்டர் அன்னையிடம் மனமுருகி, அம்மா என்னுள் இருக்கும் மலங்களைப் போக்கி என்னை அடிமையாகக் கொண்டு அருள்புரிவாய் என்று மிகுந்த வினயத்துடன் கேட்கிறார்.

மயிலாபுரியில் அருள்மிகு மாயூரநாதனின் வாழ்வாம் அபயாம்பிகைத் தாயே! அருள் புரிவாயே!

97. தாயே! சிவனையும் ஈன்றவளே!

முக்கட் பரமர் இடப்பாக முதலாய் முளைத்துத் தழைத்தவளே
முன்னம் அவனை ஈன்றவளே முடிவில் அவனை ஆண்டவளே
செக்கர் இளமா மதிவதனத் தெளிவிற் றெளிவே தேன்மொழியே
தேவியாதி பரஞ்சோதி ஸ்ரீபீடாதியருளாதி
·பக்கத் துணையே பார்வதியே பரமேஸ்வரியே காரணியே
பஞ்சாக்ஷரியே உலகேழும் படைத்த தாயே பைங்கிளியே
மக்கள் தமைப்போல் எனைக்காக்க வகைநீ அருள்வாய்
வளமயிலே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

அனைத்து அருளாளர்களும் அன்னையை சிவனுக்குத் தாயாகவும், தாரமுமாகவும், மகளாயும் தங்கள் நூல்களில் சொல்லுகிறார்கள். இது ஆழ்ந்த கருத்துடையது. அன்னைதான் ஆதிமூலப்ரக்ருதி என்று பார்த்தோம். அபயாம்பிகை பட்டரும் இந்தக் கருத்தைச் சொல்லி, அன்னையை பலவிதமாகப் போற்றித் துதிக்கிறார்.

மூன்று கண்களையுடைய பரமசிவத்தின் இடப்பாகம் இருப்பவளே! அச்சிவத்திற்கு சக்தியாய் திகழும் மூலப் பொருளே!

முன்னம் அவனை ஈன்றவளே: ஆதி பராசக்தி முன்னே அந்த சிவப் பரம்பொருளை ஈன்றவர். இது பற்றி அன்னையின் அருளாளர்கள் சொல்வதைப் பார்ப்போம்.

திருமூலர் - *"தாயும் மகளுநல் தாரமும் ஆமே"* (திருமந்திரம் - 1178)

மாணிக்க வாசகர் - *"இமவான் மகட்குத் தன்னுடைக் கேள்வன் மகன்"*

குமரகுருபரர் - *"தனிமுதல் யாம் என்பார்க் கம்மனை யாய் அவர் தம்மனை யானவள்".* (மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்)

"அனக நாட கற்கெம் மன்னை, மனைவி தாய்

(சிதம்பர செய்யுட் கோவை)

சிவஞான சித்தியார் - *"சக்திதான சிவத்தை யீன்றும்"*

அபிராமி பட்டர் - *"தவளே இவள் எங்கள் சங்கரனார் மனைமங்கலமாம்*

அவளே அவர்தமக்கு அன்னையும் ஆயினள்..."

(அபிராமி அந்தாதி - 44)

விதையிலிருந்து செடி தோன்றுகிறது. பின் செடியிலிருந்து விதை தோன்றுகிறது. எது முதலில் தோன்றியது? விதையா, செடியா என்பது அறிவுக்கு எட்டாத ஒரு புதிர். அதைக் *"கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்".*

செக்கச் சிவந்த திருமேனியுடையவளே! தேன்மொழியாளே! தேவியே! எல்லாவற்றிற்கும் ஒளிதரும் ஆதி (மூலம்) பரஞ்சோதியே! ஸ்ரீபீடங்களுக்கு தலைவியாய் இருப்பவளே! பரமனின் பக்கத் துணையாய் இருக்கும் பார்வதியே! பரமேஸ்வரியே! அனைத்தின் காரணமானவளே! பஞ்சாக்ஷரியே! "நமசிவாய" என்பதின் பொருளாய் இருப்பவளே! உலகங்கள் ஏழும் படைத்தவளே! பைங்கிளியே! தாய் தன் சேயை காப்பது போல, என்னையும் நீ காத்து அருள் புரிய வேண்டும்! தாயே! மயிலே! மயிலாடுதுறையில் பெருமைமிகு மாயூரநாதனின் வாழ்வாய் விளங்கும் அபயாம்பிகைத் தாயே!

98. தில்லையில் நடனமிடுவது நீதானே தாயே!

தில்லையதனுள் நடனமிடுந் திருவே அருவே திகழ்உருவே
தெளிந்த பரமே சிற்பரமே செகசூத்திரமே நான்மறையே
அல்லைத் தொலைக்கும் அருமருந்தே அமுதானந்தக் கடற்பெருக்கே
அறிவுக்கறிவாய் இருக்கும் உனை அனைத்துந் துதிக்கும்
அருள்பரையே

எல்லை கடந்த பரவெளியே இசைபுட்களமே அகண்டிதமே
இதத்துக் கிதமா யிருப்பவளே இரவு பகலாய் ஒளிர்பவளே
வல்ல சோமன் சூடியிடம் வளரும் வாழ்வே என்கோவே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

தில்லை என்பது சிதம்பரத்தைக் குறிப்பது. இதுவே சிற்றம்பலம், சிதாகாசம், பொன்னம்பலம் என்றும் கூறுவர். இந்த ஸ்தலம் ஆகாச தத்துவத்தைக் குறிக்கும்.

சிதம்பரம் என்றவுடனே சிவபெருமான நடனம் ஆடிய புண்ணிய க்ஷேத்ரம் என்று யாவரும் புகலுவர். "தில்லைக் கூத்தன்" என்று தானே

அப்பரம்பொருளைச் சொல்லுகிறோம். ஆனால் அன்னையின் அன்பர் அபயாம்பிகை பட்டர் தில்லையில் நடனமாடுவது எங்கள் "அன்னைதான்" என்று பெருமிதத்துடன் பகிரங்கமாகக் கூறும் பாடலிது.

திருமூலரும் (திருமந்திரம் - 2787)

"ஆதிநடம் செய்தான் என்பார்கள் ஆதர்கள்
ஆதிநடம் செய்கை யாரும் அறிகிலர்
ஆதிநடம் ஆடல் ஆரும் அறிந்தபின்
ஆதிநடம் ஆடலாம் அருட் சத்தியே" - என்று கூறுகிறார்.

ஆதியாகிய சிவப்பரம்பொருள் நடனம் ஆடினான் என்று சொல்வார்கள். அப்படிச் சொல்பவர்கள் அறிவற்ற மூடர்கள். ஆதியாகிய சிவம் எங்கே நடனமாடுகிறான் என்று அறிந்து கொண்டால், இறைவன் அவரவர் உள்ளத்திலேதான் ஆடுகிறான் என்பதும், அவனுடலில் பாதியான அருட்சக்தியே அதற்குத் துணையாய் இருக்கிறாள் என்பதும் புரிய வரும்.

அதாவது கூத்தன் உருவில் ஆடுவது அன்னையே! இது ஸூக்ஷ்மமான பொருள், சிதம்பரத்தில் சிற்பரமாய்த் திகழ்கிறாள். ஒன்றாயும், அருவமாகவும், உருவமாகவும், பல ரூபங்களில் திகழும் அன்னை யாருக்கும் எட்டாத பரம்பொருளாய் இருப்பவள்! (அபிராமி பட்டர் *"ஒன்றே பல உருவே, அருவே என் உமையவளே"* என்று அபிராமி அந்தாதியில் (30) கூறுவர்) இவ்வுலகைப் படைப்பவளும், ஒடுக்குபவளும் அவளே! வேதங்களும் அவளே!

அறியாமையை அகற்றும் அருமருந்தானவள்! அமுதம் நிறைந்த பெருங்கடல். அறிவுக்கு அறிவாய் இருக்கும் அன்னையை அனைவரும் துதிப்பது, அவள் அருளே வடிவமான பரையாய் விளங்குவதால் தானே! எல்லை கடந்த பெருவெளியாய் இருப்பவள்! இசையின் நிறைவாய் நிற்பவளும் அவளே! *"நரம்பை அடுத்த இசைவடிவாய் நின்ற நாயகியே"* அபிராமி அந்தாதி (49). ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் (299) *"நாதரூபா"* என்று சொல்கிறது.

எப்போதும் "பூர்ணமாய்" இருப்பவளே! (அகண்டிதமே) (*"பூரணாசல மங்கலையே"* - அபிராமி அந்தாதி-20). இதத்துக்கு இதமானவளே! இரவிலும், பகலிலும் ஒளிதரும் பரஞ்ஜோதியே! இளம் பிறையைச் சூடிய சிவ பெருமானின் இடப்பாகத்தில் வாழ்பவளே! என் தலைவியே! மயிலாபுரியில் பெருமைமிகு ஈசனின் வாழ்வான அபயாம்பிகைத் தாயே! என்று ஆனந்த நடனமாடுகிறார் அன்னையின் அருட் மைந்தன் அபயாம்பிகை பட்டர்.

99. அன்னையே! தூங்கா துறக்கமானவளே!

அணியுங் கனக ஒளிமலையே அமுத நதியே அருட்கடலே
அதிகாராதி தேவதையே அகண்ட முடிவில் ஒளிச்சுடரே
பணியும் அணியும் புயத்தாளே பரநாதாந்த மடத்தாளே
பழகும் அடியார் இதயத்துள் பரவியிருக்கும் பனிமொழியே
துணியு மனதாகிய யோகி தொடரும்படியே தொடர்பவளே
தூங்கா துறக்கமானவளே தொலையாச் சுகமும் ஆனவளே
மணியங்கிரணி விளையாடி வளருங் கொலு வீற்றிருப்பவளே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

அபயாம்பிகை சதகம் பூர்ணத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது. அன்னையின் துதிகளும் அடுக்கடுக்காய் அருட்மைந்தன் நாவிலிருந்து தேன் போல, தேனருவியாய் விழுகின்றனவே!

பொன்னாலான அணிகலன்களை அணிந்து, பொன்னாலாகிய ஒளி தரும் மலையே! (மேருமலை). ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் (51) *ஸர்வாபரண பூஷிதா* - எல்லா ஆபரணங்களினாலும் அலங்கரிக்கப் பெற்றவள். அமுத நதியே! அருட் கடலே!

பிரம்மா, விஷ்ணு, ருத்ரன், மகேஸ்வரன், சதாசிவன் மற்றும் இந்திராதி தேவர்களுக்கும் உரிய அதிகாரங்களையும், பணியும் கொடுத்து அவற்றை மேற்பார்வை செய்யும் மகாராணியே! எல்லாவற்றிற்கும் முடிவான பரவெளியில் திகழும் ஒளிச்சுடரே!

பாம்புகளை அணிகலன்களாகக் கொண்டவளே! (பக்தர்களின் பயத்தை போக்குவதற்கு) மேலான நாதத்தின் முடிவாய் விளங்கும் நிலையாளே! உன்னையன்றி வேறல்லாது உன்னையே எண்ணித் துதிக்கும் அடியார்களின் இதயத்துள் குடியிருக்கும் இனிமையான மொழியுடையவளே! ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமத்தில் (372) *பக்தமானஸ ஹம்ஸிகா* 816. *முனி - மானஸ-ஹம்ஸிகா* என்று வரும். அதாவது பக்தர்களின் மனதிலும், முனிவர் களுடைய மனங்களிலும் அன்னமாக இருப்பவள்.

யோகிகளின் யோகவழியில் வந்து அருட்பாலிப்பவளே! யோக நித்திரையில் வெளிப்படுபவளே! இதைத்தான் அபிராமிபட்டரும் அபிராமி அந்தாதியில் (56) *"அன்றாலிலையில் துயின்ற பெம்மானும்..."* என்று ரத்தினச் சுருக்கமாகக் கூறுகிறார். கிருஷ்ண பரமாத்மாவின் தாயாரான யசோதா

பிராட்டியும் யோக நித்திரையினால், குழந்தை கண்ணனின் வாயில் அகிலாண்டத்தையும் காணும் பாக்கியம் பெற்றாள் அன்றோ!

நாம் உறங்கும்போது சிறிதும் வெளியுலக சிந்தையில்லாமல் உறங்குகிறோம். ஆனால் அன்னை, ராத்திரி தேவியாக, எல்லோரும் உறங்கினாலும், அவர்களைக் காப்பதற்காக உறங்காமல் இருக்கிறாள். நிரந்தரமான பரமானந்தம் தருபவளே! நீலமணி போன்ற ஒளி உடையவளே! அன்னை லீலைகளால் (விளையாட்டுக்களால்) சந்தோஷம் அடைபவள். ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் 965. *பாலா* - சிறுமிபோல் லீலையில் ஆசைப்படுவதால் - பாலா என்று பெயர். அபயாம்பிகை பட்டர் அடிக்கடி, "வாலாம்பிகை" என்று கூறுவதும் இதைக் குறித்தது. ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் (966) *லீலா விநோதினீ* என்று வெகு அழகாகச் சொல்லுகிறது. ப்ரஹ்மஸூத்திரத்திலும் (II-1.33) *"லோகவத்து லீலா கைவல்யம்"* என்று இதே பொருளில் சொல்லுகிறது.

மயிலாபுரியில் வளரும் மாயூரநாதனின் வாழ்வாய்த் திகழும் அபயாம்பிகைத் தாயே! அருள்புரிவாயே!

100. அபயாம்பிகை பட்டர் அன்னையுடன் தாதான்மியம்! (ஐக்கியம்)

நான்வேறெ்ன நீ வேறானாய் நானா வேதப் பொருள்ஆனாய்
நாயேன் இனி யாருடன்பேசி நண்ணுங் குறையைப் போக்குவது
தான் வேதாந்த முடிவானால் தனக்கோர் செயலும் உண்டாமோ
சர்வானந்த சக்கரத்தி சட்கோணத்தி சதுர்க்கரத்தி
தேன்வேறுருசி உண்டாமோ தீபத் தொளி வேறுண்டாமோ
தேகம் உயிரும் உயிர்க்குயிராய்ச் சிவமே யொன்றாய் ஆனாயே
வான்வேறுண்டோ திருக்கிருஷ்ணன் வளருந் துணைவி நீஉரையாய்
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே.

பரிபாகம் பெற்று, பரிபூரணமான நிலையில் அன்னையிடம் ஐக்கியமாகும் (தாதான்மியம்) அபயாம்பிகை பட்டர் அபயாம்பிகை சதகத்தை பூரணமாக செய்யும் நூறாவது பாடலிது. பார்ப்பவன், பார்க்கும் பொருள், பார்வை என்ற மூன்றும் ஒன்றான (திரிபுடிரகிதம்) நிலைக்கு வந்து விட்டார். இனி அபயாம்பிகை பட்டருக்கு என்று எதுவும் இல்லை. அவர் வாழ்வு

அன்னையின் திருவடிகளில் கற்பூரமாய் கரைந்து விடுகிறது. அவர் பிறந்த மண்ணில் நாமும் பிறந்திருக்கிறோம் என்று நினைக்கும் போது உடல் புளகாங்கிதம் அடைகிறது. அடியேனையும் அபயாம்பிகை பட்டர் அருளிய அபயாம்பிகை சதகத்திற்கு விளக்கவுரை எழுதுமாறு செய்த அன்னையின் அருளை நினைத்து ஆனந்தப்படுகிறேன், அதே சமயம் அழுகிறேன். (அழுதால் அடையலாமே அன்னையை)!

அம்மா இதுவரையிலும் நான் வேறு! நீ வேறு! பலவகையான வேதங்களின் மெய்பொருள் நீயே! நாயினும் கடையனாய் இருந்தேன் நான். இந்நிலை இப்போது மாறிவிட்டது. யாரிடமும் சொல்லி என் குறைகளைப் போக்கத் தேவையில்லை. வேதத்தின் அந்தத்திற்கு வேறு ஒரு செயலும் உண்டோ? உன் திருவடியில் சேரும் எனக்கு யாதொரு செயலுமுண்டோ?

சர்வானந்த சக்கரத்தில் அமர்ந்திருப்பவளே! சட்கோணத்தவளே! நான்கு திருக்கரங்கள் கொண்டவளே!

தேனுக்கு இனிப்பைத் தவிர வேறு ருசி உண்டோ? அன்னை தேனே வடிவானவள். *"மஹத்யைவா ஏதத் தேவதாயை ரூபம் யன்மது"* - ச்ருதி. எல்லாவற்றிற்கும் ஒளிதரும் பரஞ்ஜோதியானவள் நீ. இதைத் தவிர வேறு எதுவும் உண்டோ? உடலும் உயிரும், உயிர்க்குயிரான சிவமும் ஒன்றான பின் வேறு ஒன்றும் இல்லையே! அதாவது சிவனும், சக்தியும், சீவனும் ஒன்றே. இதைத் திருமூலர் (திருமந்திரம் -1254).

"அம்மையொ டத்தனும் யானும் உடனிருந்து
அம்மையொ டத்தனை யான் புரிந்தேனே" என்று சொல்கிறார்.

சிவத்தின் ஒளியாய்த் திகழும் சாக்தத் தலைவியே! திருக்கிருஷ்ணனின் துணையாய் இருப்பவளே! உன் திருவடிகளைப் பற்றி, போற்றி, பணியும் (மனம், வாக்கு, காயம்) பக்தர்களுக்கு அபயமளிக்கும் அன்னையே! மயிலாபுரிக்கு பெருமை தரும், வந்திருப்பவருக்கு வரையிலாது வரங்கள் தரும் வள்ளலாராய் விளங்கும் மாயூரநாதனின் இடப்பாகத்தில் வீற்றிருந்து அவருக்கு உயிர்நாடியாய் விளங்கும் அபயாம்பிகைத் தாயே! அனைவருக்கும் அருள்புரிவாயே!

வாழ்க அபயாம்பிகைபட்டர்!

வாழ்க அன்னை அபயாம்பிகைத்தாயின் அருள்!

சுபமங்களம்.

பாட்டு முதற்குறிப்பு

